உ

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

எளிய உரை

ஆசிரியர் :

எம். இ. வீரபாகு பிள்ளை, பி. ஏ., எல். டி.

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கினாங். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

ஒற்றுமை நிலையம்,

8, வியாசராவ் தெரு,

தியாகராயநகர், மதராஸ்-17.

பதிப்புரிமை] 1957 [விலை ரூ. 6.

முகவுரை

திருச்சிற்றம்பலம்.

காலமுண் டாகவே, காதல்செய் தும்மின், கருதரிய
ஞாலமுண் டாலெடு, நான்முகன், வானவர், நண்ணரிய
ஆலமுண் டான்;எங்கள் பாண்டிப் பிரான்;தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்;வந்து, மூந்துமினே.

சைவ சமயத்திற்கு உயிர் நாடியாக விளங்கும் திரு வாசகம் பிறமதத்தர்களாகிய கிறித்துவர்களுடைய உள் ளங்களைக்கூடக் கவர்ந்துவிட்டதென்றால் அதன் பெருமை யைக் குறித்து நாம் இங்கு விரித்துரைத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. திருவாசக மூலம் இதுவரை எண்ணற்ற பதிப்புக்கள் வெளிவந்துவிட்டன. நாட்டிலே திருவாசகம் இப்பொழுது நன்றாகப் பரவியுள்ளது என்று திடமாகக் கூறலாம்.

கருங்கல் மனத்தையும் உருக்கவல்ல திருவாசகத்திற்கு அறிஞர்கள் பலர் உரையும் எழுதியிருக்கிறார்கள். ஆயினும் எல்லோருக்கும் நன்கு விளங்கத்தக்க எளிய உரை ஒன்று வேண்டுமென்பது என்னுடைய நெடுநாளைய நோக்கமாக இருந்தது. ஆகவே, நான் அறிஞர்கள் எழுதியுள்ள உரை யைத் தழுவி இந்த எளிய உரையைத் தயார்செய்து முடித்தேன்.

பாட்டைப் படிப்பவர்கள் உடனுக்குடன் நேருக்கு நேராக உரையையும் தெரிந்துகொள்ளத்தக்க முறையில் பதிப்பித்தல் படிப்பவர்கட்குப் பேருதவியாக இருக்கும் என்று இடதுபக்கத்தில் பாடல்களையும் அதற்கு நேராக வலது பக்கத்தில் உரையையும் பதிப்பித்திருக்கிறேன்.

பாடல்கள் யாவும் சந்தி பிரித்தும் சீர் பிரித்தும் பதிப் பிக்கப்பட்டுள்ளன. எளிய உரையோடு கூடிய திருவாச கத்தின் இப்பதிப்பு அன்பர்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குமென்று நம்புகிறேன். எல்லோரும் திருவாசகத்தின் பயனை நன்கு அனுபவிக்க வேண்டுமென் பதே எனது நோக்கம். **''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்''** என்னும் அடிகளையும் எண்ணிப் பாருங்கள்.

ஒற்றுமை நிலையம்
தியாகராயநகர்,
சென்னை.

மு. இ. வீரபாகு.

பதிக அட்டவணை.

[எண் வரிசை]

எண்	பதிகம்	பக்கம்	எண்	பதிகம்	பகுகம
1.	சிவபுராணம்	2	36.	அதிசயப்பத்து	262
2.	கீர்த்தித்திருவகவல்	12	27.	புணர்ச்சிப்பத்து	268
3.	திரு அண்டப்பகுதி	24	28.	வாழாப்பத்து	274
4.	போற்றித்திருவகவல்	38	29.	அருள்பத்து	280
5.	திருச்சதகம்	54	30.	திருக்கழுக்குன்றப்பதி.	286
6.	கீத்தல் விண்ணப்பம்	102	31.	கண்டபத்து	290
7.	திருவம்பாவை	122	32.	பிரார்த்தனைப்பத்து	294
8.	திரு அம்மானை	138	33.	குழைத்தபத்து	300
9.	திருப்பொற்சுண்ணம்	148	34.	உயிருண்ணிப்பத்து	306
10.	திருக்கோத்தும்பி	160	35.	அச்சப்பத்து	310
11.	திருத்தெள்ளேணம்	168	36.	திருப்பாண்டிப்பதிகம்	316
12.	திருச்சாழல்	176	37.	பிடித்தபத்து	322
13.	திருப்பூவல்லி	186	38	திரு எசறவு	328
14.	திரு உந்தியார்	194	39.	திருப்புலம்பல்	334
15.	திருத்தோள் நோக்கம்	200	40.	குலாப்பத்து	336
16.	திருப்பொன் ஊசல்	206	41.	அற்புதப்பத்து	342
17.	அன்னைப்பத்து	212	42.	சென்னிப்பத்து	348
18.	குயில்பத்து	216	43.	திருவார்த்தை	354
19.	திருத்தசாங்கம்	222	44.	எண்ணப்பதிகம்	360
20.	திருப்பள்ளி எழுச்சி	226	45.	யாத்திரைப்பத்து	364
21.	கோயில்மூத்த திருப் பதிகம்	232	46.	திருப்படை எழுச்சி	370
			47.	திருவெண்பா	372
22.	கோயில் திருப்பதிகம்	238	48.	பண்டுஆய ஞான்மறை	378
23.	செத்திலாப்பத்து	244	49.	திருப்படை ஆட்சி	382
24.	அடைக்கலப்பத்து	250	50.	ஆனந்தமாலை	390
25.	ஆசைப்பத்து	256	51.	அச்சோப்பதிகம்	394

பதிக அட்டவணை

எண்	பதிகம்	பக்கம்	எண்	பதிகம்	பக்கம்
1.	அச்சப்பத்து	310	26.	சதகம்	54
2.	அச்சோப்பதிகம்	394	27.	சாழல்	176
3.	அடைக்கலப்பத்து	250	28.	சிவபுராணம்	?
4.	அண்டப்பகுதி	24	29.	செத்திலாப்பத்து	244
5.	அதிசயப்பத்து	262	30.	சென்னிப்பத்து	348
6.	அம்மானை	138	31.	தசாங்கம்	222
7.	அருட்பத்து	280	32.	தெள்ளேணம்	168
8.	அற்புதப்பத்து	342	33.	தோணோக்கம்	200
9	[illegible]	212	34.	நீத்தல் விண்ணப்பம்	102
10.	ஆசைப்பத்து	256	35.	படையாட்சி	382
11.	ஆனந்தமாலை	390	36.	படையெழுச்சி	370
12.	உந்தியார்	194	37.	பண்டாய நான்மறை	378
13.	உயிருண்ணிப்பத்து	306	38.	பள்[illegible]	226
14.	எண்ணப்பதிகம்	360	39.	பாண்டிப்பதிகம்	316
15.	எம்பாவை	122	40.	பிடித்தபத்து	322
16.	ஏசறவு	328	41.	பிரார்த்தனைப்பத்து	294
17.	கண்டபத்து	290	42.	புணர்ச்சிப்பத்து	268
18.	கழுக்குன்றப்பதிகம்	286	43.	புலம்பல்	334
19.	கீர்த்தித்திருவகவல்	12	44.	பூவல்லி	186
20.	துயிற்பத்து	216	45.	பொற்சுண்ணம்	148
21.	குலாப்பத்து	336	46.	பொன்னூசல்	206
22.	குழைத்தபத்து	300	47.	போற்றித்திருவகவல்	38
23.	கோத்தும்பி	160	48.	யாத்திரைப்பத்து	364
24.	கோயிற்றிருப்பதிகம்	238	49.	வார்த்தை	354
25.	கோயின்மூத்த திருப் [illegible]திகம்	232	50.	வாழாப்பத்து	274
			51.	வெண்பா	372

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

எட்டாந் திருமுறையை அருளிச்செய்த திருவாதவூரடிகள் பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே ஆமாத்திய அந்தணர் குலத்திலே அவதரித்தார். வாதவூரர் என்ற இயற்பெயரையுடைய இவர், கல்வி கற்கத் தொடங்கிப் பதினேழாவது ஆண்டிற்குள் வேத சிவாகமம் முதலியவற்றைக் கற்றுப் போறிஞராஞர். இவருடைய திறமையை அறிந்த பாண்டியமன்னன் இவரை வருவித்து, "தென்னவன் பிரமராயர்" என்ற பட்டத்தை வழங்கி முதல் அமைச்சராக்கினன்.

அந்நாளிலே இவர் அமைச்சுரிமை செலுத்தி வந்தும், இவருக்கு அதில் பற்றில்லாமல் சிவஞானம் தரவல்ல நல்லாசிரியரை நாடுவதில் மனம் சென்றது. மன்னன் இவரை ஒரு சமயம் வேண்டிய அளவு பொருள் வழங்கிச் சோணாடு சென்று நல்ல குதிரைகளை வாங்கி வரும்படி ஏவினன். அங்ஙனமே சென்ற வாதவூரர் திருப்பெருந்துறையை அடைந்தார் அங்கே ஆலயம் சென்று வலம் வரும்பொழுது குருந்தமரத்தினடியிலே சைவத் திருக்கோலம் பூண்ட பெரியார் ஒருவர் மாணவர்களுடன் இருப்பதைக் கண்டார். ஞானசிரியரைக் கண்டு வணங்கி இன்னருள் பாலிக்கப்பெற்று சிவஞானச் செல்வராகி விளங்கினர். வாதவூரர் உள்ளக்கனிவோடு பாடிய தோத்திரப் பாக்களைக் கேட்டருளிய குருநாதர் இவருக்கு, "மாணிக்க வாசகர்" என்ற திருநாமத்தைச் சூட்டிப் பணிசெய்யும்படி சொல்லிவிட்டு மறைந்தார். இதைக்கண்ட வாதவூரடிகள் உண்மையுணர்ந்து சிவபெருமான் ஆணைப்படி அத்தலத்திலிருந்து குதிரை வாங்க வேண்டியதை மறந்து திருப்பணியில் ஈடுபட்டார்.

வெகுநாட்களாகியும் வாதவூரர் பரிகளுடன் வாராமையை அறிந்த பாண்டியன் சினமுற்று உண்மையறிய விரும்பி வாதவூரருக்கு ஓலையெழுதுவிக்க, இவர் சிவபெருமான் திருவருளைத் துணைகொண்டு, "ஆவணி மூல நாளிலே குதிரைகள் வரும்" என்று விடையெழுதி மன்னருக்கு அனுப்பினர். குறித்த நாளுக்கு முன் குதிரைகள் வந்து சேரவில்லையாதலால், பாண்டியன் மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தினன். ஆவணி

மூலத்தன்று சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கித் தாமே தலைவ ராக வந்து மன்னனிடம் செல்ல, மன்னன் குதிரைகள் நன்றாக இருப்பதறிந்து மகிழ்ந்து அவற்றை உரிமையாக்கிக்கொண்டான். வாதவூரரையும் சிறையினின்று விடுவித்தனன். குதிரைத் தலைவ ராக வந்த சிவபெருமான் மறைந்தார். அன்றிரவு பரிகள் நரிகளாக மாறின. அரசன் சினங்கொண்டான். மாணிக்கவாசகர் மீண்டும் துன்பத்திற்குள்ளாகி எம்பிரானை வழிபட, சோமசுந்தரக்கடவுள் உண்மை விளங்கும்பொருட்டு வையையாற்றில் வெள்ளம் பெருகச செய்தார். இதனையறிந்த மன்னன் எல்லோரையும் அற்றிற்கு அணை போடும்படி ஏவ, வந்தியென்னும் பிட்டு வாணிச்சி மாத்திரம் அரசன் கட்டளையை நிறைவேற்ற முடியாது இருந்தாள். அணை போடுவதற்கு சிவபெருமானே அவளுக்கு ஆளாக வந்தார். வேலை செய்ய வந்தவர் வேலைசெய்யாமலிருந்ததைக் கண்ட பாண்டியன் வந்திக்கு மண் சுமக்கவந்த சிவபிரானை உண்மையறியாமல் பிரம் பால் அடித்தான். சிவபிரான் மறைந்தருளினர். பாண்டியன் அடித்த அடி அவன் முதுகிலும், மக்களனைவர் முதுகிலும் பட்டுச் சிவபெருமானின் பரிபூரணத் தன்மையை விளக்கியது. அடி பட்ட அரசன் திகைத்தான். அசரீரி வாக்கால் உண்மையுணர்ந்த மன்னன் மாணிக்கவாசகரை வணங்கி நின்றான். அறவெறியில் அரசாளுமாறு மன்னனுக்கு அறிவுறுத்திவிட்டு அமைச்சர் பதவியை நீத்து, மாணிக்கவாசகர் பல தலங்கள் சென்று பதிகங் கள் பாடித் தில்லையை அடைந்தார். அங்கே எம்பிரான் திருவரு ளால் புத்தரை வாதில் வென்றார். இவர் பெருமையை உணர்ந்த புத்த மன்னனும் சைவனானன்.

சில காட்களுக்குப் பின்னர் இறைவன் அந்தணர் உருவம் கொண்டு இவர்முன் வந்து திருவாசகத்தையும், திருக்கோவை யாரையும் சொல்லச்செய்து, ஏட்டில் எழுதி முடித்து, "அழகிய திருச்சிற்றம்பலமுடையான்" என்று கையெழுத்திட்டு ஏட்டுச் சுவடிகளைக் கனகசபையிலே வைத்துவிட்டு மறைந்துவிட்டனன். மணிவாசகர், அடியார்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஏட்டிலுள்ள பாடல்களுக்குப் பொருள் உணர்த்துவதாகக் கூறி அம்பலக்கூத்த னைக்காட்டி, அவரே பொருளென்று சொல்லி, அச்சபையிலே அனைவரும் காண மறைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

(எளிய உரையுடன்)

திருவாசகம்

(மூலம்)

•••o❀o•••

1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது.)

சிவனது அநாதிமுறைமையான பழமை

(கலி வெண்பா)

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இணைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க! 5

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் சோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க! 10

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கினார். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை ஜாவட்டம்.

சிவமயம்

திருவாசகம்

(எளிய உரை)

1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

சிவனது அநாதிமுறைமையான பழமை

திருச்சிற்றம்பலம்.

"நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்து வாழ்வதாக; அவ் வைந்தெழுத்தின் பொருளாய் விளங்கு மிறைவனது திருவடி வாழ்க. ஓரிமையளவு காலமும் அடியேனது மனத்தினின்றும் பிரியாதவண்ணம் திருவடி வாழ்க. "திருக்கோகழி' என்ற தலத் தினை ஆட்கொண்டருளிய குருமணியின் திருவடி வாழ்க. சிவா கமப்பொருளாய் விளங்கி அச்சிவாகம முறைமையி னருச்சிப் பவர்க்கு அவர் நினைத்த வடிவா யெழுந்தருளி உடனே அருள் புரிபவனாகிய கடவுளது திருவடி வாழ்க. ஒன்றாய் விளங்குபவ னும் பலவாய் விளங்குபவனும் ஆகிய கடவுளது திருவடி வாழ்க. (5)

அடியேனை அநாதியாகத் தொடர்ந்து வரும் ஆணவத் வத்தால் வரும் வினைவை அறவே யொழித்து ஆண்டருளிய முழுமுதற் கடவுளது திருவடிகள் வெற்றி யடைக. எனது பிறவித் தலையைச் சேதிக்கின்ற சடைமுடியையுடைய சிவ பெருமானது வீரகண்டையணிந்த திருவடிகள் வெற்றி யடைக. அன்பரல்லாதவர்க்குத் தூரமாய் இருப்பவனது அழகிய திருவடி கள் வெற்றி யடைக. இரண்டுக்கைகளாயும் தலையின்மீது குவித்து வணங்கும் அடியார்கள் கண்டு மனம் மகிழும்படியான இறைவ னது திருவடிகள் வெற்றி யடைக. தமது தலையால் வணங்கப் பட்ட மெய்யடியார்களை உயர்ந்த சிவகதியிலிருத்துகின்ற பெரு மையையுடைய கடவுளது திருவடிகள் வெற்றி யடைக. (10)

ஈசன் அடிபோற்றி ! எந்தை அடிபோற்றி !
தேசன் அடிபோற்றி ! சிவன்சே வடிபோற்றி !
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி !
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி ! 15
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி !

முகவுரை

சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான் 20

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி,
விண்நிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய், விளங்குஒளி
எண்இறந்து எல்லை இலாதானே ! நின்பெருஞ்சீர் [யாய்,
பொல்லா வினையேன் புகழுமா று ஒன்றறியேன் ! 25

பிறப்புகள்

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள் 30
எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன், எம்பெருமான் !

பரமேசுவரனது திருவடிகட்குத் தோத்திரம். எமதையனுகிய கடவுளது திருவடிகட்குத் தோத்திரம். ஒளி வடிவினுகிய கடவுளது திருவடிகட்குத் தோத்திரம். சிவபெருமானது மலர் போலும் சிவந்த திருவடிகட்குத் தோத்திரம். அன்பரது பத்தியாகிய வலையிலே சிக்கி நிலைபெற்று நின்ற மலமற்றவனுகிய சிவபெருமானது திருவடிகட்குத் தோத்திரம். மாயாகாரியமாகிய பிறவிப் பிணியைக் கெடுக்கின்ற இறைவனது திருவடிகட்குத் தோத்திரம். சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும் நமது கடவுளது திருவடிகட்குத் தோத்திரம். (15)

எக்காலத்தும் தெவிட்டாத பேரின்ப சுகத்தை மெய்யன்பர்க்குதவுகின்ற மலைபோலும் திருவருளையுடைய கடவுளுக்குத் தோத்திரம். சிவபெருமானுகிய அப்பேரருளாளன் அடியேனது மனத்தின்கண் நிலைபெற்றிருந்தமையால், அக்கடவுளது திருவருளினுலே அக்கடவுளின் திருவடிகளைத் தொழுது, அவனது திருவுள்ளம் உவக்கும்படி சிவனது அநாதியான முறைமையை, எண்ணற்ற பிறவிகள்தோறும் கீழ்ச்சென்று அனுபவித்தெஞ்சி நின்ற சஞ்சித பிராரத்த கன்மங்களனைத்தும் விட்டொழியும்படி அடியேன் சொல்லுவன். (20)

நெற்றிக்கண்களை யுடையோனுகிய சிவபெருமானது திருவருளாகிய நேத்திரமானது வழிகாட்ட அவ்வழியே வந்தடைந்து, வாக்கினுற் சொல்வதற்கே யன்றி, மனத்தானினைத்தற்கும் முடியாத அழகு பொருந்திய அவனது திருவடிகளை வணங்கி, விண்ணுலக முழுவதும் பரவி மண்ணுலக முழுவதும் பரவி அவ்வளவிலடங்காமல் அவைகட்கும் மேற்பட்டு நின்றவனே! சலிப்பின்றி விளங்குகின்ற அக்கினிப்பிழம்பாய் நின்றவனே! அளவைகளைக் கடந்து வரம்பற்றிருப்பவனே! உன்னுடைய மிகுந்த கீர்த்தியைக் கொடிய தீவினையுடையேனுகிய யான் புகழ்ந்து துதிக்கும் வழி இன்னதென்று சிறிதும் தெரிகிலேன். (25)

புற்களாகியும் பூண்டுகளாகியும் புழுக்களாகியும் மரங்களாகியும், பலவகைப்பட்ட விலங்குகளாகியும் பறவைகளாகியும் பாம்புகளாகியும்; கற்களாகியும் மனிதர்களாகியும்பேய்களாகியும் கணங்களாகியும், வலிமையையுடைய அசுரர்களாகியும் முனிவர்களாகியும் தேவர்களாகியும், நடவாநின்ற இந்த நிலையியற்பொருளும் இயங்கியற் பொருளுமாகிய இருவகைப் பொருள்களுள்ளே, (30)

எல்லாப் பிறவிகளினும் பிறந்து மிகவும் மெலிவடைந்தேன். எமது பெருமானே!; உண்மையாகவே இப்பொழுது உன்

ஞானகுரு

மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான னும்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மினிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதென் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
காற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்துஅடியார் சிந்தையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்புஅறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஐ ஞைந்துஉடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

னுடைய பொன்போலுயர்ந்த திருவடிகளைச் சேவித்து வீடு பேற்றுக்குரிய வழியை அடைந்தேன். அடியேனுங் கடைத் தேற வேண்டி எனது மனத்தில் பிரணவாகாரமாய் விளங்கிய நித்தியனே! நிர்மலனே! இடபாரூடனே! வேதங்களெல்லாம் 'ஐயனே!' என்று துதிக்க உயர்ந்து ஆழ்ந்து விசாலித்த சூக்கும வடிவானவனே! (35)

வெப்பத்தை யுடையவனே! தட்பமாய் இருப்பவனே! ஆன்மவடிவாய விளங்கும் தூய்மையாளனே! பொய்யாகத் தோன்றும் இவ்வுலக வாழ்வினைத்தும் அகன்றுபோமாறு எழுந் தருளி வந்து; உண்மை ஞான வடிவாகி விளங்குகின்ற நித்திய மாகிய ஒளிவடிவானவனே! எவ்வளவும் மெய்ஞ்ஞான அறிவு இல்லாதவனாகிய எனக்குப் பேரின்பத்தை யருளுகின்ற சிவபெரு மானே! மாயாகாரியமாகிய அஞ்ஞானத்தைப் போக்கி யருளு கின்ற பரஞான வடிவனே! (40)

தோற்றமும் எல்லையும் முடிவும் இல்லாதவனே! எல்லா உலகங்களையும் படைப்பாய்; காப்பாய்; அழிப்பாய்; அருள்புரிவாய்; பிறவி நோயை ஒழிப்பாய்; அடியேனை உனது பணிவிடையில் புகுமாறு செய்வாய் உன்னை அடையும் வழியில் செம்மையாகிய நெறியைத் தருபவனே! உன்னை வணங்காதவர்க்குத் தூரமாய் இருப்பவனே! உன்னை அடைந்தவர்க்கு விரைந்து அருள்புரிப வனே!; சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டாமல் அப்பாற்பட்டு நின்ற இரகசியப் பொருளானவனே! (45)

கறந்த பாலுடனே கருப்பஞ்சாற்றையும் நெய்யையும் சேர்த் ததுபோல, மிகுந்த அன்புடையவரது மனத்தினுள்ளே தேன் போலச் சுரந்து நின்று, யானெடுத்த பிறவிகளை ஒழிக்கின்ற எமது பெருமானே!; ஒப்பற்ற படைப்பு முதலிய ஐந்தொழிலுக் குக் காரணமாகிய ஐந்துருவங்களைக் கொண்டவனே! தேவர் குழாங்கள் தோத்திரம் செய்ய, அவர்களுக்குத் தோன்றாமல் கரந்து நின்றவனே! எமது பிரானே! கொடிய வினைகளை யுடையேனாகிய என்னை, (50)

மறையும்படி கவிந்த மாயாமலமாகிய இருட்டைத் தருமமும் பாவமும் என்கிற அரிதாகிய பாசத்தினால் யாத்து, வெளியே தோலினால் மூடி எவ்விடத்தும் நிறைந்துள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மறைத்து, மலம் ஒழுகுகின்ற ஒன்பது வாயில் களையுடைய குடிலை, சிறு வீடாகிய தேகத்தை வருந்தும்படி ஐம்புலன்களும் வஞ்சகம் செய்ய, (55)

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

போராது நின்ற பெருங்கருணைப் போராறே!
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கினென் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
சார்த்துனன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே! [தின்
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே!
காக்கும்எங் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

அதனால் விலங்கின் தன்மையைக்கொண்ட மனத்தினால் மல
ரகிதனே! உன்பொருட்டு, அன்புடையவனைய் மனம் கரைந்து
உருகுகின்ற நன்மையில்லாத சிறியவனாகிய என் நிமித்தம் மன
மிரங்கி அருளி, பூமியின்மேல் எழுந்தருளி வந்து நீண்ட திரு
வடிகளைக் காண்பித்து, நாயைப் பார்க்கிலும் இழிந்தவனையிருந்த
அடியேனுக்குத்; (60)

தாயினும் மேன்மையான தயையுடையவனாகிய உண்மை
யானவனே! களங்கமில்லாத ஒளிமலர்ந்த மிகுந்த ஒளி உருவனே!
புகழ்ச்சி விளக்கமுடையவனே! தேன்போலும் இனிய குணங்களை
யுடையவனே! அரிய தேவாமுதமே! திருக்கையினால் எழுந்
தருளியவனே!; பந்த பாசங்களின் தொடர்பை அறச்செய்து
காத்தருளுகின்ற ஆசாரியனே! அன்போடு திருவருள் செய்து
என் மனத்திலுள்ள வஞ்சனைகள் அழியவிட்டு, (65)

நீங்காமல் நின்ற நிலைபெற்ற பெருந்திருவருட் பேராறே!
தெவிட்டாத அமுதமே! அளவற்ற பெருமைகளையுடைய பெரு
மானே! ஆராய்ந்தறியாதவாறு மனத்துள் மறைந்து நிற்கின்ற
ஒளி வடிவினனே! என் மனத்தை நீராக உருகச்செய்து எனது
அரிய உயிராகி நின்றவனே!; தனக்கென ஓர் சுகமும் துக்கமும்
இல்லாதவனே! (70)

அன்பர்பொருட்டு அவைகளை யுடையவனே!; அடியார்க
ளிடத்து மிகுந்த அன்புடையவனே! எல்லாப் பொருள்களுமாகி
அவையனைத்து மல்லாதவனுமாகிய ஒளி வடிவினனே! பொருந்
திய இருள் வடிவினனே! யாவராலு முணரப்படாத பெருமை
யுடையவனே! அண்டகோடிகட்கெல்லாம் முதலானவனே!
இறுதியும் நடுவுமாகியும் அவைகளல்லாதவனுமா யிருப்பவனே!
தமியேனை வலிய இழுத்து ஆண்டு கொண்டருளிய எமது தந்தை
யாகிய கடவுளே! கூரிய மெய்யறிவினால் தேர்ந்து அறிபவ
ருடைய கருத்தினாலும், (75)

நோக்குதற் கரிதாகிய காட்சியே! நுட்பமாய்த் தெரிதற்
கரிதாகிய மிகு நுட்ப வடிவினனே! இறுதிக்காலத்தி லழிதலும்,
படைப்புக்காலத் துண்டாதலும் அவற்றின்தொடர்பும் இல்லாத
புண்ணிய தரும வடிவானவனே'; எம்மைப் பாதுகாத்துப் போற்
றும் எமது இறைவனே! காணுதற்கெட்டாத பெரிய ஒளியே!
அடியவர்க் கருள்புரிகின்ற பேரின்பப் பெருக்கே! எமது
தலைவனே! உயர்ந்த காட்சியையுடைய, விளங்குகின்ற ஒளியாகி
வாக்கினாற் சொல்லுதற்கரிய நுண்ணறிவாகி, (80)

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேற்ற வந்தறிவாம்
தேற்றனே ! தேற்றத் தெளிவேவன் சிந்தனையுள்
ஊற்றுனை உண்ணுர் அமுதே ! உடையானே !
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்னம் ஐயா ! அரனே ! ஓ என்றுனன்று

போற்றிப் புகழ்ந்துஇருந்து பொய்கெட்டு மெய்யானர்
மீட்டுஇங்கு வந்து விணப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டுஅழிக்க வல்லானே !
நள் இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே !
தில்லையுள் கூத்தனே ! தென்பாண்டி நாட்டானே !.

அல்லல் பிறவி அறுப்டானே ! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

வேறுபாட்டை உடையதாகிய பூமியில் வெவ்வேறுருவாய் வந்து மெய்ஞ்ஞானிகளால் அறியக்கூடிய நிச்சயப்பொருளான வனே! தெளிவுக்குட்டெளிவே! எனது மனத்தில் ஊற்றுநீர்ப் பெருக்கையொத்த உண்ணுதற்கரிய அரிய அமிர்தம் போன்ற வனே! என்னை அடிமையாகக் கொண்டவனே! பலவேறு விகா ரங்களையுடைய ஊனமைந்த உடலில் தங்கி இருப்பதற்கு, மனந் தானேன்: எமதையனே! அழித்தற்கடவுளே! ஓவென்று (85)

பலகால் முறையிட்டு வணங்கி உனது கீர்த்தியைப் பலகாற் புகழ்ந்து அப்புகழ்ச்சிப் பயனால் பொய்யாகிய விடய வாதனைகளை யொழித்து மெய்ஞ்ஞானவழிவாய் நின்றவர்கள், திரும்பவும் இவ் வுலகின்கண் வந்து வினைகாரணமாக வரும் பிறவியைச் சாராமல், வஞ்சனையைச் செய்கின்ற ஐம்புலன்களுக்கிடமாகிய சரீரத்தினால் உண்டாகும் பாசபந்தங்களை அழித்தொழிக்க வல்லவனே!; நடு இரவில் திருக்கூத்தைப் பலகாலும் ஆடுகின்ற நாததத்துவத்தின் முடிவானவனே!; தில்லைவனமாகிய சிதம்பரத்தில் ஐந்தொழில் நடனம் செய்பவனே! அழகிய பாண்டிய வளநாட்டை யுடை யவனே! (90)

துன்பத்தைத் தருகின்ற பிறவியை ஒழிப்பவனே! ஓவென்று கூச்சலிட்டு, வாக்கிறற் சொல்லுதற்கும் அரியவனைப் பலகாற் புகழ்ந்து அவனது திருவடிகளில் சாத்தியருளிய சொன்மாலையின் பொருளை யறிந்து சொல்லவல்லவர்களான பல்லரும் சிவலோகத் தில் வாழ்கின்ற சிவபெருமானது திருவடியின்கீழ் யாவரும் வணங்கித் துதிக்கச் சென்று வாழ்ந்திருக்கப் பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

2. கீர்த்தித் திருவகவல்

(தில்லையில் அருளியது)

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை.

(நிலமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்.

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம் பயின்றனன் ஆகி
எண்இல் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வாழ்நர் உலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்து இனிதருளி
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்
பஞ்சப் பள்ளியில் பால்மொழி தன்னெடும்
எஞ்சாது ஈண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிழ்ந்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேடர் ஆகிக் களிறது படுத்தும்
மாஎட்ட ஆகிய ஆகமம் வாங்கியும்
மற்றுஅவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்றஐம் முகங்க ளால்பணித் தருளியும்

2. கீர்த்தித் திருவகவல்.

(தில்லையில் அருளியது)

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

திருச்சிற்றம்பலம்.

"திருத்தில்லைவனம்" என்கிற பழைய நகரின்கண் ஐந் தொழில் திருக்கூத்துச் செய்தருளிய திருவடியானது பலவகைப் பட்ட ஆன்மகோடிக ளனைத்தினுள்ளும் நிறைந்திருப்பவுைகி, அளவிறந்த பல நற்குணங்களோடு அழகு பொருந்த விளங்கிப் பூலோகத்தினும் சுவர்க்கலோகத்தினும் மற்றைத் தேவருலகத் தினும் பொருந்திய கல்விகளை உண்டாக்கியும் மறைத்தும், (5)

அடியேனுடைய அஞ்ஞானவிருளை அறவே நீக்கியும் தொண்டரது மனத்தில் அன்பானது அதிகரிக்க, குடி இருப் பாகக்கொண்டருளிய கோட்பாடும் அக்கொள்கையாலுண்டாகும் புகழ்ச்சியும், நிலைபெற்ற பெரிய மகேந்திர பர்வதத்திலிருந்து உபதேசித்தருளிய காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் வெளியிட்டருளியும்; (10)

திருக்கல்லாடமென்னும் சிவப்பதியில் இனிதாகப் பெண்ணி னல்லாளாகிய உமாதேவியாரோடு ஒருமிக்க யாவரும் விரும்பி வழிபடும்படி எழுந்தருளியிருந்தும், பஞ்சசபனமென்னும் சிவப் பதியில் பால்போலு மினிய மொழியையுடைய உமாதேவியா ரோடும், குறையாமல் நாளுக்குநாள் விருத்தியடைகின்ற பெருங் கருணையைப்புரிந்தும், வேடவடிவுடன் முன் முருக்கமலர்போன்ற அதரத்தினையுடைய உமாதேவியின் (15)

ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்ற அழகிய தனதடத்தில் ழுழ்கியும் மீன் வலைஞராகிக் களிற்று மீன்களைப் பிடித்தும், பெருமைபொருந்திய விருப்பத்தினை யுடையதாகிய ஆகமங்களைக் கடலினின்றெடுத்தும், பின்னும் அவ்வாகமங்களை மகேந்திர மலையிலிருந்து தனக்குரிய தற்புருஷம் முதலிய ஐந்து திருமுகங் களாலும் உபதேசித்தருளியும்; (20)

நந்தம் பாடியில் நான்மறை யோனுய்
அந்தம்இல் ஆரிய னுய்அமர்ந் தருளியும்
வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூ றுயிரம் இயல்பினது ஆகி
ஏறுஉடை ஈசன் இப்புவனியை உய்யக்

கூறுஉடை மங்கையும் தானும்வந் தருளி
குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தான்முழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டோடு அருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற்கு ஈந்த விளைவும்
மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்கது ஆகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற்கு அளவுஅறிய ஒண்ணுன்

நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறுது
ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தன்மையும்
அந்தணன் ஆகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட்கு ஆகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்
பூவணம் அதனில் பொலிந்திருந் தருளித்

நந்தம்பாடி என்னும் சிவப்பதியில் நான்கு வேதாதிகாரியான அந்தணனாய், முடிவற்ற ஆசாரியனாய் விளங்கியிருந்தும், வெவ் வேறு வடிவங்களும் வெவ்வேறு குணங்களும், நூறு இலட்சம் வகையினை யுடையதாகி, இடபவாகனத்தை உரிமையாகக் கொண்ட சிவபெருமான் இந்த உலகத்தை வாழச் செய்யும் பொருட்டுத்; (25)

தனது தேகத்தில் ஒரு பாகத்தையுடைய உமாதேவியாரும் தானுமாக எழுந்தருளி, மேல்நாட்டிலிருந்து குதிரைகளை யோட்டிக்கொண்டு, அழகுண்டாகக் குதிரைவீரனாய்த் தானே எழுந் தருளி வந்தும், திருவேலம்புத்தூரில் இடபாரூடனாயிருந்து, திருக் கோலப் பொலிவைக் காண்பித்த கோட்பாடும்; (30)

சாந்தம்புத்தூரில் வில்லினால் போர் செய்யப்பட்ட ஒரு வேடனுக்குக் கண்ணுடியில் காட்சி கொடுத்தருளிய பயனும், பூமிப் பிளப்பில் எழுந்தருளிய மிகுந்த அக்கினி வடிவத்தை விஷ்ணுதேவரோடு பிரமதேவனும் காணும்படி முற்காலத்தில் களங்கமில்லாமல் வெளிப்படையாய்க் காண்பித்தும்; (35)

அவ்விருவராலும் அச்சொரூபத்தை எட்டாதவன், அடி யேன் பொருட்டுக் காட்டினுள்ள நரிகளை நாட்டில் வசிக்கும் பரிகளாகச் செய்த நலமும், அரிமர்த்தன பாண்டியனுக்குக் குதிரையின் பொருட்டு, கைநீட்டி வாங்கப்பட்ட பொருள்கள் திரும்பவும் கொடுப்பதற்குக் கிடைக்கப்பெறாமல் ஆட்கொண்டவ னாகிய திருப்பெருந்துறையில் எழுந்தருளிய எம்பிரானவனது திருவருள் கிடைக்கும் வழியை நாடித் துதித்துக்கொண்டிருப்ப;

அதைக்கண்டு அடியேன் மனமுவக்குமாறு அருள்புரிய விரும்பி அழகு பொருந்திய திருவடிகள் வருந்த ஒளி வடிவனை கடவுள் குதிரைகளை நடத்தவல்ல வீரனாக எழுந்தருளிய பழமை யும், வேதியனாகி ஆட்கொண்டருளி இந்திரசால வித்தை காண் பித்தருளிய இயல்பும், 'திருவாலவாய்' என்கிற மிகவும் நல்ல பெரிய பட்டணத்திலிருந்து, சௌந்தர சாமந்தனென்னும் சேனை பதியின் வேண்டுகோளுக்கிரங்கி அட்டாலைச் சேவகனாய் வந் தருளிய தன்மையும்; (45)

அம்மதுராபுரி பட்டணத்தில் 'வந்தி' என்பவளுக்காக முறைமையாக மண்ணை வையை நதியை அடைக்கும் பொருட்டுச் சுமந்த தன்மையும், 'திருவுத்தரகோசமங்கை' என்னும் சிவப்பதி யில் வீற்றிருந்து ஞானத்திருக்கோலம் காண்பித்த தன்மையும், திருப்பூவணத்தில் அழகுபெற வீற்றிருந்து, (50)

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்டும்
திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும்

பூவலம் அதனில் பொலிந்தினி தருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்

குருந்தின் கீழ்அன்று இருந்த கொள்கையும்
பட்ட மங்கையில் பாங்காய் இருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவன் ஆகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னில் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்;
ஓரி ஊரின் உகந்து இனிதருளிப்
பார்இரும் பாலகன் ஆகிய பரிசும்;
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்;
தேன்அமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்;
இடைமரு தினில் ஈண்ட இருந்து

படிமப் பாதம் வைத்த அப்பரிசும்;
ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து,
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்;
திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்;

பரிசுத்தமாகிய அழகிய திருமேனியைக் காண்பித்த பழமை
யும், திருவாதவூரில் இனிதாக வந்தருளி திருவடிகளிலணிந்த
சிலம்போசையைக் காண்பித்த குணமும், செல்வம் நிறைந்த
திருப்பெருந்துறைக்கு இறைவனுகி, மேன்மைபொருந்திய ஒளி
யில் மறைந்த வஞ்சமும்; (55)

திருப்பூவலத்தில் நன்கெழுந்தருளி அடியார்களது கன்மங்
களைக் கெடுத்த விதமும், தண்ணீர்ப்பந்தலை வெற்றியை இரா
சேந்திர பாண்டியனடைய வைத்து, நல்ல நீர்ச் சேவகனையிருந்த
நலமும், திருவெண்காட்டில் சிறுத்தொண்ட நாயனருக்குரிய
விருந்தாளியாகி, (60)

குருந்தமாநிழலில் முற்காலத்தில் வீற்றிருந்தருளிய தன்மை
யும், பட்டமங்கையென்னுஞ் சிவப்பதியில் அழகுடனிருந்து அவ்
விடத்தில், அணிமா முதலிய எட்டுவித சித்திகளையும் காண்பித்
தருளிய அவ்விதமும், வேடத்திருமேனியோடு வந்து விரும்பிய
வடிவங்களை யெடுத்து, வனத்தில் ஒளித்த வஞ்சகமும்; (65)

வேண்டியபடி சேனாரூபங்களாய்த் திருமேனி காட்டி, அவ்
வளவில் நில்லாமல் தருந்த ஒற்றைச் சேவகன் ஆன விதமும், திரு
வோரியூரில் விரும்பி இனிதாக எழுந்தருளி, பூமியில் சிறிய
குழந்தை வடிவாகிய தன்மையும், திருப்பாண்டூரில் அடியார்
குழாங்கள் நெருங்க வீற்றிருந்தருளியும்; (70)

திருத்தேவூரின் தெற்கே விளங்குகின்றவூர் தீவினில் அரச
கோலம் கொண்டருளிய கோட்பாடும், தேன் பொருந்திய சோலை
களையுடைய 'திருவாரூர்' என்னும் சிவப்பதியில் அருளுரையை
உபதேசித்த நலமும், திருவிடைமருதூரில் அடியார்கள் சூழ
வீற்றிருந்து; (75)

பரிசுத்தமாகிய திருவடி சூட்டியருளிய அந்தத் தன்மையும்,
திருவேகம்பமென்னுங் காஞ்சிமாநகரில் சாதாரணத் திருவுருவோ
டிருந்து, உமாதேவியாரோடு பாகம் பெற்ற தன்மையும், திரு
வாஞ்சியத்தின்கண் அழகுபொருந்த, வாசனை தாங்கிய கூந்தலை
யுடைய உமாதேவியாரோடும் எழுந்தருளியிருந்து மகிழ்ந்த
விதமும்; (80)

சேவகன் ஆகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்;
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்,
ஈங்கோய் மலையில் எழிலத ராட்டியும்,
ஐயாறு அதனில் சைவன் ஆகியும்,

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்,
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்,
கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்,
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்,
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்,

குற்ற லத்துக் குறியாய் இருந்தும்,
அந்தம்இல் பெருமை அழல்உருக் கரந்து,
சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு
இந்திர ஞாலம் போல வந்தருளி,
எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத்,

தானே ஆகிய தயாபரன் எம்இறை
சந்திர தீபத்துச் சாத்திரன் ஆகி,
அந்தரத்து இழிந்(து)வந்து அழ(கு)அமர் பாலையுள்,
சுந்தரத் தன்மையொடு துதைந்(து)இருந் தருளியும்,
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்,

அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்,
எந்தமை ஆண்ட பரிசது பகரின்,
ஆற்ற லதுஉடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்,
ஊனம் தன்னை ஒருங்குடன் அறுக்கும்

ஆனந் தம்மே ஆரு அருளியும்,
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்,
நாதப் பெருப்பறை நவின்று சாறங்கவும்,
அழுக்(கு)அடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்,
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்,

போர்ச்சேவகனுய் வந்து பலம் பொருந்திய வில்லேத்தாங்கிப் பலவகையான பாவனைகளைக் காட்டிய தன்மையும், திருக்கடம்பூரில் யாவரும் முத்தியுலகைப் பெறும் நிமித்தம் எழுந்தருளியிருந்தும், 'திருவீங்கோய் மலை' என்னும் திருப்பதியில் அழகைக் காட்டியும், திருவையாற்றில் ஆதிசைவப் பிராமணத் திருக்கோலமாய் எழுந்தருளி வந்தருள்புரிந்தும்; (85)

திருத்துருத்திப் பதியில் பேரன்புடன் வீற்றிருந்தும், திருப்பனையூரின்கண் விருப்பமுடையவனுயிருந்தும், சீர்காழிப்பதியில் காட்சி தந்தருளியும், திருக்கழுக்குன்றத்தில் தவமுதிருந்தும், திருப்புறம்பயத்தில் பல தருமங்களை அருள் செய்தும்; (90)

திருக்குற்ருலப்பதியில் அகத்தியமுனிவர் வேண்டுகோளின்படி சிவலிங்கக் குறியாயமைந்தும், முடிவில்லாத பெருமையையுடைய அக்கினி வடிவத்தை மறைத்து, அழகிய கோலத்தையுடைய ஒப்பற்ற முதன்மையான வடிவங்கொண்டு, இந்திரஞாலம் போல எழுந்தருளி, எவ்வெவ நியற்கைகளையும் தன்னிடத் தடக்கி, (95)

தாளைருவனே முழுமுதற் கடவுளாகிய கருணையிற் சிறந்தவனும் எமது தலைவனுமாகிய கடவுள், சந்திரதீபத்தில் சாஸ்திர போதகனுய், திருக்கைலாயத்தினின்றெழுந்தருளி வந்து அழகு பொருந்திய திருப்பாலைவனத்தில் அழகிய திருக்கோலத்தோடு பொருந்தி எழுந்தருளி வந்தும், மந்திர வடிவமாகிய பெரிய மலையாகிய மகேந்திர மலையை உடையவன்: (100)

முடிவில்லாத மேன்மையையும் கருணையையும் உடைய பெருமையிற் சிறந்தவன், எம்மை ஆட்கொண்ட தன்மையைச் சொல்லுமிடத்து, வல்லமையை உடைய அழகமைந்த திருவடிவைத் திருநீற்றிரேகையோடு உயர்ந்து காண்பித்தும், பிறவித் துன்பத்தை ஒருமிக்க உடனே ஒழிக்கின்ற (105)

இன்பமே பயனுக அருளிச்செய்தும், உமாதேவி தங்கிய இடதுபாகத்தையுடைய மிகவுமுயர்ந்த அருளை உடையவன்; நாததத்துவமாகிய பெரிய முரசு முழங்கி ஒலிக்கவும், மாசு பொருந்தாமல் ஆட்கொண்டருள்வோன்; சூலாயுதத்தைக் கைப்பிடித்தருளியும்; (110)

மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி,
காதலன் ஆகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்,
அரியொடு பிரமற்கு அளவுஅறி யாதவன்,
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்;
மீண்டு வாரா வழிஅருள் புரிப்வன்,
பாண்டி நாடே பழம்பதி யாகவும்,
பத்திசெய் அடியரைப் பரம்பரத்(து) உய்ப்பவன்,
உத்தர கோச மங்கை ஊராகவும்,
ஆதி மூர்த்திகட்(கு) அருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்,
இருள்கடிந் தருளிய இன்ப ஊர்தி,
அருளிய பெருமை அருள்மலை யாகவும்,
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனல் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவின்னில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்

ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது ஆகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்து அலறியும்
கால்விசைத்து ஓடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழுது அரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக என்று
இதஞ்சலிப்பு எய்தநின் றெங்கினர் ஏங்கவும்
எழில்பெறும் இமையத்து இயல்புடை அம்பொன்

பிறவிப்பிணிக்குக் காரணமாகிய ஆணவம் மாயை கன்ம மென்று சொல்லப்பட்ட மூன்று மலங்களையும் சேதிக்கின்ற, பரிசுத்தமாகிய திருமேனியின் காந்தியை எறிகின்ற ஒளிவடிவானவன், செங்கழுநீர் மலர் மாலையில் விருப்பமுடையவனாகிப் பொருத்தமுடைத்தாக அதனை அழகாக அணிந்தும், திருமாலுக்கும் நான்முகனுக்கும் இத்தன்மையனென்று அறியப்படாதவன்;

குதிரையின்மீது எறிவந்த தன்மையும், மறுபடியும் பிறவியையடையாத மோட்சமார்க்கத்தை அடியாருக்கு அருள் செய்பவனாகிய சிவபெருமான், பாண்டி வளநாடே பழமையாய் வசிக்கும் இருப்பிடமாகக்கொண்டும், தன்னிடத் தன்பு வைத்துத் தொண்டு செய்கிற அடியார்களை மிகவும் மேலான மோட்சவுலகத்தில் வைப்பவன்; திருவுத்தரகோசமங்கையை ஊராகக் கொண்டும்;

திருமூர்த்திகளுக்குத் திருவருள் செய்தருள் புரிந்த, மகாதேவனது திருநாமமாகவும், மாயையாகிய இருட்டை நீக்கி அடியேனுக்குப் பேரருள் செய்தருளிய ஆனந்தவூர்தி; அருள்செய்த பெருமை திருவருள் மலையாகவும், எப்படிப்பட்ட பெருந்தன்மையையும் எவ்வகைப்பட்ட திறத்தினையும்; (125)

அவ்விதத் தன்மைகளால் ஆட்கொண்டருளி, நாய் போல்வேனை நன்மை மிகுந்த திருத்தில்லையின்கண், அழகு நிறைந்த அம்பலத்தில் வருகவென்று, ஏற்க அடியேனை இவ்விடத்தே நீக்கியருளி, அன்று தன்னோடுகூடச் சென்ற திருவருளைப்பெற்ற அடியார்கள், (130)

பொருந்தப் பொருந்த அவருடன் சேர்ந்தருளியும், அடையவராதவர்கள் தீயில் பாயவும், ஆசைகொண்டு மயங்கியும், பூமியின் மேல் விழுந்து புரண்டு அலறியும், காலால் வேகங்கொண்டு சென்று கடலில் விழ நெருங்கி, (135)

'தலைவனே, தலைவனே!' என்று அழுது கத்தி, திருவடியை அடைந்தவர்கள் திருவடியை அடையவும் பதஞ்சலி முனிவருக்குத் திருவருள் செய்த ஆனந்தக்கூத்தனே என்று, மனம் கலக்கத்தால் வருந்த இருந்து எக்கமுற்றிருந்தவர் எக்கமடையவும், அழகைக் கொண்ட இமயமலையின் தன்மையையுடைய அழகிய பொன்மயமாய், (140)

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்குஇனி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே. 146

நச்சிற்றம்பலம்.

விளங்குகின்ற தில்லையம்பலத்தினில் நடனஞ்செய்த, கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயினையுடைய உமாதேவியோடு காளிமாதேவிக்கும், அருள்புரிந்த திருமுகத்தில் அழகுபொருந்திய புன்னகையுடைய, எம்பெருமான் தன் திருவடியைச் சரணைகக் கொண்ட அடியார்களுடனே, ஒலிக்கின்ற ஊழிதோறும் அழியாமல் வளர்ந்தோறுகிற கைலமலைக்கு உரியோன், விளங்குகின்ற திருப்புலியூரின்கண் இனிதாகப் புகுந்தருளினன். (146)

திருச்சிற்றம்பலம்.

3. திருவண்டப் பகுதி

(தில்லையில் அருளியது)

சிவனது தூல சூக்குமத்தை வியந்தது

இணைக்குறளாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்,
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி,
ஒன்றனுக் கொன்று நின்ற எழில் பகரின்,
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன;
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்; தெரியின்,
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறைமா ருதத்து
எறியது வளியில்
கொட்கப் பெயர்க்கும் குழகன்; முழுவதும்

அவருடைய செய்கை

படைப்போற் படைக்கும் பழையோன்; படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள்; காப்பவை
கரப்போன்; கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்; திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபே ருய்ந்நின்ற விண்ணோர் பகுதி;
கேடும் புரையும் கிழமோன்; நாள்தோறும்
அருக்கனில் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு
சாலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட

3. திருவண்டப் பகுதி

சிவனது தூல சூக்குமம்

திருச்சிற்றம்பலம்.

அண்டத் தொகுதியினுள்ளே உள்ள ஓர் அண்டத்தினுடைய தொகுதியின் விளக்கமானது, அளத்தற்கரிதாகிய தன்மையையும் வளப்பத்தையுடைய பெரிய தோற்றத்தினையு முடையதாய் ஒன்றுக்கொன்று தொடர்ந்துநின்ற அழகினை எடுத்துச் சொல்லுமிடத்து, நூற்றொரு கோடியினும் அதிகப்படப் பரந்திருந்தன. ஆயினும், அவைகள் வீட்டுக் கூரையின்கண் நுழைகின்ற கதிரவனெளியிற் காணப்படுகின்ற நெருங்கிய அணுக்களை ஒப்பாக. (5)

சிறியனவாக, தான் பெரியவனையிருப்பவன். ஆராயுமிடத்து நான்முகர்களின் கூட்டத்தோடு திருமால்களின் பெருக்கமும், உலகப்படைப்பும் காத்தற்பெருமையும் முடிவுபெற வருகின்ற மிகவும் பொிதாகிய எல்லாம் அழிகிற காலத்திலும் நீங்குதலும் நிலைபெற்றிருத்தலும், சூக்கும தேகத்தொடு தூல தேகங்களும் சூறைக்காற்றின், (10)

சுழற்சியிலகப்பட்ட இளந்தென்றற்காற்றைப்போலச் சுழலப் பெயர்க்கும் அழகினையுடையவன்; எல்லா உலகங்களையும் படைப்பவனாகிய நான்முகனையும் படைக்கின்ற அநாதிமலமுத்தன்; படைப்புப் பொருள்களனைத்தையும் காப்பவனாகிய திருமாலையும் காத்தருளுகின்ற தேவன்; இவ்வாறு காக்கப்பட்ட பொருள்களைச் சங்காரிப்பவன்; இவ்வாறு சங்காரிக்கப்பட்ட பொருள்களை மீட்டும் பிறவியை அடைவிக்க நினையாத (15)

திருவருள் நிறைந்த மனத்தினையுடைய முழுமுதற்பிரான்; அழகு பொருந்திய ஆறுவகைப்பட்ட சமயங்களையுடைய உட்சமயிகள் அறுவருக்கும் முத்திப்பேறாய் விளங்கிய திருமால் நான்முகன் முதலிய தேவ வருக்கங்களனைத்தும் தன் பெருமைக்கு முன் ஒரு சிறிய புழுவை நிகர்க்கின்ற மேன்மைக்குரியவன்; தினந்தோறும் கதிரவனிடத்தில் ஒளியை அமைத்தவன்; அழகு பொருந்திய, 20

சந்திரனிடத்துக் குளிர்ச்சியை அமைத்தவன்; தீயில் வெப்பத்தைப் படைத்தவன்; பொய்ம்மை நீங்கிய உண்மையறிய ஆகாயத்தில் வியாபிக்கும் தன்மையை உண்டாக்கினவன்; மேன்மையுடைய கூற்றினிடத்து விரைந்து செல்லும் வன்மையை அமைத்தவன்; குளிர்ச்சியையுடைய நீரில் இனியமதுரத்தைப் பொருந்தச் செய்தவன்; யாவரும் அறியும்படி (25)

மண்ணில தின்மை வைத்தோன்; என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத் தனைத்து அவ்வயின் அடைத்தோன்,
அஃதான்று,

நாமங்கள்

முன்னோன் காண்க! முழுதோன் காண்க!
தன்னோர் இல்லோன் தானே காண்க!
எனத்தொல் லெயிறு அணிந்தோன், காண்க!
கானப் புலியுரி அரையோன், காண்க!
நீற்றோன், காண்க! நினைதொறும் நினைதொறும்
ஆற்றேறன். காண்க! அந்தோ, கெடுவேன்,
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க!
அன்னதான்று அவ்வயின் அறிந்தோன், காண்க
பரமன், காண்க! பழையோன், காண்க!
பிரமன்மால் காணப் பெரியோன், காண்க!
அற்புதன், காண்க! அநேகன், காண்க!
சொற்பதம் கடந்த தொல்லோன், காண்க!
சித்தமும் செல்லாச் சேட்சியன், காண்க!
பத்தி வலையிற் படுவோன், காண்க!
ஒருவன் என்னும் ஒருவன், காண்க!
விரிபொழில் முழுதாய் விரிந்தோன், காண்க!
அணுத்தரும் தன்மை இலையோன், காண்க!
இணைப்பரும் பெருமையில் ஈசன், காண்க!
அரியதில் அரிய அரியோன், காண்க!
மருவினப் பொருளும் வளர்ப்போன், காண்க!
ஞானுணர்வு உணரா நுண்ணியோன், காண்க!
மேலொடு கீழாய் விரிந்தோன், காண்க!
அந்தமும் ஆதியும் அகன்றோன், காண்க!
பந்தமும் வீடும் படைப்போன், காண்க!
நிற்பதும் சொல்வதும் ஆனோன் காண்க!
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க!
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க!

பூமியினிடத்துச் சராசரப் பொருள்களனைத்தையும் தாங்கும் வல்லமையை அமைத்தவன் என்று பலவகையானும் சொல்லப் பட்டன எத்தனை பலகோடிகள் உள்ளனவோ, எத்தனை பல வாகிய பிறவிகளுள்ளனவோ அத்தனை அத்தனைப் பொருள்களை யும் அவைகட்குரிய அவ்வவ்விடங்களில் அமைத்தவன்; அதுவே யல்லாமல் அநாதியாயுள்ளவன்; நீ அறிவாயாக எல்லாப்பொருள் களுமாய் விளங்குபவன்; தனக்கு ஒப்பு இல்லாதவன் அறிக. (30)

திருமாலாகிய பன்றியினது முதிர்ந்த தந்தங்களை அணிந் தவன் அறிக. காட்டில் வசிக்கின்ற புலியினது தோலை அரையி லணிந்தவன் அறிக. திருவெண்ணீற்றை அணிந்தவன் அறிக. யான் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவனது பிரிவைப் பொறேன் அறிக. ஐயோ அழிவேன்! இனிய நாதமாய் வீணை என்னும் நரம்புக் கருவியில் இசைந்து நிற்பவன் அறிக. (35)

அத்தன்மையதாகிய ஒன்றை அவ்விடத்து உணர்ந்தவன் அறிக. மேலானவன் அநாதியாயுள்ளவன் அறிக. நான்முகனும் திருமாலும் பார்க்கவொண்ணாத பெருமை உடையவன் அறிக. ஞானவடிவானவன் அறிக. பல ஆண்டுகளாயிருப்பவன்; சொல் லளவையை மீறிய பழமையானவன் அறிக. (40)

மனமும் சென்றறியவொண்ணாத தூரமாய் இருப்பவன் அறிக. அன்பாகிய கண்ணியில் சிக்குபவன் அறிக. ஒப்பற்றவன் என்று யாவரும் புகழத்தக்க தனிமுதலாய் நிற்பவன் அறிக. பரந்த உலகமுழுவதும் ஆகி நிறைந்தவன் அறிக அணுத்தன்மையினும் நுட்பமானவன் அறிக. (45)

ஒப்பிடுதற்கு அருமையாகிய பெருமையால் தலைவன் அறிக. அருமையான பொருள்களுக்குள்ளே மிகவும் அருமையானவன் அறிக. ஒவ்வொன்றிலும் பொருந்தி எல்லாப் பொருள்களையும் வளர்ப்பவன் அறிக. நூலறிவாலும் அறியப்படாத நுட்பம் உடையவன் அறிக. உள்ளும் புறம்புமாய் எல்லாப் பொருள்களி லும் பரவியிருப்பவன் அறிக. (50)

ஒடுக்கமும் தோற்றமும் நீங்கினவன் அறிக. பிறவிக்கேது வாகிய பாசபந்தங்களையும் மோட்சத்தையும் அவரவர் வினைக் கீடாக அருளுபவன் அறிக. தாவரப்பொருள்களும் சங்கமப் பொருள்களும் ஆகி நின்றவன் அறிக. கற்பமாகிய கால அளவை யும் அவற்றின் முடிவுகளையும் கண்டவன் அறிக. எல்லாச் சமயத்தவரும் தத்தம் கடவுளாகக்கொண்டு அடைய அவரவர் நினைத்த வடிவாய் வந்தருளுகின்ற தலைவனானவன் அறிக. (55)

தேவரும் அறியாச் சிவனே காண்க!
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க!
கண்ணுல் யாணும் கண்டேன், காண்க!
அருள்நனி சுரக்கும் அழுதே, காண்க!
கருணையின் பெருமை கண்டேன், காண்க!
புவனியில் சேவடி தீண்டினன், காண்க!
சிவன்என யாணும் தேறினன், காண்க!
அவன்எனை ஆட்கொண் டருளினன், காண்க!
குவளைக் கண்ணி கூறன், காண்க!
அவளும் தானும் உட்னே, காண்க!

கடலும் மேகமும்

பரமா னந்தப் பழங்கடல்; அதுவே
கருமா முகிலில் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகும் இன்ஒளி திசைதிசை விரிய,
ஐம்புலப் பந்தின வாளரவு இரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர,
எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து,
மூரசெறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப்;
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட,
வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி,
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை,
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன;
ஆயிடை வானப் பெரியாற்று அகவயின்
பாய்ந்துளழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்,
சுழித்துளம் பந்தமாக் கரைபொருது அலைத்து

கடவுளரும் தேடியறியாத மங்களகரமானவன் அறிக. பெண்ணும் ஆணும் அலியும் என்று சொல்லப்படும் தன்மையை புடையவன் அறிக. கண்களால் நானும் பார்த்தேன் அறிக. திருவருளே மிகவும் சுரந்தருளிய அமிர்தமே அறிக. தனது அருட்சக்தியின் ஆற்றலை அறிந்தவன் அறிக. (60)

பூமியில் திருவடி பொருந்தப்பெற்றவன் அறிக. இத்தகை யோனைச் சிவபெருமான் என்று நானும் தெளிந்தனன் அறிக. அத்தகையபெருமான் அடியேனை அடிமையாகச்செய்து அருள் பாவித்தனன் அறிக. கருங்குவளை மலர்போலும் கண்களையுடைய உமாதேவியை இடப்பாகத்திலுடையவன் அறிக. அத்தகைய உமாதேவியாரும் தாமுகிய இறைவனும் உடன்பட்டிருத்தலை அறிக. (65)

அவ்வுடன்பாடு பேரானந்தமாகிய பெருங் கடலாயிற்று. அதுவே கருமையாகிய பெரிய முகிலைப்போல எழுந்தருளி, அழகுபொருந்திய திருப்பெருந்துறை என்கிற மலையின்மேல் ஏறி, அழகுபொருந்திய ஒளியாகிய மின்னல் திக்குகள்தோறும் பரவ, ஐம்பொறிகளாலுண்டாகிற ஆசையாகிய ஒளி பொருந்திய பாம்புகள் ஓடவும்; (70)

வெப்பத்தையுடைய பிறவிநோய் என்கிற வெயிலானது பெரிய தன் தலையைக் காட்டாமல் ஒளிக்கவும்; மிகுந்த அழகு நிறைந்த செங்காந்தள் மலர்கள் மிகுந்த ஒளியை வீசவும்; எமது பிறவிகளாகிய இந்திரக்கோபப் பூச்சிகள் அதிகரிக்க, பேரிகை யைப்போல அதிர்ந்து மிகவும் பெரிய அருளோடு முழங்கி, தாமரைப்பூவின் குவிவைப்போன்ற காந்தளின் பேரரும்புகள் காட்டவும்; (75)

குறைவுபடாது இனிய அருளாகிய நுட்பமாகிய துளிகள் உண்டாகவும்; செவ்விய ஒளிப்பெருக்கமானது திசைகள்தோறும் தெக்கவும்; மலைபோற் பொருந்த, துன்பமாகிய குளம் அறவே ஒழிய உயர்ந்து, ஆறு சமயங்களாகிய ஒப்பற்ற கானல் நீரை, நீர் வேட்கையானது உண்டாக, அதனால் நீரை நாடிவந்த நீண்ட கண்களையுடைய மானினது கூட்டங்கள், (80)

தவமாகிய பெரிய வாயினால் உண்டு தளர்ச்சியோடும், வீணுகிய மிகுந்த நீர்வேட்கை நீங்காமல் வருந்தினவாகவும், அவ் விடத்து வானமாகிய பெரிய ஆற்றினது உள்ளே மூழ்கி எழுந்து ஆனந்தமென்னும் பெரிய நீர்ச்சுழிகளை எறிந்து, சுழற்சியடைந்து எமது அவாவாகிய பெரிய-கரையை மோதி அரைசத்திடித்து, (85)

இடித்து ஊழ்ஊழ் ஓங்கிய ஈங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேல்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க!

வாழ்த்து

கரும்பனைக் கச்சைக் கடவுள், வாழ்க!
அருந்தவர்க்கு அருளும் ஆதி, வாழ்க!
அச்சம் தவிர்த்த சேவகன், வாழ்க!
நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன், வாழ்க!
சூழ்இருந் துன்பம் துடைப்போன், வாழ்க!
எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன், வாழ்க!
கூர்இருள் கூத்தொடு குனிப்போன், வாழ்க!
பேரமைத் தோளி காதலன், வாழ்க!
எதிலர்க்கு எதில்லம் இறைவன், வாழ்க!
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு, வாழ்க!

துதி

ஈச்சரவு ஆட்டிய ஈம்பன், போற்றி!
பீச்சுஎலும பு ஏற்றிய பெரியோன், போற்றி!
சீற்றமொடு தோற்ற வல்லோன் போற்றி! ஈாற்றிசை,
ஈடப்பன ஈடாஅய்க், கிடப்பன கிடாஅய்,
ஈிற்பன ஈிறீஇச்,

ஒவ்வொரு பிறவியினும் ஊழ்வினையால் வளர்ச்சியடைந்த நமது நல்வினை தீவினையாகிய பெரிய மரத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டெழுந்து, முழுமையும் திருவருளாகிய நீரை ஓடச் செய்து கிடைத்தற்கரிய மலைகளிலுண்டாகிய சந்தன மரங்களால் பெரிய அணையைக்கோலித் தேனைச் சிந்துகின்ற வாசனை தாங்கிய மலர்கள் நிறைந்தனவாய் குளங்களின் இடங்களை வளத்து மணம் நிறைந்த அகிற்கட்டைகளின், (90)

பெரும் புகையோடுகூடிய கரைகளைச் சேர்ந்த வண்டுகளை உடைய குளத்தில், அதிகரிக்க மேலும் மேலும் மகிழ்தலைப்போலப் பார்த்து, அர்ச்சனையாகிய விளைநிலத்தில் பத்தியாகிய விதையை விதைத்து, அடியார்களாகிய உழவர்கள் உண்ணும்படி கொடுத்த சிதாகாயத்திலுள்ள பெறுதற்கரிய முகிலைப்போல்பவன் வாழ்க!

கருமையாகிய படத்தையுடைய பாம்பாகிய கச்சையைக் கட்டிய கடவுளானவர் வாழ்க! அரிய தவத்தையுடையவருக்கு அருள் செய்கின்ற முதல்வன் வாழ்க! மீண்டும் பிறவியுண்டோ வென்னும் அச்சத்தை நீக்கியருளிய சுத்தவீரரெகிய கடவுள் வாழ்க! நாள்தோறும் தனது திருவருளால் வலித்து ஆண்டு கொள்பவன் வாழ்க! வளந்துசென்றேடவரும் பெரிய பிறவித் துன்பங்களை ஒழித்தருள்பவன் வாழ்க! (100)

தன்னை நாடி வந்தடைந்தவர்க்கு நிறைந்த அருளமுதத்தைத் தருபவன் வாழ்க! சர்வசங்கார காலமாகிய பெரிய இருளில் ஆனந்தத்தாண்டவம் புரிபவன் வாழ்க! பெரிய மூங்கிலின் அழகையொத்த தோள்களையுடைய உமாதேவியின் தலவன் வாழ்க! தன்னை வணங்காதவர்க்கு அயலவனாய் நிற்கும் கடவுள் வாழ்க! அன்பினர்கட்கு இளைத்த காலத்தில் பொருளைப்போலுதவி செய்பவன் வாழ்க! (105)

நஞ்சினை உடைய பாம்பினை அசைக்கின்ற நமது பிராணகிய கடவுளுக்கு, எமக்குப் பித்து உண்டாக்கிய மகாதேவனுக்கு வணக்கம். எல்லாம் அழியுங்காலத்தில் அரிப்பிரமாதி சராசரப் பொருள்களனைத்தையும் நெற்றிக்கண்ணால் சுகித்து அசகாம்பலாகிய திருவெண்ணீற்றுப் பூச்சுடனே தோன்ற வல்லவனாகிய சிவபெருமானுக்கு வணக்கம். நான்கு திக்குகளிலும் நடப்பவற்றை நடத்துவித்துக் கிடப்பவற்றைக் கிடத்தி, நிற்பவற்றை நிறுத்திச் (110)

சொற்பதம் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனெல் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந்து எங்கும்

ஒழிவுஅற நிறைந்து மேவிய பெருமை
இன்று எனக்கு எளிவந் தருளி
அளிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றுஎனக்கு எளிவந் திருந்தனன், போற்றி!
அளிதரும் ஆக்கை செய்தோன், போற்றி!

ஊற்றிருந்து உள்ளம் களிப்போன்; போற்றி!
ஆற்ற இன்பம் அலர்ந்துஅலை செய்யப்
போற்ற ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்!

ஒளித்தல்

மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்ஒளி கொண்ட பொன்ஒளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்
மூஇறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்
ஒற்றுஎவை கொண்டு நோக்கும் உள்ளத்து(து)
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்

இத்தந் திரத்தில் காண்டும்என் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
மூனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆண்எனத் தோன்றி அலிஎனப் பெயர்ந்து
வாள்நுதற் பெண்என ஒளித்தும், சேண்வயின்

சொல்லளவையை இகழ்ந்த அநாதிமலமுத்தன்; உள்ள மாகிய அறிவினால் அறியக்கூடாதவன்; கண் முதலாகிய ஐம் பொறிகளினாலும் அறியப்படுந் தன்மையும் இல்லாதவன்; விண் முதலிய ஐம்பெரும் பூதங்களும் தனது திருவருளால் தோன்றப் படைத்தவன்; மலரினிடத்துண்டாகிய வாசனையைப்போல ஒன்றி எல்லாப் பொருள்களினிடத்தும்

நீக்கமில்லாமல் பரவிப் பொருந்திய மேன்மையையுடைய கடவுள்; இப்போது அடியேனுக்கு ஆசாரியத் திருக்கோலமாய் எளிதிலெழுந்தருளி, திருவருள் புரிந்து அழிதற்குரிய உடலை மீட்டும் வராவகை நீக்கியருளிய சிறந்த பொருளானவன்; இப் பொழுது அடியேனுக்கு எளிதில் வந்தருள் புரிந்தனன். வணக்கம்.

அத்தகையோனுக்குக்; கனிந்தழிகின்ற இவ்வுடம்பைப் படைத்தவனுக்கு வணக்கம். அடியார்களது மனத்தின்கண்ணே ஊற்றுநீர் போலத் திருவருள் சுரந்து நின்று களிப்பவன் பொருட்டு வணக்கம். தாங்கவொண்ணாத இன்பக்கடல் பரவி அலைகள் வீசாநிற்க, அதைப் பாதுகாவாத சரீரத்தை வீணாகச் சுமத்தலையான் தக்கதென்று சொல்லேன். மரகதமணியின் கூட்டமும் மாணிக்கமணியின் மிகுதியும், மின்னலைப்போல ஒளியை வீசுகின்ற பொன்னினது ஒளியும் விளங்கவும், நான்கு திக்குகளினிடத்தும் போய்த் தேடுகின்றவர்க்கு மறைந்தும்;

முறைமையாகத் தொழுது முயற்சிப்பவர்க்கு மறைந்தும்; மனமொருமித்துப் பார்க்கின்ற மனத்தையுடையவராய், அடைந்தவர்கள் மனம் வருந்தும்படி கடுஞ்சொல் சொல்பவர்கட்கு மறைந்தும்; மறைகளின் கூறுபாட்டைப் பலகாலாராய்ந்து உண்மை விளங்காமல் வருந்துகின்றவர்க்கு மறைத்தும்;

இந்த உபாயத்தால் காண்போம் என்று நினைத்து இருந்தவர்களுக்கு, அந்த உபாயத்தாலேயே அவர் நினைத்தவிடத்தில் மறைந்தும்; வெறுப்பானது நீங்கப் பார்த்து மிகவும் வரப்பற்றி, ஆணென்று சொல்லும்படி விளங்கிப், பேடு என்று சொல்லும்படி சஞ்சரித்து, ஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்ணென்று சொல்லும்படி மறைந்தும்; தூரமான இடத்தில்

ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுஉண்டு இல்லை என்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்!

அர்ச்சனை

ஆர்மின் ஆர்மின்! நாண்மலர்ப் பிணையலில்
தாள்தனை யிடுமின்!
சுற்றுமின், சூழ்மின், தொடர்மின், விடேன்மின்
பற்றுமின், என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்நேர் இல்லோன் தானேஆன தன்மை
என்நேர் அணையோர் கேட்கவந்து இயம்பி
அறைகூவி, ஆட்கொண் டருளி
மறையோர் கோலம் காட்டி யருளலும்
உளையா அன்பென்பு உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த்து ஓங்கித்
தலைதடு மாறு வீழ்ந்து,புரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி, மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களிறு ஏற்றுத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேன் ஆக அவயவம் சுவைதரு
கோல்தேன் கொண்டு செய்தனன்.
ஏற்றூர் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கன்று,
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனிஎனக்கு ஆயினன்

ஆநந்தம்

சொல்லுவது அறியேன், வாழி முறையோ
தரியேன் நாயேன், தான்எனைச் செய்தது
தெரியேன், ஆஆ, செத்தேன் அடியேற்கு

பஞ்சேந்திரியங்களையும் செல்லும்படி விட்டு அரிய மலைகள் தோறும் சென்று, ஆகாரம் முதலியவைகள் நீங்கியபடியால் வெறுமையாகிய உயிரையும் உடலையுமுடைய அரிய தவசிகளுடைய அறிவிலல் திருத்தமாக மறைந்தும்; ஒரு பொருள் உளது இலது என்று அறிந்து சொல்லுகின்ற அறிவுக்கும் மறைந்தும்; ஆதிமுதல் பழகுந்தோறும், இப்பொழுது பழகுந் தோறும் (140)

'மறைகின்ற இயற்கையுடைய கள்வனைப் பார்த்தோம்; ஆரவாரம் செய்யுங்கள்; அன்றலர்ந்த மலர்களால் சமைத்த மாலைகளால் அவனது திருவடியைக் கட்டுங்கள்; நன்றுயிறுக்கிச் சுற்றுங்கள்; சூழ்ந்துகொள்ளுங்கள்; பின் தொடர்ந்து செல்லுங்கள்; விடாதேயுங்கள்; பிடித்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லுபவர்களுடைய சொற்களுக்கு எட்டாமல் அறவே யொளித்தும், (145)

தனக்கு ஒப்பானவர்கள் வேறொருவரு மில்லாதவன்; அவ்வுவமைப் பொருளுந் தானேயாயிருந்த தன்மையை என்போன்றவர்கள் கேட்கும்படி வந்து சொல்லி, வலிந்தழைத்து அடிமை கொண்டருளி, வேதியர் கோலத்தைக் காட்டின அளவில், மனம் வருந்தி மெய்யன்பிலல் எலும்பும் உருகும்படி முறையிட்டு, (150)

அலைகின்ற கடலின்கணுண்டாகிய அலைகளைப்போல இரைந்திரைந்து மேலெழுந்து; தலையானது தடுமாறி விழுந்து புரண்டு கூச்சலிட்டுப் பித்தர்களைப்போல மயக்கமடைந்து உன்மத்தங் கொண்டவர்களைப்போல மதித்து, நாட்டிலுள்ளவர் மயக்கமடையும் கேட்டவர்கள் வியப்படையவும், மதநீரைப் பொழிகின்ற ஆண் யானைகள் தாங்கப்பெறுத லிகவும் பெரிய மதத்திலல், (155)

நான் பொறுக்காதவறுக இனிய சுவையைக்கொண்ட கொம்புத்தேனைக்கொண்டு உறுப்புக்களைச் செய்யப்பட்டவன்; எதிர்த்தவர்களுடைய பழைய ஊனை அழகிய நகைப்பாகிய நெருப்பிலல் நீறுகி விழச்செய்த அக்காலத்தில், திருவருளாகிய பெரிய நெருப்பிலல் அடியோங்களாகிய தன் அடிமைக் குடிகளில் (160)

ஒருவராகிலும் தவறுமல் ஒடுக்கிக்கொண்டனன்; பெரிய கையின்கண் உள்ள நெல்லிக்கனிபோல அடியேனுக்குக் கிடைத்தான். இதைப்பற்றிச் சொல்லவேண்டியதை அறிகிலேன். வாழுதல் முறைமையோ? நாயையொத்த நான் இனிமேற் கணமேனும் பொறேன். அவன் அடியேனைச் செய்த விதத்தை; (165)

அருளியது அறியேன், பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்

தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்து நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதோறும் ஏற்றினன்; உருகுவது

உள்ளங் கொண்டுஓர் உருச்செய்தாங்கு எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்; ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறுஎனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்; என்னில்
கலக்க

அருளொடு பரா வமுது ஆக்கினன்;
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே!

திருச்சிற்றம்பலம்

அறியேன்; ஐயோ, இறந்து ஒழிந்தேன்! அடியேனுக்குத் திருவருள்புரிந்த விதத்தை இன்னபடி என்றறிகிலேன். உண்டும் திருப்தி அடையேன். விழுங்கியும் அமைகிலேன் செழுமை யாகிய குளிர்ந்த திருப்பாற்கடலின் அலகளை ஒப்பாகச் செய்து, முழுத்திங்கள் தோன்றுகின்ற பௌர்ணமைக்காலத்தில் பெருகும் கடலில் பொருந்திய நீர்போல மனத்தினுள்ளே தளும்பச் சொல் கடந்து அமிர்தமானது மயிர்க்கால்கள்தோறும் (170)

தேங்கும்படிச் செய்தனன். கொடியேனது பருத்த மாமிச பிண்டமாகிய இதற்கு முன்னெடுத்த உடல்களெல்லாவற்றையும் விடநாயினேனது இவ்வு
இனிய தேனைப் பாயச்செய்து நிறைந்த புதுமையான அமிர்த தாரைகளை எலும்புகளின் துளைகடோறும் ஏறச்செய்தனன். உருகுவதாகிய மனத்தைக்கொண்டு ஒரு வடிவத்தைச் செய்வது போல, (175)

அடியேனுக்கு மிகுதியும் உருகுகின்ற உடம்பைச் செய்தான்; ஒளி பொருந்திய கரும்பையும் விளாங்கனியையும் தேடித் தின்கின்ற மதயானையைப்போல முடிவு காலத்தில் அடியேனையும் இறுமாந்திருக்கும் பொருளாகச் செய்தனன். என்னிடத்தில் திருவருளாகிய உயர்ந்த தேனைது விரவிப் பாயும்படி (180)

அன்போடு கூடிய அமிர்தமாக்கிக்கொண்டனன். நான் முகனும் திருமாலும் தேடியும் காணுத பெருந்தன்மையையுடைய சிவபெருமான்.

திருச்சிற்றம்பலம்.

4. போற்றித் திருவகவல்

(தில்லையில் அருளியது—சகத்தின் உற்பத்தி)

சிவனதடி

நிலமண்டில ஆசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன் முதலா வானவர் தொழுதுள ழ
சரடி போலே மூவுலகு அளந்து,
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மால்அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்
கடுமுரண் ஏனம் ஆகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து,பின் எய்த்து
ஊழி முதல்வ ! சயசய ! என்று
வழுத்தியும் காண மலர்அடி இணைகள்
வழுத்துதற்கு எளிதாய், வார்கடல் உலகினில் !

பிறப்பு

யாண முதலா எறும்பு ஈறிய
ஊனம்இல் யோனியின் உள்விழ பிழைத்தும்,
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனம் இல்கிருமிச் செருவினில் பிழைத்தும்,
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்,
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்,
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்,
அஞ்சு திங்களில் மூஞ்சுதல் பிழைத்தும்,
ஆறு திங்களில் ஊறுஅுலர் பிழைத்தும்,
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்,
எட்டுத் திங்கள்ல் கட்டமும் பிழைத்தும்,
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்து,
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்,

4. போற்றித் திருவகவல்

(தில்லையில் அருளியது—சகத்தின் உற்பத்தி)

சிவனதடி

திருச்சிற்றம்பலம்.

நான்கு திருமுகங்களையுடைய நான்முகன் முதலாகிய தேவர்கள் எல்லோரும் வணங்காநிற்க, இரண்டு திருவடிகளைக் கொண்டு மூன்று உலகங்களையும், நான்கு திக்கிலும் உள்ள தேவர்களும் தமது ஐம்பொறிகளும் மகிழும்படி வணங்குகின்ற ஒளிகளையுடைய திருமுடியமைந்த அழகிய திருமால், தீ மலையாய் நின்ற நாளில் அடியையும் முடியையும் அறியவேண்டும் என்கிற விருப்பத்தால், (5)

வேகமும் வலிமையுமுள்ள பன்றியாகி முன் வந்து, எழுலகங்களையும் ஊடுருவும்படி நிலத்தைத் தோண்டிச்சென்று பின்பு இளைத்து, 'படைப்புக்காலத்திற்கு முற்பட்டவனே, வெற்றியடைக; வெற்றியடைக' என்று துதித்தும் காணப்பெறுதாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகள், எம்போலுள்ளவர் துதித்தற்கு எளிதாகி நீண்டகடலால் சூழப்பட்ட உலகத்தில், (10)

யானையே முதலாக எறும்புகள் இறுதியாக உள்ள ஊனமில்லாத எண்பத்திநான்கு லட்சம் யோனி பேதங்களில் செயதவினைகளுக்கீடாகத் தங்கியிருந்து தப்பியும், மனிதப்பிறப்பில் தாய் வயிற்றில் குறைவில்லாத புழுக்களின் போருக்குத் தப்பியும், முதலாவது மாதத்தின் நிறைவில் இரண்டாவது மாதத்தின் நிகழ்ச்சியில் ஒருமைப்பாட்டில் தப்பியும், (15)

மூன்றுவது மாதத்தில் உண்டாகின்ற அந்த மதப்பெருக்குக்குத் தப்பியும், நான்காம் மாதத்தில் பெரிய இருளுக்குத் தப்பியும், ஐந்தாவது மாதத்தில் சாதலினின்றும் தப்பியும், ஆறுவது மாதத்திலுண்டாகிற துன்பத்திற்கும் பழிக்கும் தப்பியும், (20)

ஏழாவது மாதத்தில் தாழ்ந்த உலகத்தில் பிழைத்தும், எட்டாவது மாதத்தில் உண்டாகிற பிரயாசையிலும் தப்பியும், ஒன்பதாவது மாதத்தில் வருகிற துன்பத்திற்குத் தப்பியும், பத்தாவது மாதத்தில் தாயுடன் தானனுபவிக்கின்ற துன்பக் கடலிலாழ்கின்ற துன்பங்களிலிருந்து பிழைத்தும், (25)

ஆண்டுகள் தோறும் அண்டைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு, கடும்பகல் பசி,நிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்,
கருங்குழல் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கி உள்மதர்த்து
கச்சுஅற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்து இடைவருந்த எழுந்து புடைபரந்து
சார்க்கு இடைபோகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்.

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறுஎனும் அவாஇடைப் பிழைத்தும்,
கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்,
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்,
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்,

புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்,

மதம்

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
மூனிவி லாததோர் பொருளது கருதலும்,
ஆறு கோடி மாயா சக்திகள்,
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின ;

ஆத்த மாஞர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர் ;
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் ; பெருகவும்
விரத மேபரம் ஆகவே தியரும்

சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர் ;
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர் ;
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து ஆஅர்த்து

வருடங்கள் எல்லாம் நிரம்பின வளர்ச்சிக்காலத்தில், மற்றும் பல துன்பங்களுக்குப் பிழைத்தும், விடியற்காலையில் மல உபாதியோடு நண்பகற் காலத்தில் பசியினின்றும் தப்பியும், இரவில் தூக்கத்தினின்றும் தப்பியும், பற்றும் பல சஞ்சாரங்களினின்றும் தப்பியும், கருமையாகிய கூந்தலையும் சிவந்த வாயையுமுடைய வெள்ளைத் தந்த பந்திகளையும் கார்காலத்திலுவக்கின்ற மயிலாகது, (30)

கண்டொதுங்கப்பெற்ற தோற்றத்தையும், இடைவெளியின்றி அடர்ந்து உள்ளே கனத்து, வார்க்கட்டறும்படி இறுமாந்து ஒளியை யுடையனவாகி முன்னே பருத்து, இடையானது இளைத்து வருந்தும்படி விம்மிச் சுற்றிடங்களைக் கவர்ந்து, சிறு தருப்பும் நடுவே நுழையப்பெறுத முற்றுத முலைகளையுமுடைய பெண்களது, கூர்மை தங்கிய கண்களின் கூட்டத்தில் தப்பியும், (35)

மயக்கத்தையுடைய உலகிலுள்ளவர் வருத்த மிகவும் விரிந்த பற்பல பேதங்களுள், உன்மத்தங்கொண்ட யானை என உவமித்துச் சொல்லத்தக்க ஆசைகளுக்குத் தப்பியும், கல்வி யென்கிற பல கடல்களினின்றும் தப்பியும், செல்வமென்கிற துன்பத்தினின்றும் தப்பியும், வறுமையென்கிற பழமையாகிய விடத்தினின்றும் தப்பியும், (40)

தாழ்ந்த சமயங்களாகிய பல துறைகளினும் தப்பியும், தெய்வமுண்டென்பதாகிய ஒரு நினைப்புண்டாகி, வெறுப்பு அற்றதாகிய ஒரு பொருளை நினைத்தலும், ஆறு கோடியாகிய மகாமாயைகள், வெவ்வேறுயுள்ள தம்முடைய மாயைகளைத் தொடங்கின. (45)

நட்பாயிருந்தவரும் அயலாயிருரும் ஒன்று சேர்ந்து கடவுள் இல்லையென்று சொற்போர் செய்து காவில் தழிப்பு ஏறப் பெற்றார்கள். உறவினர் என்கிற பழமையாகிய பசுக்கூட்டங்கள், தொடர்ந்தழைத்துப் பதறினவர்களாய்ப் பலவகைப்பட்ட விரதங்களையே மேலானதாக மறையவர்களும், (50)

உண்மையாக்வே நூல் எழுதி வைத்தனர். சமயமே மேலானதென்று வாதிப்பவர்கள் தங்கள் தங்கள் சமயங்களே பரத்துவ நிச்சயம் பொருந்துவதாகப் பல்காற்சொல்லிப் போர் செய்தார்கள். நெருங்கிய மாயாவாதம் என்கிற பெருங்காற்றானது சுழன்று வீசி ஆரவாரித்து, (55

உலோகா யதன்எனும் ஒண்டிறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி,
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்

குரு

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுது உளம்உருகி அழுதுஉடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதுஎனும்
படியே யாகிநல் இடையறு அன்பில்
பசுமரத்து ஆணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடல்என மறுகி,
அகங்குழைந்து அனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதல் இன்றிச்
சதுர்இழந்து அறிமால் கொண்டு சாரும்
கதிஅது பரமா திசயம் ஆகக்
கற்ற மனம்எனக் கதறியும் பதறியும்
மற்றுஓர் தெய்வம் கனவிலும் நினையாது
அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமைஎன்று இகழாதே திருவடி இணையைப்
பிரிவினை அறியா நிழலது போல
முன்பின் ஆகி முனியாது அத்திசை
என்புநைந்து உருகிநெக்கு நெக்கு ஏங்கி,
அன்புஎனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி, நாத,என்று அரற்றி;
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்கள் கூர நுண்துளி அரும்பச்,

உலோகாயதனென்கிற வலிய பலங்கொண்ட பாம்பினது நூல் மாறுபாடமைந்த கடிய நஞ்சினை யடைந்து, அதனல் பல வகைப்பட்ட பெரிய மாயைகள் அடியேனைச் சூழ்ந்துகொள்ளவும், இவற்றுல் சிறிதும் மனத்தளர்ச்சி யடையாமல் கொண்ட கொள்கையில் மனம் சலித்து விட்டு விடாமல் நெருப்பைச்சேர்ந்த மெழுகைப்போல,

வணங்கி மனம் கரைந்து தேகம் நடுங்கி ஆனந்தக்கூத்தாடியும் அரற்றுதல் செய்தும் பாடுதல் செய்தும் வழிபட்டும், முதலையும் (குறடும்) மூடனும் தான் பிடித்த பிடியை விடாதென்று சொல்லுகிற பழமொழிப்படியாய் நல்ல நடுவே நீங்காத அன்பினல் பச்சை மரத்தில் ஆணியை அடித்தது போல,

மனவுருக்கம் பெருகிக் கடல்போல மயக்கமடைந்து, மனம் தளர்ந்து அதற்கிணங்கித் தேகம் நடுக்கமடைந்து, உலகமானது பேய் போன்றவனென்று தம்மைச் சிரிக்கும்படி வெட்கத்தை விட்டு உலகத்தார் இகழ்ந்து சொல்லும் சொற்களை அணிகலமாகக்கொண்டு மனக்கோணல் இல்லாமல்,

வல்லமையை ஒழித்து அறிவுத்தக்க மயக்கத்தை யடைந்து தாம் அடைகின்ற பரகதியையே மேலான ஆச்சரியமாகக்கொண்டு கன்றையுடைய பசுவின் மனத்தைப்போலக் கூவியும் உடல் நடுங்கியும் சிவபெருமானையன்றி வேறொரு அரித்திய தேவர்களைக் கனவிலும் நினையாமல், சொல்லுதற்கரிய பரத்துவத்தையுடைய ஒப்பற்ற சிவபெருமான் மேலான ஞானசாரியத் திருமேனி கொண்டு பூமியில் எழுந்தருளி வந்து,

உபதேசித்தருளிய மேன்மையை அற்பமென் றிகழாமல் அவனது இரண்டு திருவடிகளைப் பிரிவென்பதை ஒருகாலத்திலு மறியாத சாயாத்தோற்றத்தைப்போல முன்னும் பின்னுமாய் வெறுப்படையாமல் ஆசாரியனெழுந்தருளி அருள்புரிந்தபோது எலும்பும் இளகும்படி மனங்கரைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து இரங்கி,

அன்பென்று சொல்லப்படுகின்ற ஆறனது கரையைக் கடந்து வர, நல்ல ஐம்புலன்களும் ஒருமைப்பட்டு 'இறைவனே!' என்றலறிச் சொற்கள் தடுமாற்றமடைய மயிர்கள் கூச்செறிய, கைகளாகிய மலர்களைக் குவித்து மனமானது மகிழ்ச்சியினல் விரிவடைய, கண்கள் களிக்க, அதனல் நுண்ணிய இன்பக் கண்ணீர் பெருக,

சாயா அன்பினை நான்தொறும் தழைப்பவர்

தோத்திரம்

காயே ஆகி, வளர்த்தனை, போற்றி !
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள், போற்றி !
ஆடக மதுரை அரசே, போற்றி !

கூடல் இலங்கு குருமணி, போற்றி !
தென்தில்லை மன்றினுள் ஆடி, போற்றி !
இன்று எனக்கு ஆரமுது ஆனாய், போற்றி
மூவா நான்மறை முதல்வா, போற்றி !
சேவார் வெல்கொடிச் சிவனே, போற்றி !

மின்ஆர் உருவ, விகிர்தா, போற்றி !
கல்நார் உரித்த கனியே, போற்றி !
காவாய் கனகச் குன்றே, போற்றி !
ஆவா, என்றனக்கு அருளாய், போற்றி !
படைப்பாய், காப்பாய், துடைப்பாய், போற்றி

இடரைக் களையும் எந்தாய், போற்றி !
ஈசா, போற்றி ! இறைவ, போற்றி !
தேசப் பளிங்கின் திரளே, போற்றி !
அரைசே, போற்றி ! அழுதே, போற்றி !
விரைசேர் சரண விகிர்தா, போற்றி !

வேதி, போற்றி ! விமலா, போற்றி !
ஆதி, போற்றி ! அறிவே, போற்றி !
கதியே போற்றி ! கனியே, போற்றி !
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி !
உடையாய், போற்றி ! உணர்வே, போற்றி !

கெடாத அன்பை நாள்தோறும் வளர்ப்பவர்கட்குத் தாயாகி வளர்த்தாய்! உனக்கு வணக்கம். உண்மைநிலையை எனக் குபதேசித்தருளிய வைதிகப் பிராமணனாகி எனது இருவினைப் பகுதியும் அறவேயொழியக் கைகொடுத்துத் காவல்ல கடவுளுக்கு வணக்கம். பொன்மயமாக விளங்குகிற மதுரை நகரத்திற்கு அரசனாகிய சோமசுந்தரக்கடவுளே! வணக்கம். (90)

திருவாலவாயில் விளங்காநின்ற ஒளிநிறைந்த மாணிக்கமே! வணக்கம். அழகிய தில்லையில் விளங்கும் பொன்னம்பலத்தின் கண் நடனம் செய்பவனே! வணக்கம். தற்சமயம் அடியேனுக் குக் கிடைத்தற்கரிய அமிர்தமானவனே! வணக்கம். கெடாத நான்மறைகளையும் தோற்றுவித்த முதல்வனே! வணக்கம். எருதின் உருவமைந்த வெற்றியைத் தரும் கொடியையுடைய சிவபிரானே! வணக்கம். (95)

ஒளிபொருந்திய வடிவத்தையுடைய வேறுபாட்டோடு கூடினவனே! வணக்கம். கருங்கல்லில் நாருரித்தெடுத்த கனிக் கொப்பானவனே! வணக்கம்; காத்தருளுவாய். பொன்மலை யைப்போன்றவனே! வணக்கம். 'ஐயோ!' வென்றிரக்கமுற்று அடியேனுக்குத் திருவருள் புரிவாயாக! வணக்கம். எல்லாப் பொருள்களையும் படைப்பவனே, காப்பவனே, அழிப்பவனே! வணக்கம். (100)

தனபத்தைபப்போக்குகின்ற எனதுடைய தந்தையைப் போன்றவனே! வணக்கம். எல்லாச் செல்வத்தையும் உடைய வனே! வணக்கம். எங்குந் தங்கியிருப்பவனே! வணக்கம். ஒளிவீசும் படிகப் பிழம்பே! வணக்கம். அரசனே! வணக்கம். அமுதம் போன்றவனே! வணக்கம். பலவகை மணம் பொருந்திய திருவடிகளையுடைய கடவுளே! வணக்கம். (105)

உள்ளத்தாமரையாகிய பீடத்தில் இருப்பவனே! வணக்கம். அழுக்கற்றவனே! வணக்கம். மூலப்பொருளே! வணக்கம். அறிவுவடிவானவனே! வணக்கம். தொண்டர்கள் அடையத் தக்க கதியாக இருப்பவனே! வணக்கம். கனியைப் போன்ற வனே! வணக்கம். ஆறு பொருந்திய சிவந்த சடையை உடைய கடவுளே! வணக்கம். தலைவனே! வணக்கம். உணர்வே! வணக்கம். (110)

கடையேன் அடிமை கண்டாய்ப், போற்றி !
ஐயா, போற்றி ! அணுவே போற்றி !
சைவா, போற்றி ! தலைவா, போற்றி !
குறியே, போற்றி ! குணமே, போற்றி !
நெறியே, போற்றி ! நினைவே, போற்றி !

வானோர்க்கு அரிய மருந்தே, போற்றி !
ஏனோர்க்கு எளிய இறைவா, போற்றி !
மூவெழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேஅருள் அரசே, போற்றி !
தோழா, போற்றி ! துணைவா, போற்றி !

வாழ்வே, போற்றி ! என்வைப்பே, போற்றி !
முத்தா, போற்றி ! முதல்வா, போற்றி !
அத்தா, போற்றி ! அரனே, போற்றி !
உரையுணர்வு இறந்த ஒருவ, போற்றி !
விரிகடல் உலகின் விளைவே, போற்றி !

அருமையில் எளிய அழகே, போற்றி !
கருமுகில் ஆகிய கண்ணே, போற்றி !
மன்னிய திருவருள் மலையே, போற்றி !
என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக, போற்றி !

தொழுதகை துன்பம் துடைப்பாய், போற்றி !
அழிவிலா ஆனந்த வாரி, போற்றி !
அழிவதும் ஆவதும் கடந்தாய், போற்றி !
முழுவதும் சிறந்த முதல்வா, போற்றி !
மான்நேர் நோக்கி மணாளா, போற்றி !

வான்அகத்து அமரர் தாயே, போற்றி !
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய், போற்றி !
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய், போற்றி !
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய், போற்றி !
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய், போற்றி !

கடைப்பட்டவனகிய யான் அடிமை; இதனைத் தெரிந்து கொள்; வணக்கம். பெரியோனே! வணக்கம். நுட்பமானவனே! வணக்கம். சைவசமயக் கடவுளே! வணக்கம். தலைவனே! வணக்கம். தொண்டர்களால் குறிக்கப்பெறுகிறவனே! வணக்கம். குணவடிவமானவனே! வணக்கம். நல்ல நெறியாக அமைந்தவனே! வணக்கம். அன்பர்களின் எண்ணமானவனே! வணக்கம்.

தேவர்கள் காண்டற்கரிய அமுதம் போன்றவனே! வணக்கம். மற்றவர்கள் காண்டற்கெளிய கடவுளே! வணக்கம் இருபத்தொரு தலைமுறையினரும் வலிமைபொருந்திய நரகத்திலே ஆழ்ந்து போகாமல் அருள்புரிந்த அரசனே! வணக்கம். தோழனே! வணக்கம். துணைவனே! வணக்கம். (120)

பேரின்ப வாழ்வைத் தருபவனே! வணக்கம். என்னால் ஈட்டி வைக்கப்பட்ட செல்வமே! வணக்கம். வீடுபேற்றைத் தருபவனே! வணக்கம். முதல்வனே! வணக்கம். அப்பனே! வணக்கம். அழித்தற்கடவுளே! வணக்கம். சொல்லுக்கும் உணர்விற்கும் அப்பாற்பட்டவனே! வணக்கம். விரிந்த கடலால் சூழப்பட்ட உலகவாழ்வின் பயனே! வணக்கம். (125)

பெறுதற்கரிய பெரிய அருமையுள்ளும் எளிமையான அழகையுடையவனே! வணக்கம். கரிய முகிலைப்போன்ற கண்ணே! வணக்கம். நிலைபெற்ற திருவருளை மிகுதியாகக்கொண்ட மலையே வணக்கம். எளியேனகிய என்னையும் மதிப்பிற்குரிய மனிதனைக்கிப் பெரிய திருவடிகளைத் தலையின்மீது வைத்தருளிய வீரனே! வணக்கம். (130)

தொழுதவர்களுடைய துன்பத்தைத் துடைப்பவனே! வணக்கம். அழிவற்ற இன்பக்கடலே! வணக்கம். அழிவதையும் வளர்வதையும் விட்டவனே! வணக்கம். எல்லாப் பொருள்களும் அழிந்த காலத்தினும் எஞ்சிநிற்கும் முதற்பொருளே! வணக்கம். மானினது பார்வையை ஒத்த கண்ணையுடைய இறைவியின் தலைவனே! வணக்கம். (135)

விண்ணகத் தேவர்கட்குத் தாயைப்போன்றவனே! வணக்கம். நிலத்தில் ஐந்து தன்மையுடையவனகப் பரவியுள்ளவனே! வணக்கம். தண்ணீரிலே நான்கு தன்மையுடையவனகத் தங்கியவனே! வணக்கம். தீயினிடத்திலே மூன்று தன்மையுடையவனக விளங்கியவனே! வணக்கம். காற்றின் இடத்திலே இரண்டு இயல்பு உடையவனக மகிழ்ந்தவனே! வணக்கம். (140)

வெளியிடை ஒன்றுய் விளைந்தாய் போற்றி !
அளிபவர் உள்ளத்து அமுதே, போற்றி !
கனவிலும் தேவர்க்கு அரியாய், போற்றி !
நனவிலும் நாயேற்கு அருளினை, போற்றி !
இடைமரு துறையும் எந்தாய், போற்றி !

சடையிடைக் கங்கை தரித்தாய், போற்றி !
ஆரூர் அமர்ந்த அரசே, போற்றி !
சீர்ஆர் திருவை யாறு, போற்றி !
அண்ணு மலைஎம் அண்ணு, போற்றி !
கண்ஆர் அமுதக் கடலே, போற்றி !

ஏகம்பத்து உறை எந்தாய், போற்றி !
பாகம் பெண்ணுருவு ஆனாய், போற்றி !
பராய்த்துறை மேவிய பரனே, போற்றி !
சிராப்பள்ளி மேவிய சிவனே, போற்றி !
மற்றோர் பற்றுஇங்கு அறியேன், போற்றி !

குற்ற லத்துளம் கூத்தா, போற்றி !
கோகழி மேவிய கோவே, போற்றி !
சங்கோய் மலைஎம் எந்தாய், போற்றி !
பாங்கார் பழனத்து அழகா, போற்றி !
கடம்பூர் மேவிய விடங்கா, போற்றி !

அடைந்தவர்க்கு அருளும் அப்பா, போற்றி !
இத்தி தன்னின்கீழ் இருமூ வர்க்கு
அத்திக்கு அருளிய அரசே, போற்றி !
தென்னுடு உடைய சிவனே, போற்றி !
எங்நாட் டவர்க்கும் இறைவா, போற்றி !

ஏனக் குருளைக்கு அருளினை, போற்றி !
மானக் கயிலை மலையாய், போற்றி !
அருளிட வேண்டும் அம்மான், போற்றி !
இருள்கெட அருளும் இறைவா, போற்றி !
களைந்தேன் அடியேன் தமியேன், போற்றி !

வெளியினிடத்திலே ஓரியல்புடையவனுக வினங்தவனே! வணக்கம். இரங்கித்தொழும் அடியார்களுடைய உள்ளத்தில் வினயும் அமுதமானவனே! வணக்கம். கனவில் காண்பதற்குக் கூடத் தேவர்கட்கு அருமையாக இருப்பவனே! வணக்கம். நனவில்கூட அடியேனுக்கு அருள்புரிந்தவனே! வணக்கம். திருவிடைமருதூரில் எழுந்தருளிய எந்தையே! வணக்கம். (145)

சடைமுடியில் கங்காநதியை அணிந்தவனே! வணக்கம். திருவாரூரிலெழுந்தருளிய அரசனே! வணக்கம். சிறப்பமைந்த திருவையாற்றை யுடையவனே! வணக்கம். திருவண்ணுமலையி லெழுந்தருளிய எமது தந்தையே! வணக்கம். பெருமைநிறைந்த அமிர்தசாகரமே! வணக்கம். (150)

திருவேகம்பத்தில் வசிக்கின்ற எந்தையே! வணக்கம். இடப்பாகம் பெண் வடிவானவனே! வணக்கம். திருப்பராய்த் துறையில் எழுந்தருளிய பரமனே! வணக்கம். திருச்சிராப் பள்ளியில் விளங்கிய சிவபெருமானே! வணக்கம். யான் வேறு ஒரு பற்றுக்கோட்டையும் இவ்விடத்து உணர்ந்திலேன். (155)

திருக்குற்றாலத்தில் அமர்ந்திருக்கிற எமது திருவினயாடலை யுடையவனே! வணக்கம். திருவாவடுதுறையில் தங்கிய இறை வனே! வணக்கம். திருவீங்கோய் மலையையுடைய எமது தந்தையே! வணக்கம். அழகுபொருந்திய திருப்பழனப்பதியில் வீற்றிருக்கின்ற அழகனே! வணக்கம். திருக்கடம்பூரில் எழுந் தருளிய உளிபடாத் திருமேனி உடையவனே! வணக்கம். (160)

அடித்தவர்களுக்குத் திருவருள் புரிகின்ற அப்பனே! வணக்கம். இத்தி மரத்தின்கீழ் அறுவருக்கும் யானைக்கும் திரு வருள் புரிந்த அரசனே! வணக்கம். தென்பாண்டிநாட்டை யரசாண்டருளிய சிவபெருமானே! வணக்கம். எந்நாட்டினருக்கும் தலைவனே! வணக்கம். (165)

பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தருளினவனே! வணக்கம். பெருமைபொருந்திய திருக்கைலாசமலை வாசனே! வணக்கம். திருவருள் புரியவேண்டும் அழகிய மகானே! வணக்கம். அஞ்ஞான விருள் கெடும்படி அருள் புரிகின்ற இறைவனே! வணக்கம். ஓராதாரமுமின்றித் தனித்தவனுகியும் சார்வடைந்திருக்கின்றவனுகியும் உள்ள நான் போற்றி செய் கிறேன். (170)

களங்கொளக் கருத அருளாய், போற்றி !
அஞ்சேல் என்றிங்கு அருளாய், போற்றி !
நஞ்சே அமுதா நயந்தாய், போற்றி !
அத்தா, போற்றி ! ஐயா, போற்றி !
நித்தா, போற்றி ! நிமலா, போற்றி !

பத்தா, போற்றி ! பவனே, போற்றி !
பெரியாய், போற்றி ! பிரானே, போற்றி !
அரியாய், போற்றி ! அமலா, போற்றி !
மறையோர் கோல நெறியே, போற்றி !
முறையோ, தரியேன் முதல்வா, போற்றி !

உறவே, போற்றி ! உயிரே, போற்றி !
சிறவே, போற்றி ! சிவமே, போற்றி !
மஞ்சா, போற்றி ! மணாளா போற்றி !
பஞ்சேர் அடியாள் பங்கா, போற்றி !
அலந்தேன் நாயேன் அடியேன், போற்றி !

இலங்கு சுடர்ஞம் ஈசா போற்றி !
கலைவத்தலை மேவிய கண்ணே, போற்றி !
குலைப்பதி மலிந்த கோவே, போற்றி !
மலைநா டுடைய மன்னே, போற்றி !
கலையார் அரிகே சரியாய், போற்றி !

திருக்கழுக் குன்றில் செல்வா, போற்றி !
பொருப்பமர் பூவணத்து அரனே, போற்றி !
மருவிய கருணை மலையே, போற்றி !
அருவமும் உருவமும் ஆனாய், போற்றி !
துரியமும் இறந்த சுடரே, போற்றி !

தெரிவரி தாகிய தெளிவே, போற்றி !
தோளா முத்தச் சுடரே, போற்றி !
ஆளான வர்கட்கு அன்பா, போற்றி !
ஆரா அமுதே, அருளே, போற்றி !
பேர்ஆயிரம் உடைப் பெம்மான், போற்றி !

மனத்தின்கண்ணே உனது திருவடிகளைச் சிந்திக்கத் திருவருள் புரிவாயெனப் போற்றுகின்றனன். 'அஞ்சாதே!' என்று இவ்விடத் தருள்செய்வாய்; வணக்கம். நஞ்சையே அமுதமாக விரும்பினவனே! வணக்கம். தந்தையே! வணக்கம். ஐயனே! வணக்கம். நித்தியனே! வணக்கம். பரிசுத்தனே! வணக்கம். () பத்தனே! வணக்கம். படைப்பவனே! வணக்கம். பெரியோனே! வணக்கம். பெருமானே! வணக்கம். யாவர்க்கும் எட்டாதவனே! வணக்கம். மலமற்றவனே! வணக்கம். மறையவராது திருக்கோலமாக எழுந்தருளிவந்தருள்புரிந்த நீதியே வணக்கம். உனக்கே அபயம். இனிமேற் பொறேறன்; முதல்வனே! வணக்கம். சுற்றமே! வணக்கம். உயிர்க்குயிரானவனே! வணக்கம். (180)

சிறப்புடையவனே! வணக்கம். சிவபெருமானே! வணக்கம். அழகனே! வணக்கம். மணவாளனே! வணக்கம். செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய அழகிய திருவடிகளையுடைய உமாதேவியைப் பாகத்தில் உடையவனே! வணக்கம். தன்பப்பட்டேன். நாய் போன்ற அடியேன் வணக்கம். (185)

விளங்குகின்ற சோதிமயமாகிய எமது ஈசனே! வணக்கம். பற்பல வழிவாக நிற்றலைப்பொருந்திய கண்போலும் அருமையானவனே! வணக்கம். கூட்டமாகிய சிறந்த சிவப்பதிகளில் நிறைந்து விளங்கிய வேந்தனே! வணக்கம். மலைநாட்டை உடைய அரசனே! வணக்கம். கலைகள் நிரம்பிய திருமாலுக்குச் சிங்கம் போன்றவனே! வணக்கம். (190)

திருக்கழுக்குன்றத்தில் விளங்காநின்ற செல்வனே! வணக்கம். மலைகளனைமந்த திருப்பூவணத்திலெழுந்தருளிய சிவபெருமானே! வணக்கம். அருபமும் ருபமும் ஆனவனே! வணக்கம். பொருந்திய திருவருள் மலையே! வணக்கம். துரியத்தானத்தையும் கடந்த துரியாதீதப் பொருளானவனே! வணக்கம். (195)

தெரிந்துகொள்ளுதற்கு அருமையாகிய விளக்கமே! வணக்கம். தொடைபடாத முத்தினது ஒளியே! வணக்கம். அடிமைப் பட்டவர்கட்கு அன்பனே! வணக்கம். தெவிட்டாத அமுதமே! திருவருளே! வணக்கம். திருநாமங்கள் ஆயிரமுள்ள பெருமானே! வணக்கம். (200)

தாளி அறுகின் தாராய், போற்றி !
நீள்ஒளி ஆகிய நிருத்தா, போற்றி !
சந்தனச் சாந்தின் சுந்தர, போற்றி !
சிந்தனைக் கரிய சிவமே, போற்றி !
மந்திர மாமலை மேயாய், போற்றி !

எந்தமை உய்யக் கொள்வாய், போற்றி !
புலிமுலை புல்வாய்க்கு அருளினை, போற்றி !
அலைகடல் மீமிசை நடந்தாய், போற்றி !
கருங்குரு விக்குஅன்று அருளினை, போற்றி !
இரும்புலன் புலர இசைந்தனை, போற்றி !

படியுறப் பயின்ற பாவக, போற்றி !
அடியொடு நடுஅறு ஆணைய், போற்றி !
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற்கு அருளினை, போற்றி !
ஒழிவுஅற நிறைந்த ஒருவ, போற்றி !

செழுமலர்ச் சிவபுரத்து அரசே, போற்றி !
கழுநீர் மாலைக் கடவுள், போற்றி !
தொழுவார் மையல் துணிப்பாய், போற்றி !
பிழைப்பு வாய்ப்புஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல்மாலை கொண்டருள், போற்றி !

புரம்பல எரித்த புராண, போற்றி !
பரம்பரஞ் சோதிப் பரனே, போற்றி !
போற்றி ! போற்றி ! புயங்கப் பெருமான்,
போற்றி ! போற்றி ! புராண காரண !
போற்றி, போற்றி, சயசய, போற்றி !

திருச்சிற்றம்பலம்.

கொடியறுகிறற்றொருத்த மாலையையுடையவனே! வணக்கம். நீண்ட ஒளி வடிவமாகிய கூத்தப்பிரானே! வணக்கம். சந்தனக் குழம்பணிந்த அழகனே! வணக்கம். நினைக்க ஒண்ணாத சிவ பெருமானே! வணக்கம். வீடாகக் கைலாசமலையைக் கொண்ட வனே! வணக்கம். (205)

எம்மை உய்யுமாறு காப்பாற்றுபவனே! வணக்கம். புலி முலையை மான் கன்றுக்குக் கொடுத்தவனே! வணக்கம். அலையையுடைய கடலின்மேல் நடந்தவனே! வணக்கம். குருங் குருவிக்கு அந்நாளில் மந்திரோபதேசம் செய்தவனே! வணக்கம். பெரிய இந்திரியங்கள் அடங்கச் சனகாதியர் காண யோகத் திருந்தவனே! வணக்கம். (210)

பூமியில் திருவடிகள் பொருந்த நாடகம் புரிந்தருளிய சங்கார கர்த்தனே! வணக்கம். ஆதியோடு நடுவும் அந்தமும் ஆனவனே! வணக்கம். நரக லோகத்துடன் சுவர்க்க லோகத்திலும் நில வுலகத்திலும் மீளவும் போய்ப் பிறவாமல், வீடுபேற்றை வரகுண பாண்டியனுக்கு அருள் செய்தவனே! வணக்கம். எங்கும் நீக்கமற நிறைந்த தனித்தலைமைக் கடவுளே! வணக்கம். (215)

செழுமையாகிய மலர்ச்சோலைகள் சூழ்ந்த சிவபுரத்துக்குத் தலைவனே! வணக்கம். செங்கழுநீர் மாலையணிந்த கடவுளே! வணக்கம். வணங்குபவருடைய மயக்கத்தை அறுப்பவனே! வணக்கம். பிழைத்தலும் பேறும் ஆகிய இவற்றுள் ஒன்றையும் அறிந்துகொள்ளாத நாய்போல்பவனது மனங்குழைந்து சொன்ன சொல்லாலாகிய மாலையைக் கொண்டருள்பவனே! வணக்கம். ()

திரிபுரங்களைச் சிரித்தெரித்த பழமையோனே! வணக்கம். மேலான ஒளியையுடைய மேலோனே! வணக்கம். பாம்பை யணிந்த பெருமானே! வணக்கம். பழமையாகிய மூல காரணனே! வெற்றியுண்டாக. வணக்கம்; வணக்கம்; வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

5. திருச்சதகம்

திருப்பெருந்துறையில் அருளியது-பத்தி வைராக்கிய விசித்திரம்

1. மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரைஆர்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி, சயசய போற்றி
[என்னும்
கைதான் நெகிழ விடேன்,உடையாய்ப், என்னைக் கண்டு
[கொள்ளே! 1

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம்புகினும்,
எள்ளேன் திருஅரு ளாலேஇருக்கப் பெறின், இறைவா!
உள்ளேன் பிறதெய்வம், உன்னைஅல் லாதுஎங்கள்
[உத்தமனே! 2

உத்தமன், அத்தன், உடையான் அடியேன் நினைந்துஉருகி
மத்த மனத்தொடு மால்இவன், என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட உளர்உளர் திரிந்துஎவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே? 3

சாவமுன் னுள்தக்கன் வேள்வித் தகர்தின்று, நஞ்சம்அஞ்சி
ஆவனத் தாய்,என்று அனிதா இடும்நம் அவர்அவரே
சூவர்என் றேனம் பிராண்டெடும் எண்ணிவின் ஆண்டு
[மண்மேல்
தேவர்என் றேஇறு மாந்துஎன்ன பாவம், திரிதவரே! 4

5. திருச்சதகம்

திருப்பெருந்துறையிலருளியது—பத்தி வைராக்கிய விசித்திரம்

1. மெய்யுணர்தல்

திருச்சிற்றம்பலம்.

என்னை ஆட்கொண்டவனே! உனது மனம் நிறைந்த திருவடியைப் பெறுதற்கு என் தேகம் புளகித்து நடுநடுங்கிக் கைகளைத் தலையின்மேல் வைத்துக் கண்களில் நீரரும்பி, மனம் புழுங்கி, பொய்யொழுக்கத்தினின்று நீங்கி, உண்மைப் பொருளாகிய உன்னைக் குறித்துப் 'போற்றி; சயசய போற்றி!' என்று வழிபடுகின்ற ஒழுக்கத்தை நான் தளரவிடேன்; ஆதலால், எனது நிலைமையை நீ பார்த்து, உன் அடியாருள் ஒருவனை எற்றுக் கொள்வாயாக! (1)

எங்கள் மேலோனே! தலவனே! உன் திருவருளோடு கூடியிருக்கப் பெறுவேனையின் இந்திரனும் திருமாலும் பிரமனும் ஆகிய இவர்களுடைய பெரும் பதவிகளையும் ஒருபொருளாக என் மனத்திற் கொள்ளமாட்டேன்; என் குடி முழுதும் அழிந்தாலும் உன் அடியாரோடன்றி பிறரோடு நட்புக்கொள்ளேன்; நரகத்திற் புகுந்தாலும் அதனை இகழமாட்டேன்; உன்னையன்றி வேறு தெய்வங்களை மனத்தாலும் நினைக்கமாட்டேன். (2)

மேலானவனும், எமது தந்தையும், என்னை ஆட்கொண்டவனும் ஆகிய இறைவனது திருவடிகளையே கருதி மனமுருகி 'உன்மத்தங்கொண்ட மனத்துடன் கூடிய பித்தனிவன்' என்று கண்டோர் சொல்லவும் ஊர்தோறும் அலைந்து, அவரவர் மனக் கருத்துக்குப் பொருந்தியனவாகிய பல சொற்களைச் சொல்லவும், யாவரும் தங்கள் தங்கள் மனத்துக்கிசைந்தவற்றைப் பேசவும் அதனைக் கேட்டு மனமிறக்கப்பெறுவது எக்காலமோ? (3)

இப்போது எம்பெருமானேயும் திரிபுரத்தி வரிசையிலெண்ணப்பட்டு விண்ணுலகையாண்டு மண்ணுலகில் தேவரென்று சொல்லும்படி செருக்கடைந்துத் திரிகின்ற இறைவர்கள், முற்காலத்தில் தக்கனனைவன் இறக்கும்படி வேள்வியில் கொல்லப்பட்ட ஆட்டைத் தின்று பாற்கடலில் தோன்றிய நஞ்சுக்கு அஞ்சி, 'ஐயோ! எந்தையே!' என்று அபயமிட்ட நம்மவராகிய அவர்கள் தாமோ? இவர்கள் இவ்வாறு இறுமாந்து திரிவதற்குக் காரணம் என்ன பாவமோ? (4)

தவமே புரிந்திலன்; தண்மலர் இட்டுமுட் டாதுஇறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக்கு அன்பருள்ளாம்,
சிவமே பெறும்திரு எய்திற்றி லேன்நின் திருஅடிக்குஆம்
பவமே அருளுகண் டாய்அடி யேற்குளம் பரம்பரனே! 5

பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதுஅடி யேஇறைஞ்சி
இரந்தலல் லாம்எமக் கேபெற லாம்என்னும் அன்பர்
[உள்ளம்,
கரந்துநில் லாக்கள்வ னேநின்தன் வார்கழற்கு அன்பு
[எனக்கு
கிரந்தர மாய்அரு ளாய்,நின்னை ஏத்த முழுவதுமே! 6

முழுவதும் கண்டவ னேப்படைத் தான்முடி சாய்த்து
[முன்னுள்
செழுமலர் கொண்டுஎங்கும் தேடஅப் பாலன்இப் பால்
[எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகம் ஆடிக் கதியிலியாய்,
உழுவையின் தோல்உடுத்து உன்மத்தம் மேற்கொண்டு
[உழிதருமே! 7

உழிதரு காலும் கனலும் புனலொடு மண்ணுமும்விண்ணுமும்
இழிதரு காலம்எக் காலம் வருவது, வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்அடியேன் செய்த வல்வினையைக்
கழிதரு காலமும் ஆய்அவை காத்துஎம்மைக் காப்பவனே! 8

பவன்,எம் பிரான்,பனி மாமதிக் கண்ணி,விண் ணோர்
[பெருமான்,
சிவன்எம் பிரான்என்னை ஆண்டுகொண் டான்என்
[சிறுமைகண்டும்
அவன்எம் பிரான்,என்ன நான்அடி யேன்என்ன
[இப்பரிசே
புவன்எம் பிரான்தெரி யும்பரிசு ஆவது இயம்புகவே! 9

தவத்தையோ செய்திலேன்; குளிர்ந்த மலர்களால் அருச்சித்துக் குறைபாடின்றி வணங்கேன்; வீணுகவே தோன்றிய பிறர் செய்தற்கரிய பாவ கன்மத்தையுடையேன்; உன் அன்பராயினுரோடு சேரத்தக்க மங்களத்தை அடைதற்குரிய செல்வத்தை அடைந்திலேன். ஆதலால், எமது மேலோர்க்குந் மேலோனே! தொண்டனுகிய எனக்கு உன் திருவடிக்கு ஆளாதற்குரிய பிறவியையே கொடுத்தருள்வாயாக! (5)

பரவிப் பலவகையான ஆராய்ந்து எடுக்கப்பட்ட மலர்களை உன் திருவடிகளிற் சாத்திக் குறைவுபடாமல் உன் திருவடிகளையே வணங்கி வேண்டியவையெல்லாம் எங்களுக்கே பெறக்கூடும் என்று அடியார்களுடைய மனத்தை ஒளித்து மற்ரோரிடத்தில் நில்லாத கள்வனே! உன்னைப் போற்றுதற்கு அடியேனுக்கும், உன் நெடிய கழலையணிந்த திருவடிகளுக்குச் செய்யவேண்டிய அன்பை எப்பொழுதும் அருள் செய்வாயாக! (6)

உலகங்களையும் சராசரப் பொருள்களையும் படைத்தவுகிய நான்முகனை உந்திக்கமலத்துத் தோற்றுவித்தவுகிய திருமாலும் தலைவணங்கி முற்காலத்தில் செழுமையாகிய மலர்களைக் கையிலேந்திக்கொண்டு எவ்விடத்தும் தேடாநிற்க, அப்பாற்பட்டிருந்தவுகிய எமது பரமசிவன், ஊழிக்காலச் சுடுகாட்டில் பிசாசங்களோடு கூடி நடனம் செய்து, ஆதாரமில்லாதவுகிப் புலித்தோலைத் தரித்து, மதோன்மத்தனைச் சஞ்சரியாநிற்பன். (7)

இயங்குகிற காற்றும் நெருப்பும் நீருடன் பூமியும் ஆகாயமும் அழிகின்ற சர்வசங்கார காலமானது எக்காலத்துண்டாவது? அவ்விறுதிக்காலமுண்டான பின்பும் நிலைத்திருக்கின்ற காலதத்துவத்திற்குத் தலைவனே! உன் தொண்டனேன் செய்தவலிய வினைகளை நீக்கி யருளுக. காலதத்துவங்களுமாகி அவைகளைக் காத்து எங்களையும் காக்கின்ற இறைவனே! (8)

எல்லாப்பொருள்களும் தோன்றுதற்கிடமான எம்பெருமான் குளிர்ச்சிபொருந்திய பெருமையமைந்த திங்களாகிய மாலையையணிந்தவன்; தேவர் பெருமான்; சிவனென்னும் பெயருடையவன்; எல்லோரையுங் காப்பவன்; சுயம்புவாகிய எம்பெருமான் என் தாழ்மையறிந்தும் என்னை ஆண்டுகொண்டருளினன். ஆதலால், அவனே எமக்குத் தலைவனென்றும், நான் அடியவன் என்றும் இவ்வாறே தெரியுந்தன்மையைச் சொல்லுக. (9)

புகவே தகேன்உனக்கு அன்பருள் பான்,என்பொல்
[லாமணியே!
தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட தன்மைஎப்
[புன்மையரை
மிகவே உயர்த்திவின் ணைரைப் பணித்தி,அண் ணைஅழுதே!
நகவே தகும்,எம் பிரான்என்ன நீசெய்த நாடகமே! 10

திருச்சிற்றம்பலம்.

2. அறிவுறுத்தல்

தபசு கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்.

நாடகத்தால் உன்அடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பொரிதும் விரைகின்றேன்;
ஆடகச்சிர் மணிக்குன்றே! இடையறா அன்புஉனக்குஎன்
ஊடகத்தே நின்றுஉருகத் தந்தருள்எம் உடையானே! 11

யான்எதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்கு என்கடவேன்?
வானேயும் பெறில்,வேண்டேன் மண்ஆள்வான் மதித்தும்
[இரேன்;
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே;எம் பெருமான்!எம்
மானே;உன் அருள்பெறுநாள் என்றுஎன்றேஏங்குவனே!
வருந்துவன்நின் மலர்ப்பாதம் அணைவுகாண்பான்
[நாய்அடியேன
இருந்துநல மலர்தூனேயேன் எத்தேன்நாத் தழும்புஏறப்
பொருந்தியபொற் சிலம்புஒலித்தாய்; அருள்அழுதம்
[பரியாயேல்
வருந்துவன் அத்தமியேன்மற்று என்னேநான் ஆம்ஆறே? 13

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழைவேன், அன்புருகேன்,
பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன், புத்தேளிர்
கோமான்;நின் திருக்கோயில் தூகேன்,மெழுகேன்,
[கூத்தாடேன்;
சாமாறே விரைகின்றேன், சதுராலே சார்வானே! 14

என் தொளபடாத மாணிக்கமே! நான் உன்னன்பருக் கிடையே பிரவேசிக்கவும் தகுதியில்லேன்; அங்ஙனமாக அடியேனை உனக்காளாக்கிக்கொண்ட தன்மையானது தகுதியோ? எவ்வகைத் தாழ்ந்தவரையும் மிகவும் உயர்த்தித் தேவர்களை அவரைப் பணியச் செய்கிறாய்; அத்தனே! அமிர்தமே! எம்பிரானே! என்னை நீ செய்த கூத்து நகைப்பதற்குரியதேயாகும். ()

2. அறிவுறுத்தல்

எம்மை அநாதியாகவே அடிமைகளாக உடையவனே! உண்மையன்பு சிறிதுமில்லேனையினும் என் மனமறிய உன்னன்பர் போலப் பாவனை காட்டி, உனக்காட்படுந்தன்மை எனக்குச் சிறிதுமில்லாதிருக்கவும், அவ்வன்பர்களின் நடுவிலே முத்தியுலகத்தில் பிரவேசிக்க நான் மிகுதியும் துணிதப்படுகின்றேன்; சிறப்பமைந்த பொன் மலையே! மாணிக்க மலையே! உன் விஷயமாக விட்டு நீங்காத அன்பானது என் மனத்தின்கண் நிலைபெற்று அவ்வன்பு காரணமாக மனங்கரையும்படி கருணை செய்தருளாய். (11)

நான் சிறிதும் பிறவித்துன்பத்துக்குப் பயப்படேன்; இறத்தற்றுன்பமாகிய அதற்கு யாது செய்யக்கடவேன்; சுவர்க்காதி போகங்களாயினும் அடையப்படுவதாயிருப்பின் விரும்பேன்; மண்ணுலகை அரசாளவும் நினைத்துமிரேன். தேன் பொருந்திய கொன்றைமலர் மாலையை அணிந்த மங்களகரனே! எம்மிறைவனாகிய எம் பெரியோனே! உனது திருவருளைப் பெறுங்காலம் எக்காலமோவென்று வருந்தாநின்றேன்! (12)

உன் தாமரை மலர்போன்ற திருவடிகளைக் காணும்பொருட்டு வருந்துவேன்; நாயினேன் தனுகரணங்களோடு கூடி இறவாதிருந்தும் உன் திருவடிகளுக்குகந்த மலர்களைச் சூட்டேன்; நாவினிடத்துத் தழும்புண்டாகத் தோத்திரஞ் செய்கிலேன்; அமைந்த மேருமலையை வில்லாக வளைத்தவனே! உன் திருவருளாகிய அமிர்தத்தைக் கொடாவிடின் மிகத் தனியேனாகிய நான் வருந்துவேன்; அவ்வாறு வருந்தாமல் நான் உனக்குரியவனாகும் வகையாது? ()

மெய்யறிவுடையோர் தமது சதுரப்பாட்டினால் அடையப்படுபவனே! உனது திருவடிகளுக்கே நான் அடிமையாகும்படி மனங்கனியேன்; அன்பிலனாகுகேன்; மலர்மாலையைக் கொண்டு அலங்கரித்துத் துதியேன்; புகழ்ந்து பேசேன்; தேவர் பெருமானே! உன் திருக்கோயிலைத் திருவலகிடேன்; திருமெழுக்கிடேன்; உன் சந்நிதியில் நின்று ஆனந்தக் கூத்தாடேன்; சாகும் வண்ணமே விரையாநின்றேன். (14)

வானுகி மண்ணுகி வளி ஆகி ஒளி ஆகி,
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யான்எனதென்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே? 15

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மையெல்லாம்
[தொழவேண்டிச்,
சூழ்த்துடது காம்முரலும் தாரோனை, நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான் யாஉம்உன்னைப்
[பரவுவனே! 16

பரவுவார் இமையோர்கள்; பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேல்மேல்உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ? அரியானே! 17

அரியானே! யாவர்க்கும் அம்பரவா! அம்பலத்தெம்
பெரியோனே! சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரைஆர்ந்த மலர்தூவேன், வியந்துஅலறேன்,
[நயந்துஉருகேன்,
தரியேன்நான் ஆமாறுஎன்? சாவேன்நான், சாவேனே! 18

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்
[கரிய,
பானல்ஆர் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே!
ஊன்எலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்,
வான்உளான், காணுய்,நீ மாளாவாழ் கின்றுயே! 19

விண்ணுகி மண்ணுகிக் காற்றுகித் தீயாகி உடம்பாகி அந்த உடம்பில் தங்கும் உயிராகி மெய்யுமாகிப் பொய்யுமாகி மூதல்வனுகி ஒவ்வொருவரையும் யான் எனது என்று சொல்லாநின்ற அகங் கார மமகாரங்களில் மயக்குவித்துக் கூத்தாடச் செய்வோனுகி நின்ற உன்னை யாது சொல்லிப் புகழ்வேன்! (15)

வண்டுகள் சூழ்ந்தொவிக்கின்ற மலர்மாலையை யணிந்தவனுகிய உன்னைத் தேவர்கள் துதித்தலும் தாங்கள் சுகவாழ்க்கை வாழும்பொருட்டே; மனத்தை உன்னிடத்துத் தங்கப் பண்ணுவதும், தாங்கள் உயர்வையடைந்து தங்களை யாவரும் வணங்க விரும்பியே; நாயடியேன் ஆகிய நானேவெனில், பாழாகிய பிறவித் தனையை யறுக்கும்பொருட்டுத் துதித்து வணங்குகின்றேன்! (16)

தேவர்கள் வாழ்த்தி வழிபடாநிற்பர்; நான்கு வேதங்களும் உன் புகழைப் பாடுவனவாயிருந்தன; கூராமலையணிந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவியார் ஒருபுறத்தைக் கூறுகொண்டவளாயிராநின்றுள்; உண்மை யன்பினையுடைய அடியார்கள் மேலு மேலும் குழாங்கூடித் திரள்வாராயிராநின்றுர்கள். இவ்வாறிருந்தும் மஹாதிகட்காரியவனே! அராவிய உன் நீண்ட வீரக்கழலை யணிந்த திருவடிகளைக் காண்டற்குரியர் யாவரோ ஒருவருமில்லை.

எப்படிப்பட்டவர்க்கும் காணுதற்கரியவனே! சிதாகாயத்தை யுடையவனே! பொன்னம்பலத்தினடிக்கின்ற எம் பெரியோனே! சிறியவனுகிய என்னை ஆட்கொண்டருளிய திருவடிகளின்மீது மனம் நிரம்பிய மலர்களைச் சொரியேன்; உன் பெருங்கருணையைப் புகழ்ந்து பேரொலி செய்யேன்; விரும்பி மனமுருகேன்; இவைகளைச் செய்யாமல் உயிர் தரித்துமிரேன்; அடியேன் உய்யும் வழியாது? நான் இறப்பேன்; இறப்பேன்! (18)

வசந்தகால மன்மதனது மலர்ப்பாணங்களுக்கும் வெள்ளியபற்களையும் சிவந்த வாயினையும் கருங்குவளை மலரின் தன்மை பொருந்திய கண்களையுமுடைய மங்கையர்க்கும் துடித்துருகா நின்ற அவலமாகிய மனமே! உடல் முழுதும் உருகி நிற்குமாறு நாமிருக்குமிடம் தேடிவந்து எம்மை ஆண்டருளின இறைவன், இன்று நம்மை விட்டு நீங்கிப் பரமாகாயத்திலிருக்கின்றனன்; அவனைக் காணுதவனுகிய நீ அதை நினைந்து இறந்து படாமல் உயிர் வாழ்கின்றனையே! அதனல் என்ன பயன்? (19).

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல் வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பான ஏத்தாதே,
சூழ்கின்றாய் கேடுஉனக்குச் சொல்கின்றேன் பல்காலும்,
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே! 20

திருச்சிற்றம்பலம்.

3. சுட்டறுத்தல் (தன் செயல் அறுத்தல்)

எண்சீர் ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

வெள்ளம்தாழ் விரிசடையாய்! விடையாய்வின் மேணர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம்தாழ் உறுபுனலில் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க, என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்ப்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய்ப், அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்,
கண்இணையும் மரம்ஆம்,தீ வினையி னேற்கே! 21

வினையிலே கிடந்தேதினைப் புகுந்து நின்று,
போதுநான் வினைக்கேகடன், என்பாய் போல
இனையன்நான், என்றுஉன்னை அறிவித்து என்னை
ஆட்கொண்டுஎம் பிரான்ஆணைக்கு இரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின்று ஆடேன், அந்தோ!
அலறிடேன், உலறிடேன் ஆவி சோரேன்,
முனைவனே! முறையோநான் ஆன ஆறு
முடிவுஅறியேன், முதல்அந்தம் ஆயி னானே! 22

ஆயநான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்துயான், யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு,
நாதனே! நான்உனக்கு ஓர் அன்பன் என்பேன்

நித்திய வாழ்வைப்பெற்று வாழாத மனமே! நீ பொய் வாழ்வு வாழ்கின்றனை! வலிய வினையிலகப்பட்டு அழுந்துகின்றனை; அழுந்தாமல் நம்மை எடுத்தாண்டருள்பவனைத் துதியாமல் உனக்குக் கெடுதி பயக்கும் வினையையே எண்ணுகின்றனை; பலமுறையும் நான் சொல்லாநின்றேன்; அவ்வாறு சொல்லியும் துன்பமாகிய கடலில் நீ விழுந்தழுந்துகின்றனை; உன் அறியாமைக்கென் செய்வேன்! (20)

3. சுட்டறுத்தல்

'ஆகாய கங்கையைத்தரித்த தாழ்ந்து பரந்த சடையையுடைய வனே! இடபவாகனத்தை யுடையவனே! தேவாதி தேவனே!' என்று உன் மெய்யடியார் சொல்லக்கேட்டு விருப்பங்கொண்ட மனமுடையராய்ப் பள்ளத்திற் சென்று வீழ்கின்ற நீர்போலக் கீழ் மேலாம்படி பதைத்து உருகாநின்றவர்களிருக்க, என்னை ஆட்கொண்டருளின உன்பொருட்டு உள்ளங்கால் முதல் உச்சிவரையும் நெஞ்சின்றன்மையடைந்து உருகாமையாலும், உடல் முழுவதும் கண்களாகப் பெற்று நெருங்கமுடியாத நீர் பெருகிப் பாயாமையாலும் தீவினையையுடைய எனக்கு மனம் கல்லாகும்; இரு கண்களும் மரமாகும். (21)

இருவினையால் வரும் பாசத்தால் பிணிப்புண்டு கிடந்த என்னை, வலிய வந்து என் மனத்தில் நுழைந்து நிலைபெற்றிருந்து, 'வா; நான் என்னை அடுத்தவர்களின் வினைத்துயரை யொழிப்பவன்' என்று சொல்வாய்போல 'நான் இத்தன்மையேன்' என்று உன்னை உள்ளவாறெனக்குணர்த்தி, என்னை அடிமைகொண்டு எமது தலைவனுகிய உன்பொருட்டு இரும்பிறற்செய்த பாவை போன்ற யான் பாடுதல் செய்யேன்; நின்று ஆடுதல் செய்யேன்; ஐயோ! அரற்றுதல் செய்யேன். தலைவனே! முறையோ? நான் இப்படியாயிருக்கு முறைமையின் முடிவினை அறிந்திலேன்; முதலும் இறுதியுமாயிருப்பவனே! (22)

ஆராயுமிடத்து நான்கு மறைகளாலும் சொல்லப்பட்டவனும், நீயேயாயிருத்தலைத் தெரிந்துகொண்டு நான் எல்லாரினும் கீழ்ப்பட்டவனுகிய நாய்போல்பவனையிருத்தலையும் எனக்குள் ஆராய்ந்து பார்த்து, 'இறைவனே! அடியேன் தேவரீருக்கு ஒரு அன்பன்' என்று நினைப்பேனையினேன். ஆகையால், ஆட்கொண்டருளினை; அடியேனையல்லது உனக்கு வேறு அடியார்களில்லையோ? நான

ஆயினன் ஆதலால் ஆண்டு கொண்டாய்!
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றுஓர்
பேயனேன் இதுதான்நின் பெருமை அன்றே?
எம்பெருமான்! என்சொல்லிப் பேசு கேனே? 23

பேசில்தாம் ஈசனே! எந்தாய்! எந்தை
பெருமானே! என்றுஎன்றே பேசிப் பேசிப்;
பூசில்தாம் திருநீறே நிறையப் பூசிப்;
போற்றி,எம் பெருமானே! என்று பின்றை
நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே! அவாவெள்ளக் கள்வ னேஎன
மாசற்ற மணிக்குன்றே! எந்தாய், அந்தோ!
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே! 24

வண்ணந்தான் சேயதுஅன்று, வெளிதே அன்று,
அநேகன்எகன் அணுஅணுவில் இருந்தாய், என்று
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம் [அங்கு
எய்துமாறு அறியாத எந்தாய்! உன்தன்
வண்ணந்தான் அதுகாட்டி, வடிவு காட்டி,
மலர்க்கழல்கள் அவைகாட்டி, வழிஅற் றேஎனைத்
திண்ணந்தான் பிறவாமல் காத்துஆட் கொண்டாய்!
எம்பெருமான்! என்சொல்லிச் சிந்திக் கேனே? 25

சிந்தனைநின் தனக்குஆக்கி நாயி னேன்தன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி,
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்குஉன்
மணிவாய்த்தைதக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர,
வந்தன,ஆட் கொண்டுள்ளம புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை, செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டும்இல்இத் தனியனேற்கே! 26

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு, பற்றுஒன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் கால்வாய்
கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்டு,

வேறொரு பேயின் தன்மையுடையேன்; இப்படிப்பட்ட என்னை யடிமைகொண்ட இத்தன்மையே உன் பெருமை அல்லவா? எம்பெருமானே! உன் பெருமையை நான் என்னென்று சொல்லித் துதிப்பேன்! (23)

சொல்லப்புகின் 'சர்வேசுவரனே! என் தந்தையே! எந்தைக்கும் பெரியானே!' என்று பலகாலுஞ் சொல்லித் தரிப்பதாலல் திருநீற்றையே உடம்பு முழுவதும் நிறையப் பூசி' 'நமஸ்காரம்; எம்மிறைவனே!' என்று பின்னடையாத அன்பினல், பிறப்பையும் இறப்பையும் தாண்டினவர்களை ஆண்டருளினவனே! குற்றமற்ற மாணிக்க மலையே! எந்தையே! ஐயோ! ஆசைக்கடலிலமிழ்கின்ற சோரனுகிய என்னை நீ ஆட்கொண்டருளின பிரகாரம் என்ன? (24)

தேவர் கூட்டங்கள், 'சிவபிரானுக்கு நிறந்தான் செம்மை நிறம், இல்லை; வெண்மை நிறம், அதுவுமில்லை; பற்பல உருவாயிருப்பவன்; ஒன்றுந்தன்மையன்; அணுரூபமானவன்; அணுவினும் மிகச் சிறியவனுயிருப்பவன்' என்று பலவாறு வாயாற் சொல்லி, அவ்வாறே நினைவுங் கலங்கி, உன்னையடையும் வழி இன்னதென்றறியப்படாத எந்தையே! உன் நிறம் இத்தன்மையதெனக்காட்டி உன் திருவுருவைக் காட்டித் தாமரை மலர்போன்ற திருவடிகளையுங் காட்டி, உய்யும் வகை இன்னதென்றறியாத என்னைத் திடமாகவே மீண்டும் பிறவாதவண்ணம் தடுத்து அடிமைகொண்டாய்! எம்மிறைவனே! உன் பெருங்கருணையை யாதென்று வாயாற் சொல்லி மனத்தாற் சிந்திப்பேன்! (25)

நாயை ஒத்தவனுகிய எனது நினைப்பை உனக்கு உரியதா... கண்களிரண்டையும் உன் திருவடிமலருக்காக்கி, வணக்கத்தையும் அந்தத் திருவடி மலருக்காக்கி, வாக்கை உன் திருவார்த்தைக்காக்கி, என்னுடைய ஐம்புலன்களானும் நுகரும்படி வந்து அடிமைகொண்டு என் மனத்திற்பொருந்திய வித்தையையுடைய பெரிய அமிர்தசாகரமே! பொன் மலையே! செந்தாமரைமலர்க் காட்டையொத்த திருமேனியையுடைய ஒப்பற்ற ஒளியே! இகபரமிரண்டு மற்ற இந்தத் தமியேனுக்கு உன்னைக் கொடுத்தாய்! உன் பெருங்கருணை இருந்தவாறு என்னே! (26)

தனியேன் ஆகிப் பிறவியாகிய பெரிய சமுத்திரத்தில் இருவினைத் துன்பமாகிய பெரிய அலைகளால் மோதப்பட்டு, வேறு ஓர் ஆதாரமுமில்லாமல் கொவ்வைக்கனியை நிகர்த்த பவளம்போன்ற வாயினையுடையாராகிய மாதரென்கிற பெருங்காற்றால் கலக்கப்

இனிஎன்னே உய்யும்ஆறு என்றென்று எண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
மூனைவனே! முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய், மூர்க்க னேற்கே! 27

கேட்டுஆரும் அறியாதான், கேடுஒன் றுஇல்லான்,
இணைஇலான், கேளாதே எல்லாம் கேட்டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசுஇட்டு, நாயி னேற்கே
காட்டா தனஎல்லாம் காட்டிப் பின்னும்
கேளா தனஎல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்துஆட் கொண்டான்,
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே! 28

விச்சைதான் இதுஒப்பது உண்டோ? கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியன் ஆக்கி,
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்; அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்துஆண்டான், அன்பு கூர
அச்சன், ஆண் பெண்அலிஆ காசம் ஆகி,
ஆர்அழலாய், அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி, எங்கள்
சிவபெருமான் எம்பெருமான், தேவர் கோவே! 29

தேவர்கோ அறியாத தேவ தேவன்,
செழும்பொழில்கள் பயந்து, காத்து அழிக்கும் மற்றை
மூவர்கோன் ஆய்நின்ற முதல்வன், மூர்த்தி,
மூதாதை, மாதாவும் பாகத்து எந்தை,
யாவர்கோன் என்னையும் வந்துஆண்டு கொண்டான்;
யாம்ஆர்க்கும் குடிஅல்லோம் யாதும் அஞ்சோம்,
மேவினேம், அவன் அடியார் அடியாரோடு
மேன்மேலும், குடைந்தாடி ஆடு வோமே! 30

பட்டுக் காமமென்கிற பெருஞ் சுழுவினது வாயிலகப்பட்டு, இனிப் பிழைக்கும் வழி யாதோ?' என்று பலமுறைச் சிந்தித்து, திருவைந்தெழுத்தாகிய மரக்கலத்தைத் துணையாகப் பற்றிக்கொண்டு கிடக்கின்றேன்; வேறு சற்குணங்கள் சிறிதுமில்லாத மூர்க்கனாகிய எனக்கு அழகிய தலைவனே! முதலிறுதிகளில்லாத வளம் பொருந்திய வீடுபேற்றுக் கரையைக்காட்டி அடிமைகொண்டருளினாய்! நின் பெருங்கருணை இருந்தவாறென்னே! (27)

யாவரும் கேட்டறியாதவன்; அழிவு சிறிதுமில்லாதவன்; உறவினரில்லாதவன்; கேளாமலே எல்லாவற்றையும் கேட்டவன்; நாட்டிலுள்ளார் பார்த்திருக்க உலகத்தில் நாய்க்கு ஆசனமிட்டு நாயினேனுக்குக் காட்டக் கூடாதவைகளெல்லாம் காட்டி, மேலும் கேட்கக்கூடாதவைகளெல்லாம் கேட்பித்து அடியேனை மறுபடியும் பிறவாவண்ணம் தடுத்தாட்கொண்டான்! இது எம் பிறைவன் செய்தருளிய மாயவித்தைதான்! என்ன வியப்பு! ()

கேட்குமிடத்து இதை நிகர்ப்பதாகிய ஒரு வித்தைதானு முளதோ? அதிக விருப்பத்தையுடைய தமதடியார்க் கடியனைக்கிப் பிறவி அச்சத்தைத் தவிர்த்து அடிமைகொண்டான்; மேலும் அமுதம் பெருகி மனம் உருக வலிய வந்து ஆண்டருளினன்; யாவரேனு மன்புடையவராய்த் தேடப்புகின், சூக்ஷும ரூபமாயுள்ளவன்; ஆணுருவும் பெண்ணுருவும் அலியுருவும் ஆகாயமும் தானே ஆகி நிறைந்த அக்கினியாகி மூடிவாகி அப்பாலும் நிலைபெற்றிருந்த வெட்சியினது அழகிய மலரை நிகர்க்கின்ற திருமேனியையுடைய எங்கள் சிவபிரான்; எம்பிறைவன்; தேவர் பிரான்! (29)

தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனும் உணரக்கூடாத மகாதேவன், செழுமையாகிய உலகங்களைச் சிருஷ்டித்து இரட்சித்து அழிக்கின்ற ஏனையோராகிய மும்மூர்த்திகளுக்கும் தலைவனாய் நின்ற தனக்குமேலொரு கடவுளில்லாதவன்; அட்டமூர்த்தமாயிருப்பவன்; எல்லோர்க்கும் பாட்டன்; உமாதேவியால் ஆளப்படுகின்ற பங்கினையுடைய எமது தந்தை; வேறுள்ள எல்லாருக்கும் தலைவன்; இத்தகைய பெரியோன் வலிய வந்து மிகச் சிறியனாகிய என்னையும் ஆட்கொண்டருளினன். ஆதலால், இனி நாம் எவர்களுக்கும் குடியடிமையாகோம்; எதற்கும் பயப்படோம்; அவ்விறைவனது அடியார்க்கடியருடன் கூடிவாழ்வோம்; மேலும்மேலும் இன்பக்கடலில் மூழ்கிப் பலகாலும் கூத்தாடுவோம். (30)

4. ஆத்துமசுத்தி—அநுபவத்தழுந்தல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடு கின்றிலை; கூத்துடை யான்கழற்கு
அன்பிலை; என்புருகிப்
பாடு கின்றிலை; பதைப்பதும் செய்கிலை;
பணிகிலை; பாதமலர்
சூடு கின்றிலை; சூட்டுகின் றதும்இலை
துணையிலி பிணநெஞ்சே!
தேடு கின்றிலை; தெருவுதோ றுஅலறிலை;
செய்வதொன் றுஅறியேனே! 31

அறிவு இலாதனனைப் புகுந்து ஆண்டுகொண் டு
அறிவதை அருளிமேல்,
நெறிள லாம்புலம் ஆக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானைப்
பிறிவு இலாதஇன் னருள்கள்வெற் று இருந்தும்,
மாறுஆடுதி பிணநெஞ்சே!
கிறிள லாம்மிகக் கீழ்ப்படுத்தாய், கெடுத்தாய்
என்னைக் கெடுமாறே! 32

மாறி நின்றுளனைக் கெடக்கிடந்தனைபு எம்
மதியிலி மடநெஞ்சே!
தேறு கின்றிலம் இனிஉனைச் சிக்கெனச்
சிவன்அவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை ஆயினும்
நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை, கெடுவதுஉன் பரிசுஇது
கேட்கவும் கில்லேனே! 33

கிற்ற வாமன மே! கெடு வாய்உடை
யான்அடி நாயேனை
விற்று எலாம்மிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாதம்

4. ஆத்துமசுத்தி—அநுபவத்தழுந்தல்

பேதைமையில் இணையிலியாகிய சவம்போன்ற மனமே! உன்னை அடிமையாகக்கொண்டவனது திருவடியை அடைதற் பொருட்டு அன்பிலில் கூத்தாடாநின்றனையில்லை; அக்கூத்துக்குக் காரணமாகிய அன்பு உன்னிடத்துடையாயில்லை; எலும்பு நெகிழப் பெற்றுத் துதிபாடுதலுஞ் செய்திலை; பணிதலுஞ் செய்தாயில்லை; வணங்குகின்றாயில்லை; இறைவனது திருவடித் தாமரைமலரைத் தரிக்கின்றாயில்லை; அத்திருவடிகளுக்குப் பூமாலைகளைச் சூட்டுவதும் செய்தாயில்லை; அவ்விறைவன் எங்குளனென்று தேடுதல் செய்தாயில்லை; தெருக்கள்தோறும் அலறித் திரிந்தாயில்லை; எனக்குத் துணையாயிருத்தற்குரிய நீ இவ்வாறுயினபின் யான் கடைத்தேறுதற்குச் செய்யவேண்டுவதாகிய ஒருபாயமும் மறிந்திலேன். ()

பிணம்போன்ற மனமே! ஞானமில்லாத அடியேனை, வலிய எழுந்தருளி ஆண்டுகொண்டு அறியவேண்டுவதாகிய ஞானத்தையருள்செய்த மேலாகிய மார்க்கங்களையெல்லாம் எனக்கு வெளிப்படுத்திய எமது தந்தையைப், பிறவித் தளையைச் சேதிப்பவனை, நீக்கமற்ற இனிய திருவருள்களை அடைந்திருந்தும் சிந்தியாது தடுமாறுகின்றாய்; பொய் நடைகளெல்லாம் மிகாநிற்க, அதனைச் செய்து என்னைத் தாழ்வுபடுத்திலை; யான் அடியோடும் கெடும் வண்ணங் கெடுத்துவிட்டாய். (32)

அறிவிலியாகிய எம் பேதை மனமே! என்னைப் பகைத்து நின்று கெடுமாறு கிடந்தாலொத்தாய்; இனி உன்னை உறுதியாகத் தெளிகின்றிலேம்; சிவனாகிய அப்பெருமானது திரண்ட புயங்களின்மீதணிந்த திருவெண்ணீறு நிலைபெற்றிராநின்றதை அறிந்தாய். ஆனாலும், மனவுருக்கமடைந்தாயில்லை; இந்த உடம்பை யழிக்கின்றிலை; உன் தன்மை கேட்டுக் கேதுவாயிருக்கின்றது; இது கேட்கவுஞ் சம்மதியேன். (33)

விடயங்களிற் செல்லும் வலிமை கெடாத நெஞ்சமே! நீ கெடக் கடவை; என்னை அடிமையாகவுடைய கடவுள் அடிமையாகிய நாயேனை விலைப்படுத்தி எவ்வகையானும் மிகுதியும் ஆண்டருள்வதற்கு உரிமையுடையவன்; அவனது மணந்தங்கிய தாமரை

மூற்றிலா இளம் தளிர்பிரிந்து இருந்துநீ
உண்டன எல்லாமுன்
அற்ற ஆறும்நின் னறிவுநின் பெருமையும்
அளவறுக கிலமென ! 34

அளவு அறுப்பதற்கு அரியவன்; இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான்நம்
களவு அறுத்துநின்று ஆண்டமை கருத்திலுட்
கசிந்துஉணர்ந்து இருந்தேயும்
உளக றுத்துஉனை நினைந்துஉளம் பெருங்களன்
செய்ததும் இலை,நெஞ்சே !
பளகு அறுத்துஉடை யானகழல பவ
பரகதி புகுவானே ! 35

புகுவ தாவதும், போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்கு
உகுவ தாவதும், எந்தைதனம் பிரான்என்னை
ஆண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அழுதொடு
தேனெடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனில் மற்றிதற்கு
என்செய்கேன் விணையேனே ? 36

விணைஎன் போல்உடை யார்பிறர் ஆர்உடை
யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்
பன்று ; மற்று அதனுலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன்; தலைகீறன்
இனையன் பாவனை இரும்புகல் மனம்செவி
இன்னதென் றறியேனே ! 37

ஏனை யாவரும் எய்திடல் உற்றுமற்று
இன்னதென் றறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பின்இன் தேறலைச்
சிவனைஎன் சிவலோகக்

மலர்போன்ற திருவடியாகிய முதிராத இளந்தளிரை நீங்கியிருந்து நீ அனுபவித்தனவாகிய தன்பவின்பங்களெல்லாம் முன்பே அற்றொழிந்தவாற்றையும் உன்னறிவையும் உன் மேன்மையையும் அளந்து வரையறுக்கும் ஆற்றலுடையேனல்லேன்! (34)

தேவர்களுக்கு இத்தகைப் பெரியோனென்றறிந்து சொல்வதற்கு அருமையானவன்; தனது அடியார்களுக்கு எளிதாயருள்பவன்; நமது கள்ள வழியைச் சேதித்து நிலைபெற்றிருந்து ஆண்டருளினமையை மனத்தின்கண் நெகிழ்ந்து நன்றாக அறிந்திருந்தும் உன்னை ஒழிந்துள்ள எல்லாப் பொருள்களையும் வெறுத்து உன்னையே எமக்குத் துணைப்பொருளாகக் கருதியிராநின்றேம்; உன்னைப் பெருவஞ்சகஞ் செய்ததுமில்லை; மனமே! முத்தி உலகிற் புகும்பொருட்டுக் குற்றங்களை நீக்கி உடையவனது திருவடியை நீ வணங்கிலையில்லை. (35)

செல்லுதற்குரியதும், மீட்டும் வருதலில்லாததும் அழகிய சிவலோகமே! அதை யடையச்செய்வதற்கு மனம் நெகிழ்வதும், எந்தையாகிய எம்பெருமானும், என்னை ஆட்கொண்டருளினவனுமாகிய இறைவனது திருவடிகளின்மீது அன்பு காரணமாக நெக்குருகுதலும், தினந்தோறும் அழுதுடனும் தேனுடனுங்கூடிய பால் கட்டியினும், மேம்படுவதும் ஆகிய பரம்பொருளின்பம் கிடைப்பதும் (எனக்கு) இல்லையெனின், தீவினையையுடையேனாகிய நான், இதற்கு வேறென்ன செய்யக்கடவேன்? (36)

அடியேனைப்போலத் தீவினையையுடையவர் பிறர் யாருளர்? (ஒருவருமிலர்; ஆயினும்) உடையான் இறைவன் நாய்போன்ற அடியேனை, ஒரு சிறு தினையளவும் பிரிந்திருப்பது அவனுக்குத் திருவுளமன்று; அதைக்கொண்டு இறைவனது திருவடியாகிய தாமரைமலரை என் மனம் நீங்கியிருந்தும், யான் (அதைப் பெறுதற்கருமைநோக்கித்) தலையைக் கல் முதலியவற்றில் மோதிக் கொள்கிலேன்; பிளந்து கொள்கிலேன்; இத்தன்மையேனாகிய அடியேனுடைய சிந்தனை இரும்பாகும்; மனமானது கல்லாகும்; காது இன்னதென்று உவமித்துச் சொல்ல அறிந்திலேன். (37)

(அடியரல்லாத) மற்றையரெல்லாரும் அடையத் தொடங்கி, இத்தன்மையதென்றுணராத தேனை, பசுவினது நெய்யை, கரும்பினது இனிய சாற்றை, சிவபெருமானை, சிவலோகத்துக்குத் தலைவனை, மானினது நோக்கத்தையொத்த நோக்கத்தையுடைய

கோனை மான்அன நோக்கிதன் கூறினைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யான்இருந்து ஓம்புகின் றேன்கெடு
வேன்உயிர் ஓயாதே! 38

ஒப்பு இலாதன; உவமனில் இறந்தன;
ஒண்மலர்த் தாள்தந்து
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயில் ஆகிய இன்அருள் புரிந்தனன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன்; திண்வரை உருள்கிலேன்;
செழுங்கடல் புகுவேனே! 39

வேனில் வேள்கணை கிழித்திட மதிகெடும்
அதுதனை நினையாதே!
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேன்நி லாவிய திருஅருள் புரிந்தனன்
சிவன்நகர் புகப்போகேன்!
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத்து இருந்தேனே! 40

***

5. கைம்மாறு கொடுத்தல்

கலி விருத்தம்.

இருகை யானனை ஒத்திருந்து என்னுளக்
கருவை யான்கண் டிலேன்கண் டது எவ்வமே!
வருக; என்று பணித்தனை; வான்உளோர்க்கு
ஒருவன்; ஏகிற்றி லேன்கிற்பன் உண்ணவே! 41

உண்டுஓர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி என்றறி வொண்கிலை;
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றிஎப்!
கண்டும் கண்டிலன் என்னகண் மாயமே! 42

உமாதேவியின் பாகத்தையுடையவனே, நெடுங்காலமாக அடைந்திலேன்; (மற்றென்செயாநின்றேனெனின்) நான் உயிரோடிருந்துகொண்டு ஊனுலாகிய உடம்பைப் பாதுகாவாநின்றேன். இவ்வாறு கெடுபவுனுகிய எனது பிராணன் அழியாதோ? (38)

அழிவில்லாதனவும், உவமைப்பொருள்களினின்றும் நீங்கினவுமாகிய ஒளிபொருந்திய தாமரை மலையொத்த திருவடிப்பேற்றைக்கொடுத்து, நாய்க்குலத்திலும் இழிவாகிய அடியேனுக்கு நல்வழியை அருள்புரிந்து தாயினிடத்துண்டாகிய இனிய அரும்பொருள்போன்ற திருவருளை (என்னிடத்துச் செய்த) என் பரமபதியை, யிகுதியுங் காணுதவனுகிய நான் நெருப்பில் வீழ்ந்திலேன்; திண்ணிய மலைமேலிருந்துருள்கிலேன்; (ஆதலால்) செழுமையாகிய கடலிலாயினும் வீழ்ந்திறப்பேனே; அதுவும் செய்கிலேன்.

வசந்தகால மன்மதனது மலர்க்கணை மனமாதிய இடங்களைப் பிளந்திட, சந்திரனும் சுடுவதை எண்ணுமல் மானினது பார்வையானது நிலைபெற்ற பார்வையையுடைய பெண்களது வஞ்சனையினிடத்துச் சிக்கி, மத்திலுலுடைபட்ட தயிரைப்போலக் கலங்கித் தேன்போலும் இனிமைத்தன்மை தங்கிய திருவருளை என்னிடத்துச்செய்த என் சிவபெருமானது சிவபுரத்திற்குள் நுழையப்போகின்றிலேனுகி, உடம்பில் பிராணனை (வைத்துப்) பாதுகாக்கும் நிமித்தம் இன்னமும் உண்டும் உடுத்துமிருந்தனன். (40)

5. கைம்மாறு கொடுத்தல்

அதாவது தன்னைச் சிவபெருமானிடத்தர்ப்பித்தல்

நான் இரண்டு கைகளையுடைய மதயானையை நிகர்த்திருந்து என் மனத்திலுள்ள சோதியை நான் பார்த்திலேன்; பார்த்தது பெருந்துன்பத்தையே (என்னிலைமை இவ்வாறுகவும்) வாவென்று அருள்புரிந்தாய். தேவர்களுக்குள் ஒப்பற்றவனே! (உன்னை) அனுபவிக்க வலியில்லேன்; (விடயாதிகளை) அனுபவிக்க வலியுள்ளேன். (41)

ஒரு அழகிய பொருளானது உள்ளதென்று அறிபவர்கட்கு எல்லாம் பெண்ணுரு, ஆணுரு, பேடியுரு என்று உறுதிசெய்து அறியக்கூடாமலிருக்கிறாய்; அடியேனுக்கு உள்ளபடி வந்து பிரத்தியட்சமாயினை; (இவ்வாறு பிரத்தியட்சமாகப்) பார்த்தும், (மீட்டும்) பார்த்திலேன்; (இது) என்ன கண் மயக்கு! (42)

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மே! எனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞால மே! விசும் பே! இவை வந்துபோம்
கால மே! உனை என்றுகொல் காண்பதே? 43

காணல் ஆம்பா மே! கட்கு இறந்ததோர்
வாள்நி லாப்பொரு ளே! இங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றுக்கையை விட்டுனைப்
பூணும் ஆறுஅறி யேன்புலன் போற்றியே! 44

போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்துநின் றும்
ஆற்றல் டிக்கஅன் பால்அழைக் கின்றிலேன்;
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்றம் அன்னதொர் கொள்கைஎன் கொள்கையே!

கொள்ளுங் கில்லனீ அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அழுமலர்க் கொன்றையான்
நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே! 46

எந்தை ஆய்,எம் பிரான்மற் றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக்கு அஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன்; யாவரும்
சிந்தை யாலும் அறிவரும் செல்வனே! 47

செல்வம் நல்குரவு இன்றிவிண் ணோர்புழுப்
புல்வரம்பு இன்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்;
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே! 48

மேன்மையுடைய தேவர்களும் உணரவொண்ணுததாகிய ஒரு திருவுருவே! என்னை அடிமைகொண்ட நிருத்தனே! நிலமே! பரவெளியே! இவைகள் யாவும் வந்து தோன்றி, அழிதற்கிட மாகிய கால தத்துவமாயுள்ளவனே! (இத்தன்மையனுகிய) உன்னை, அடியேன் காணப்பெறுவது எக்காலமோ அறியேன்! ()

கண்ணிஞற் காணக்கூடிய திருவுருக்கொண்டனுக்கிரகித்த மேலான பொருளே! திருமால் நான்முகன் முதலானவர்களின் கண்ணுக்குக் காணலாகாததாகிய ஒப்பற்ற ஒளிநிலத்த பொருளே! இவ்வுலகத்தில் ஒரு பறவைக் குஞ்சைப்போலப் பாழானவனுகிய நான், சத்தாதி விஷயங்களில் மனஞ்செல்லாது தடுத்துப் பொய் யுடம்பை விட்டு, (மெய்யாகிய) உன்னையடையும் வழியை அறிந் திலேன். (44)

போற்றி என்று வாயாற் சொல்லியும், காயத்திஞற் புரண்டும் பலவகையாகப் புகழ்ந்துரைத்தும், அந்நிலையிற்றூனே நிலத் திருந்து, பலம் பொருந்திய (மனத்தின்கண்ணுள்ள) உன்னை யழைக்கு மாற்றவில்லேன்; எதிர்த்து வந்து, தாமரை மலர்போன்ற உன் திருவடிகளை அடைந்தயமனை ஒத்ததாகிய ஒரு கொள்கையை யுடைமையே எனது கோட்பாடு. (45)

தேனும் வண்டும் நீங்காத கொன்றைமலர் மாலையையணிந் தவனுய், நடுவிலும் கீழ்ப்பக்கத்திலும் மேற்பக்கத்திலும் உள்ள எல்லாப் பொருள்களினிடத்தும், எள்ளும், அவ்வெள்ளினுள் நிறைந்த எண்ணெயையும்போல வியாபித்து நிற்கிற எமது மேலான தந்தையே! உன்னை அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாத என்னையும், உன்னடியாரைக் கூவியழைப்பதுபோலக் கூவி யழைத்து அடிமைகொள்ளுவீராக! (46)

எல்லாரும் மனத்தாலும் அறிதலருமையாகிய பேரானந்தச் செல்வத்தையுடையவன்; எமது தந்தை, எமது தாய், எம்மிறை வன், மற்றும் யாவர்க்கும் பிதாவும் மாதாவும் இறைவனுமாயிருந் தனக்கு (தாய் தந்தை இறைவர்களை யுடைமையாகிய) அதனை இல்லாதவன்; தனக்காட்பதிந்தன்மை எனக்குண்டாவதற்கு முற் பட்டு என் மனத்திற் குடியாயிருந்தனன். (47)

செல்வமும் வறுமையும், இல்லாமல் தேவர்கள் புழுக்கள் புல் என்கிற மேல் கீழ் என்கிற வரம்புகளில்லாமல் யாவருக்கும் அருமைப்பொருளாயிருக்கு மிறைவனது மேன்மைக்கோ ரெல்லை யில்லாத திருவடிகளைப் பார்த்தும், (அவற்றை அடைந்துய்த லின்றி) நீங்கினேன்; கல்லின் வகைகளில் ஒன்று என்று சொல் லும்படியான மனத்தையுடைய யான் பட்ட துன்பம் எவ்வளவு!

கட்டு அறுத்துஎனை ஆண்டுகண் ணாரீறு
இட்ட அன்பொரொடு யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை
எட்டி னேடுஇரண் டும்அறி யேனையே ! 49

அறிவ னே ! அழு தே ! அடி நாயினேன்
அறிவன் ஆகக்கொண் டோனை ஆண்டது ?
அறிவி லாமைஅன் றேகண்டது ஆண்டநாள்
அறிவ னே ? அல்ல னே ? அருள் ஈசனே ! 50

•••○❀○•••

6. அநுபோகசுத்தி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஈச னே !என் எம்மானே !
எந்தை பெருமான் ! என்பிறவி
நாச னே ! நான் யாதும்
ஒன்று அல்லாப் பொல்லா நாய்ஆன
நீச னேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன், கண்டாயே !
தேசனே !அம் பலவனே !
செய்வது ஒன்றும் அறியேனே. 51

செய்வது அறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணப்,
பொய்யர் பெறும்பேறு அத்தனையும்
பெறுதற்கு உரியேன் பொய்இலா
மெய்யர் வெளிப்பூர் மலர்ப்பாதம்
மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுஉடுத்து
இங்குஇருப்பது ஆனேன் போர்ஏறே ! 52

பாசபந்தங்களைத் துணித்து என்னை யடிமைகொண்டு இடம் எங்கும் நிறையும்படித் திருநீற்றைத் தரித்த உன்னடியாரோடு யாவரும் எல்லாரும் காணும்படி எட்டிரண்டின் பொருளை யறியாத என்னை, இடமகன்ற உன் திருவாலக்க மண்டபத்தில் எற்றினை ! எற்றினை !! (49)

மூற்றறிவுடையானே! அன்பருடைய நாக்குக்கும் மனதுக்கும் அமிர்தமே! அடிமையாகிய நாயினேனை அறிவுடையானைத் திருவுளத்தடைத்துத்தாளே என்னை ஆட்கொண்டருளினது? என்னிடத்திருக்கக்கண்டது அறிவின்மையன்றே? என்னை நீ ஆட்கொண்டருளிய நாளில் அறிவுடையேயையிருந்தேனே? அறிவிலியாயிருந்தேனே? கிருபை செய்வாயாக; பெருஞ் செல்வத்தையுடையானே ! (50)

6. அநுபோகசுத்தி

பெருஞ்செல்வத்தையுடையவனே ! எனது தலைவனே ! என் தந்தையாகிய பெரியோனே ! என் பிறப்பை யழிக்கவல்லவனே ! யான் ஒரு சிறு பொருளுக்கும் ஈடாகாத தீய நாயாகிய இழிவினை யுடையேனை ஆண்டருளின உன்னைச் சிந்திக்கமாட்டேன்; ஒளி யுருவானவனே ! திருச்சிற்றம்பலமுடையவனே ! செய்தற்குரிய வற்றை உணர்ந்திலேன் ! (51)

போர்க்கு ஆண் சிங்கத்தை யொப்பவனே ! செய்யக்கடவது இன்னதென்றுணராத சிறிய நாயினேன், சிவந்த பொன்போலும் அருமையாகிய திருவடித் தாமரைகளை சேவிக்கப்பெறுத பொய் யொழுக்கமுடையோர் அடையும் பயன்கள் எல்லாவற்றையும் அடைதற்குரியனையிருக்கின்றேன்; பொய் இல்லா பொய்யற்ற மெய்யினையுடைய உன்னடியார் பரிமளம் நிறைந்த தாமரை மலர் போன்ற உன் திருவடிகளைப் பொருந்தக் கண்ணாரப் பார்த்தும் செவியாரக் கேட்டிருந்தும் பொய்யினையுடையேனாகிய நான், அறுசுவையுணவுகளை உண்டும் பட்டாடை முதலியவற்றை உடுத்தும் இந்தப் பொய்யுலகத்தில் இருக்கலாயினேன். (52)

போர்ஏ றே!நின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி, இருள்நீக்கி,
வார்ஏ றிளமென் முலையாளோடு
உடன்வந் தருள அருள்பெற்ற
சீர்ஏ றடியார் நின்பாதம்
சேரக் கண்டும் கண்கெட்ட
ஊர்ஏ றுய்இங்கு உழல்வேனே?
கொடியேன் உயிர்தான் உலவாதே. 53

உலவாக் காலம் தவம்எய்தி
உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பல்மா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணி கொண்டாய்!
மலமாக் குரம்பை இதுமாய்க்க
மாட்டேன்; மணியே! உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
என்கொண் டெழுகேன், எம்மானே? 54

மான்நேர் நோக்கி உமையாள்
பங்கா! வந்திங் காட்கொண்ட
தேனே! அமுதே! கரும்பின்
தெளிவே! சிவனே! தென்தில்லைக்
கோனே! உன்தன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட,
ஊனர் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன், உடையானே! 55

உடையா னே!நின் தனஉள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய்! நின்பாதம்
சேரக் கண்டிங்கு ஊர்நாயின்
கடைஆனேன் நெஞ்சு உருகாதேன்;
கல்லா மனத்தேன் கசியாதேன்;
மூடைஆர் புழுக்கூடு இதுகாத்திங்கு
இருப்ப தாக முடித்தாயே! 56

போர் செய்யுந் திறத்தினையுடைய ஆண் சிங்கம் போன்ற வனே! உனது அழகிய சிவலோகத்தினின்றும் நீ எழுந்தருளி வந்து கச்சணிந்த இளமையும் மென்மையுமுள்ள தனங்களையுடைய உமாதேவியோடுகூட வந்து எனது அஞ்ஞானவிருளை நீக்கி அருள் செய்ய உன் திருவடிகளைப்பெற்ற சிறப்பு மிகுந்த உன்னடியார், உன் திருவடிகளை அடைய (நான்) பார்த்தும், கண்ணிழந்த பட்டி எருதினையொத்துக் கொடியவனாகிய நான் உயிர் நீங்கப்பெறாமல் இப்பொய்யுலகில் சுழல்வேனே? (53)

அளவிறந்த காலம் தவஞ்செய்தலை மேற்கொண்டிருந்து (முத்தியையடைதற்குக் கருவியாகிய) உடம்பையும் வெறுத்து, இவ்விடத்தில் உன்னைச் சேவிக்கும்பொருட்டுப் பலராகிய பெரிய முனிவர்கள் (உன்னைக் காணப்பெறாமல்) மிகவும் வாடாநிற்க, (அவ்வகையாகிய தவமுயற்சி யொன்றுமில்லாத) கொடியவனாகிய என்னைத் தடுத்தாட்கொண்டருளினை; (அதைச் சிந்தித்து) மல சம்பந்தமுள்ள பெரிய சரீரமாகிய இவ்வுடலைத் (தீப்பாய்தல் முதலியவற்றால்) மாய்த்துக்கொள்ளமாட்டேன்; மாணிக்கமே! உன்னைக் காணும்பொருட்டுத் துன்பப்படுகின்ற அன்பில்லாத அடியேன் (அன்பொழியாநின்ற) வேறு எந்தக் கருவியைக்கொண்டு உயர்வேன் எம்பெருமானே! (54)

உடையவனே! மான்போன்ற நோக்கத்தையுடையவளாகிய உமாதேவியை இடதுபாகத்திலுடையவனே! (உன் பொன் நகர் விட்டு என்பொருட்டு) இந்த (அருவருக்கத்தக்க) உலகில் எழுந்தருளி அடியேனை யாண்டுகொண்டருளின தென்போல்பவனே! அமுதத்தை யொப்பவனே! கருப்பஞ்சாற்றின் தேறலை நிகர்ப்பவனே! மங்களகரங்களையுண்டாக்குவோனே! தெற்கின்கண்ணதாகிய தில்லைநகர்க்கிறைவனே! உன் திருவுளக்குறிப்பை அறிந்து அதற்கு இலக்காயினேர் உன் திருவடியை யடையாநிற்க ஊன் பொருந்திய புழுக்கூடாகிய இந்த உடம்பை இவ்விடத்தில் காத்திருக்கலாயினேன். (55)

என்னை அடிமையாகவுடையவனே! உன்னைத் தியானித்து மனம் நெகிழ்கின்ற மிகு அன்பையுடையவர் அடிமைகொண்டவனாகியவனே! உன் திருவடியை அடையக் கண்டும், இவ்வுலகில் ஊர் நாயைப்போலக் கடையாயினேன்; மனமுருகாதேன்; கற்கவேண்டியவற்றைக் கல்லாதவன்; மனங் கனியாதேன் (ஆகிய நான்) புலால் நாற்றம்பொருந்திய புழுக்கூடாகிய இத்தேகத்தை இவ்விடத்தில் வளர்த்துக்கொண்டிருப்பதாக முடிவு செய்தாய்!

முடிந்த ஆறும் எனதனகம்க
தக்க தே;முன் அடியாரைப்
பிடித்த ஆறும் சோராமல்
சோர னேன்,இங்கு ஒருத்திவாய்
துடித்த ஆறும் துகில்இறையே
சோர்ந்த ஆறும் முகம்குறுவேர்
பொடித்த ஆறும் இவைஉணர்ந்து
கேடுஎன் தனக்கே சூழ்ந்தேனே. 57

தேனைப், பாலைக் கன்னலின்
தெளிவை, ஒளியைத், தெளிந்தார்தம்
உளனை உருக்கும் உடையானை
உம்ப ராளை வம்பனேன்,
நான்நின் அடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால், அடியேற்குத்
தாணும் சிரித்தே அருளலாம்
தண்மை யாம்என் தன்மையே! 58

தன்மை பிறரால் அறியாத
கலைவா! பொல்லா நாய்ஆன
புன்மை யேனை ஆண்டுஐயா!
புறமே போக விடுவாயோ?
என்னை நோக்கு வார்யாரே?
என்நான் செய்கேன், எம்பெருமான்!
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய்! எங்குப் புகுவேனே? 59

புகுவேன், எனதே நின்பாதம்;
போற்றும் அடியார் உள்நின்று
நகுவேன, பண்டு தோள்நோக்கி.
நாணம் இல்லா நாயினேன்,
நெகும் அன்பு இல்லை; நினைக்காண,
நீ ஆண்டு அருள, அடியேனும்
தகுவ னேஎன் தன்மையே
எந்தாய்! அந்தோ! தரியேனே! 60

திருச்சிற்றம்பலம்.

முடிவுசெய்த வகையும் எனக்குத் தகுந்ததே; முன்னே உன் அடியவரை நீயே என்று கருதிப் பற்றின வகையும், (அவ்வாறு) கை சோராமல் பிடித்தும், கள்ள மனத்தனகிய நான், இவ்வுலகில் (மாயையாகிய) ஒரு பெண்ணினது வாயானது பறைத்த விதமும், ஆடையானது சிறிது நெகிழ்ந்த விதமும், முகத்தில் சிறு வெயர்வை அரும்பின விதமும் (ஆகிய) இவற்றைக் கண்டு எனக்கே கேட்டினைச் செய்துகொண்டேன்! (57)

தேனைப், பாலைக், கருப்பஞ்சாற்றின் தெளிவை, ஒளி வடிவத்தை, நம்பினவருடைய உடம்பை உருகச் செய்கின்ற முடிவிலாற்றலுடையவனே, தேவலோகத் துள்ளவனே கொடியவனகிய அடியேன், யான் உன் அடியவன் என்றும், நீ என்னை ஆண்டவன் என்றும் சொன்னால் என் தன்மையானது அடியேனைப் பார்த்து, நீதானும் நகைத்தற்குரிய தன்மையாகவே முடியும். (58)

உன் தன்மை இன்னதென்று பிறரால் உணரவொண்ணாத தலைவனே! பொல்லாத நாயையொத்தவனகிய இழிந்தவனகிய என்னை ஆண்டருளி, ஐயனே! புறத்தே போக விடுவையோ? (விடுவாயாயின்) என்னைக் கடாட்சிப்பவர் யாரோ? நான் என் செயக்கடவேன்; எம்பிரானே! பொன்போலவே விளங்குகின்ற திருமேனியையுடைய என் தந்தையே! எவ்விடத்து அடைக்கலம் புகுவேன்? (59)

எனக்கே உரியதாகிய உன் திருவடிகளில் அடைக்கலம் புகுவேன்; உன்னை வணங்குகின்ற அடியார் கூட்டத்தொருவனாக விருந்து பழமையாகிய உன் திருத்தோள்களை நோக்கி, நகைத்தல் ஒன்றுமே செய்வேன். நாணமற்ற நாய்போன்ற அடியேன் (உள்ளபடி) உன்னைப் பார்த்தற்கு மனமுருகுதற்கேதுவாகிய அன்போ சிறிதும் இல்லை; நீ ஆண்டருளுதற்கு அடியேனும் தக்கவனவனே? இது என் தன்மையோ? எந்தையே! ஐயோ! இவ்வுலகில் தரித்திருந்தேன். (60)

திருச்சிற்றம்பலம்

7. காருணியத்திரங்கல்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை ;
சங்கரா, போற்றி ! வான
விருத்தனே போற்றி ! எங்கள்
விடலையே போற்றி ! ஒப்பில்
ஒருத்தனே போற்றி ! உம்பர்
தம்பிரான் போற்றி ! தில்லை
நிருத்தனே போற்றி ! எங்கள்
நின்மலா போற்றி ! போற்றி ! 61

போற்றியோ நமச்சி வாய !
புயங்கனே ! மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய !
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய !
புறம்எனைப் போக்கல் கண்டாய் !
போற்றியோ நமச்சி வாய !
சயசய போற்றி ! போற்றி ! 62

போற்றி ! என் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றி ! நினபாதம், போற்றி !
நாதனே போற்றி ! போற்றி !
போற்றி ! நின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றுஇயம மானன் வானம்
இருசுடர்க் கடவு ளானே ! 63

கடவுளே போற்றி ! என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி !
விடஉளே உருக்கி எனையே
ஆண்டிட வேண்டும் போற்றி !

7. காருணியத் திரங்கல்

இவ்வுடலோடு கூடி வாழும் பொய் வாழ்க்கையை மெய் யென்று நம்பித் தாங்கிவ்லேன், அன்பர்களுக்கு இன்ப சுகத்தை உண்டாக்குபவனே! வணக்கம். பாழ்வெளியில் இன்பக் கூத்தாடுகின்ற அநாதிமல முத்தனே! வணக்கம். எமது மேம் பாடுடைய கடவுளே! வணக்கம். நிகரற்ற தனித் தலைமைக் கடவுளே வணக்கம். தேவர் பெருமானே வணக்கம். திருத் தில்லையில் நடனஞ்செய்பவனே! வணக்கம். எமது தாயவனே! வணக்கம. (61)

ஓம் நமச்சிவாயவென்றும் ஐந்தெழுத்து வடிவமாய் விளங்கு பவனே! வணக்கம். ஓம் நமச்சிவாயனே (அடியேன்) சென்று அடைக்கலம் புகுதற்குரிய இடம், உனது திருவடிகளேயன்றி வேறொன்றில்லை, (ஆதலால்) ஓம் நமச்சிவாயனே! அடியேனைப் புறத்தே விடாதே! வணக்கம். ஓம் நமச்சிவாயனே! வெற்றி வடி வானவனே! வெற்றி வடிவானவனே! வணக்கம்; வணக்கம். (62)

மண், நீர் அப்பு, தேயு, வாயு, உயிர், ஆகாயம் இரண்டு ஒளியுடைப் பொருள்களாகிய சூரிய சந்திரர்கள், (ஆகிய எட்டு ருவாயமர்ந்திருக்கின்ற) கடவுட்டன்மையுள்ளவனே! வணக்கம். என்னை யொத்த பொய்யன்பர்களை, அடிமை கொள்ளுகின்ற உதாரசீலனே! வணக்கம். உன் திருவடிகளுக்கு வணக்கம். தலைவனே! வணக்கம். வணக்கம். உனது அருட்பெருக்காகிய புதியதேனின் பொருட்டு, வணக்கம். (63)

கடவுளே வணக்கம். அடியேனது நிலைமையைப் பார்த்து மன மிரங்கியருள் புரிதல்வேண்டும்! வணக்கம். என் மனத்தை நெகிழும்படி, உருகப்பண்ணி என்னை அடிமையாக்கிக் கொள்ளு தல் வேண்டும், வணக்கம். இந்த அருவருப்பான மலவுடம்பை

உடலிது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி !
சடையுளே கங்கை வைத்த
சங்கரா! போற்றி, போற்றி ! 64

சங்கரா, போற்றி ! மற்றோர்
சரண்இலேன், போற்றி ! கோலப்
பொங்கரா அல்குல் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கை ஓர்பங்க ! போற்றி !
மால்விடை ஊர்தி, போற்றி !
இங்குஇவாழ் வாற்ற கில்லேன்;
எம்பிரான் இழித்திட் டேனை ! 65

இழித்தனன் என்னை யானே ;
எம்பிரான், போற்றி ! போற்றி !
பழித்திலேன் உன்னை, என்னை
ஆளுடைப் பாதம், போற்றி !
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை, போற்றி !
ஒழித்திடுஇவ் வாழ்வு, போற்றி !
உம்பர் நாட்டு எம்பிரானே ! 66

எம்பிரான், போற்றி ! வானத்
தவரவர் ஏறு, போற்றி !
கொம்பர்ஆர் மருங்குல் மங்கை
கூறன்,வெண் நீறன், போற்றி !
செம்பிரான் போற்றி ! தில்லைத்
திருச்சிற்றம் பலவ, போற்றி !
உம்பரா, போற்றி ! என்னை
ஆளுடை ஒருவ, போற்றி ! 67

ஒருவனே, போற்றி ! ஒப்பில்
அப்பனே, போற்றி வானோர்
குருவனே, போற்றி ! எங்கள்
கோமளக் கொழுந்து, போற்றி !

நீக்கி, விரைவாக மேலாகிய வீடு பேற்றைக் கொடுத்தருள்வாய். வணக்கம். சிறிய சடையொன்றின் கண்ணே, பெரிதாகிய கங்கையாற்றை யமைத்துக்கொண்ட இன்ப வடிவனே! வணக்கம். வணக்கம். (64)

சுகத்தைக் கொடுப்பவனே! வணக்கம். வேறொரு புகலி மில்லாதேன்! வணக்கம். அழகாகச் சிறுகின்ற, பாம்பின் படத்தை யொத்த அல்குலையும் சிவந்த வாயையும் வெண்மை யாகிய பற்களையும், கருமையாகிய வாள்போன்ற கண்களையும் உடைய மங்கைப் பருவப்பெண்ணாகிய உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடையவனே! வணக்கம். திருமாலாகிய இடபவாகனக் கடவுளே! வணக்கம் எம்பெருமானே! இவ்வுலகத்தில் இந்தப் பொய்யுடம்போடு கூடி வாழும் வாழ்வைச் சகித்திலேன், இதனையருவருத்தேன். (65)

எம்பெருமானே, என்னை நானே இழிவுபடுத்திக் கொண் டேன். உனக்குப் பல வணக்கஞ் செய்கின்றேன். உன்னை இகழ்ந்திலேன், என்னை அடிமையாகவுடைய திருவடிகளுக்கு வணக்கம். (சிறியவர் செய்த) பிழைகளெல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுதல் பெரியோரது கடமையேயாகும்; (ஆதலால்) வணக்கம். மேலாகிய தேவர் நாட்டுக்கிறைவனே! இச்சீர வாழ்க்கையை நீக்கிவிட வேண்டும்! வணக்கம். (66)

எமது தலைவனே, வணக்கம். விண்ணாட்டுத் தலைவர் களாகிய அந்த நான்முகன் திருமால் முதலிய தேவர்களுக்கு, ஆண் சிங்கம் போல்பவனே! வணக்கம். பூங்கொடி போன்ற இடையையுடைய உமாதேவியாரை ஒரு பங்கிலுடையானே, திருவெண்ணீற்றையுடையானே! வணக்கம் செவ்வைக் குண முடைய பெருமானே! வணக்கம். திருத்தில்லையின் கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்தையுடையவனே! வணக்கம். மேலாகிய வீட்டு நிலத்தையுடையானே! வணக்கம். என்னை யடிமையாகவுடைய ஒப்பற்றவனே வணக்கம் (67)

தனிமையானவனே, வணக்கம். ஒப்பில்லாத, தந்தையே! வணக்கம். தேவாசிரியனே வணக்கம். எமது கோமளக் கொழுந்தே வணக்கம். அடியேனை வரக்கடவாயென்று, உன்

வருகனன்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும், போற்றி !
தருகநின் பாதம், போற்றி !
தமியனேன் தனிமை தீர்த்தே. 68

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப, போற்றி !
போர்ந்தும்னன் பொய்ம்மை ஆட்கொண்
டருளிடும் பெருமை, போற்றி !
வார்ந்தருஞ்சு அயின்று வானேர்க்கு
அழுதம்ஈ வள்ளல், போற்றி !
ஆர்ந்தநின் பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும், போற்றி ! 69

போற்றி,இப் புவனம் நீர்தீக்
காலொடு வானம் ஆனாய் !
போற்றி,எவ் வுயிர்க்கும் தோற்றம்
ஆகிநீ சோற்றம் இல்லாய் !
போற்றி,எல் லாஉயிர்க்கும் ஈறுப்
ஈறு இன்மை ஆனாய் !
போற்றி,ஐம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க் கையானே ! 70

திருச்சிற்றம்பலம்.

••••❀••••

8. ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புணர்ப்ப தொக்க எந்தை என்னை
ஆண்டு பூண நோக்கினாய் ;
புணர்ப்ப தன்றி தென்ற போது,
நின்னை டென்னை டென்ன தாம்,
புணர்ப்ப தாக அன்றி தாக
அன்பு நின்க ழற்கணை
புணர்ப்ப தாக அங்க ணாள !
புங்கம் ஆன போகமே ! 71

னிடத்திற்கு வரவழைத்துக் கொள்ளவேண்டும் வணக்கம். தனி யெனது தனிமையை யொழித்து உன் திருவடிகளைக் கொடுத் தருள்வாயாக! வணக்கம். (68)

முழு அன்பையுடைய அன்பர்களுக்கு அவரினும் மேம்பட்ட அன்பையுடையவனே! வணக்கம். அடியேனது பொய்மை நிலை யும் அறவே யொழியுமாறு, அடிமை கொண்டருளிய உனது பெருமைக்கு வணக்கம். பாற்கடலில் பெருகிய விடத்தை, உண்டு அவ்விடத்தில் வந்திருந்த சகல தேவர்களுக்கும், அக் கடலிற்றோன்றிய அமிர்தத்தைக் கொடுத்தருளிய, வள்ளலே! வணக்கம். எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நின்ற உன் திருவடி களை நாயினுங் கடைப்பட்டவனுகிய எனக்கு, அருள் செய்ய வேண்டும், வணக்கம். (69)

இந்த நிலமும், நீரும், நெருப்பும், காற்றுடன் ஆகாயமும், ஆகியிருப்பவனே, உனக்கு வணக்கம். எவ்வகைப்பட்ட உயிர் களுக்கும் நீ, தோன்றுமிடமாகி உனக்குத் தோன்றுமிட மில்லாத வனே! வணக்கம். எவ்வகைப்பட்ட சீவராசிகளுக்கும், முடிவாகி உனக்கு முடிவில்லாதிருப்பவனே, வணக்கம். ஐம்புலன்கள் உன்னை அணுகப் பெறுத, மாயா தந்திரமுடையவனே! வணக்கம். (70)

8. ஆனந்தத் தழுந்தல்

அழகிய கண்ணுளனே! நீ சற்குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து அருள் செய்தற்குரிய பக்குவமானது ஒத்துவர என் தந்தையே, என்னை ஆட்கொண்டு நான் உன்னை அடையுமாறு திருவருட் பார்வை நல்கினாய். நின்றனது என்னை இவ்வுட லானது இணக்குவதன்று என்றறிந்தபோது, இதனால் என்ன பயன்? இஃது ஒழிவதாக, நின் திருவடிக்கண்ணை, அன்பானது என்னைச் சேர்ப்பதாக மேலான சிவாநந்த போகமானது என்னை நின்னோடு இணக்குவதாக. (71)

போகம் வேண்டி வேண்டி லென்பு
ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழல்இ ணைய
லாதி லேன்,என் எம்பிரான் !
ஆகம் விண்டு, கம்பம், வந்து,
குஞ்சி அஞ்ச லிக்கணை
ஆக என்கை கண்கள் காரை
ஆறது ஆக ஐயனே ! 72

ஐய ! நின்ன தல்ல தில்லை,
மற்றொர் பற்று ; வஞ்சனேன் ;
பொய்க லந்த தல்ல தில்லை ;
பொய்ம்மை யேன் ; என் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க !
வந்து நின்க ழற்கணை
மெய்க லந்த அன்பர் அன்பு
எனக்கும் ஆக வேண்டுமே ! 73

வேண்டும் நின்க ழற்கண் அன்பு,
பொய்ம்மை தீர்த்து, மெய்ம்மையே
ஆண்டு கொண்டு, நாயி னேஎன
ஆவ என்று அ ருளுநீ ;
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி !
போற்றி ! என்றும் என்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன, நின்வ ணங்கவே ! 74

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்,
வேதம் நான்கும் ஓலமிட்டு
உணங்கும் நின்னை, எய்தல் உற்று
மற்றொரு உண்மை இன்மையின்,
வணங்கி யாம்வி டேங்கள் என்ன
வந்து நின்ற ருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கை பங்க !
என்கொ லோ,நி னைப்பதே ? 75

சிவபோகத்தை விரும்பி இந்திரன் முதலிய இறையவர் பதவிக்குரிய இன்பங்களை வெறுத்தேன். ஒருவனே! எனது தலைவனே! உன்னிரண்டு திருவடிகளையல்லாமல் வேறு யாதுந் துணையில்லேன். எனது தன்னதேயுடலானது என்னின் வேறுகப் பெற்று, நடுநடுங்க என் கைகள் தலைமீது குவித்தலைச் செய்வதாக. கண்களில் நின்று விழும் நீரொழுங்கு ஆறுகப் பெருகுவதாக. (72)

ஐயனே! வஞ்சகம் நிறைந்த மனத்தினையுடையேனுக்கு உனது திருவடிப்பற்றேயல்லாமல், வேறொரு பற்றுமில்லை. பொய்மையையுடையேன், சதா காலமும் பொய்யோடு கூடி யிருந்ததேயல்லாமல், மெய்யோடு கூடி யிருந்ததில்லை, என்னிறைவனே! மையெழுதப் பெற்ற கண்களையுடையவளாகிய உமாதேவியார் தங்கிய, இடப்பாகத்தை யுடையவனே! உன் திருவடிக் கண்ணே வந்து உண்மையாய்க் கலந்திருந்த, அன்பரது அன்பை யொத்த மெய்யன்பானது ஆகவேண்டும், அடியேனுக்கும் உண்டாதல் வேண்டும். (73)

இறைவனே, அடியேனும், பலகால் இறந்தும் பிறந்தும் உழல்வேனையினும், உன் திருத்தொண்டை மேற்கொண்டு, எப்பொழுதும் வணக்கம் வணக்கம் என்று, உன்னை வணங்க உன் திருவடியினிடத்தே அன்பு செய்தல் உண்டாகவேண்டும்; (ஆதலால்) பொய் யொழுக்கங்களை ஒழித்து, அடியேனை உண்மையாகவே ஆட்கொண்டு அந்தோ வென்று இரங்கி, நீ அருள் செய்வாயாக. (74)

நெருங்கின தனங்களையுடைய உமாதேவி பாகனே! உன்னை மண்ணுலகமும், விண்ணுலகமும் தொழும். உன்னையன்றி வேறொரு மெய்ப்பொருளில்லாமையால், சதுர்வேதங்களும் உன்னைச் சரணடையவேண்டி, முறையிட்டு (அடையப் பெருமையால்) வாடி நிற்கும், (அவை அவ்வாறுயினபோது) நாங்கள் உன்னைத் தொழுது (உன் திருவடியை) விடமாட்டோம் என்று சொல்ல, நீ வந்து எமக்கு முன்னின்றும் கிருபை செய்தற்கு, நீ ஆலோசித்தற்குக் காரணம் யாதோ? (75)

நினைப்ப தாகச் சிந்தை செல்லும்
எல்லை ஏய வாக்கிலுல்
தினைத்த னையும் ஆவ தில்லை,
சொல்லல் ஆவ தேகட்பமேவ,
அனைத்து லகும் ஆய நின்னை
ஐம்பு லன்க ளாண்கிலா,
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாதம் எய்தவே! 76

எய்தல் ஆவது என்று நின்னை
எம்பி ரான்இவ் வஞ்சனேற்கு
உய்தல் ஆவது உன்கண் அன்றி
மற்றோர் உண்மை இன்மையின்
பைதல் ஆவது என்று பாது
காத்தி ரங்கு; பாவியேற்கு
இந்த லாது நினகண் ஒன்றும்
வண்ணம் இல்லை, ஈசனே! 77

ஈச னே! நீ அல்ல தில்லை,
இங்கும் அங்கும், என்பதும்
பேசி னேன்ஓர் பேதம் இன்மை
பேதை யேன், என் எம்பிரான்!
நீச னேனை ஆண்டு கொண்ட
நின்ம லா! ஓர் நின்அலால்
தேச னே! ஓர் தேவர் உண்மை
சிந்தி யாது சிந்தையே. 78

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களால்
மூந்தை ஆன காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவிழுந்தி லேன் என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்,
எந்தை ஆய நின்னை இன்னம்
எய்தல் உற்றி ருப்பனே. 79

(உன்னை) என் மனம், நினைப்பதாக எழா நிற்கும் நாவினுல் வரம்புண்டாகச் சொல்லுதல், தினையளவும் பொருந்துதல் இல்லை. எல்லா வுலகங்களும் உன் பெருமையைக் கேட்பவைகளா யிருந்தன. அந்தோ, அத்தன்மையுடையவனுகிய உன்னை (மெய், வாய், கண், மூக்கு, செவி என்றும்) ஐம்புலன்களும் காணமாட்டா, (அங்ஙனமாக,) எந்தையாகிய உன் திருவடியையடைய அது எவ்வெவ்வளவினது, எவ்விடத்தது! (76)

எம்பெருமானே! மனவாக்குக்களுக் கெட்டாத, உன்னைச் சிறியேன் அடையலாவது, எந்நாளோ? இந்த வஞ்சகத்தையுடைய எனக்கு உன்னிடத்துச் சரணடைந்தாலன்றிப் பிழைக்கலாவதாகிய வேறொரு மெய்ந்நெறி யில்லாமையால், இவன் தன்மை சிறுவனது தன்மையாவென்று திருவுளம்பற்றி அடியேனைப் பாதுகாத்தற் பொருட்டு இரங்கி யருளவேண்டும். தீவினையேனுகிய எனக்கு, உன்னை யடையும் வழி இவ்வாறு நீ திருவுளமிரங்கியருளுதலல்லாது வேறுன்றுமில்லை. கடையிலாச் செல்வத்தையுடையவனே! (77)

இறைவனே! இவ்வுலகத்தும் மறுவுலகத்தும் (ஆதாரம்) உன்னையன்றி வேறொருவரும் இலர் என்பதையும் அறிவிலியாகிய நான் அபேதமாகவெண்ணி விண்ணப்பித்தேன். என் தலைவனே! புலையேனை யடிமைகொண்ட மலமற்றவனே! ஒளி வடிவினனே! என் மனமானது ஒப்பற்ற நின்னையன்றி வேறொரு அநித்திய தேவாதி நிலைமையை நினைக்கமாட்டாது. (78)

ஐயனே! மனத்தாலும் அதன் வழியாய் நிகழும் செய்கையாலும் பெரியோர் சொல்லைக் கேட்பதனுலும், வாக்கினுலும் சிறப்பில்லாத ஐம்புலன்களினுலும் முற்காலத்தில் உன்னையடையாத மூர்க்கனுகிய நான் வெந்து விழுந்தேனில்லை. என் மனம் நாணி வாய் விட்டலறினேனில்லை. எமது தந்தையாகிய உன்னை இன்னமும் அடைய விரும்பி இருக்கிறேன். (79)

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
ஆண்டு கொண்ட நின்ன தாள்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும் உண்டு
இருந்தது துண்டம் தாயினும்
விருப்பும் உண்டு நின்கண் என்கண்
என்ப தென்னு விச்சைதே.

திருச்சிற்றம்பலம்.

9. ஆனந்த பரவசம்

கலி நிலைத்துறை

திருச்சிற்றம்பலம்.

விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்!
இச்சைக் காளர் எல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா! என்நான் செய்கேன்? பேசாயே! 81

பேசப் பட்டேன் நின்அடி யாரில்; திருநீறு
பூசப் பட்டேன்; பூதல நால்உன் அடியான்என் றுற
ஏசப் பட்டேன்; இனிப்படு கின்றது அமையாதால்
ஆசைப் பட்டேன்; ஆட்பட் டேன்உன் அடியேனே! 82

அடியேன் அல்லேன் கொல்லோ? தான் எனையாட்கொண்
[டிலைகொல்லோ?
அடியார் ஆளர் எல்லாரும் வந்துஉன் தாள்சேர்ந்தார்;
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன், எங்கள் சிவலோகா!
கடியேன் உன்னைக்கண் ணாரக் காணும் ஆறு காணேனே! 83

காணும்ஆறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணேபேசி என்தன்னைப் படுத்த தென்ன? பரஞ்சோதி!
ஆணேபெண்ணே ஆரமுதே! அத்தா, செத்தேபோயினேன்;
எண்நாண் இல்லா நாயினேன்என்கொண் டெழுகேன்,
[எம்மானே! 84

இரும்பு போன்ற வலிய நெஞ்சையுடைய கள்வனேகிய என்னை, அடிமை கொண்டருளிய உன் திருவடிகளாகிய கருப்பஞ் சாறு என்னை வாய் மடித்துப் பருகிக் கூடிப் பிரியவும் நெருப்பும் உண்டாயிருந்தது. நானும் இருக்கிறேன். தீப்பாய்தல் என்னும் அவ்வழக்கம் உலகத்தில் உண்டு. அவ்வாறிருந்தும், (யான் அதனைச் செய்யாமல்) என்னிடத்தில் உன்னிடத்துச் செய்ய வேண்டிய அன்பும் உண்டென்பது, என் அறிவின்மையேயாம். ()

9. ஆனந்த பரவசம்

பொய்யாகிய ஓர் மரம் விதையின்றி நிர்மூலமாக அழிய லாகாதென்று, இவ்வுலகத்தில் என்னை (அதற்கு இலக்காக) வைத்தாய் உன் விருப்பத்துக்குரியராயினர் பலரும், வந்து உன் திருவடியையடைந்தார்கள். பிறவி அச்சமாகிய கடலில் யான் முழுகா நின்றேனை, திருவாரூரிலெழுந்தருளியிருக்கின்ற எமது பிசைத் திருக்கோலங் கொண்டருளிய தேவனே. அடியேன் என்ன செய்யக்கடவேன் நீ சொல்லாய். (81)

உன் தொண்டனேகிய நான் உனதடியாருள் ஒருவனென்று சொல்லப்பட்டேன். சதாகாலமும் திருவெண்ணீற்றி லெல் தேக முழுமையும் பூசப்பட்டேன். உலகத்தோரால் உன் அடியவனென்று இகழப்பட்டேன். இப்பொழுது படுந்துன்பம் போதாதாகையால், (மேலும் நின்னை) விரும்பினேன். உனக்கு அடிமையுமானேன். (82)

நான் தொண்டனல்லனே? நீ அடியேனை அடிமை கொண் டிலையோ? உன் தொண்டராளர் எல்லாரும் வந்து உன் திரு வடியை அடைந்தார்கள். பழிபாவங்களே திரண்ட உடம்பாகிய இதனை நீக்கிக்கொள்ளும் ஆற்றலுடையேனல்லேன்; எங்கள் சிவபுரனே கடினை உள்ளத்தையுடைய நான் உன்னைக் கண் குளிரப் பார்த்து மகிழும் உபாயத்தைக் கண்டிலேன். (83)

உன்னை (அரிமர்த்தன பாண்டியனிமித்தம் குதிரை வாங்க வந்த) அந்நாளில் கண்டவனேகிய நானும் உன்னைக் காண்பதற் குரிய வழியைக் கண்டிலனேகிப் பயனில்லனவற்றையே பேசி, அடியேனை (இப்பிரபஞ்ச வாசனையில்) என்னை நானே அகப் படுத்திக்கொண்டதற்குக் காரணம், என்ன பேதைமை, மேலான சுடரே, ஆண்வடிவே, பெண்வடிவே, அரிய அமிர்தமே, ஐயனே, இறந்தே யொழிந்தேன். பெருமையாகிய நாணம் இல்லாத நாயேன் யாதுகொண்டு உயர்வேன்? எம்பெருமானே. (84)

மான்தேர் நோக்கியுமை யாள்பங்கா ! மறைநான்றறியா
[மறையோனே !
தேனே ! அழுதே ! சிந்தைக் கரியாய் ! சிறியேன்
[பிழைபொறுக்கும்
தோனே ! சிறிதே கொடுமை பறைந்தேன், சிவமா
[நகர்குறுகப்
போனாள் அடியார், யாவும்பொய் யும்புறமே
[போந்தாமே ! 85

புறமே போந்தாம் பொய்யும் யாவும் மெய்அன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச்சேர்ந்த அடியார் மற்றுன் றறியாதார் ;
சிறவே செய்து வழிவந்துசிவனே ! நின்தாள்
[சேர்ந்தாரே ! 86

தாராய், உடையாய் அடியேற்கு உன்தா ளிணைஅன்பு ;
போரா உலகம் புக்கார்அடி யார் ; புறமே போந்தேன்யான்;
ஊர் ஆடிலைக்கக் குருட்டாமிலைத்தாங் குன்தாளிணை
[அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே மயல்கொண்ட ழுதேனே. 87

அழுதேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன், என்கொண் டுன்னைப் பணிகேனே? 88

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணிஆர் பாதம் கொடுத்தி ; அதுவும் அரிதென்றால்,
திணிஆர் மூங்கில் அனையேன் வினையைப் பொடிஆக்கித்,
தணிஆர் பாதம் வந்தொல்லை தாராய்பொய்தீர்
[மெய்யானே ! 89

மானின் பார்வையையொத்த பார்வையையுடையவளாகிய பல்லாயிரக் கோடி யண்டங்களையுமாட்கொண்டருளிய உமாதேவி யாரது, பாகத்தையுடையவனே வேதாந்தமும் உணரக்கூடாத அந்தணனே, தேனே, தேவாமிர்தமே, மனத்துக்கும் வாக்குக்கும் எட்டுதலருமையானவனே! சிறியேனது குற்றத்தைப் பொறுத் தருளுகின்ற தலைவனே! (உன் விஷயமாக) சில கடின மொழி களைச் சொல்லினேன் (அதனால்) நானும் என்னிடத்துள்ள பொய்யும் புறம்பாயினேம், உன் தொண்டர் சிவலோகப் பேற்றை யடையப் போனார்கள். (85)

பொய்யும் யானும் புறமாய்விட்டோம். உண்மையன்பைப் பெறும் ஆற்றலைப் பெறுதவகையை யடைந்தேன் நான் என்னும் அகம்பாவமற்றொழிய உன்னையடைந்த அடியார்கள், வேறொன்றை யறியாதவர்களாய்ச் சிறப்பான காரியங்களையே செய்து முறையாக வந்து சிவபெருமானே! உன் திருவடியை யடைந்தார்கள். (86)

என்னை உடையவனே! அடியேனுக்கு உனது இரண்டு திருவடிகளிலும் செய்யவேண்டிய அன்பினைக் கொடுத்தருள்வா யாக. மீளாத உலகமாகிய வீட்டினுள் உன் மெய்யடியார் போய்ப் புகுந்தனர். யான் வெளியே போயொழிந்தேன். ஊரில் உள்ள நல்ல பசுக்கள் மேய்ந்திட அதனைத் தொடர்ந்து சென்ற குருட்டுப் பசுவும் மேய்ந்தது என்றாற்போல உன்னுடைய திருவடிகளில் அன்பு பெறுதற்கு எத்தன்மையனாய் அடியேன் மெய்யடியாரைப் போல விருப்பங்கொண்டு முயற்சி செய்தல்கூடும்? (87)

நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகுகின்றவர்களாய், ஒளி நிறைந்த, பொன்போலுமழகிய உன் திருவடியைப் பார்த்து வணங்கி உன்னைத் தொடர்ந்துபற்றின மெய்யன்பர்களோடும், பின்பற்றிச் செல்லாமல் உன்னிடத்தன்புள்ள மனமுடையவனைப் போல அழா நின்றேன் (ஆதலால்) வீணே பிறந்தவனாகிய நான் எதைக்கொண்டு உன்னை வணங்குவேன்? (88)

பொய் கலவாத மெய்யனே! வணங்குபவர்களாகிய பழமை யாகிய தொண்டர்களுக்குப் பிறவித் துன்பத்தை, நீக்கியருளி, உனது அழகு பொருந்திய திருவடியைத் தருகின்றாய். அவ் வாறு கொடுத்தலும் அரிதாயின் (எனக்குக் கொடுத்தல் அருமை யென்பதற்கையமேயில்லை, ஆயினும் எனக்கு உன்னையன்றி வேறு புகலிடமில்லாமையால்) வலிமை பொருந்திய மூங்கிலை யொத்தவனாகிய எனது கர்மங்களை நீறாகச் செய்து, விரைவில் வந்து, தண்மை பொருந்திய உன் திருவடியைத் தந்தருள்வாய்.

யானே பொய்னன் நெஞ்சும் பொய்,என் அன்பும்பொய்,
ஆனல் வினேயேன் அழுதால் உன்னைப் பெறலாமே.
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! தித்திக்கும்
மானே! அருளாய் அடியேன் உனைவந் தறும்ஆறே. 90

திருச்சிற்றம்பலம்.

---

10 ஆனந்தா கீதம்

எண்சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே!
வந்து முந்தினின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றனின்
மெய்ம்மை அன்பர் உன்மெய்ம்மை மேவினர்
ஈறி லாதநீ எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுடம் ஆக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. 91

மைஇ லங்குநற் கண்ணி பங்கனே!
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கைஇ லங்குபொற் கிண்ணம் என்றுஅலால்
அரிவை என்றுனைக் கருது கின்றிலேன்.
மெய்இ லங்குவெண் ணீற்று மேனியாய்,
மெய்மை அன்பர்உன் மெய்மை மேவினர்
பொய்இ லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்தம் ஆவதே. 92

பொருத்தம் இன்மையேன் பொய்மை உண்மையேன்
போத என்றனைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே!
அரத்த மேனியாய்! அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னுய்முறை யோ? என் எம்பிரான்!
வம்ப னேன்வினைக் கிறுதி இல்லையே. 93

நானே பொய்மையுடையேன். என் மனமும் வஞ்சமுடை யது; என்னிடத்துண்டாகுமன்பு முழுவதும் பொய். இப்படி யாயின் தீவினையினேன் வீணை யிரங்கிலை உன்னையடைய லாமோ? தேனே! அமிர்தமே! கருப்பஞ்சாற்றின் தேறலே! (அடி யார்களுக்கு இனிக்கின்ற பெரியோனே! தொண்டனேன். உன்னை வந்தடையுமாறு திருவருள் புரிவாயாக. (90)

10. ஆனந்தா தீதம்

மாறுபடுதலில்லாத, பெருமை பொருந்திய அருட்கடலே! முற்பட்டு வந்து உனது தாமரை மலரின் அழகினைக்கொண்ட, இரண்டு திருவடியினின்றும், வேறுபடுதல் இல்லாத பக்குவத்தை யடைந்த உன் மெய்யடியார்கள், உன் உண்மை நிலையை யடைந் தார்கள். முடிவற்ற நீ, ஒளி செய்கின்ற மாநட வடிவமாக எளியையாய் எழுந்தருளி, எனக் கருள்புரிந்தும் பிளவுபடாத, (உருகாத) மனத்தையுடைய நாயேன், கடைப்பட்டவன் ஆனேன். (இங்ஙனம் நான் கடைப்பட்டதற்குக் காரணம்.) என்னிடத்துண்டாகிய தீவினையேயாம். (91)

மை தீட்டப்பெற்று விளங்குகின்ற, அழகான கண்களை யுடையவளாகிய உமாதேவியை இடது பாகத்திலுடையவனே வந்து என்னை யடிமைகொண்ட பின்னர் மிருதுவாகிய கையி னிடத்து விளங்குகின்ற பொன்னிறம் செய்த வட்டிலென்று நினைப்பதல்லது, அருமையுடையாயென்று உன்னை நினைத்தி லேன். திருமேனியில் விளங்குகின்ற திருவெண்ணீற்றின் அழகையுடையவனே! உன் மெய்யடியார்கள் உன் மெய் நிலையை அடைந்தார்கள். அடியேனை இந்தப் பொய்யுலகில் இருக்கும்படி செய்து நீ அவ்விடத்திற்குப் போய் விடுவதுதானே உனக்குத் தகுதியாவது பேசுவாயாக. (92)

நான் உன்னருட்குப் பாத்திரமல்லாதவன்; பொய்மையை யுடையேன்; (அங்ஙனமாகவும்) வரக்கடவாயென்று அடியேனை (நீ) அருள்பாலித்துப் பார்க்கவும், (அப்படி நீ நோக்கின உப காரத்தை நினைத்து) வருந்துதலில்லாதேன்; வஞ்சகத்தையுடை யேன்; செத்திலேன்; தாமரை மலர்போன்ற திருவடியையுடை யானே! செவ்வரத்த மலர்போன்ற திருமேனியையுடையவனே! நீ அருள் செய்யப்பெற்ற அடியார்களும், நீயும் சிவபுரமாகிய அவ்விடத்துக்கு எழுந்தருளி, அடியேனை இவ்விடத்திலிருக்க வைத்தாய் இது உனக்கு முறைமையோ? எனது தலைவனே! வம்பனேனது தீவினைகளுக்கு ஒரு முடிவில்லையோ? (93)

இல்லை நின்கழற் கன்ப தென்கனே.
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே!
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற் கன்பன் ஆக்கினைய்
எல்லை இல்லைநின் கருணை, எம்பிரான்!
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்,
வல்லை யேனனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே! 94

வான நாடருஞ் அறிஓ
மறையில் ஈறுமுன் தொடர் ஒணைதீ
ஏனை நாடருந் தெரிஒ ணைதீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சைசே. 95

விச்ச தன்றியே வினவு செய்குவாய்;
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய். வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினைய், பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினைய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்!
நானும் அங்ஙனே, உடைய நாதனே! 96

உடைய நாதனே, போற்றி! நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னே! பணி, போற்றி! உம்பரார்
தம்ப ராபரா, போற்றி! யாரினும்
கடையன் ஆயினேன், போற்றி! என்பெரும்
கருணை யாளனே, போற்றி என்னைநின்
அடியன் ஆக்கினைய் போற்றி! ஆதியும்
அந்தம் ஆயினைய், போற்றி! அப்பனே! 97

உன் திருவடிக்கண்ணே செய்தற்குரிய உண்மையன்பு என்னிடத்தில் சிறிதும் இல்லை. மயிர்ச் சாந்தணிந்த அழகிய கூந்தலையுடையாளாகிய உமாதேவியைப் பாகத்திலுடையவனே! மேருமலையைக் குழையச் செய்த வித்தையினால் என்னையும் உன் திருவடிக் கடிமையாக்கினாய்; எம்பெருமானே! நான் எப்பொருள் கொண்டு யாது செய்தாலும், உன் பெருங்கருணைக்கோ ரளவில்லை. (ஆதலால்), குற்றமற்ற ஞானவெளியில் உள்ளவனே! இன்னமும் அடியேனுக்கு, உன் திருவடியைக் காண்பித்து என்னை இப்பிறவிப் பிணிப்பினின்றும் நீக்கி யருளவும் வல்லாய். (94)

விண்ணுலகத்தவராலும் உணரப்படாத நீ, வேதாந்தத் தாலும் அநாதியாகவே எட்டப்படாத நீ, மற்றை யண்டத்தவ ராலும் அறியப்படாத நீ, அடியேனை இனிதாக அடிமைகொண்ட விதமும் என்னுடம்பை நாடக மாட்டுவித்த விதமும், அடியேன் மனங்கரைந்து உன்னை யநுபவிக்க வைத்த விதமும், அவ்வநு பவத்துக்குக் கருவியாகிய ஞானத்தாலுண்டாகிய ஆநந்தத்தால் நடனம் செய்வித்த விதமும், உலகத்தொடர்பான அஞ்ஞானம் எனக்கு நீக்குதற்கேயாம். (95)

விண்ணுலக முழுதும் மண்ணுலக முழுதும், மற்றெல்லா வுலகங்களையும் வித்தில்லாமலே உண்டாக்குவாய்! காத்து அழிப் பாய்! வஞ்சகத்தையுடைய பெரும் புலையனாகிய என்னை, உன் திருக்கோயில் வாயிற்படியிலுழன்று திரியும்படியான பித்தனைச் செய்தாய்! உன் பொன்புடைய தொண்டருக்கு உரியவனைச் செய்தாய்! (உலகத்தார்) தம்மால் வளர்க்கப்பட்டது ஒரு பயன் தராத மரமேயானாலும் அதை வெட்டமாட்டார்கள். என்னை யாட்கொண்ட தலைவனே! அடியேனும் அம்மரத்தை ஒப்ப வனே! (96)

என்னை யாட்கொண்ட தலைவனே! உனக்கு வணக்கம்; உன்னையன்றி அடியேனுக்கு வேறு ஆதாரமாவதாகிய ஒரு பொருளை இனி யடையப்பெறுவேனே? சொல்வாயாக. (ஆத லால் உனக்கு) வணக்கம். எல்லாத் தேவர்சட்கும் மேற்பட்ட மகாதேவனே! வணக்கம். நானே எல்லாரினும் கடைப்பட்டவ னையினேன்; வணக்கம். எனது பெரிய அருட்கடலே! வணக்கம். என்னை உன் தொண்டனைச் செய்தாய்; உன் பொருட்டு வணக்கம். முதலும் இறுதியும் ஆனவனே! வணக்கம். (97)

அப்ப னே! எனக் கமுத னே! ஆ
னந்த னே! அகம் நெகவுள் ளூறுதேன்
ஒப்ப னே! உனக் குரிய அன்பரில்
உரிய னெய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னே! சுடர் முடிய னே! துணை
ஆள னே! தொழும் பாளர் எப்பினில்
வைப்ப னே! எனை வைப்ப தோ, சொலாய்
நைய வையகத் தெங்கள் மன்ன னே! 93

மன்ன! எம்பிரான்! வருக என்னவின;
டாலும் நான்முகத் தொருவன், பாரினும்
முன்ன! எம்பிரான், வருக என்னவின;
முழுதும் பாவையும் இறுதி உற்றநாள்
பின்ன; எம்பிரான், வருக என்னவினப்
பெய்த முற்கண்அன் பாய்ன்ன நாவினல்
பன்ன, எம்பிரான் வருக என்னவினப்
பாவ நாச! நின் சீர்கள் பாடுவே. 99

பாட வேண்டும்நான் போற்றி! நின்னையே
பாடி னைந்துனைந் துருகினெக் குனெக்கு
ஆட வேண்டும்நான், போற்றி! அம்பலத்து
ஆடும் நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி! இப்புழுக்
கூடு நீக்கெனைப், போற்றி! பொய்யெலாம்
வீட வேண்டும்நான், போற்றி! வீடுதந்து
அருளு,போற்றி! நின் மெய்யர் மெய்யனே! 100

திருச்சிற்றம்பலம்.

எனக்குத் தந்தையே! அமிர்தம் போல்பவனே! சுக ரூபமா யிருப்பவனே! அடியேனது மனமுருகும்படி மிகுதியும் சுரக்கின்ற தேனை நிகர்த்திருப்பவனே! உனக்குரியவராகிய அடியார்களைப் போல நானும் உரிமைப்பாடுடையவனுய் உன்னை அநுபவிக்கும் படி நின்றதாகிய ஒப்பில்லாத அறிவுருவனே! விளங்குகின்ற திரு முடியையுடையவனே! துணையாளனே! அடியார்களுடைய இளைத்த காலத்தில் பயன்படுமாறு வைத்த வைப்புநிதி போல் பவனே! எம்மானே! உலக மாயையில் என்னை வருந்தும்படி வைப்பது (உனக்குத் தகுதியாமோ?) சொல்வாயாக. (98)

எம்பிரானே! (எக்காலுமொரு தன்மைத்தாய் நான்) நிலை பெற்றிருக்க, என்னை வாவென்றழைத்தருள்க. திருமாலும் நான்முகனும் ஆகிய எல்லாத் தேவரினும் முதல்வனே! எமது பெருமானே! என்னை வாவென்றழைத்தருள்க. எல்லாப் பொருள் களும் அடியோடு அழிவடைந்த காலத்திலும் பிரிவின்றியிருப்ப வனே! எம்பிரானே! என்னை வாவென்றழைத்தருள்க. வீரக் கழலையணிந்த உன் திருவடியினிடத்து அன்புடையேனுகி, என் நாவைக்கொண்டு உன் திருநாமங்களைத் துதிக்கவும், எம்பிரானே! தீவினைகளைக் கெடுப்பவனே! உன் பெருமைகளைப் புகழ்ந்து பாடவும் என்னை வாவென்றழையாய். (99)

நான் உன்னையே பாடுதல் வேண்டும்; உனக்கு வணக்கம். நான் பாடாநின்று, மனம் அழிந்தழிந்து கரைந்து உடல் நெகிழ்ந்து நெகிழ்ந்து கூத்தாடவேண்டும்; உனக்கு வணக்கம். தில்லையம்பலத்தில் ஆநந்தக் கூத்தாடுகின்ற உனது திருவடித் தாமரையை நாயேன் வந்து அடைதல் வேண்டும்; உனக்கு வணக்கம் இந்தப் புழுக்கூடாகிய சரீரத்தினின்றும் என்னை நீக்கி யருளவேண்டும்; உனக்கு வணக்கம். அடியேன் பொய் யின்பம் எல்லாவற்றையும் விட்டொழிதல் வேண்டும்; உனக்கு வணக்கம். உன் மெய்யன்பர்க்கு மெய்யாயிருப்பவனே! வீடு பேற்றைக் கொடுத்தருள்வாயாக; உனக்கு வணக்கம். (100)

திருச்சிற்றம்பலம்.

6. நீத்தல் விண்ணப்பம்

(உத்தரகோசமங்கையில் அருளியது—பிரபஞ்ச வைராக்கியம்)

கட்டளைக் கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட,
விடையவனே! விட்டிடுதி, கண்டாய்; விறல்வேங்
[கையின்தோல்,
உடையவனே! மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே!
சடையவனே! தளர்ந்தேன், எம்பிரான், என்னைத்
[தாங்கிக்கொள்ளே! 1

கொள்ளேன் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச்
[செவ்வாய்,
வள்ளேன் எனினும் விடுதிகண் டாய்; நின்
[விழுத்தொழும்பின்,
உள்ளேன் புறம் அல்லேன், உத்தரகோசமங் கைக்கு அரசே!
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்(டு) ஆண்ட(து)எக்
[காரணமே? 2

கார்உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேர்உறு வேனை விடுதி, கண் டாய்; விளங் குந்திரு ஆர்
ஊர்உறை வாய்; மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
வார்உறு பூண்முலை யாள்பங்க! என்னை வளர்ப்பவனே! 3

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும் நீங்கிஇப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதி, கண் டாய், வெண்
[மதிக்கொழுந்தான் று
ஒளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங் கைக்கரசே!
தெளிகின்ற பொன்னும் மின்னும்அன்ன தோற்றச்
[செழுஞ்சுடரே! 4

6. நீத்தல் விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்.

கடைப்பட்டவனகிய என்னை, மிகுந்த அருளினால் வலிய வந்தடைந்து அடிமை கொண்டருளியவனே! இடபவாகனத்தின் மீது எழுந்தருள்பவனே! என்னைக் கை விடுகிறாயோ? (கை விடாது காத்தருளாய்); வெற்றியையுடைய புலித்தோலை ஆடையாகத் தரித்தவனே! நிலைபெற்ற உத்தரகோசமங்கையென்னுந் திருப்பதிக்குத் தலைவனெழுந்தருளி யிருப்பவனே! சடாபாரத்தையுடையவனே! எமது பிரானே! (விழுமளவினைக்கத்) தளர்ச்சியடைந்தேன், (ஆகையால்) என்னை விழுவொட்டாது தாங்கிக் கொள்வாயாக. (1)

உத்தரகோசமங்கை யென்னுந் திருப்பதியை ஆட்சியாகக் கொண்டெழுந்தருளிய சிவபெருமானே! கள்ளனகிய நான் உன்னை நீங்கி நிற்க என் நிலைமையைப் பார்த்திருந்தும் என்னை அடிமை கொண்டது எந்தக் காரணத்தைக் கொண்டோ? (யான் அறிந்திலேன். (அதை நோக்கி) மிகப் பெரிதாகிய உன் திருத்தொண்டின்கண் உளையினேன்; அடியேன் நினக்குப் புறம்பானவனல்லேன். (ஆதலால்) அழகிய எழுச்சியினைக்கொண்டபிளவுபட்டு அகலுதலில்லாது நெருங்கியிருக்கிற பெரிய மூலைகளையுடைய மாதரது கொவ்வைப்பழம்போன்ற சிவந்த வாயை விட்டு நீங்கேனையினும் அடியேனைக் கைவிடுகிறாயோ? (2)

விளங்குகின்ற திருவாரூரின்கண், வாசம் பண்ணுவோனே! நிலைபெற்ற கச்சணிந்த ஆபரணமணிந்த கொங்கைகளையுடைய உமாதேவியின் இடப்பாகத்தையுடையவனே! அடியேனைக் காப்பவனே! கருநிறம் பொருந்திய கண்களையுடைய மாதரது ஐம்புல இன்பங்களாகிய ஆற்றங்கரையிலுள்ள மரம் போன்று வேரூன்றி நிற்கின்ற என்னை, விட்டுவிடுகின்றாயோ? (3)

வெள்ளிய ஓர் இளம்பிறைச் சந்திரன் விளங்குகிற நீண்ட சடை முடியையுடைய உத்தரகோசமங்கைக்கு அரசே! உருகித் தெளிந்தாடுகின்ற பொன்னையும் மின்னலையும் ஒத்த காட்சியையுமுடைய செழுமையாகிய சோதீஸ்வரூபனே! விரும்தியடையாநிற்கிற உனது அருளாகிய கையினால் என்னை வலைத்துப் பிடிக்கவும் விலகி இந்த உலக வாழ்க்கையில் மிக்கு விளங்குகின்ற அடியேனைக் கைவிடுகின்றாயோ? (4)

செழிகின்ற தீப்புகு விட்டிலில் சின்மொழி யாரில்பன்னுள்
விழுகின்ற என்னை விடுதி,கண் டாய்,வெறி வாய்அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங் கைக்கரசே!
வழிகின்று நின்அருள் ஆர்அமு(து) ஊட்ட
[மறுத்தனனே! 5

மறுத்தன் யான்உன் அருள்அறி யாமையின்
[என்மணியே!
வெறுச்(து)எனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி
ஒறுத்(து)எனை ஆண்டுகொள், உத்தர கோசமங்
[கைக்கரசே!
பொறுப்பர் அன்றே, பெரியோர் சிறுநாய்கள்தம்
[பொய்யினையே! 6

பொய்யவ னேனைப் பொருளென ஆண்டுஒன்று
[பொத்திக்கொண்ட
மெய்யவ னே! விட் டிடுதி,கண் டாய்விடம் உண்மிடற்று,
மையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே,
செய்யவ னே! சிவ னேசிறி பேன்பவம் தீர்ப்பவனே! 7

தீர்க்கின்ற ஆறுஎன் பிழையைநின் சீர்அருள்
[என்கொல்என்று
வேர்க்கின்ற என்னை விடுதி,கண் டாய்,விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங் கைக்கரசே!
சார்க்கின்ற அஞ்சொடுஅச் சம்வினை யேனை இருதலையே! 8

இருதலைக் கொள்ளியின் உள்ளறும்(பு) ஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதி,கண் டாய்,வியன் மூவுலகுக்கு
ஒருதலை வா! மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
பொருதுஅலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே! 9

மணம் வீசுகின்ற வாயையுடைய வண்டுகள் கிண்டுகின்ற மலர்களை அணிந்த திருமுடியையுடைய உத்தரகோச மங்கைக் கரசே! வழியில் நின்று உன்னருளாகிய அரிய அமிர்தத்தை நீ உண்பிக்கவும், அதனைத் தடுத்தேதனுகி விருத்தியடைகின்ற, நெருப்பினிடத்து வீழ்கிற விட்டில் பறவைபோலச் சில்லென இன்பமூட்டும் மொழிகளைப்பேசும் மங்கையர்பால் பலநாள் வீழ்கின்ற அடியேனைக் கைவிட்டு விடுகின்றீரோ? (5)

திருவுத்தரகோச மங்கைக்கரசனே! சிறு நாயை யொத்த வரது பொய்யொழுக்கங்களைப் பெரியவர் பொறுத்தருள்வ ரல்லவா? நான் அஞ்ஞானத்தால் உன் திருவருளைத் தடுத்தேன். என் மாணிக்கமே! (அதனை முன்னிட்டு), நீ யென்னை வெறுத்துத் திருவருள் புரியாதொழித்து விடுகின்றனையோ? (மற்றென் னெனின்) என் தீவினைகளைக் கெடுத்து என்னை யாண்டு கொள்ள வேண்டும். (6)

நஞ்சை உண்டு கண்டத்தினிடத்தில் கருநிறத்தை அடை யாளமாக வைத்தவனே! நிலைபெற்ற உத்தரகோச மங்கை யென் னும் சிவப்பதிக்குத் தலைவனே! செம்மேனியனே! நடுவு நிலை யுள்ளவனே! மங்களகரனே! சிறியேனது பிறவிநோயை ஒழிப்ப வனே! பொய்யனுகிய என்னை இவனும் ஒரு பொருட்டன்மை யுடையானென்றெண்ணி ஆண்டருளி, என் தீவினையாகிய வென்றனையும் மறைத்துக்கொண்ட உண்மையனே! அடியேற்கு அருள் செய்யாமல் விட்டுவிடுகின்றனையோ? (7)

பகைவர் அஞ்சும் வண்ணம், ஒலிக்கின்ற கிண்கிணி மாலை யணிந்த இடபவாகனத்தை யுடையவனே! திருவுத்தரகோச மங்கையிலிருப்பவனே! பஞ்சேந்திரியங்களும் (அவற்றால் விளை யும்) உன்னைப்பற்றிய பயமும் தீவினையினை இரு புறத்தும் நின்று இழுக்கின்றன. (ஆகையால்) என் குற்றங்களை உன் சிறந்த அருளானது பொறுக்கும் விதம் எப்படியோ வென்று, மனம் புழுங்குகின்ற அடியேனைக் கைவிடுகின்றனையோ? (8)

பெருமை பொருந்திய மூன்று உலகங்களுக்கும் தனித் தலைமைக் கடவுளே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைப்பதி நாதனே! போர்க்குரிய நுனியோடு கூடிய, மூன்று இலை வடிவின தாகிய சூலத்தை வலப்பக்கத்தில் தாங்கி விளங்குகின்றவனே! இருதலைக் கொள்ளியினுள்ளே அகப்பட்ட எறும்பைப்போல உன்னை விட்டுப் பிரிந்த அவிழ்ந்து விரிந்த தலையையுடைய என்னை ஆட்கொள்ளாமல் கைவிடுகின்றனையோ? (9)

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்(று) ஆக்கையைப்
[போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதி,கண் டாய், அளி தோய்விளரி
ஒலிகின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே!
வலிகின்ற திண்சிலை யால்எரித் தாய்,புரம் மாறுபட்டே! 10

மாறுபட்டு அஞ்சுனன்னை வஞ்சிப்ப யான்உன்
[மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதி,கண் டாய்,வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
தீறுபட் டேஒளி காட்டும் பொன்மேனி நெடுந்தகையே! 11

நெடுந்தகை! நீ,என்னை ஆட்கொள்ள யான்ஐம் புலன்கள்
[கொண்டு
விடுந்தகை யேனை விடுதி,கண் டாய்; விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக்கரசே!
கடுந்தகை யேன்உண்ணும் தெண்ணீர் அழுதப்
[பெருங்கடலே! 12

கடலினுள் நாய்நக்கி ஆங்குஉன் கருணைக் கடலின்உள்ளம்
விடல்அரி யேனை விடுதி,கண் டாய்; விட லில்அடியார்
உடல்இல மேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
மடலின்மட் டே! மணி யே! அழு தேனன்
[மதுவெள்ளமே! 13

வெள்ளத்துள் நாவற்றி ஆங்குன் அருள்பெற்றுஇத்
[தலைபதத்தின்றும்
விள்ளக் கிலேனை விடுதி,கண் டாய்; விரும் பும்அடியார்
உள்ளத்துள் ளாய்! மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
கள்ளத்து ளேற்குஅரு ளாய்; கழி யாத களினைக்கே! 14

வண்டினங்கள் ஆராய்ந்து பாடுகின்ற விளரிப்பண்ணினைசின் ஒலியானது இடையறாது நிலைபெற்றிருக்கிற பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவுத்தரகோசமங்கைக் கடவுளே! பகைத்து மூப்புராங்களை வலிமை நிலைத்த திடமான வில்லினால் அழித்தவனே! விளங்குகின்ற உன் திருவடிகளில் அடைக்கலமடையப் பெற்றும், உடலின் பயனைப் பெறுமல் விட்டு இளைக்கின்ற அடியேனைக் கைவிடுகின்றனையோ? (10)

தீவினையையுடையவனாகிய என் மனத்தின்கண் பொருந்துதலுற்று, நிலைபெற்ற திருவுத்தரகோசமங்கை யென்னும் தலத்துக் கதிபனே! திருவெண்ணீற்றால் பூசப்பட்டு ஒளியைச் செய்கின்ற பொன்போலுந் திருமேனியையுடைய பெருங்குணத்தையுடையவனே! ஐம்பொறிகள் பகைத்து என்னை வஞ்சித்தலால், நான் உனது வீரக் கழலணிந்த தாமரை மலரை யொத்த திருவடிக்கு அயலாயினேன். அத்தகைய என்னை விடுகின்றனையோ? (11)

பகைவர் அஞ்சுமாறு கொல்லுந் தன்மையுள்ள வேற்போரில் வல்லவனாகிய உத்தரகோச மங்கைப்பதியுள் வீற்றிருந்தருள்பவனே! கொடிய குணத்தையுடையவனாகிய நான் பருகுதற்குரிய தெளிந்த குணத்தையுடைய பெரிய அமிர்தசாகரமே! பெருங்குணத்தையுடையோய்! நீ என்னை அடிமை கொண்டருளவும் ஐம்புலவாசையைக் கொண்டு (அதனால் உன்னை விடும்) இயற்கையையுடையேனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? (12)

உன் திருவடியை விடுதலில்லாத மெய்யடியாரது உள்ளமாகிய வீட்டின்கண்ணே நிலைபெற்றிருக்கின்ற திருவுத்தரகோச மங்கையில் வீற்றிருக்கும் பரமபதியே! பூவிதழ்களின்றி வழியுந் தேனே! மாணிக்கமே! அமிர்தமே! என் மதுப்பெருக்கே! கடலில் நாய் நக்கினதுபோல, உன் அருட்கடலில் தோய்ந்த மனம் விடுதலரிதாகிய என்னைக் கைவிடுகின்றனையோ?

நீர்ப் பெருக்கின்கண்ணிருந்துகொண்டு நாய் அதைப் பருகும் வகை யறியாது நா வரட்சி யடைந்தாற்போல, உன் திருவருள் பெற்றிருந்தும் துன்பத்தினின்றும் இப்பொழுதும் நீங்கும் வகையின்னதென்றறியாத என்னைக் கைவிடுகின்றனையோ? விரும்புகின்ற அடியாருடைய மனத்திலுள்ளே நிலைபெற்றிருக்கின்ற திருவுத்தரகோச மங்கைப் பதியானே! வஞ்சகத்தையுடையேனாகிய எனக்கு ஒருக்காலும் கண்டறியாத களிப்பை யருளக்கடவாய். ()

கனிவந்த சிந்தையொடு உன்கழல் கண்டுடம் கலந்தருள
வெளிவந்த திலேனை விடுதி,கண் டாய்,மெய்ப்
[சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங் கைக்கரசே!
எளிவந்த எந்தை பிரான்!எனை ஆளுடை என்னப்பனே! 15

என்னை அப் பா,அஞ்சல் என்பவர் இன்மி னின்று
[எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப் பாய்விட் டிடுதி,கண் டாய்உவ மிக்கின்மெய்யே;
உன்னை ஒப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
அன்னை ஒப் பாய்,எனக்கு அத்தன் ஒப் பாய்,என்
[அரும்பொருளே! 16

பொருளே! தமியேன் புகலிட மே! நின் புகழ்இகழ்வார்
வெருளே! எனைவிட் டிடுதி,கண் டாய்; மெய்ம்மை யார்
[விழுங்கும்
அருளே! அணிபொழில் உத்தர கோசமங் கைக்கரசே!
இருளே, வெளியே, இகபரம் ஆகி இருந்தவனே! 17

இருந்(து)என்னை ஆண்டுகொள், விற்றுக்கொள் ஒற்றிவை,
[என்னின் அல்லால்
விருந்தினை னேனை விடுதி,கண் டாய்; மிக்க நஞ்சு அமுதா
அருந்தின னே! மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
மருந்தின னே,பிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே. 18

மடங்கள் வல்வினைக் காட்டைநின் மன்அருள
[தீக்கொளுவும்
விடங்க! என் தன்னை விடுதி,கண் டாய்,என் பிறவியைவேர்
ஒடுங்களைந்து ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே!
கொடுங்கரிக் குன்றுஉரித்து அஞ்சுவித் தாய்வஞ்சிக்
[கொம்பினையே! 19

உண்மையான ஒளிகட்கெல்லாம் மேலான ஒளியைத் தந்த அழகிய வீரகண்டை யணிந்த திருவடியையுடைய திருவுத்தர கோச மங்கைப்பதி நாதனே! எனக்கெளிதிற் கிடைத்த எமது தந்தையாகிய உதவியாளனே! என்னை அடிமையாகக் கொண்ட என்னப்பனே! மகிழ்வோடு கூடிய என் மனத்தோடு உன் திருவடி நிழலிற் கலந்தருளக் கண்டும் வெளிப்படாத என்னை விடுகின்றனையோ? (15)

உவமித்துச் சொல்லுமிடத்து உன்னை நீயே நிகர்ப்பாய்; இஃது உண்மையே. நிலைபெற்ற திருவுத்தாகோச மங்கைப்பதி நாதனே! எனக்குத் தாய்க்குச் சமானமானவனே! தந்தைக்குச சமானமானவனே! எனக்குக் கிடைத்தற்கரிய பொருளே! அடியேனை, 'அப்பா பயப்படாதே!' என்று சொல்வாரில்லாமல் நின்று இளைத்துத் திரிந்தேன். மின்னலை யொத்திருப்பவனே! கைவிடுகின்றனையோ? (விடாதருள் புரிவாய்). (16)

உண்மையன்புள்ள அடியார்களாலுண்ணப்பட்ட அருட் கனியே! அழகிய சோலை சூழ்ந்த திருவுத்தரகோச மங்கைப்பதி நாதனே! அந்தகாரமே! ஒளியே! இம்மை மறுமைகளின் பயனு யிருந்தவனே! உண்மைப் பொருளானவனே! தனியனேனுக்கு அடைக்கல ஸ்தானமே! உனது கீர்த்தியை நிந்திப்பவர்களுக்கு அச்சத்துக் கேதுவாயிருப்பவனே! அடியேனைக் கைவிடு கின்றனையோ? (17)

கொடுமை மிகுந்த விடத்தை அமுதாகப் புசித்தவனே! நிலைபெற்ற திருவுத்தாகோச மங்கைப்பதி நாதனே! பிறவி யாகிய நோயிலகப்பட்டு முடங்கிக் கிடந்தவர்கட்கு மருந்து வடிவா யிருப்பவனே! என் எதிரில் எழுந்தருளியிருந்து என்னையாட் கொள்வாய். அல்லது விற்றுக்கொள்வாய்; அடைமானம் வைப் பாய் என்று இவ்வாறு சொல்லுவதன்றி, (வேறு யாதுஞ்சொல்லத் தெரிந்தேனில்லை.) (உன் அருளுக்கு) அந்நியனை என்னை, (எவ்விதத்தேனும் ஆட்கொள்ளாமல்) கைவிடுகின்றனையோ? (18)

உத்தர கோசமங்கைப்பதி நாதனே! கொடுமை நிறைந்த மலைபோன்ற யானையை உரித்து வஞ்சிக் கொடிபோல்பவளாகிய உமாதேவியாரை அஞ்சும்படி செய்தவனே! எனது வலிய வினை யாகிய வனத்தை அழியும்படி, உனது நிலைபெற்ற திருவருளென் கிற நெருப்பினால் எரிக்கின்ற கட்டழகனே! என் பிறப்பை வேருடன் பறித்து என்னை ஆண்டு கொள்வாயாக. (19)

கொம்பர்இல் லாக்கொடி போல்அல மந்தனன், கோமளமே!
வெம்புகின் றேனை விடுதி,கண் டாய்; விண்ணவர்
[ருண்ணுகில் நா
உம்பர்உள் ளாய்; மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே!
அம்பர மே,நில னே,அனல் காலொடுஅப்(பு) ஆனவனே!

ஆனைவெம் போரில் குறுந்தூறு எனப்புல னில்அலப்புண்
டேனைஎந் தாய்,விட் டிடுதி,கண் டாய்;வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை யும்அமு தத்தையும்ஒத்து
ஊனையும் என்பினை யும்உருக் காநின்ற ஒண்மையனே! 21

ஒண்மைய னே! திரு நீற்றைஉத் தூளித்து ஒளிமினிரும்
வெண்மைய னே! விட் டிடுதி,கண் டாய்மெய் அடியவர்கட்கு
அண்மைய னே! என்றும் சேயாய், பிறர்க்குஅறி
[கற்குஅரிதாம்
பெண்மைய னே! தொன்மை ஆண்மையனே அலிப்
[பெற்றியனே! 22

பெற்றது கொண்டு, பிழையே பெருக்கிச் சுருக்கும்அன்பின்
வெற்றடி யேனை விடுதி,கண் டாய்; விடி லோ,கெடுவேன்;
மற்றுஅடி யேன்தன்னைத் தாங்குநர் இல்லை,என் வாழ்முதலே!
உற்றுஅடி யேன்மிகத் தேறினின் றேன்,எனக்கு
[உள்ளவனே! 23

உள்ளன வேநிற்க இல்லன செய்யும்மை யல்துழனி
வெள்ளன் அலேனை விடுதி,கண் டாய்; வியன்
[மாத்தடக்கைப்
பொள்ளல் வேழத் துரியாய்; புலன்நின்கட் போதல்ஒட்டா
மெய்வென வேமொய்க்கும் நெய்க்குடந் தன்னை
[எறும்பெனவே. 24

தேவர்களும் அடையப்பெறுத பெருவெளியில் இருப்பவனே! நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கைப்பதி நாதனே! ஆகாயமே, பூமியே, நெருப்பே, காற்றே என்பவற்றோடு நீருமா யிருப்பவனே! கொழு கொம்பில்லாத கொடியைப் போலச் சுழன்றேன்; கோமள ரூபனே! இவ்வாறு தவிக்கின்ற என்னைக் கை விடுகின்றனையோ? (20)

தீவினையையுடையவனாகிய எனது மனத்தின்கண் தேனினையும், பாலினையும் கருப்பஞ்சாற்றையும், அமுதத்தினையும், நிகர்த்து (இனிமையா யிருந்து) உடம்பையும் (உடம்புக்குள்ளிருக்கிற) எலும்பையும் உருகச் செய்கின்ற அழகுடையவனே! யானை யினது வெவ்விய சண்டையில் அகப்பட்ட சிறு செடிகள் அலை வது போல ஐம்புலன்களால் அலைக்கப்பட்ட என்னை, எந்தையே! கைவிடுகின்றனையோ? (21)

அழகுடையானே! திருவெண்ணீற்றைப் பூசி (அதனல்) ஒளிவிளங்காநின்ற வெள்ளை நிறத்தையுடையவனே! மெய்யடி யார்க்குச் சமீபமாயிருப்பவனே! பிறருக்கு எக்காலத்தும் தூரமா யிருப்பவனே! அறிதற்கரிதாகிய பெண்மையை யுடையானே! பழமையாகிய ஆண் தன்மையுடையானே! அலித்தன்மையுடை யானே! கைவிடுகின்றனையோ? (22)

எனது வாழ்வுக்கு முதற்பொருளே! உன்னை அடைந்து, அடியேன் மிகவுந் தெளிந்து நின்றேன். எனக்குள்ளிருப்பவனே! அருமையாகப் பெற்ற இவ்வுடம்பைக்கொண்டு தவறுகளையே விருத்தியடைவித்துக் குறைந்த அன்போடு கூடினமையால், வெறுமையாகிய அடியேனைக் கைவிடுகின்றனையோ? (அப்படி) கைவிட்டாலோ, அழிவேன்; அடியேனைத் தாங்குவோர் வேறுரு வருமிலர். (23)

மிகவும் பெரிய நீண்ட துதிக்கையின்கண் தாளையை உடைய அழகிய யானையின் தோலை யுடையவனே! ஐம்புலங் களும் உன்னிடத்துச் சென்றணுகவொட்டாதனவாகி நெய்க் குடத்தை எறும்பு மொய்ப்பதுபோல என்னை மெல்லென மொய்த் துக்கொள்ளாநின்றன. (ஆதலால்) உண்மையாயினவை இருக்கப் பொய்யாயினவற்றையே செய்கிற மயக்கத்தையும், வெற்ற வாரத்தையும் உடைய கள்வனைக் கைவிடுகின்றனையோ? (24)

எறும்பிடை நாங்கூழ் எனப்புல னல்அரிப் புண்டுஅலந்த
வெறுந்தமி யேனை விடுதி,கண் டாய்; வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேஉணர் வுற்றவர் உம்பர்உம்பர்
பெறும்பத மே! அடி யார்பெற ராத பெருமையனே. 25

பெருநீர் அறச்சிறு மீன்துவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதி,கண் டாய்; வியன்
[கங்கைபொங்கி,
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொழி யுஞ்சடை வானக் கொழுமணியே! 26

கொழுமணி ஏர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
[சென்றுகுன்றி
விழும்அடி யேனை விடுதி,கண்டாய் மெய்ம்முழுதுங்கம்பித்து
அழும்அடி யாரிடை ஆர்த்துவைத்து ஆட்கொண்டு
[அருளினன்னைக்
கழுமணி யே! இன்னும் காட்டுகண் டாய்,நின்
[புலன்கழலே. 27

புலன்கள் திகைப்பிக்க யாணுந் திகைத்திங்கொர்
[பொய்நெறிக்கே
விலங்கு கின்றேனை விடுதி,கண் டாய்; விண்ணும்
[மண்ணும்எல்லாம்
கலங்கமுந் நீர்நஞ்சு அமுதுசெய் தாய்; கருணைகரனே!
துலங்குகின் றேன்அடி யேன்,உடை யாய்என்
[தொழுகுலமே! 28

குலம்களைந் தாய்,களைந் தாய்,என்னைக் குற்றம்
[கொற்றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்,விட் டிடுதி,கண் டாய்: பொன்னின்
[மின்னுகொன்றை
அலங்கல்அந் தாமரை மேனிஅப் பா! ஒப்பி லாதவனே!
மலங்கள்ஐந் தால்சுழல் வன்தயிரில்பொரு மத்துறவே. 29

கொடிய யமன் ஒடுங்கும்படி அவன்மேல் வந்த மணம் பொருந்திய தாமரை மலர்களை யொத்த உன் திருவடிகளாகிய அவற்றையே அறிந்தவர்களாகித் தேவர் பதவிகளுக்கும் மேலாகச் சொல்லப்பெற்ற மோக்ஷ பதத்தை அடைந்த உன் அடியவரால் விட்டு நீங்காத பெருமையை உடையவனே! பல எறும்புகட் கிடையே அகப்பட்ட நாக்குப்பூச்சி அரிப்புண்டு வருந்திறற் போலப் புலன்களினிடையே யகப்பட்டு அரிப்புண்டு வருந்தின பரிசயற்ற என்னைக் கைவிடுகின்றனையோ? (25)

பெரிய கங்காநதியினது பொங்கி வருகின்ற நீருள்ள மடுவி னிடத்துத் தும்மாறுதலையுடைய சிறிய புனையின் வடிவம்போல வெண்ணிறமுள்ள தம்மைப் பொருந்திய பிறைச் சந்திரன் தவழ் கின்ற சடைமுடியையுடைய ஞானவானிடத்து விளங்குகின்ற செழிய மாணிக்கமே! மிகுந்த நீரானது வற்றிப்போக (அந்நீரி லிருந்த) சிறுமீன்கள் துடித்தாற்போல உன்னைப் பிரிந்தமையால் அஞ்சுமியற்கையுள்ள என்னைக் கை விடுகின்றனையோ? (26)

கழுவிய மாணிக்கமே! செழுமையாகிய முத்தையொத்த அழகிய பற்களையுடைய மாதரது முலையாகிய மலைகளின்மேல் போயறிவழிந்து விழுகின்ற அடியனேனைக கைவிடுகின்றனையோ? உடல் முழுதும் நடுங்கி (ஆநந்தக் கண்ணீர்விட்டு) அழுகின்ற அடியார் நடுவில், என்னைச் சேர்த்து வைத்து அடிமை கொண் டருளி உனது (அடித்தார்க்கு) அறிவை உதவுகின்ற திருவடியை இன்னமொருகால் காட்டி தந்தருளவேண்டும். (27)

விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாருமாகிய எல்லாரும் நடுக்கங்கண்டு, (அவர்களுக்கிரங்கி) கடலில் பிறந்த நஞ்சை அமுது செய்தவனே! அருளுக்கிருப்பிடமானவனே! அடியேனும் பிறப்பு முதலியவைகளுக்கஞ்சி நடுங்காநின்றேன்; உடையவனே! என் வேதியனே! ஐம்புலன்கள் திகைக்கச்செய்தால், நானுந் திகைத்து இவ்விடத்தில் ஒப்பற்ற பொய் வழியிலே (உன் மெய்ந்நெறியை விட்டு) விலகிச்செல்லாநின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? ()

பொன்போல மின்னுகின்ற நான்மறைமலர் மாலையை அணிந்த அழகிய செந்தாமரைமலர்போன்ற திருமேனியையுடைய ஐயனே! ஒப்பில்லாதவனே! உடைகின்ற மத்துப்பொருந்தின வளவில் தயிர் சுழல்வதுபோலப் பஞ்ச மலங்களால் சுழலா நின்றேன். (இயல்பாகவே) பாசக் கூட்டத்தினின்றும் நீங்கி நின்றவனே! என்னைக் குற்றங் கழந்தாண்டவனே! வெற்றி வில் லாகிய மேருமலையையுடைய எந்தையே! கைவிடுகின்றனையோ?

மத்துறு தண்தயி ரில்புலன் தீக்சது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதி,கண் டாய்ப்;வெண் தலைமிலைச்சிக்,
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்துஅணி சச்சையனே! 30

சச்சைய னே!மிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னே!விட் டிடுதி,கண் டாய்ப்வெளி யாய்,கியாய்,
பச்சைய னே,செய்ய மேனிய னே,ஒண் படஅரவக்
கச்சைய னே!கடந் தாய்:தடந் தாள அடற்கரியே! 31

அடற்கரி போல்ஐம் புலன்களுக்கு அஞ்சி அழிந்தனன்னை
விடற்குஅரி யாய்;விட் டிடுதி, கண் டாய்விழுத்
[தொண்டர்க்கல்லால்
தொடற்குஅரி யாய்;சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்
கடற்குஅரி தாய்எழு நஞ்சுஅமு தாக்கும்
[கறைக்கண்டனே! 32

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதி,கண் டாய்;நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போல் பணித்துப் பணிசெயக்
[கூவித்தென்னைக்
கொண்டு என்னைத் தாய்!களை யாய்,களை
[யாயகுதுகுதுப்பே! 33

குதுகுதுப்பு இன்றிநின் றுஎன் குறிப்பேசெய்து,
[நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்!விரை ஆர்ந்துஇனிய
மதுமதுப் போன்றுஎன்னை வாழைப் பழத்தின
[மனங்கனிவித்து
எதிர்வதுஎப் போது?பயில்விக் கயிலைப் பரம்பரனே! 34

வெள்ளிய தலையோடுகளையணிந்து கொத்துகளாகப் பொருந்திய கொன்றைமலர் மாலையைச் சூடி, குடல்களாகிய நெடிய மாலையைச்சுற்றிப் பரவின திருவெண்ணீற்றோடு பொருந்த செஞ்சந்தனத்தை அணிந்த எல்லாப் பொருள்களுள்ளும் சாரமாயிருப்பவனே! ஐம்புலன்களாகிய நெருப்புப்பற்ற மத்துப் பொருந்திய குளிர்ந்த தயிரைப்போலக் கலங்கி, (பாபத்துக்கு) விதையாயிருக்கிற என்னைக் கைவிடுகின்றனையோ? (30)

எல்லாப் பொருள்களுள்ளும் சாரமாயிருப்பவனே! மிக்க குளிர்சுனையுள்ள நீரும், ஆகாயமும், காற்றும், பூமியும், தீயும் ஆகிய பஞ்சபூத வடிவாய் நிற்கின்ற வித்தையை உடையவனே! வெள்ளியனே! காியானே! பசியனே! சிவந்த திருமேனியையுடையவனே! அழகிய படத்தையுடைய கரும் பாம்பாகிய கச்சையையுடையவனே! பெரிய அடிகளையுடைய வலி அமைந்த யானையை வென்றவனே! என்னைக் கைவிடுகின்றனையோ? (31)

மேன்மையாகிய உன்னடியவர்க்கேயல்லாமல் (பிறரால்) அணுகுதற்காியவனே! ஒளிவிடுகின்ற பெரிய மாணிக்கமே! சுடுகின்ற வடவாமுகாக்கினியுஞ் சுழலாநிற்கக் கடலின்கண் திருமால் நான்முகன் தேவர்களும் இனி பிழைப்பதாிதென்றஞ்சும்படி தோன்றிய நஞ்சை அமுதாக்கிக்கொண்டதனால் உளதாகிய நீலகண்டனே! வலிமிகுந்த யானையையொத்த ஐம்புலன்களுக்கும் பயந்து நசித்த என்னை விடுதற்குத் திருவுளமில்லாதவனே! கைவிடுகின்றனையோ? (32)

கண்டனவெல்லாம் செய்து (உன்) அருளாகிய தேனை உண்டு களிப்படைந்து மதித்துத் திாியாநின்ற என்னைக் கைவிடப் போகிறாய். மணம் பொருந்திய தாமரை மலர்போன்ற உனது திருவடியை முன்னே அருள் செய்தாற்போலக் கொடுத்தருளி உன் திருத்தொண்டு செய்ய அழைத்து என்னை உனக்கே ஆள் ஆக்கிக்கொண்டு, என் தந்தையே! குற்றங்களைச் செய்தலால் உண்டாகிய மிகு மகிழ்ச்சியை வேரறச செய்தருள்! (33)

நெருங்கிய மலர்ச் சோலைகளுள்ள திருக்கைலையில் வாழ்கின்ற பழையோனே! உன் திருவுளம் மகிழும்படியான நடையில்லாமல், தீ நெறிக்கண் நின்று என் குறிப்பின்படியே நடந்து, உன் திருவுள மகிழ்ச்சிக்கு ஆசைப்படுகிற என்னைக் கைவிடுகின்றனையோ? மனம் நிறைந்து இனிதாயிருக்கிற மிகுந்த தேன் போன்று வாழைப்பழத்தைப்போல அடியேனை மனங் குழையப் பண்ணி நீ பிரத்தியக்கமாவது எக்காலம்? (34)

பரம்பர னே! நின் பழஅடி யாரொடும் என்படிறு
விருப்புஅர னே! விட் டிடுதி, கண் டாய்; மெண்
[முயற்கணையின்,
அருப்புஅர நேர்வைத்து அணிந்தாய்! பிறவிஐ வாய்அரவம்
பொருப்டெரு மான்! வினை யேன்மனம் அஞ்சிப்
[பொதும்புறவே! 35

பொதும்புறு தீப்போல் புகைந்துளரி யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதி, கண் டாய்; விரை ஆர்நறவம்
சதும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந்தம் முரல்வண்டு
அதுட்புடம் கொழுந்தேன் அவிர்சடை வானத்து
அடல்அரை சே! 36

அரைசே! அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் என்
[னின்அல்லால்,
விரைசேர் முடியாய்! விடுதி, கண் டாய்; வெண்
[நகைக் கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்கா!
வரைசேர்ந்து அடர்ந்தென்ன, வல்வினை தான்வந்து
[அடர்வனதே. 37

அடர்புலனல்நிற்பிரிந்துஅஞ்சி, அருளொசால்நல்லார் அவர்தம்
விடர்விட லேனை விடுதி, கண் டாய்; விரிந் தேனளியும்
சுடர்அனை யாய்! சுடு காட்டுஅர சே! தொழும்
[பர்க்கு அழுதே!
தொடர்வுஅரி யாய்; தமி யேன்தனி நீக்கும் தனித்துணையே!
தனித்துணை நீநிற்க யான்தருக் கித், தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதி, கண் டாய்; வினை யேனுடைய
மனத்துணை யே! என்தன் வாழ்முத லே! எனக்கு
[எய்ப்பில் வைப்பே!
தினைத்துணை யேனும் பொறேன், துயர் ஆக்கையின்
[திண்வலியே. 39

மெல்லிய முயல் போன்ற களங்கத்தினையுடைய பிறைக் கொழுந்தையும் பாம்பையும் சமமாகவைத்து அணிந்தவனே! எம்பிரானே! தீவினையுடைய நான், மனம் நடுங்கி, புகலிடம் அடையும்படிப் பிறப்பாகிய ஐந்தலை நாகம் சீறுகின்றது. பழையோனே! உன் பழவடியார்களுடன் என் வஞ்ச ஒழுக்கத்தையும் விரும்புகின்ற சங்கார கர்த்தனே! என்னைக் கைவிடுகின்றனையோ? (35)

மணந்தங்கிய தேன் வழிகின்ற மந்தாரமென்னும் மரத்தில் மந்த இசையைப் பாடி அழகாக ஒலிக்கின்ற சுரும்பினங்கள் படிதற்குரிய, செழுந்தேனெங் விளங்குகின்ற சடாபாரத்தையுடைய பரமாகாயமாகிய உலகத்திற்கு வலிய அரசனே! மரச் செறிவிற் பற்றிய நெருப்பைப் போலப் புகைவிட்டெரிகின்ற அந்தப் புலன்களாகிய நெருப்புக் கதுவப்பற்றுதலால் சுடப்படுகின்ற என்னைக் கைவிடப்போகிறாய்! (36)

வெண்மையாகிய பல் வரிசையும் கருங்கண்ணுகிய கடலும் பொருந்திய உமாதேவி தழுவிய அழகிய பொன்போன்ற திருமேனியழகையுடைய சர்ப்பாபரணனே! வலிய வினைகள் இரண்டு மலைகளொன்றாகக்கூடி நெருக்குதல்போல வந்து என்னை நெருக்குகின்றன. (ஆகையால்) அரசனே! அறியாமையையுடைய சிறியேனது குற்றத்தின்பொருட்டு நீ அஞ்சலென்று சொன்னலல்லது (உய்யேன்) மணந்தங்கிய முடியையுடையவனே! கைவிடப்போகிறாய்! (37)

விரிந்தெரியாநின்ற நெருப்பையொத்தவனே! சுடுகாட்டில் ஆடுகின்ற அரசனே! தொண்டர்க்கமுதமே! தொடர்தற்கரியவனே! தமியேனது தனிமையை நீக்குகின்ற ஒப்பற்ற துணையே! வருந்துகின்ற புலன்களால் உன்னைப் பிரிந்து பயந்து இன்சொற் கூயுடைய மாதர்களாகிய அவர்களுடைய காட்டைவிட்டு நீங்குமாற்றலில்லாத என்னைக் கைவிடப்போகிறாய்! (38)

வினையேனது உயிர்த்துணையே! என் வாழ்வுக்கு முதற் காரணமே! எனக்கு மெலிவு காலத்தில் களஞ்சியப் பொருளாயிருப்பவனே! துன்பம் தரும் உடம்பென்கிற திண்ணிய வலைப் பிணிப்பை, இனி நினையளவாயினும் பொறுக்கமாட்டேன்! ஒப்பற்ற துணையாகிய நீ இருக்க நான் கர்வித்துத் தலையிலால் நடந்த வினையையே துணையாகக்கொண்டிருக்கிற என்னைக் கைவிடப்போகிறாய்! (39)

வலைத்தலை மான்அன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மீலைத்தலைந்தேதினை விடுதி,கண்டாய்,வெண் மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்! கருணைகர னே! கயி லாயம்என்னும்
மலைத்தலை வா! மலை யாள்மண வாள! என் வாழ்முதலே! 40

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கை வெந்நீரிற் கடிப்பமுழ்கி
வெதலைச்செய் வேனை விடுதி,கண் டாய்விடக்கு
[ளுன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்,சிவ னே! முறை
[யோ? முறையோ?
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் கா! என் சிவகதியே! 41

கதிஅடி யேற்குஉன் கழல்தந் தருளவும் ஊன்சுழியா
வதிஅடி யேனை விடுதி,கண் டாய்; வெண் தலைமுழையில்
பதிஉடை வாள்அரப் பார்த்துஇறை பைத்துச்
[சுருங்கஅஞ்சி
மதிஇடு நீரிற் குளித்துஒளிக் குஞ்சடை மன்னவனே! 42

டன்னவ னே! ஒன்றும் ஆறுஅறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
டன்னவ னே! விட் டிடுதி,கண் டாய்;மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னே! சொற் சுழிந்தவ னே! கழி யாத்தொழுமவர்
முன்னவ னே! பின்னும் ஆனவ னே!இம் முழுஞெகயுமே! 43

முழுதுகயில் வேற்கண் ணியர்என்னும் மூரித் தழல்முழுகும்
வெழுது அனையேனை விடுதி,கண் டாய்;நின் வெறிமலர்த்தாள்
தொழுது செல்வான்நற் றொழும்பரில் கூட்டிடு
[சோத்து,எம்பிரான்!
பழுதுசெய் வேனை விடேல்,உடை யாய்! உன்னைப்
[பாடுவனே. 44

பாடிற்றி லேன்,பணி யேன்,மணி நீஒளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதி,கண் டாய்;வியந் தாங்(கு)அலறித்

வெள்ளிய திங்களுடைய ஒரு கலையைத் தலையில் அணிந்த வனே! அருளுக்கிருப்பிடமான கயிலாயமென்கிற மலைக்கிறை வனே! பார்வதிதேவிக்கு மணாளனே! என் வாழ்வுக்குக் காரண மானவனே! வலையிலகப்பட்ட மானின் பார்வைபோன்ற மருண்ட பார்வையுடைய மாதரது கண்களாகிய வலையில் சிக்கி, (அவர்களோடு) கூடி அலைந்த என்னைக் கைவிடப்போகிறாய்! (40)

நாற்றத்தையுடைய ஊன் பொதிந்த பல நோய்கட்கிடமாகிய உடம்பைச் சகியேன் சிவபெருமானே! உனக்கே அபயம்; அபயம். தேமல் படர்ந்த அணிகலன் அணிந்த கொங்கைகளை யுடைய உமாதேவிக்குப் பாகமளித்தவனே! எனது நற்கதியே! ஆசை என்கிற வெய்யநீரினிடத்துச் செவ்வாயையுடைய மாதர்கள் என்கிற முதலைகள் கடிக்க முழுகி, நடுங்குகின்ற என்னைக் கை விடப்போகிறாய்! (41)

வெண்டலையினது பள்ளத்தில் பதிந்திருத்தலையுடைய ஒளி பொருந்திய பாம்பானது சற்றே நோகுகி, படம் விரித்து சுருக்கிக் கொள்ள (அதைக் கண்ட) சந்திரன் அஞ்சிப் பெரிய நீரினிடத்து முழுகி மறைந்துகொள்கின்ற சடாமுடியையுடைய இறைவனே! அடியேனுக்கு உன் திருவடியின்பேற்றைக் கொடுத்தருளவும், உடம்பு நீங்காத ஊனையுடைய அடியேனைக் கைவிடப்போகிறாய்!

மேலாகிய வேதமென்கிற உண்மை நூலைத் திருவாய்மலர்ந் தருளினவனே! சொல்லைக் கடந்தவனே! நீங்காத தொண்டர் களுக்கு எதிர்நிற்பவனே! மேலும் இவ்வுலகிலுள்ள சராசரப் பொருள்களாயும் நிற்பவனே! இறைவனே! உன்னையடையும் நெறியை அறியாத சிறியனேனது மனத்தின்கண் விளங்கு பவனே! கைவிடப்போகிறாய்! (43)

முழுமையும் கூரிய வேல்போலுங் கண்களையுடைய மாத ரென்கிற பெருந்தீயில் உருகி ஒழியும் வெண்ணெயை நிகர்த்த என்னைக் கைவிடப்போகிறாய்! உன் மணந்தங்கிய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி நடப்பதற்கு நல்ல தொண்ட ரோடு சேர்த்திடுவாய்! எமது பெருமானே! உனக்கு வணக்கம். தவறு செய்பவனாகிய என்னைக் கைவிடாதே! உடையவனே! உன்னைப் புகழ்ந்து பாடுவேன்! (44)

அவ்விடத்து வியந்தலறி நின்று தேடுதல் செய்திலேன்; 'சிவன் எவ்விடத்திலுள்ளான்? யாவர் பார்த்தனர்?' என்று பல விடத்தும் ஓடாநின்றிலேன்; பூமியில் விழுந்து மனமுருகிலேன்; நின்று வருந்திலேன்; பாடுகின்றிலேன்; வணங்கேன்; (அவ்வா றாகவும்) என்னிதயத்தில் மாணிக்கம்போன்று ஒளிசெய்த உன்னை

தேடற்றி லேன், சிவன் எவ்விடத் தான், எவர்
[கண்டனர்என் று
ஓடற்றி லேன்; கிடந்(து) உள்ளுரு கேன்நின்(று)
[உழைத்தனனே. 45

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் துழையின்ஒப்ப
விழைதரு வேனை விடுதிகண் டாய்; விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன், புணமிலி, மானிடன், தேய்மதியன்,
பழைதரு மாபரன், என்றுஎன்று அறைவன்
[பழிப்பிலனே! 46

பழிப்பில் நின்பாதப் பழந்தொழும்(பு) எய்தி விழப்பழித்து,
விழித்திருந் தேனை விடுதி, கண் டாய்; வெண் மணிப்பணிலம்,
கொழித்து மந்தார மந்தாகினி நுந்தும்பற் கப்பெருமை!
தழைச்சிறை நீரில் பிறைக்கலம் சேர்தரு தாரவனே! 47

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழல்அரப்பூண்
வீர! என் தன்னை விடுதி, கண் டாய்; விடில் என்னைமிக்கார்
ஆர்அடி யான்என்னின் உத்தர கோசமங் கைக்(கு) அரசின்
சீர்அடி யார்அடி யான்என் றுநின்னைச் சிரிப்பிப்பனே! 48

சிரிப்பிப்பன், சிறும் பிழைப்பைத் தொழும்பையும்
[ஈசற்(கு)என் றுவிரிப்பிப்பன், என்னை விடுதி, கண் டாய்; விடின், வெங்கரியின்
உரிப்பிச்சன், தோல்உடைப் பிச்சன், நஞ்சு ஊண்பிச்சன்,
[உளர்ச்சுடுகாட்(டு)
எரிப்பிச்சன், என்னையும் ஆளுடைப் பிச்சன், என்று
[ஏசுவனே! 49

எசினும், யான்உன்னை ஏத்தினும், என்பிழைக்கேகுழைந்து
வேசறு வேனை விடுதி, கண் டாய்; செம் பவளவெற்பின்
தேகுடை யாய்! என்னை ஆளுடை யாய்! சிற் றுயிர்க்கிரங்கிக்,
காய்சின ஆலம்உண்டாய்! அழு தண்ணைக் கடையவனே! 50

திருச்சிற்றம்பலம்.

அடையும்பொருட்டுப் பசுந்தசைக் குரம்பையாகிய உடம்பை விட்டு நீங்காத என்னைக் கைவிடப்போகிறாய்! (45)

மான் பார்வைபோன்ற பார்வையுள்ள மாதரது கொங்கைகளைப் பலாப்பழத்தின்கண் வந்து மொய்க்கின்ற ஈக்களைப்போல விரும்புகின்ற என்னைக் கைவிடப்போகிறாய்! கைவிதவையாயின் கடலில் பிறந்த நஞ்சையுண்ட நீலகண்டன் என்றும், குணம் இல்லாதவன் என்றும், மானிடனென்றும், தெய்ந்த அறிவுடையா னென்றும், பழமையைக்கொண்ட பெரிய பரதேசி என்றும் எக்காலத்தும் உன் பழிகளையே எடுத்துச் சொல்வேன். (46)

மூத்துக்களையுடைய சங்குகளை வீசித் தெய்வத்தன்மை பொருந்திய கங்கை ஆறுனது மந்தார மலர்களை ஒதுக்குகின்ற அழகின் மிகுதியைக்காண்டு கட்டப்பட்ட நீரில் பிறையானது தோணிபோற் பொருந்திய மதிமாலையை அணிந்தவனே! நிந்தையற்ற உன் திருவடியின் பழமையாகிய தொண்டு பொருந்தி வீழ்தலால், பழித்துவிட்டு வெருட்சியோடு பார்த்திருந்த என்னைக் கைவிடப்போகிறாய்! (47)

விண் மீன் மாலைபோலச் சிரசில் சிரமாலையையும், நஞ்சுத் தீயையுடைய பாம்பாகிய அணிகலன்களையுமணிந்த வீரனே! என்னைக் கைவிடப்போகிறாய்! கைவிடின், என்னை நோக்கிப் பெரியோர் 'நீ யாவருடைய அடியவன்?' என்று கேட்டால், 'உத்தரகோசமங்கைக்கிறைவனது சிறப்புப்பொருந்திய அடியார் களுக்கு அடியவன்!' என்று சொல்லி உன்னை அவர்கள் எள்ளி நகையாடச் செய்வேன்! (48)

வெறுத்தற்குரிய இவ்வாழ்வைச் சிரிப்பிப்பேன்; என் தொண்டையும் ஈசனுக்கே என்று பரவச்செய்விப்பேன்; என்னைக் கைவிடப்போகிறாய்! கைவிடின் 'வெவ்விய யானைத்தோலையுடுத்த பித்தன்; புலித்தோல் முதலிய தோல்களை ஆடையாகவுடைய பித்தன்; பாற்கடலிற்பிறந்த நஞ்சையுணவாக்கிக்கொண்டபித்தன்; ஊர்ச் சுடுகாட்டக்கினியோடு பழகுகின்ற பித்தன்; அடியேனையும் அடிமையாக்கி ஆண்டருளிய பித்தன்' என்று வைவேன். (49)

சிவந்த பவளமலைபோல ஒளியுள்ளவனே! என்னை அடிமை யாகக் கொண்டவனே! சிறிய உயிர்களுக்கு இரங்கியருளி (பாற் கடலைக்) கடைந்த அத்திருமால் அமிர்தத்தை யுண்ணைச் சுடுகின்ற கோபத்தோடு கூடிய நஞ்சை யுண்டவனே! நான் உன்னை வைதாலும் துதித்தாலும் என் குற்றத்தின்பொருட்டே மனமுருகி மெலிவேனைக் கைவிடப்போகிறாய்! (50)

7. திருவெம்பாவை

(திருவண்ணுமலையில் அருளியது—சத்தியை வியந்தது)

வொடனாயால் வந்து இயற்றாலினைக் கோச்சகக் கலிப்பா.

திருசிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அருப்பெரும்

சோதியை யாம்பாடக் கேட்டியும், வாள்தடங்கண்

மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?

மாதவன் வாள்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி மெய்ம்மறந்து

போதார் அமளிப்மேல் நின்றும் புரண்டிங்ஙன்

ஏதேனும் ஆகாள், கிடந்தாள் என்னேயென்னே

சீதளம் சோழி! பரிசு? ஏலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப்பகல்நாம்

பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே

கேசமும் வைத்தனையோ, நேரிழையாய்? நேரிழையீர்

சீசி! இவையும் சிலவோ, விளையாடி

ஈசும் இடம்ஈதோ, விண்ணோர்கள் எத்துகற்குக்

கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்

தேசன், சிவலோகன், தில்லைச்சிற் றம்பலத்துள்

ஈசன் ஆர்க்கு அன்பார்? யாம் ஆர்? ஏலோர் எம்பாவாய்! 2

7. திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்.

(முதல் நான்து பாடல்கள் துயிலெழுப்பும் மகளிரும் துயில் எழும் மகளும் உரையாடலில் அமைந்தவை)

பெண்ணே! முதலும் முடிவுமில்லாத அரிய பெரிய ஒளி வடிவினராகிய சிவபெருமானே யாம் புகழ்ந்து பாடக் கேட்டும், ஒளிபொருந்திய பெரிய கண்ணுறங்காின்றனையோ? உன் காதுகள் கலிய காதுகளோ? மகாதேவனுடைய நீண்ட வீரக் கழலையணிந்த திருவடிகளை (அன்பர்) துதித்த துதிகளின் ஓசையை (ஒருத்தி) தெருவில் வந்து கேட்டளவில் ஏங்கி அழுது உடம்பை மறந்து, அருமையாகிய மலர்ப்படுக்கையின்மீதிருந்து புரண்டு, இவ்வாறு யாதொரு மார்கழி நீராடலுள் ஒன்றற்கும் பயன்படாதவளாகி கிடவாகின்றாள்; அங்ஙனமாக, யாம் வந்து உன் வாயிற் படியில் நின்று சிவபெருமானுடைய திருப்புகழைப் பாடக்கேட்டும் எழுந்திராமல் இவ்வாறு இருத்தலாகிய இதுதானே எம் தோழியாகிய உன் தன்மை? இது என்ன வியப்பு! என்ன வியப்பு! எம் பாவை போன்றவளே! எழுந்திரு; யாம் சொல்வதை ஆராய்ந்துபார்! (1)

(துயில் எழுப்பவந்த மகளிர்கள் துயில்பவளை எழுப்பவேண்டி) 'செவ்விய அணிகலங்களை யுடையவளே! மேலான ஒளியுருவினராகிய சிவபெருமானுக்கு ஆசையோடு அன்புருவாகி, இரவும் பகலும் யாம் அவனது பெருமையைப் புகழ்ந்து பேசுவதற்குரிய காலம் இதுவன்றி இனி எக்காலம் வாய்க்கும்? இந்த அருமையாகிய மலர்ப்படுக்கைக்கே விருப்பமும் வைத்தனையோ?' என்றார்கள். (அதற்குத் துயில் எழுபவள்) 'பெண்களே! சீச்சீ! (இறைவனை வாழ்த்துதலாகிய) இச்செயல்களும் அற்பமான செயல்களோ? என்றெடி விளையாடி வைதற்குரிய சமயம் இதுதானே?' என்றாள். (பின்வந்த மகளிர்கள்) 'எம் பாவை போன்றவளே! தேவர்களும் துதித்தற்கு நாணுகின்ற தாமரை மலர் போன்ற திருவடியை (அன்பர்க்குக்) கொடுத்தருள எழுந்தருளின ஒளியுருவினன்; சிவபுரத்தை யுடையவன்; திருத்தில்லை சிற்றம்பலத்திறைவன்; நாம் இவன்பொருட்டுச் செய்யும் அன்பு எத்தன்மையது? நாம் எத்தன்மையோம்? எம் பாவை போன்றவளே! எழுந்திரு; யாம் சொல்வதை ஆராய்ந்துபார்! (2)

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந் தெதிர்எழுந்தென்
அத்தன், ஆ னந்தன், அமுதன், என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடைதிறவாய்!
பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற்
[பொல்லாதோ?
எத்தேதான், நின் அன்புடமை, எல்லோம் அறிதியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நஞ்சிவணை
இத்தனையும் வேண்டும் எமக்குஎல்லோர் எம்பாவாய்! 3

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றே?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுதோம் அவ்வளவும்
கண்ணுத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக்கு ஒருமருந்தை, வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துஉள்ளம்
உள்நெக்கு நின்றுருக! யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில், எல்லோர் எம்பாவாய்! 4

டால்அறியா நான்முகனும் காண மலையினை, நாம்
போல்அறிவோம் என்றுள்ள பொக்கங் களேபேசும்
பால்ஊறு தேனவாய்ப் படிறீ, கடைதிறவாய்!
நூலடமே, விண்ணே, பிறவே, அறிவரியான்

'முத்தையொத்த வெள்ளிய பற்களையுடையாளே! முன் னெல்லாம் முன்னே வந்து எதிரில் எழுந்து நின்று, 'என் தங்கை! ஆனந்தன்! அழகை யொப்பவன்!' என்று வாயாற் சொல்லி வாயுறி இனிக்கப் பேசுவாய்! இப்போதோ என்றால் எழுந்து வந்து உன் வாயிற் கதவைத் திறவாதிருக்கிறாய்!' (என்று துயி லெழுப்பவந்தாள் கூறி எழுப்ப, அதற்குத் துயில் எழுபவள்), 'பத்திமையுடையீர்! இறைவனது பழவடியாரே! நல்லொழுக்க முடையீர்! புதிய அடிமைகளாகிய எமது புன்மையை நீங்கி அடிமைகொண்டால் தீமையாய் முடியுமோ?' (என்று நகையாகச் சொல்ல) உடனே வந்த மகளிர் (இதுவும் ஓர்) எமாற்றமோ? உன் அன்புடைமையை யாமெல்லோரும் அறியாமோ? மனச் செம்மையுடையவர்கள் நமது சிவபெருமானைப் பாடார்களோ? எமக்கு நீ நகையாடிச சொல்லும் இவ்வளவும் வேண்டும்; இன்னும் அதிகமும் வேண்டும். எம் பாவை போன்றவளே! எழுந்திரு; யாம் சொல்லுவதை ஆராய்ந்துபார்! (3)

'அழகிய முத்தையொத்த பல் வரிசையுடையாளே! (உனக்கு) இன்னமும் பொழுது விடிந்திலதோ?' (எனத் துயில் எழுப்பவந்த மகளிர் கேட்கத் துயில் எழுபவள்) 'அழகிய கிளி மொழிபோலும் மொழியையுடையாரெல்லாரும் வந்தார்களோ?' (என்று கேட்க, அதற்கு அம்மகளிர்) 'எண்ணிக்கொண்டு உள்ள படி சொல்லுவோம்; அதுவரையிலும் கண்ணுறங்கிக் காலத்தை வீணாகக் கழிக்காதே. விண்ணவர்களுக்கு அமுதம்போன்றவனே, வேதவேதங்களால் சொல்லப்படுகிற மேலான பொருளே, கண் களுக்கு இனிமையாயிருப்பவனே வாயிலைத் திறவாய்! மனங்குழைந்து மனம் நெகிழ்ந்துநின்று உருகுவாயாக!' (என்று சொன்னார்கள். பின்னும் அவள் உறங்கப்போக) 'நாங்கள் அவர்களை எண்ணிக் கணக்கிட்டுக் கூற சம்மதிக்கமாட்டோம்; நீயே வந்து கணக்கிட்டுக் குறைவுபடின் சென்றுறங்கு! எம் பாவைபோன்றவளே! எழுந் திரு; யாம் சொல்லுவதை ஆராய்ந்துபார்!' (என்றார்கள்). (4)

(இதுமுதல் நான்கு பாடல்கள் துயிலெழுப்புவார் கூற்றுக்கள்)

திருமாலினுல் அடியைத் தேடியறியப்படாததும், பிரமனுல் முடியைத் தேடியறியப்படாததுமாகிய அனற்பிழம்பும் அணை மலையுமாகிய இறைவனை நாம் அறிவோமென்று உளவாகிய பொய் களையே பேசுகின்ற பால் சுரக்கின்ற தேன்போலினிக்கும் வாயினை யுடைய வஞ்சகமுடையவளே! வாயிற்கதவைத் திறப்பாயாக! மண்ணுலகும் விண்ணுலகும் பிறவும் உணர்தற்கரியவனது அழகை

கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச், சிவனே! சிவனே! என்று
ஓலம் இடினும் உணராய், உணராய், காண்!
ஏலக் குழலி பரிசுஎல்லோர் எம்பாவாய்! 5

மாதினை! நீ நென்னலை நாளைவந்(து) உங்களை
நாதனை எழுப்புவன் என்றலும் நாணுமே
போதன திசைபகராய், இன்னம் புலர்ந்தின்றே?
வாதனை, நிலனை, பிறவே, அறிவரியான்
தானைவந்து எம்மைமத் தலைஅளித்தாட் கொண்டருளும்
வானவர் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனை உருகாய், உனக்கே உறும்,எமக்கும்
ஏனைக்கும் தங்கோனைப் பாடுஎல்லோர் எம்பாவாய்! 6

அன்னை, இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற் கரியான், ஒருவன், இருஞ்சீரான்,
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்!
தென்னை, என் முன்னம் தீசேர் மெழுகொப்பாய்!
என்னுனை என் அரையன் இன் அமுதென் றெல்லோரும்
சென்றேமைக்கேள், வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின பரிசு? எல்லோர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகுஎங்கும்;
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்;
கேழில் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடிஏம் கேட்டிலையோ?

யும் நம்மை அடிமைகொண்டருளிச் சீராட்டுகின்ற மங்கள குணத்தையும் பாடாநின்று 'சிவபெருமானே! சிவபெருமானே!' என்று முறையிடினும் அறியாய்! துயிலுணர்ந்திலை; (இதுதானே) மயிர்ச் சாந்தணிந்த கூந்தலையுடையவளது தன்மை? எம் பாவை போன்றவளே! எழுந்திரு; நாம் சொல்லுவதை ஆராய்ந்துபார்!' என்றார்கள். (5)

மான்போன்ற விழியையுடையவளே! நீ நேற்று 'நாளைக்கு வந்து உங்களை நானே துயிலுணர்த்துவேன்' என்றுரைத்த சொல்லும் எந்தத்திசையில் ஓடியது? இன்னம் விடியவில்லையோ? விண்ணுலகும் மண்ணுலகும் மற்றதும் பிற உலகங்களும் அறிதற் கருமையானவன் தாளைகளே வலிய வந்து எம்மைக் காத்து அடிமை கொண்டருள்கின்ற மேலாகிய நீண்ட வீரக்கழலணிந்த திருவடியைப்புகழ்ந்து பாடி, வந்தவர்க்கு உன் வாய் திறந்தொரு வார்த்தை சொல்லாதிருக்கின்றாய்; உடலுருகாதிருக்கின்றாய்! (இவ்வொழுக்கம்) உனக்கே பொருந்தும். அதுகிடக்க, எமக்கும் பிறர்க்கும் இறைவனையுள்ள சிவபெருமானைப் பாடுவாயாக! எம் பாவை போன்றவளே! எழுந்திரு; நாம் சொல்லுவதை ஆராய்ந்துபார்!' என்றார்கள். (6)

தாயே! உன் திருவிளையாடல்களில் இவையுஞ் சிலவா? 'பலதேவர்கள் நினைத்தற்கும் அரியவன்; ஒப்பில்லாதவன்; பெருஞ் சிறப்பையுடையவன்' (என்றெல்லாம் அவனது) சங்கு முதலான திருச்சின்னவொலிகள் முழங்கக் கேட்டுச் 'சிவசிவ!' என்றே வாய் திறந்து பேசுவாய்; 'தென்னுடைய சிவனே!' என்று சொல்வதற்கு முன்பே, நெருப்பைச்சேர்ந்த மெழுகைப்போல உருகுவாயே முன்னெல்லாம். ஆனால், இப்போது நின் கடைவாயில் வந்து, 'என் தந்தை! என்னரசன்! இனிய அமிர்தம்!' என்று யாம் எல்லாம் தனித்தனியே சொல்லித் துதித்தோம்; கேட்டாய். (கேட்டும்) இன்னமும் உறங்குகின்றனையோ? கல் மனமுடைய அறிவிலிகள்போல சும்மா படுத்துறங்குகின்றாயே. (உன்) தூக்கத்தின் பெருமைதான் என்னே! எம் பாவை போன்றவளே! எழுந்திரு; யாம் சொல்வதை ஆராய்ந்துபார். (7)

கோழிகள் கூவ வெவ்வேறுபட்ட பறவைகள் எவ்விடத்தும் ஒலிக்கின்றன; எழில் என்ற வாத்தியக் கருவி ஒலிக்கவே வெள்ளிய சங்குகள் எவ்விடத்தும் முழங்காநின்றன. உவமையில்லாத மேலாகிய ஒளியுருவமுடைய சிவபெருமானது ஒப்பற்ற பெருங் கருணைச் செயல்களாகிய உவமையற்ற சிறந்த பயன்களையும்

வாழிஈது என்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆம்ஆறும் இவ்வாறே?
ஊழி முதல்வனுய் நின்ற ஒருவனே
ஏழைபங் காளனேயே, பாடுஎல்லோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிராணைகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன்அடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார்; அவர்உகந்து [வோம்;
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம்,எலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினுமப்கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால் திருமேனி! ஒன்றல்லன்;
வேதமுதல் விண்ணோரு மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன், தொண்டர்உளன்,
கோதில் குலத்துஅரன், தன்கோயிற், பிணைப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
ஏதவனைப் பாடும் பரிசு? ஏல்ஓர் எம்பாவாய்! 10

(நாங்களும்) பாடிடேணும்; அவற்றை நீ கேட்கவில்லேபோலும்! நீ வாழக்கடவை! இது என்ன தூக்கமோ? வாயிற் கதவைத் திறத்தல் செய்யாய்! பாற்கடலில் துயில் கொள்ளும் சக்கரத்தை யுடைய திருமால், தான் சிவனிடம் கொள்ளும் அன்புடைமையும் நீ தூங்குவதுபோன்ற இத்தன்மைதாமே? மூக்காலங்களுக்கும் முதல்வனுகி நின்ற ஒருத்தனை, எழைகள் பங்கிலிருப்பவனை பாடுதல் செய்! எம் பாவை போன்றவளே! எழுந்திரு; யாம் சொல்வதை ஆராய்ந்துபார்! (8)

(இதுழுதல் துயிலுணர்ந்த மகளிர் இறைவனைத் துதித்தல் கூறல்)

முன்னேயதாகிய பழம்பொருளுக்கும் முன்னேயதாகிய பழம் பொருளே! பின்னேயதாகிய புதுப்பொருளுக்கும் மீட்டும் அத் தன்மையனே! உன்னைத் தலைவனுகப்பெற்ற உன் சிறப்பை யுடைய அடியோம், உன் தொண்டாகிய சீர்பாதங்களை வணங்கு வோம்; அவ்விடத்து அவர்களுக்கே உரியவராவோம்; அவர்களே எம் கொழுநராவார்; அவர் விரும்பிச் சொன்னவண்ணமே தொண்டாய் ஏவல் செய்யக்கடவோம். இந்தவண்ணமே எம் மிறைவனே! எமக்குக் கிருபைபுரிவையாயின் எந்தக் குறையையு முடையோமல்லோம்! எம் பாவையே! இறைவன் இங்ஙனம் நல்குதற்கு நீ துணைபுரிக! (9)

பெண்ணை ஒருபக்கத்து அமைத்திருப்பவனுதலால், திரு வுருவம் ஒன்றுயிருப்பவனுமல்லன்; வேதமுதலாக விண்ணுலகத் தவரும் மண்ணுலகத்தவரும் தோத்திரம் பண்ணினாலும் சொல்ல அடங்காத (உயிர்கட்கெல்லாம்) ஒரு உயிர்த்தோழனுயிருப்பவன்; தொண்டருடைய உள்ளத்திலிருப்பவன்; குற்றமில்லாத மேன்மை யினையுடைய சிவன். அவனது ஆலயத்திலுள்ள பெண்மணிகளே! அவனுடைய திருவடித் தாமரை மலர்கள் பாதாள உலகம் எழி னுக்கும் கீழ் இங்குதான் என்று சொல்ல முடியாதபடி உள்ளது; பூக்கள் நிரம்பி அலங்கரிக்கப்பட்ட திருமுடியும் எல்லாப் பொருள் களுக்கும் முடிவாயுள்ளது. அவனது ஊர் யாது? அவனது பெயர் என்ன? (அவன்) உறவினர் யார்? அன்னியர் யார்? அவனைப் புகழும் விதம் யாது? கூறுமின்! யாம் இன்ன தன்மைகளை அறியாது மயங்குகின்றேம்; எற்று உணர்க! (10)

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு, முகேர்என்னைக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி,
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம்,காண்! ஆர்அழல்போல்
செய்யா ! வெண்ணீறுடி ! செல்வா ! சிறுமருங்குல்
மைஆர் கடங்கண் மடந்தை மணவாளா !
ஐயா ! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமை,ஏல்ஓர் எம்பாவாய் ! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் ! நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீஆடும்
கூத்தன் ! இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடுஏல்ஓர் எம்பாவாய் ! 12

பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போல்நினைந்த

நிறைந்த நெருப்புப்போல முழுதும் செம்மை நிறம் உடைய திருவடிவம் உடையவனே! வெள்ளிய திருநீற்றுப்பொடியில் மூழ்கியவனே! ஒப்பற்ற செல்வங்களையெல்லாம் உடையவனே! நுண்ணிய இடையும் மைபொருந்திய நெடிய கண்களையும் உடைய உமையவள் தலைவனே! வண்டுகள் நிரம்பிய அகன்ற தடாகத்தில் புகுந்து, 'முகேர்' என்னும் ஒலி எழும்படியாக நீரினைக் கையால் இறைத்து முழுகி உன் திருவடிகளைப் பாடி உனது வழிவழி அடிமைகளாக நாங்கள் வாழ்ந்தோம்; நீ அழகாக ஆட்கொண் டருளும் திருவிளையாட்டினாலே அருள் பெறுகின்றவர்கள் பிழைத் துக் கதிசேரும் வகைகளில் எல்லாம் நாங்களும் முறையாக உய்தி கூடி முடித்தோம்; இனிமேல் நாங்கள் இளைத்துப்போகாமல் எங்களை நீ காப்பாற்றுவாயாக! எம் பாவையே! இவ்வாறு எங்கள் முறையீட்டை ஏற்று உணர்க! (11)

நம்மைப் பிணித்த பிறவித்துன்பம் ஒழியுமாறு நாம் களிப்பி னால் ஆரவாரித்தாடுகின்ற, பரிசுத்த குணத்தையிருப்பவன்; நல்ல தில்லைச் சிற்றம்பலத்தின்கண்ணே, அனலோடாடுகின்ற கூத்தினை யுடையான்; இவ்வானுலகத்தாரையும் மண்ணுலகத்தாரையும் எல்லோமாகிய நம்மையும் காப்பாற்றியும், படைத்தலைச் செய்தும் அழித்தலைச் செய்தும் விளையாடுதலை உடையவன். அப்படிப் பட்ட சிவபிரானுடைய புகழையும் சொல்லி, வளையல் ஒலிக்கவும், பெரிய மேகலைகள் ஆரவாரித்தொலிக்கவும், அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் முழங்கவும், மலர்கள் விளங்குகின்ற பொய்கையிற் குளித்து இறைவனது பொன்னடியைத் துதித்து, பெரிய சுனை நீரின்கண் மூழ்குவோமாக. எம் பாவையே! மற்றதனை ஏற்று உணர்க. (12)

பசுமையான குவளையாகிய கரிய மலர்களாலும், செம்மை யான தாமரை மலர்களாலும், அவ்விடத்து அழகிய நாரைகளின் கூட்டத்தாலும், மற்றும் பாம்புகள் உள்ளமையாலும், தங்கள் அழுக்குகளைக் கழுவிக்கொள்வார் வந்து சேர்தலினாலும் (பொய்கை யாகவும்), பசிய குவளையாகிய கரிய மலராலும், செங்கமலம் போன்ற திருவடியாலும், அவ்விடத்தில் அழகிய இனமாகிய வளையல்களாலும், பின்னும் பாம்பணிகளாலும், தங்கள் ஆணவ கன்ம மாயை மலங்களைக் கழுவுவார் வந்து சேர்தலினாலும் (எங்கள் பிராட்டியாகவும் எம் தலைவனுகிய சிவபிரானைகவும்), இப்படியாக ஒத்திருக்கும் பொங்குகின்ற பொய்கையில் புக்குப் பாய்ந்து பாய்ந்து, அதனால் நம் சங்கு வளையல்கள் ஒலிக்கவும்,

பொத்தும் மடுவில் புகப்பாய்ந்து, பாய்ந்து,நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக், குடையும் புனல்பொங்கப்,
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடுஎல்லோர் எம்பாவாய்! 13

காதார் குழைஆடப், பைம்பூண் கலன்ஆடச்,
கோதை குழல்ஆட, வண்டின் குழாம்ஆடச்,
சேதப் புனல்ஆடிச், சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருள்ஆம் ஆபாடிச்,
சோதி நிறம்பாடிச், சூழ்கான்ற நாற்பாடி,
ஆதி நிறம்பாடி, அந்தம்ஆம் ஆபாடிப்,
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி, ஆடுஎல்லோர் எம்பாவாய்! 14

ஓர்ஒருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள், சித்தம் களிகூர,
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்,
பார்ஒருகால்வந் தினையாள் விண்ணிணைத்தான் பணியாள்;
போர்அரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆம்ஆறும்
ஆர்ஒருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர்! வாய்ஆர நாம்பாடி,
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந் தாடேல்லோர் எம்பாவாய்! 15

மூன்றிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத்திகழ்ந்துளம்மை ஆள்உடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்துளம் பிராட்டி திருஅடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்

சிலம்புகள் கலந்து ஒலிக்கவும், நம் தனங்கள் விம்மிதமடையவும் நாம் குடைந்து ஆடுதலால் நீர் மிக்குப் பொங்கவும் இவ்வாறுகத் தாமரைப் பூம்பொய்கையில் பாய்ந்து நீராடுக! உன்னுடன் யாமும் ஆடுவோம். யாம் கூறுவதனை ஏற்று உணர்க. (13)

செவியிற்பொருந்திய குண்டலங்கள் ஆடவும், பசும்பொன்னு லியன்ற அணிகலங்கள் ஆடவும், மாலையும் கூந்தலும் ஆடவும், வண்டுக்கூட்டங்கள் ஆடவும், குளிர்ச்சியாகிய நீரில் மூழ்கித் திருச்சிற்றம்பலத்தைப் புகழ்ந்து பாடியும், வேதப்பொருளாகிய இறைவனைப் பாடியும், இறைவன் அந்த வேதப்பொருள் ஆகும் வகையையும் பாடியும், ஒளிப்பிழம்பின் கூறுபாட்டைப் பாடியும், முடியில் வளைத்தமைக்கப்பட்ட கொன்றைப்பூமாலையைப்பாடியும், அவனது முதலாம் தன்மையைப் பாடியும், இறுதியாம் தன்மை யையும் பாடியும், உலக வாசனையைக் கெடுத்து எங்களை வளர்த் தெடுத்த எம்பிராட்டியது திருவடிப் பெருமையைப் பாடியும் ஆடுவாயாக! யாமும் உன்னுடன் நீராடுவோம். எம் பாவாய்! இதனை ஏற்று உணர்க. (14)

கண்டவர் நெஞ்சம் பிரமிக்கத்தக்க இயற்கையழகும் செயற்கையழகும் உள்ள கச்சுக்கட்டிய கலன் அணிந்த முலை யுடையீராவீர்! ஒவ்வொரு வேளையிலும் 'எம்பெருமானே!' என்றென்று நம் பெருமானுடைய சிறப்பைப் பாடுவதில் வாய் ஓயமாட்டாள்; மிகுந்த மகிழ்ச்சியுடன் தாரைதாரையாய் ஓயாமல் எம்பெருமானை நினைத்து அழுவாள்; தரையில் விழுந்து கும்பிடு வாள்; வேறு தேவர்களை வணங்கமாட்டாள்; பேரருளாகிய சிவ பெருமானிடம் பித்துக்கொண்டவர்கள் இப்படித்தான் ஆவார் களோ? இவ்வாறு செய்து ஆட்கொள்ளும் ஞானஸ்வரூபி யாவரோ? அவர் திருவடிகளை வாயார நாம் பாடி அழகாய்த் தோன்றும் இம்மடவில் பாய்ந்து விளையாடுவோம். எம் பாவாய்! இவ்வாறு ஆடுங்கால் தலைவனும் தலைவிமேல் காதற்பித்துடையனு மாறு ஏற்று அருள் செய்வதற்கு ஓர்வாயாக! (15)

மேகமே! முன்னதாக எதிரே உள்ள இவ்வுவர் நீரைக் குறைத்து மேலெழுந்து எம்பெருமாட்டிபோல விளங்கி எம்மை அடிமைகளாக உடையவளது சிற்றிடையில் அணிந்துள்ள ஒட்டி யாணம் பிரகாசிப்பதுபோல மின்னிப் பிரகாசித்து எம்பெரு மாட்டியின் திருவடிமேலணிந்த பொன்னற் செய்யப்பட்ட சிலம்பு போல இடி இடித்து, அழகிய புருவம்போல வானவில்லை வளைத்து

என்னைச் சிவகுலவி, நந்தம்மை ஆள்உடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய், மழை! ஏல்ஓர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனே,
அங்கண் அரசை, அடியோங்கட்கு ஆர்அமுதை
நங்கள் பெருமானைப், பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்துஆடேல்ஓர் எம்பாவாய்! 17

அண்ணல் மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றுஅற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து காற்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறுகிக்
கண்ணார் அமுதசமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடுஎல்ஓர்
[எம்பாவாய்! 18

உன்கையில் பிள்ளை; உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும்நம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்குஒன்று உரைப்போம்கேள்:
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க!

நம் தம்மை ஆளுடையாள் தன்னை ஒருபோதும் விட்டு நீங்காத இறைவனுடைய அன்பர்களுக்கு முன்னந்து வந்து அவன் அருளைப் பொழிவதுபோல நீயும் நினைத்து நமக்கும் முன்னதாக மழையைச் சொரிவாய்! எம் பாவாய்! இதனை ஏற்று அருள்க. (16)

மணந்தங்கிய கரிய கூந்தலையுடையாளே! திருமாவினிடத்தும் நான்முகனிடத்தும் மற்றைத் தேவர்களிடத்தும் எங்கும் மற்றெவ்விடத்தும் இல்லாததாகிய ஒப்பற்ற ஆநந்தம் நம்மிடத்தாகும்படி நம்மைப் பாராட்டி இவ்விடத்தில் நம் வீடுகள்தோறும் எழுந்தருளிச் செந்தாமரை மலர்போன்ற பொன்னடியைக்கொடுத்கொடுத்தருள்கின்ற சேவசழுடையானை, அருள் நோக்கத்தையுடைய இறைவனை, அடிமைகளாகிய நமக்கு அரிய அமுதுபோல் வானை எம்பெருமானைப் பாடுதல் செய்து நன்மைகள் மேன்மேலுயரத் தாமரை மலர்கள் செறிந்த நீரில் குதித்து மூழ்குவாய்! எம் பாவையே! (எம் வேண்டுகோளை) ஏற்று அருளுக. (17)

திருவண்ணுமலையாளுடைய திருவடித்தாமரைகளைப் போய்ப் பணிகின்ற தேவர்களுடைய முடிகளிலுள்ள மணிக்கூட்டங்கள் ஒழிந்தாற்போல பெருமை மிகுந்த சூரியனுகிய ஒளியுடைப் பொருள் வந்து மேகத்தின்கண்ணை மறையாநிற்கவும், நட்சத்திரங்கள் குளிர்ச்சி பொருந்திய பிரகாசங்குறைந்து நீங்காநிற்கவும், பெண்ணுருவாகி, ஆணுருவாகி, அலியுருவாகி விளங்குகின்ற ஒளிபொருந்திய ஆகாயமாகிப் பூமியாகி இவ்வளவு பொருள்களினின்றும் வேறுபட்டுப் பெருமை நிறைந்த அமுதமாகி நின்றவனது திருவடிகளைப் பாடுதல் செய்து, மாதே! இந்த அழகிய நீரிற் குதித்து மூழ்குவாய்! எம் பாவையே! தலைவன் தான் கண்ணுறமுதமாமாறு கருணைபுரிக. (18)

உமது கையிலுள்ள பிள்ளை உமக்கே அடைக்கலமாகுமென்ற அந்தப் பழமொழியைப் புதுப்பிக்கப் பயந்து, எம்பெருமானே! உனக்கு ஒரு செய்தி சொல்வோம் கேட்பாய்; எம்முடைய கொங்கைகள் உன்னடியவரல்லாத மற்றவருடைய தோள்களைத் தழுவாதொழியக்கடவன; எம்முடைய கைகள் உனக்கேயன்றி வேறெவர்க்கும் எந்தப் பணிவிடையையும் செய்யாதொழியக்கடவன; இரவும் பகலும் எம்முடைய கண்கள் (உன்னையன்றி)

எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க!
கங்குல் பகல்எம்கண் மற்றென்றும் காணற்க!
இங்குஇப் பரிசே! எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்குஎவ்ஓர் எம்பாவாய்! 19

போற்றி! அருஞுகனின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருஞுகனின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி! எல்லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! எல்லாஉயிர்க்கும் போகம்ஆம் பூண்கழல்கள்
போற்றி! எல்லாஉயிர்க்கும் ஈரும் இணைஅடிகள்
போற்றி! மால் நான்முகனும் காணுத புண்டரிகம்
போற்றி! யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்! 20

திருச்சிற்றம்பலம்.

வேறெந்தப் பொருளையுங் காணுதொழியக்கடவன; இவ்விடத்து இவ்வாறே எம்மிறைவனே! எமக்கு அருள் செய்வாயாயின் கதிரவன் எந்தத் திக்கில் உதித்தாலும் எமக்கென்ன - பயன்? யாதுமில்லை. எம் பாவாய்! எமது நோன்பின் முடிந்த பயனை யாம் பெறக்கடவதாய பரிசு இதுவே! இதனை அருள்வாயாக!

உனது எல்லாப் (பொருள்களுக்கும்) முதன்மையாகிய திருவடி மலர்கள் எம்மால் வணங்கப்படுவனவாக (அவற்றை) அருள்க; உனது (எல்லாப் பொருள்களுக்கும் முடிவிடமாகிய) செய்ய பாதமாகிய தளிர்கள் எம்மால் வணங்கப்படுவனவாக (அவற்றை) அருள்க; எல்லாச் சீவர்களுக்கும் பிறப்பிடமாகிய பொன்னடிகள் எம்மால் வணங்கப்படுவனவாக; எல்லாச் சீவர்களுக்கும் போக ரூபமாகிய பொன்னடிகள் எம்மால் வணங்கப்படுவனவாக; பலவகைப்பட்டுத் தோன்றிப் போக நுகர்ந்து இறுதிப்பட்டு ஒடுங்குவதற்குக் காரணமாய் அமைந்த இணைந்த இரண்டு திருவடிகள் எம்மால் வணங்கப்படுவனவாக; திருமாலும் நான்முகனும் காணவொண்ணாத (உன் திருவடித்) தாமரைகள் போற்றி எம்மால் வணங்கப்படுவனவாக; யாம் பிழைக்கும் பொருட்டு எம்மை அடிமைகொண்டருளிய திருவடித்தாமரைகள் எம்மால் வணங்கப்படுவனவாக. எம் பாவாய்! இவ்வாறு சொல்லி மார்கழிநீர் ஆடுவாயாக (20)

திருச்சிற்றம்பலம்

8. திரு அம்மானை

(திருவண்ணுமலையில் அருளியது—ஆனந்தக் களிப்பு)

(ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தாவு கோச்சகத் கலிப்பா.)

திருச்சிற்றம்பலம்.

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு ஏந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அத்தணனய் அறைகூவி வீடருளும்
அம்கருணை வார்கழலே பாடுதும்காண், அம்மானைப்! 1

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான், எமக்கு எளிய
பேரானன், தென்னன், பெருந்துறையான், பிச்சேற்றி
வாரா வழிஅருளி வந்துளன் உளம்புகுந்த
ஆரா அழுதாய்! அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதும்காண், அம்மானைப்! 2

இந்திரனும் மால்அயனும் ஏனைருரும் வானைருரும்
அந்தாமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
ஏந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றினையைச்
சந்தனையை வந்துருக்கும் சீர்ஆர் பெருந்துறையான்
பந்தம் பறிப்பப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தம்இலா ஆனந்தம் பாடுதுங்காண், அம்மானைப்! 3

வான்வந்த தேவர்களும் மால்அயனேடு இந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து தாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன்வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து

8. திரு அம்மானை

திருச்சிற்றம்பலம்.

சிவந்த கண்களையுடைய நெடிய திருமாலும் பன்றி வடிவாய்ச் சென்று நிலத்தைப் பிளந்தும் காணுதற்கருமையாகிய அருள் பொங்குகின்ற தாமரை மலர்போன்ற திருவடி பூமியில் எழுந்தருளி எங்கள் பிறவித்தளையைக் கெடுத்து, எமது கூட்டத்தையும் அடிமைகொண்டு, தென்னை மரங்கள் திரண்ட சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையை உடையவனும் தென்னாட்டவனும் அழகிய அருட்கண்களை உடையவனும் ஆகிய சிவபிரான் வேதியனெழுந்தருளி, வலிய அணைத்து வீடுபேற்று வழியைத் தந்தருள்கின்ற அழகிய அருளையுடைய நீண்ட வீரக்கழல அணிந்த திருவடியையே பாடுவோமாக அம்மானை! (என்றுள்). (1)

மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் கீழுலகத்தவரும் (இவற்றிற்கு) புறத்திலுள்ள மற்றை உலகங்களிலுள்ளவரும் (ஆகிய) எவராலும் அறிதற்கு அருமையானவன்; (ஆயினும்) எங்களுக்கு எளிதான கீர்த்தியையுடையோனும் தென்னாட்டை யவனும் திருப்பெருந்துறையை உடையவனும் ஆன சிவபெருமான் எங்கட்கு ஞானப்பித்தேறச் செய்து மீண்டும் நோய் வராமைக்குக் காரணமாகிய முத்திநெறியை அருள்செய்து வந்து என் மனத்தே புகுந்து தெவிட்டாத அமிர்தமாகி அலகளையுடைய கடலின்கண் மீனின்பொருட்டு வலை வீசின பெருங்கருணைக் கடலாயிருப்பவனைப் பாடுவோமாக அம்மானை! (என்றுள்). (2)

தேவேந்திரனும் திருமாலும் நான்முகனும் மற்றை முனிவர்களும் தேவர்களும், விண்ணுலகத்தே நிற்கச் சிவபெருமான் மண்ணுலகத்தில் எழுந்தருளி எமது கூட்டத்தையும் அடிமைகொண்டு திருத்தோளிற் பூசிய திருவெண்ணீற்றை உடையனாய் எம்மிடத்து வந்து மனத்தை உருகச்செய்கிற சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறையை உடையவன்; பிறவித் தளையொழியக் குதிரையூர்ந்தவன்; (அவன்) கொடுத்தருளின முடிவில்லாத இன்பத்தைப் பாடுவோம் அம்மானை! (என்றுள்). (3)

விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் திருமால் நான்முகனே இந்திரனும் காட்டில் (தவம்) நின்று உலர்ந்தும் தம்மீது புற்று வளருமாறு அசையாது தவம் கிடந்தும் காணுதல் அருமையாகிய தானேயாகிய அச்சிவன் வலிய வந்து ஈயினேனைத் தானைப் போலப் பேரன்பு செய்து உடம்பில் மயிர் சிலிர்த்து உள்ளே

தேன்வந்து அழுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண், அம்மானைப்! 4

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லானன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லிப் பிசைந்து கனிஆக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி, வினைகடிந்த வேதியனைத்
திள்ளி நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒள்ளி விடையானைப் பாடுதும்காண், அம்மானைப்! 5

சேட்டாயோ? தோழீ! கிறிசெய்த ஆறுஒருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன், பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச், சிவங்காட்டித்,
தான்தா மரைகாட்டித், தன்கருணைத் தேன்காட்டி,
நாட்டார் நகைசெய்ய, நாம்மேலை வீடுஎய்த,
ஆள்தான்கொண் டாண்டவா பாடுதும்காண், அம்மானைப்!

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்,
சேயானைச், சேவகனைத், தென்னன் பெருந்துறையில்
மேயானை, வேதியனை, மாதிருக்கும் பாதியனை,
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத், தானே உலகேழும்
ஆயானை, ஆள்வானைப் பாடுதுங்காண், அம்மானைப்! 7

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,
விண்சுமந்த கீர்த்தி விபுன்மண்டலத்து ஈசன்,
கண்சுமந்த நெற்றிக் கடவுள், கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு,
புண்சுமந்த பொன்மேனி, பாடுதும்காண், அம்மானைப்! 8

கெட்டுயிர்ப்படைதற்கு எதுவாகிய தேன்போன்று, அமிர்தத்தின் தெளிவுபோல ஒளியுருவாய் எழுந்தருளின மேன்மையமைந்த நீண்ட திருவடியையே பாடுவோம் அம்மானே! (என்றாள்). (4)

கற்கவேண்டியவற்றைக் கல்லாத மனத்தையுடைமையால் கடையாகிய நாயினேனை, பேராற்றலுடையான், தென்னுடைடையான், திருப்பெருந்துறையை உடையவன், பித்தேறச்செய்து (மனமாகிய) கல்லைப் பிளைந்து பழமாகச்செய்து தன் கருணைக் கடலில் அழுந்துவித்து ஆணவம் முதலிய வினைகளை நீக்கியருளின அந்தணனைத் தில்லைநகரிற் புகுந்து திருச்சிற்றம்பலத்தில் நிலை பெற்ற விரைவிற் செல்லுதலையுடைய இடபவாகனனைப் பாடுவோம் அம்மானே! (என்றாள்). (5)

ஒருவன் மாயஞ்செய்த விதத்தைத் தோழி! நீ கேட்டாயா? ஓவியத்தால் அமைந்த மதில் அயலிற் சூழப்பெற்ற தென்னுடையவன்; திருப்பெருந்துறையை உடையவன்; காட்டவொண்ணாத மறைப்பொருள்களெல்லாவற்றையும் காட்டி, வீடுபேற்று வழியைக் காட்டித், திருவடித்தாமரையைக் காட்டித், தன் கருணையாகிய தேனைக் காட்டி, நாட்டிலுள்ளார் எம் நிலை கண்டு இப்போது நகைக்கவும், பின்னர் யாம் மேன்மையாகிய வீட்டினையடையவும் அடிமைகொண்டு காத்த விதத்தைப் பாடுவோம் அம்மானே! (என்றாள்). (6)

எப்பொழுதும் நினைப்பவரது மனத்தில் வீற்றிருக்கின்ற உண்மைப்பொருள் வடிவானவனை, (நினையாதவர்க்கு) தூரமாயிருப்பவனை, மகாவீரனை, தென்னாட்டவனை, அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனை, அந்தணனை, உமாதேவியாரிருக்கின்ற பாதி உடம்பினனை, நாய்போன்ற நம்மை அடிமைகொண்ட தலைவனை, தாயாகிய உண்மைப்பொருளாயிருப்பவனைத், தாளைருவனை எழுலகங்களுமாயிருப்பவனை, ஆண்டருள்வோனைப் பாடுவோம் அம்மானே! (என்றாள்). (7)

பண்களைக்கொண்ட திருப்பாடல்களுக்குப் பரிசு படைத்தருளின பெண்ணைத் தாங்கிய பாகத்தையுடைய பெருமானும், திருப்பெருந்துறையை உடையவனும், விண்ணுலகத்தினுஞ் சென்ற புகழையுடைய பெருமைவாய்ந்த மண்டலங்களுக்குத் தலைவனும், கண்ணைக்கொண்ட நெற்றியையுடைய கடவுளும் ஆகிய சிவபிரானது புகழையுடைய மதுரையில் (வந்தியின் பொருட்டு) மண்ணைச் சுமந்து கூலியைப்பெற்று அந்த (அரிமர்த்தனபாண்டிய) மன்னனல் அடியுண்டு புண்பட்ட பொன்போலுந் திருமேனியைப் பாடுவோம் அம்மானே! (என்றாள்). (8)

தண்டப் பிறையான், மறையான், பெருந்துறையான்,
கொண்ட புரிநூலான், கோலமா வுளர்தியான்,
கண்டங் கரியான், செம் மேனியான், வெண்நீற்றன்,
அண்டமுதல் ஆயினன், அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழஅடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதும்காண், அம்மானைப்! 9

விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை,
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றனைத்,
தண்ணார் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண்ணாளும் பாகனைப், பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணல் மலையானைப் பாடுதும்காண், அம்மானைப்! 10

செப்பார் முலைபங்கன், தென்னன், பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினன்,
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன், ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதும்காண். அம்மானைப்! 11

மைப்பொலியும் கண்ணி, கேள்; மால்அயனே டிந்திரனும்
எப்பிறவி யும்தேட என்னையும்தன் இன்அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவா மேகாத்து,
மெய்ப்பொருட்கண் தோற்றமாய், மெய்யே நிலைபேறும்,
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதும்காண், அம்மானைப்! 12

இளம்பிறைச் சந்திரனை உடையவன்; மாறப்பொருளா யிருப்பவன்; திருப்பெருந்துறையை உடையவன்; அணிந்த முப்புரிநூலை உடையவன்; அழகாகிய இடபவாகனத்தை உடை யவன்; கண்டம் கரியவன்; செம்மையாகிய திருமேனியை உடைய வன்; திருவெண்ணீற்றை உடையவன்; உலகங்களுக்கெல்லாம் முதற்காரணமானவன்; (அவன்) முடிவில்லாத இன்பத்தைப் பழமையாகிய முறைப்படி வழித்தொண்டருக்குத் தந்தருளுபவன்; (ஆதலால் அவனது பெருஞ்சிறப்பை) உலகம் அதிசயிக்கும் வண்ணம் பாடுவோம் அம்மானை! (என்றுள்). (9)

விண்ணுலகத்தை ஆளுகின்ற தேவர்களுக்கும் மேலாகிய அந்தணனை, மண்ணுலகத்தை ஆளுகின்ற அரசர்களுக்கும் மாட்சி மைப்பட்டு நின்றவனை, குளிர்ச்சியமைந்த தமிழை வளர்க்கிற தண்மையாகிய பாண்டிநாட்டை உடையவனை, உமாதேவியாரால் ஆளப்படுகிற இடப்பாகத்தை உடையவனை, யாவரும் விரும்பு கின்ற திருப்பெருந்துறையில் பெருமைபொருந்திய தன் திரு வடியைக் காட்டி நாயினேனை அடிமைகொண்ட திருவண்ணுமலை யானை யாம் புகழ்ந்து பாடுவோம் அம்மானை! (என்றுள்). (10)

செப்புப்போலுந் தனங்களையுடைய உமாதேவியைப் பாகத்தி லுடையவன்; அழகும் நன்மையும் வாய்ந்தவன்; திருப்பெருந் துறையை உடையவன்; தவறுமல் தன் திருவடியை அடைந்தவ ரது மனத்தை உருகச்செய்கிற தன்மையை உடையவன்; அந்தப் பாண்டிநாட்டினைச சிவலோகமாகச செய்வித்த கங்கை தங்கிய சடைமுடியையுடைய எமது தந்தை; பொன்பத்தைத் தருதற் குரிய நீண்ட கழலை அணிந்த திருவடிக்கே தம்மை ஈடாக ஒப்பு வித்த மனத்தை உடையவராகிய அடியார்க்குள்ளே வீற்றிருக் கின்ற அப்புறத்துக்கு அப்புறமாயிருப்பவனைப் பாடுவோமாக அம்மானை! (என்றுள்). (11)

விளங்குகின்ற கண்களையுடையாளே! நீ கேட்பாயாக; திருமால் நான்முகன் ஆகியவர்களோடு இந்திரனும் பற்பல பிறப் பினும் தேடாநிற்க, (ஒன்றுக்கும் பாத்திரனல்லாத) அடியேனையும் தனது இனிய கருணையால் இந்தப் பிறப்பில் அடிமைகொண்டு இனிப் பிறவாமல் காத்தருளி, உண்மைப்பொருளின்கண்ணே காட்சி கொடுப்பதாகி, உண்மையே நிலைபேறு ஆகி, எந்தப் பொரு ளுக்கும் தானொரு முதலேயாகி, எல்லாவற்றுக்கும் முத்திநிலையு மாகிற அந்தப் பொருளாகிய நமது சிவபெருமானைப் பாடுவோம் அம்மானை! (என்றுள்). (12)

கைஆர் வளைசிலம்பக் காதார் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யான வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையான எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும்காண், அம்மானைப்! 13

ஆனையாய்க், கிடமாய்ப், மானுடராய்த், தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்து எய்த்தேனை,
ஊனையும் நின்றுருக்கி, என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்துஇனிய
தேனவன்தேபோல் வந்தென்னைத் தன்தொழும்பில்
[கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதும்காண், அம்மானைப்! 14

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலைஅரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சந்தித் திசைதிசையே தேவர்கள ஓட்டுகந்த [யான்
சந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறை
மந்தார மாலையே பாடுதும்காண், அம்மானைப்! 15

ஊனைய் உயிராய்ப் உணர்வாய்னன் உள்கலந்து
தேனைய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானேர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீர்ஒளிசேர்
ஆனை அறிவாய், அளவிறந்த பல்உயிர்க்கும்
கோன்ஆகி நின்றஆ கூறுதும்காண், அம்மானைப்! 16

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று

கைகளில் அணியப்பெற்ற வளையல் ஒலிக்கவும், காதில் அணியப்பெற்ற குண்டலங்கள் அசையவும் கருமை பொருந்திய கூந்தல் புரளவும், (அதில்) தேன் பெருகவும், (அதில் வண்டுகள் ஒலிக்கவும்) செந்நிறமுடையவனைத், திருவெண்ணீற்றை அணிந்தவனைக், கூப்பியறியாத கைகளை உடையவனை, எவ்விடத்தும் நிறைந்தவனாகி அன்பர்களுக்கு உண்மைப்பொருளாயிருப்பவனை, அன்பரல்லாதவர்க்கு அவ்வாறல்லாதிருக்கிற திருவையாற்றில் மர்ந்தவனைப் பாடுவோம் அம்மானை! (என்றாள்). (13)

யானையாகியும், புழுவாகியும், மனிதராகியும், தேவர்களாகியும், மற்றுமுள்ள பிற சீவர்களாகியும், பிறந்தும் இறந்தும் மெலிந்த என்னை உடம்பையும் நின்றுருகசசெய்து என் வினைகளை ஓட்டுதலை விரும்பித் தேனினையும் திரட்டுப் பாலினையும் கருப்பஞ் சாற்றினையும் நிகர்த்து இனிதாகிய தலைவனாகிய அவன்போல எழுந்தருளி, அடியேனைத் தன் தொண்டாள் ஒருவனாகக் கொண் டருளிய மேலோனது தாமரை மலர்போலுந் திருவடியையே பாடுவோம் அம்மானை! (என்றாள்). (14)

தக்கனது யாகத்தில் சந்திரனை நிலத்திலிட்டு உடல் தேய்த் தருளி, இந்திரனது தோளை நெரித்து வேள்வித் தலைவனின் தலையை அறுத்து ஆகாயத்திடத்தே செல்லும் இயல்புள்ள பரந்த ஒளியையுடைய சூரியனது பல்லை உடைத்து மற்றைத் தேவர்களைப் பல திசைகளிலும் சிதறியோடவித்தலை விரும்பின செவ்விய பூஞ்சோலைகள் பக்கத்தில் சூழப்பெற்ற அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையை உடையவனது மந்தாரமாலையையே பாடுவோம் அம்மானை! (என்றாள்). (15)

தேவர்களும் அறியவொண்ணாத முத்திநெறியை எமக்குக் கொடுத்தருளினை தேன் நிரம்பின கொன்றைமலர் மாலையை அணிந்த மகாவீரர், உடலாகி. அதனுள் உயிராகி. அதனுள் அறிவாகி, என்னுள்ளே சேர்ந்து, தேனாகி அமிர்தமுமாகி இனிதாகிய கருப்பங்கட்டியுமாகி மேன்மைபாகிய ஒளிபொருந்திய நீங்காத அறிவுருவாகி, அளவுடந்த பல உயிர்களுக்கும் இறைவனாகி நின்றவாற்றைச சொல்லுவோம் அம்மானை! (என்றாள்) (16)

சிவபிரானுக்குரிய அழகிய கொன்றைமாலையைச் சூடிக் கொள்வேன். சூடிச சிவபிரான திருவடி தோள்களைக் கூடுவேன். கூடிக் கலந்து அவ்வின்பத்தில் மயங்கி நின்று பின்னர் அவனுடன் ஊடல் கொள்வேன்; அவனது சிவந்த வாய்க்காக உருகுவேன்;

ஊடுவேன், செவ்வாய்க்கு உருகுவேன், உள்ளுருகித்
தேடுவேன், தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்,
வாடுவேன், போற்றும் மலர்வேன், அனல்எந்தி
ஆடுவான், சேவடியே பாடுதும்காண், அம்மானைப்! 17

கிளிவந்த மென்மொழியாய்! கேழ்கிளரும் பாதியனை,
வெளிவந்த மால்அயனும் காண்பரிய வித்தகனைத்,
தெளிவந்த தேறலைச், சீர்ஆர் பெருந்துறையில்
எளிவந்து இருந்துஇரங்கி என்னரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதும்காண், அம்மானைப்! 18

முன்னினை, மூவர்க்கும் முற்றுமாய், முற்றுக்கும்
பின்னினைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையில்
மன்னினை, வானவனை, மாதியிலும் பாதியனைத்,
தென்னாடனைக், காவானைத், தென்பாண்டி நாட்டானை,
என்னினை, என்னப்பன் என்பார்கட்கு இன்அமுதை,
அன்னினை, அம்பானைப் பாடுதும்காண், அம்மானைப்! 19

பெற்றி பிறர்க்குஅரிய பெம்மான், பெருந்துறையான்,
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வுஅறுப்பான், தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபேர் ஆனந்தம் பாடுதும்காண், அம்மானைப்! 20

திருச்சிற்றம்பலம்

அவனை உள்ளத்தே உருகித் தேடுவேன்; தேடி அவன் திருவடி களையே சிந்திப்பேன்; விரைவில் கிட்டாமையால் மனம் வாடு வேன்; மீண்டும் அவனை நினைந்து மகிழ்வேன்; (இவ்வாறு நான் இருத்தற்குக் காரணமான) நெருப்பை ஏந்தி ஆடும் இறைவனது சிவந்த அடிகளைப் பாடுவோம் அம்மானை! (என்றாள்). (17)

கிளி மொழியின் தன்மையமைந்த மெல்லிய சொற்களை யுடையவளாகிய உமாதேவியின் ஒளி விளங்குகின்ற பாகத்தை யுடையவனை, (காண்போமென்று) வெளிப்பட்டுவந்த திருமால் நான்முகன்களும் காணுதல் அருமையாகிய ஞானவடிவனைத், தெளிந்த தேனைச், சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறையில் எளிதாய் வந்திருந்து இரக்கஞ்செய்து நினைத்தற்கும் அரிதாகிய தனது இனிய கருணையால் ஒளிவடிவாய் வந்து என் மனத்தி னுள்ளே அறிவு ஒளி விளங்கும் வண்ணம் அருளுடனே எழுந் தருளின வேதியனைப் பாடுவோமாக அம்மானை! (என்றாள்). (18)

நான்முகன் திருமால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக் கும் முற்பட்டவனை, எல்லாப்பொருள்களும் தானேயாகி முழுதுக் கும் பிற்பட்டவனை, தலைமுடியால் அழகு பெற்றவனை, (யாவரும்) விரும்புகிற திருப்பெருந்துறையில் நிலைபெற்றவனைத், தெய்வத் தன்மை நிரம்பினவனை, உமாதேவியார் பொருந்திய பாகத்தை யுடையவனைத், தென்றிருவானைக்காவினையுடையவனைத், தென் பாண்டிநாட்டையுடையவனை, எனக்குரியவனை, என் அப்பன் என்பவர்களுக்கு இனிய அமிர்தம்போல்பவனை, எமது தந்தை யைப் பாடுவோமாக அம்மானை! (என்றாள்). (19)

தன் தன்மை பிறர் அறிதற்கரியதாகிய பெருமான், திருப் பெருந்துறையை உடையவன், வெற்றியமைந்த குதிரையின்மீ தேறி எழுந்தருளித் தன்னடியவரது குற்றங்களைப் போக்கிக் குணத்தைப் பாராட்டிச் சீராட்டிச் சூழ்ந்த உறவினரது தொடர் பினை, சேதிப்பவனது பழமையாகிய புகழையே பற்றி இப் பாசத்தைப் பற்றறும்படி நாம் பற்றும்பொருட்டுப் பிடித்த பொன் பத்தைப் பாடுவோமாக அம்மானை! (என்றாள்). (20)

திருச்சிற்றம்பலம்.

9. திருப்பொற்சுண்ணம்

(தில்லையில் அருளியது—ஆனந்த டமேலயம்)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற் றுமம்பூ மாலைதூக்கி,
முழைக்கும் தூபம்நற் றீபம்ஏவம்மின் !
சத்தியும் சோமியும் பார்மகளும்,
நாமக ளோடுபல் லாண்டுஇசைமின் !
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின் !
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும்நாமே ! 1

பூஇயல் வார்சடை எம்பிராற்குப்
பொன்திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்;
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்
வம்மின்கள் ! வந்துடன் பாடுமின்கள் !
கூவுமின் ! தொண்டர்புறம் நில்லாமே
குனிமின் ! தொழுமின் ! எங் கோன்எங்கூத்தன்,
தேவியும் தாணும்வந்து எம்மைஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே ! 2

சுந்தர நீறுஅணிந் தும்மைமுழுகித்
தூயபொன் சிந்தி, நிதிபரப்பி,
இந்திரன் கற்பகம் காட்டிஎங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடிஎடுமின் !
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்,
ஆழியான், நாதன்நல் வேல்ன்தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்தும்நாமே ! 3

9. திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்.

மங்கைமீர்! அழகிய முத்து மாலையையும் பூ மாலையையும் தொங்கவிட்டு முளைப்பாலிகைக் குடத்தையும் தூபத்தையும் சிறந்த திருவிளக்குகளையும் வையுங்கள்; மலைமகளும் திருமகளும் நிலமகளும் கலைமகளோடு திருப்பல்லாண்டு பாடுங்கள்; சித்தியும் கௌரியும் பார்வதியும் கங்கையும் வந்து சாமரம் இரட்டுங்கள்; எமது தந்தையும் திருவையாற்றை உடையவனுமாகிய எமது தலைவனைப் பாடி ஆடுதற்பொருட்டுத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (1)

மாம்பிஞ்சின் பிளவையொத்த கண்களை உடையவர்களே! அழகு பொருந்திய நீண்ட சடையையுடைய எம்பிரானுக்கு அழகிய கதம்பப்பொடி இடிக்கவேண்டும். வாருங்கள்; வந்து எம்முடன் கூடப் பாடுகள்; கூவுங்கள். தொண்டர்களே! வெளியே நில்லாமல் நடியுங்கள்; வணங்குங்கள்; எமது இறைவன், எமது கூத்தப்பிரான் தேவியாரும் தானுமாக எழுந்தருளி எம்மை அடிமைகொள்ளும்பொருட்டுச் செம்பொன்னிறமாகச செய்யப் பட்ட சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (2)

மங்கைமீர்! அழகாகிய திருவெண்ணீற்றை அணிந்து திரு மெழுக்கிட்டுப் பரிசுத்தமாகிய பொற்பொடியைச் சிதறி, கவரிகளைப் பரப்பி, இந்திரனது கற்பகமரத்தை நாட்டி, எவ்விடத்தும் அழகாகிய விளக்குகளை வைத்து, கொடியைப் பிடியுங்கள். இந்திரன், நான்முகன் (இவர்களுக்கு) தலைவனும், சக்கரப் படையையுடைய திருமாலுக்குத் தலைவனும், அழகிய முருகக் கடவுளுக்குத் தந்தையும், எமது இனத்தை ஆண்டருள்கின்ற உமாதேவிக்கு நாயகனுமாகிய சிவபெருமானுக்குப் பொருந்திய திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (3)

காசுஅணி மின்கள்! உலக்கைகளல்லாம்
காம்புஅணி மின்கள்! கறைஉரலே
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக! என்றுவாழ்த்தித்
தேசம் எல்லாம்புகழ்ந்து ஆடுங்கச்சித்
திருஏகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே!

அறுகுஎடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற்று இந்திர னேடுஅமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற்பின்பு அல்லது எடுக்கஒட்டோம்
செறிவுஉடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவல்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகம் எலாம்உரல் போதாதுஎன்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதுஎன்றே
நலக்க அடிநீயாமை ஆண்டுகொண்டு
நாள்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருசனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்தும்நாமே.

சூடகம் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்,
தொண்டர்குழாம் எழுந்து ஆர்ப்பஆர்ப்ப,
நாடவர் நம்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாறும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி ஆர்க்குபமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

மங்கைமீர்! உலக்கைகளுக்கெல்லாம் இரத்தினமாலைகளை அணியுங்கள்; கருங்காலி மரத்தாற் செய்யப்பட்ட உரல்களுக்குப் பட்டுச்சீலையைத் தரியுங்கள்; அன்பையுடைய அடியார்கள் நிலை பெற்று விளங்குகவென்று துதித்துத் தேசமுழுதும் புகழ்ந்து கொண்டாடுகின்ற காஞ்சிமாநகரிலுள்ள திருவேகம்பனது செம் பொற்கோயிலைப் பாடிப், பாசவினைகளைப் பறித்து நின்று பாடித் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (4)

புன்முறுவலோடு கூடிய செவ்வாயை உடையவர்களே! நான்முகனும் திருமாலும் அறுகம்புல் எடுத்தற்கு முற்படுவர். முனைமுனைத்துக்கொண்டு நிற்கும் இந்திரனுடன் எனைய தேவர்களும் ஆகிய எல்லோரும் நமக்குப் பின்னேயன்றி முன்னர் அங்ஙனம் எடுக்கவொட்டோம். நெருக்கத்தையுடைய முப்புரங்களை எய்தழித்த வில்லை உடையவனாகிய திருவேகம்பனது செம் பொற்கோயிலைப் பாடி முக்கண்களையுடைய அப்பனுக்கு ஆதிதற்குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (5)

பெரியோர் உலகமுழுதும் உரலாகக் கொண்டமையால் உள்ள உலக்கைகள் பற்றுதென்று பல உலக்கைகளையும் கைக் கொண்டு ஓங்கி இடிக்கின்றவர்களாயினர். காண்பதற்கு உலகங்கள் பற்றுதென்று அடியார் கலக்கும்படி வந்து நின்றார்கள். நன்மையடைய அடியோமை ஆண்டுகொண்டருளி, புதிய தாமரை மலர்போன்ற திருவடிகளைச் சூடக்கொடுத்த மலையரையனுக்கு மருகனைப் பலகாற் பாடிக் களித்துத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (6)

கை வளைகளும் தோள் வளைகளும் ஒலிக்க ஒலிக்க, தொண்டர் கூட்டங்கள் எழுந்து ஒலிக்க ஒலிக்க, நாட்டார் நம்மை (இகழ்ந்து) ஆரவாரிக்க ஆரவாரிக்க, நாமும் அவர்தம்மை அவர்களை (இகழ்ந்து) ஆரவாரிக்க ஆரவாரிக்க, பாடகம் மென்மையாகிய திருவடிகளில் ஒலிக்கிற உமாதேவிக்குப் பாகந்தந்தவனாகிய எங்கள் பராபரனுக்குப் பெரிய பொன்மலையை நிகர்த்த இறைவனுக்கு ஆம்பொருட்டுத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக.

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர் !
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்துஇலங்கச்,
சோத்துளம் பிரான்என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாள்மலர்ப் பாதங்காட்டி,
நாயிற் கடைப்பட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி,
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி,
மெய்எனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்,
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செப்பொன் உலக்கை வலக்கைபற்றி,
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தம் சிவனெடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்துளம் பிராஎனும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 10

மாடு நகைவாள் நிலாஎறிப்ப,
வாய்திறந்து அம்பல மெம்துடிப்பப்,
பாடுமின் நம்தம்மை ஆண்டஆறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே 11

வாள் போன்ற அகன்று நீண்ட கண்களையும் இளமையையு முடைய மங்கைப்பருவப் பெண்களே! கோடுகளுள்ள வளைகள் ஓரவாரிக்கவும், வளைய கொங்கைகள் பூரிக்கவும், தோள்களிலே தீட்டிய திருநீறு படிந்து விளங்கவும் எம்பிராணுக்கு வணக்கம். பலகாற்சொல்லி மலரும் பருவங்கொண்ட புதிய தாமரை மலர் போன்ற திருவடியைக்காட்டி நாயினுங்கடையாகிய நம்மை இம்மையில் அடிமைகொண்ட விதங்களைப் பலகாற் பாடி ஆடுதற் குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (8)

உலகமுழுதும் உரலாகக்கொண்டு மகாமேருமலை என்கிற உலக்கையை அதன்கண்ணே நட்டு, உண்மை என்கிற மஞ்சளை நிறையப் பூசி மேன்மைபொருந்திய அழகும் நன்மையும் வாய்ந்த தென்னுடையவனாகிய திருப்பெருந்துறையை உடையவனது செம்மையாகிய திருவடியைப் பலகாற் பாடி செம்பொன்னு லமைந்த உலக்கையை வலக்கையிற் பிடித்து ஐயனாகிய அழகிய திருத்தில்லையில் வாழுஞ் சிவபெருமானுக்கு ஆடுதற்குத் திருப் பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (9)

முத்துமாலையணிந்த கொங்கைகள் அசைய அசைய, நெருங் கிய கூந்தலிலுள்ள வண்டுகளின் கூட்டம் ஒலிசெய்ய, மனம் சிவபெருமானிடத்து கலந்து நிற்க, செங்கயல்போன்ற கண்களில் நீர்த்துளி உண்டாக உண்டாக என் காதல் மயக்கம் எம்பிரா னிடத்தும் பொருந்தியிருக்க, பிறவியானது என்னைவிட்டுப் பிற ருடனே கூடி நிற்க, எமது தந்தையாகிய சிவபிரான் கருணை யோடு கூடி விளங்க, அவன் ஆடுதற்குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (10)

பெண்களே! பற்களின் முத்தொளி பாங்கெல்லாம் கதிர் வீசவும், வாய் மலர்ந்து அழகாகிய பவளம்போலும் இதழ்கள் துடிப்பவும் பாடுங்கள்; நம்மை ஆண்டருளின வகையையும் நம்மைத் தொண்டுகொண்டருளின வகையையும் பலகாற் பாடித் தேடுங் கள்; எம்பெருமானைத் தேடி, மனங்களிக்கத் திகைத்து, தெளிந்து ஆடுங்கள்; பொன்னம்பலத்தில் நடனஞ்செய்தவனுக்கு ஆடும் பொருட்டுத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (11)

மைஅமர் கண்டனை, வானநாடர்
மருந்தினை, மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை, ஐயர் பிரானை,நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருளைமகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை, மெய்யர்மெய்யைப்
போதுஅரிக் கண்இணைப் பொற்றொடித்தோள்
பைஅரவு அல்குல் மடந்தைதங்கல்லீர் !
பாடிப்பொற் சுண்ணம் இடிததும்நாமே. 12

மின்இடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்அமர் மென்மொழியீர் !
என்னுடை ஆர்அமுது எங்கள்அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்,
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்,
தமையன்னம் ஐயன் தாள்கள்பாடிட்,
பொன்உடைப் பூண்முலை மங்கைதங்கல்லீர் !
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்புஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலைஆடச்
செங்கனி வாய்இத ழும்துடிப்பச்
சேயிழை யீர் ! சிவ லோகபதாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்(கு) அரிய நலத்தைநந்தாத்
தேனைப், பழச்சுவை ஆயினைனைச்,
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப், பிறப்(பு) அறுத்து ஆண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைதங்கல்லீர் !
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 15

தாமரை மலர்போன்ற செவ்வரி படர்ந்த இரண்டு கண்களையும், பொன் வளையணிந்த தோள்களையும், பாம்பின் படம்போன்ற அல்குலினையும்உடைய மடந்தைப்பருவத்தையுடைய பெண்களே! கருமையமைந்த கண்டத்தை உடையவனே, விண்ணுலகத்தாராகிய தேவர்களுக்கு அமிர்தம்போன்றவனே, மாணிக்கக்கூத்தனே, அந்தணனே, அந்தணர்தம் தலைவனே, நம்மைத் தன்வயப்படுத்தி அடிமைகொண்டு தனதருமையைப் புலப்படுத்தின பொய்யர்க்குப் பொய்யாயிருப்பவனே, மெய்யர்க்கு மெய்யாயிருப்பவனைப் பாடித் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (12)

மின்னற்கொடிபோன்ற இடையினையும், செம்பவளம்போன்ற வாயினையும் கரிய கண்களையும், வெண் பற்களையும், இசை இனிமை தங்கிய மெல்லிய மொழியினையும் உடைய பெண்களே! என்னுடைய அரிய அமிர்தம்; எங்கள் தந்தை; எமது பெருமான்; மலையரையன் மகளாகிய பார்வதிக்குத் தன்னுடைய நாயகன்; மகன்; தந்தை; தமையன் ஆவான் எங்கள் கடவுள். அவனது திருவடிகளைப் பாடி, பொன்னாலாகிய பூண்களை அணிந்த முலைகளையுடைய நலன் அமைந்த மங்கைப்பருவப் பெண்களே! திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (13)

செம்மையாகிய அணிகலன்களை உடைய மாதரே! சங்கவளையல் ஒலிக்கவும். பாதசிலம்புகள் ஒலிக்கவும், நீண்ட கூந்தல் வளைந்த பூமாலையானது அசையவும், சிவந்த கொவ்வைக் கனி போன்ற வாயிதழ்கள் துடிக்கவும், சிவபுரத்தைப் புகழ்ந்து பாடிக் கங்கையாற்றின் ஒலியைக் கேட்டு ஆங்குள்ள பாம்புகள் அஞ்சி ஒலிக்கின்ற தொகுதியாகிய சடைமுடியை உடையவனாகிய சிவபெருமானது திருவடிக்கு மிகுந்த காதலால் கொங்கைகள் விம்மத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (14)

கருங்குவளைபோன்ற பெரிய கண்களையுடைய நலம் வாய்ந்த மடந்தையீர்! அறிவென்னும் கரும்பில் நின்றும் எடுக்கப்பட்ட சாற்றின் தெளிவும், அதனாலாகிய பாகும் நாடி அடைதற்கரிய கனியும், சுவை குன்றாத தேனும் மூப்பழங்களின் சுவையும் என்னும் இவற்றை ஒத்தவனும் மனத்திற் புகுந்து இனிக்கவல்ல தலைவனும், பிறவித்தளையைச் சேதித்து ஆண்டுகொண்டருளின கூத்தப்பிரானும், நாவின்கண் தழும்புண்டாகத் துதித்துப் பாடித் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (15)

ஆவகை நாமும்வந்து அன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கணவிலும் கண்டறியாச்
செம்மலர் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான,புரம் செற்றகாற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செப் சுண்ணம் இடித்தும்நாமே 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்,
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி, வலக்கைவந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி,
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனகம் ஆகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 17

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி,
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்,
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்,
காலனைக் காலால் உதைத்தல்பாடி,
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி,
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடிஆடி,
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி,
மத்தமும் பாடி மதியும்பாடிச்,
சிட்டர்கள் வாழ்ந்தென் றில்லைபாடிச்,
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்,
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி,
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 19

உய்யும் வண்ணம் யாமும் வந்து அன்பரோடு கூடி அடிமை செய்யும் திறங்களைப் பாடி, விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் கனவிலும் கண்டுணராத செந்தாமரை மலர்போலும் திருவடிகளை (எமக்கு) காட்டுகின்ற செல்வமாகிய வீரத்தைத்தாங்கிய வெற்றிக் கொடியை உடையவன், சிவபெருமான், மும்புரங்களை அழித்த வெற்றியையுடைய மகாவீரன்; (அவனது) திருப்பெயர்களைப் பலதாமும் பாடிப் புகழ்ந்து திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (16)

தேனைத் தன்னுட்கொண்ட பெருமையமைந்த கொன்றை மலர் மாலையைப் பாடி, சிவலோகத்தைப் பாடி, அழகாகிய சடையின்மேல் உள்ள விண்ணுலகை இடமாகவுடைய பெருமையமைந்த இளஞ்சந்திரனைப் பாடிப், பெரிய இடபத்தைப் பாடி, வலக்கையில் தாங்கிய உளுக்கிடமாகிய மழுசூலத்தைப் பாடி, விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் பிழைக்கும்வண்ணம் அந்நாளில் விடத்தை உணவாகவுண்ணுதலைப் புகழ்ந்து பாடித் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (17)

பிரமன் தலையைக்கிள்ளி அதைக்கொண்டு பந்தாடுதலைப் பாடி, சூரியன் பல்லையுடைத்தமையைப்பாடி, யானையைக்கொன்று அதன் தோலைப்போர்த்துக்கொள்ளுதலைப் பாடி, யமனைத் திருவடியால் உதைத்தலைப் பாடி, ஒருங்குசேர்ந்துலாவிய திரிபுரங்களை அம்பெய்து அழித்தலைப் பாடி ஏழையடியேங்களை ஆண்டுகொண்டருளின, நன்மையைப் பாடி நின்று நடித்து நடித்து இறைவனுக்குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (18)

வட்ட வடிவாகிய கொன்றைமலர் மாலையைப் பாடி, ஊமத்தை மலரையும் பாடிப் பிறையையும் பாடி, புலவர்கள் வாழ்கின்ற தென் தில்லைகளைப் பாடித் திருச்சிற்றம்பலத்திலுள்ள எமது செல்வமாகியோனைப் பாடி, அவன் அரையிலே கட்டிய பெரும் பாம்புக்கச்சையைப் பாடிக், கையிற்கட்டிய பாம்புக் காப்பினைப் பாடி, கவித்த கையின் மேலே அணியப்பட்டுப் படம் விரித்து ஆடுகின்ற பாம்பைப் பாடி ஈசனுக்குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (19)

வேதமும் வேள்வியும் ஆயினர்க்கு,
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினர்க்குச்,
சோதியும் ஆய்இருள் ஆயினர்க்குத்
துன்பமும் ஆய்இன்பம் ஆயினர்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினர்க்குப்
பகலுமை ஆயவ்விடும் ஆயினர்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினர்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 20

திருச்சிற்றம்பலம்.

வேதங்களும் அவற்றிற் சொல்லப்படுகிற வேள்விகளும் ஆனவர்க்கு, மெய்யும் பொய்யும் ஆனவர்க்கு, ஒளியும் இருளும் ஆனவர்க்கு, துக்கமுமாகிச் சுகமும் ஆனவர்க்கு, பாதியுமாகி முழுதுமானவர்க்கு, பந்தப்பொருள்களாகி வீடுமானவர்க்கு, முதலும் இறுதியுமானவர்க்கு ஆடுதற்குத் திருப்பொற்சுண்ணத்தை நாம் இடிப்போமாக. (20)

திருச்சிற்றம்பலம்.

10. திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது—சிவனேடு ஐக்கியம்)

(நாலடித்தாழிசை கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றாதாய் கோத்தும்பீ! 1

நான்யார்என் உளமமர ஞானங்கள ஆனனீ யார்
[அறிவார்,
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊன்ஊர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேன்ஊர் கமலமே சென்றுளதாய் கோத்தும்பீ! 2

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே,
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்(பு) உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றுளதாய் கோத்தும்பீ! 3

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்அப்பன் என்ஒப்பில் என்னையுப ஆட் கொண்டருளி,
வண்ணப் பணித்தென்னை வானென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றுளதாய் கோத்தும்பீ! 4

அத்தேவர் தேவர், அவர்தேவர், என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றுளதாய் கோத்தும்பீ! 5

10. திருக்கோத்தும்பி

திருச்சிற்றம்பலம்.

அரசவண்டே! தாமரைப்பூவிலமர்ந்தருளிய நான்முகனும், இந்திரனும் அழகமைந்த நான்முகனது நாவிலேறிய செல்வியாகிய சரசுவதியும், திருமாலும், நான்கு வேதங்களும், திருமகள் ஏறி அமரும் செங்கதிர்ச் சோதியும், மற்றுமுள்ள தேவர்களும் கண்டறியாத காலையிலே ஏறி ஊர்ந்த திருவடிக்கே போய் ஒலித்து அதனை நீ நுகர்வாய். (1)

அரசவண்டே! தேவர்பெருமான் என்னை ஆண்டருளிலையின், நான் யார்? என் மனம் யார்? ஞானங்கள் யார்? என்னை அறிபவர் யார்? (இவை யாவு மில்லையாம்; ஆதலால்) அறிவு மயக்கங்கொண்டு நிறைந்த உடைந்த தலைப்பாத்திரத்தில், உண்ணுதற்குரிய பிச்சையை ஏற்கின்ற பொன்னம்பலவனது தேன் பொருந்திய தாமரை மலர்போலுந் திருவடியின்கண்ணே போய் ஒலித்து அதனை நுகர்வாய். (2)

அரசவண்டே! தினையளவுள்ளதாகிய ஒரு மலரின் தேனையு முண்ணுமல் நினைக்குந்தோறும் பார்க்குந்தோறும், பேசுந்தோறும், (ஆகிய) எக்காலத்தும், எலும்புகளெல்லாம் உள்ளே நெகிழும் வண்ணம் இன்பத்தேனைப் பொழிகின்ற கூத்துடையவனுக்கே, போய் தூதாகச் சென்று அவன் திருவடிமலரை ஊதுவாயாக. (3)

அரசவண்டே! திருக்கண்ணப்ப தேவரைப்போல் ஒப்பற்ற அன்பு எனக்கு இல்லாமையைக் கண்ட பின்னும் என் அப்பனாகி, எனக்குச் சமானமில்லாத அடியேனையும் அடிமைகொண்டருளி நன்னெறியில் ஒழுகுமாறு கட்டளையிட்டு, என்னை வாவென்றழைத்த பெருங்கருணையையுடைய பொடியாகிய பொன் மயமாகிய திருவெண்ணீறுடையான்பால் தூதாகச் சென்று ஊதக் கடவாய். (4)

அரசவண்டே! அந்தத் தேவரே தேவர்; அவரே முதல் தெய்வமாவர் என்று இவ்வாறு கடவுள் இயல்பு இல்லாத கடவுளைப் பற்றிப் பேசிப் புலம்பாநின்ற நிலவுலகத்தின்கண்ணே, பற்றுச் சிறிதுமின்றி, என் பிறவிப் பற்றற்றொழிய, நான் பிடித்து நின்ற மெய்யாகிய மகாதேவர்க்கே தூதாகச் சென்று போய் அவன் திருவடிமலரை ஊதக்கடவாய் (5)

வைத்த நிதிபெண்டீர், மக்கள்குலம் கல்வினென்னும்
பித்த உலகிற் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றுஊதாய் கோத்தும்பீ !

சட்டோ நினைக்க மனத்தழுதாம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனே ? கேடுபடாத் திருஅடியை,
ஒட்டாத பாவித் தொழும்பனைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ !

ஒன்றுப் பலஎத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றுக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றுத செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ ! 8

காணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென்று இவைஇரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ ! 9

நோய்உற்று மூத்துநான் நுந்துகன்றுப் இங்கிருந்து
நாய்உற்ற செல்வம் நயந்தறியா வண்ணம்எல்லாம்
தாய்உற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேய்உற்ற செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ ! 10

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னுடைத்,
கல்நெஞ்சு உருக்கிக் கருணையினல் ஆண்டுகொண்ட
அன்னம் நினைக்கும் அணிதில்லை அம்பலவன்,
பொன்அம் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ ! 11

அரசவண்டே! தேடிவைத்த செல்வம், மனைவிகள், சிறுவர், குலம், கல்வி என்னும் இவை தம்மில் மயங்கும் மயக்கநோய் கொண்ட இவ்வுலகத்தில், பிறப்பிறப்புகளென்கின்ற மனவேறு பாடாகிய குழப்பத்தைத் தெளியச்செய்த ஞானவடிவாகிய தேவருக்கே தூதாகச் சென்று ஊதுவாயாக. (6)

அரசவண்டே! சற்று நினைக்கவே, நினைத்த மனத்தில் அமிர்தமாகின்ற சங்கரனை, கெட்டேனுகிய நான் மறந்தொழி வேனே? அழிவு பொருந்தாத, திருவடியை அடையவொட்டாத பாவித் தொண்டனை யாம் உருவமறியோம்; மேன்மையாகிய பெரியோனுக்கே, போய் ஊதுவாயாக (7)

அரச [illegible]

கினைகள் விட்டு, நன்மையுண்டாக வைத்து நாய்போலும் அடியேனைச் சிவிகையிலேற்றுவித்த என் தந்தை தந்தைக்கும், எமது தாய்க்கும், தலைவனுகிய குறையாத செல்வத்தை உடையவனுக்கே போய் ஊதக்கடவாய். (8)

அரசவண்டே! அந்தக்காரணங்கள் எல்லாவற்றையும் அப்பாற்பட்டுநின்ற கஞ்சு தங்கிய கழுத்தையுடையவனது திருவடிகளையே சென்றடைதலுமே, தான் அடியேனுக்கு இறப்புப் பிறப்பென்று சொல்லப்பட்ட இவை இரண்டினுடைய மயக்கத்தைப் போக்கிய கருணைக்கடலுக்கே போய் ஊதுவாயாக. (9)

அரசவண்டே! நோயையடைந்து மூப்படைந்து யான் தாய்ப்பசுவால் தள்ளப்பட்ட கன்றுபோல, இவ்விடத்திருந்து நாயினேன் மிக்க செல்வத்தை விரும்பி அறியாத விதங்களெல்லாவற்றையும் கொடுத்து, தாய்போன்று எழுந்தருளி, அடியேனை ஆண்டுகொண்டருளின தட்பமாகிய கருணையென்னும் ஒளிமிகுந்த செல்வனுக்கே போய் ஊதுவாயாக. (10)

அரசவண்டே! வன்மையாகிய நெஞ்சினையுடைய கள்ளன், மனைபாவத்தாலும் வலியன் என்று நீக்காமல், என் கருங்கல்லை நிகர்த்த மனத்தை உருகச்செய்து, தன் பெருங்கருணையால் ஆண்டுகொண்டருளின, அன்னமானது தன் பேடுகளுடன் விளையாடும் அழகிய தில்லைச்சிற்றம்பலவனது பொற்கழலணிந்த திருவடியிலே போய் ஊதுவாயாக. (11)

நாயேனைத் தன் அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையினைச்
சீ எதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாய் ஆன ஈசற்கே சென்றுஉஊதாய் கோத்தும்பீ! 12

நான் தனக்கு அன்பின்மை நானும்தானும் அறிவோம்;
தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாம் அறிவார்
ஆன கருணையும் அங்குஉற்றே தான் அவனே
கோன் என்னைக் கூடக் குலிர்ந்துஉஊதாய் கோத்தும்பீ! 13

கருவாய், உலகினுக்கு அப்புறமாய், இப்புறத்தே,
மருவார் மலர்க்குழல் மாதிணைடும் வந்தருளி,
அருவாய், மறைபயில் அந்தணனாய், ஆண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றுஉஊதாய் கோத்தும்பீ! 14

நானும்என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்?
தானும்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றுஉஊதாய் கோத்தும்பீ! 15

உள்ளப் படாத திருஉருவை உள்ளுதலும்,
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான், எம் பிரான், என்னை வேறுஆட்-
கொள்அப் பிரானுக்கே—சென்றுஉஊதாய் கோத்தும்பீ! 16

பொய்ஆய செல்வத்தே புக்குஅழுந்தி, நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை, ஆட்கொண்ட
ஐயா! என் ஆர்உயிரே! அம்பலவா! என்றுஅவன்-தன்
செய்ஆர் மலரடிக்கே—சென்றுஉஊதாய்; கோத்தும்பீ! 17

அரசவண்டே! நாயினேனைத் தன் திருவடிகளைப் பாடச் செய்த தலைவனை, பேயை நிகர்த்தவுகிய எனது மனக்குற்றங் களைப் பொறுத்தருள்கின்ற பெருமையையுடையவனை, இகழ்ச்சி சிறிதுமின்றி நான் செய்கிற தொண்டுகளை ஏற்றருளுகின்ற தாய் போன்ற சீசன்பால் தூதுசென்று அவன் திருவடிமலரை ஊதாய்.

அரசவண்டே! நான் அவன்மாட்டு அன்பில்லாதிருத்தலை நானும் அவனுமே அறிவோம்; பிறர் அறியார். அவன் என்னை ஆட்கொண்டருளினதை எல்லாரும் அறிவார்கள். ஆதலால், உண்டாகிய கருணையும் அவ்விடத்து மிகுந்ததே. தாயுகிய அவனே இறைவுரைக எழுந்தருளி என்னைச் சேரக் குளிர்ந்து அவன்பாற் சென்று அவன் திருவடிமலரை ஊதாய். (13)

அரசவண்டே! உலகத்திற்குப் பிறப்பிடமாய் அப்பாற் பட்டதுமாகி, இவ்விடத்தில் மணம் நிறைந்த மலையணிந்த கூந்தலையுடைய உமாதேவியாரோடும் எழுந்தருளி, அருவாகி வேதங்களை ஓதுகின்ற வேதியனுகி, என்னை ஆண்டுகொண் டருளிய அழகாகிய தேவர்பால் தூதாகச் சென்று அவன் திருவடி மலரை ஊதாய். (14)

அரசவண்டே! நீண்ட சடையையுடைய சிவபெருமான் தானும் தன் தேவியுமாக எழுந்தருளி, ஆண்டலனையின் நானும் என்னுடைய மனமும் எமது தலைவனுக்கு எத்துணைச் சேயதான இடத்திலிருந்து உழல்வேமோ? ஆகாயமும், திக்குகளும் பெரிய கடல்களும் ஆகிய உபகாரகுணமுடையோனது தேனைச் சொரி கின்ற திருவடிமலரை ஊதுவாயாக. (15)

அரசவண்டே! நினைக்கவொண்ணாத திருவுருவத்தை நினைத் தலும், ஒளிக்காத களிப்பு மிகுந்த மேலாகிய கருணைப்பெருக்கை யுடைய எம்பிரானுமாகி என்னைத் தனிமையில் ஆட்கொள்ளத் தூது சென்று அவன் திருவடிமலரை ஊதாய். (16)

அரசவண்டே! பொய்யாகிய செல்வத்தின்கண்ணே சென் றழுந்தி தினந்தோறும் அதுவே உண்மைச்செல்வமென்று எண் ணிக்கிடந்த என்னை அடிமைகொண்ட ஐயனே, என் அரிய உயிரே! பொன்னம்பலவனே! என்று துதித்து, அவனது செந்நிறம் பொருந்திய தாமரை மலர்போன்ற திருவடிக்கே போய் ஊதுவாயாக. (17)

தோலும், துகிலும்; குழையும், சுருள்தோடும்;
பால்வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும், பைங்கிளியும்,
சூலமும்; தொக்க வளையும்; உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துளதாய் கோத்தும்பீ ! 18

'கள்வன், கடியன், கலதி, இடுவன்' என்னுதே,
வள்ளல், வரவர வந்தொழிந்தான் என்மனத்தே;
உள்ளத் துறுதுயர், ஒன்றொழியா வண்ணம், எல்லாம்
தெள்ளும் கழலுக்கே—சென்றுளதாய்; கோத்தும்பீ ! 19

பூமேல் அயனொடு மாலும் புகல்அரிதுஎன்று
ஏமாறி நிற்க, அடியேன் இறுமாக்க,
நாய்மேல் தவிசுஇட்டு நன்றருப்பப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே—சென்றுளதாய்; கோத்தும்பீ ! 20

திருச்சிற்றம்பலம்.

அரசவண்டே! தோலும், ஆடையும், குண்டலமும் சுருண்ட காதணியும், பால்போலும் வெண்மையாகிய திருவெண்ணீறும் பசுமையாகிய சந்தனமும், பசிய கிளியும் சூலமும் திரண்ட வளையலும் (ஆகிய இவற்றை) உடைய பழமையாகிய திருக்கோலத்தையே நோக்கி மனம் குளிர்ந்து அவனுடைய மலரடியை ஊதுவாயாக. (18)

அரசவண்டே! கள்ளன், கொடியன், மூதேவி, இவனென் றிகழாமல், அருட்கொடையாளனாகிய சிவபிரான் நாளுக்குநாள் என் மனத்தின்கண்ணே வந்து நீங்கிவிட்டான். மனத்திற் பொருந்திய துன்பங்களெல்லாவற்றையும் தானே தெளிந்து கொள்ளும் திருவடிக்கே போய் ஊதுவாயாக. (19)

அரசவண்டே! தாமரை மலர்மேலிருக்கின்ற பிரமனோடு திருமாலும் சொல்லுதல் அரிதாமென்று தடுமாறி நிற்கவும், தொண்டனேன் இறுமாக்கவும், நாய்போல்வேனை மேலாகிய இருக்கையில் வைத்து நன்மையாக என்னை ஒருபொருளாகக் கொண்ட, நெருப்புப்போலுந் திருமேனியை உடையவனாகிய சிவபெருமானுக்கே தூதாகச் சென்று அவன் திருவடிமலரை ஊதுவாயாக. (20)

திருச்சிற்றம்பலம்.

11. திருத்தெள்ளேணம்

(தில்லையில் அருளியது—சிவனேடனைவு)

(தாவுகோச்சகக் கலிப்பா.)

திருச்சிற்றம்பலம்.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுஉணராத் திருவடியை,
உருநாம் அறிய ஓர் அந்தணனைய் ஆண்டுகொண்டான்,
ஒருநாமம், ஓர்உருவம், ஒன்றும்இல்லாற்கு; ஆயினும்
திருநாமம் பாடி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 1

திருஆர் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின், பாவரையும் கண்டதுஇல்லை
அருவாய், உருவமும் ஆயபிரான், அவன்மேவும்
திருஆரூர் பாடி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 2

அரிக்கும், பிரமற்கும், அல்லாத தேவர்கட்கும்,
தெரிக்கும் படித்துஅன்றி நின்றசிவம், வந்து,நம்மை
உருக்கும், பணிகொள்ளும் என்பதுகேட்டு, உலகம்எலாம்
சிரிக்கும் திறம்பாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 3

அவம்ஆய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவ-மாயம் காத்துஎன்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி!
நவம்ஆய சென்சுடர் நல்குதலும், நாம்ஒழிந்து,
சிவம்ஆன ஆபாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 4

அருமந்த தேவர், அயன்,திருமாற்கு அரியசிவம்,
உருவந்து, பூதலத்தோர் உகப்புஎய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த ஆபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 5

11. திருத்தெள்ளேணம்

திருச்சிற்றம்பலம்.

திருமாலும் பன்றியுருவாகி நிலத்தைப் பிளந்து சென்றும் அறியாத திருவடியை வடிவத்தோடு யாம் அறியும்வண்ணம் ஒரு வேதியனாகி வந்து ஆண்டுகொண்டருளினவனுய் ஒரு பெயர் ஒரு வடிவம் என்பது ஒன்றுமில்லாதவனாகிய சிவபெருமானுக்கு ஆயிரம் திருப்பெயர்கள் அமைத்துப் பாடி யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (1)

அழகு நிறைந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளிய தலைவனாகிய சிவபிரான் என் பிறவிக்கு மூலமாயிருக்கிற இருவினைகளையும் வேரறுத்த பின்னர் நான் ஒருவரையும் பார்த்திலேன்; அருவமாகி உருவமுமாயிருக்கிற பிரானாகிய அவன் எழுந்தருளியிருக்கிற திருவாரூரைப் பாடி யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (2)

திருமாலுக்கும் நான்முகனுக்கும் அவையல்லாத மற்றைத் தேவர்களுக்கும் (இன்னபடியென்று) தெரிவிக்கும்படியான தன்மையதல்லாமல் நின்ற சிவமே வந்து எம்மை மனமுருக்கும்படியான தொண்டுகொள்ளும் என்பதைக் கேட்டு உலகத்தார் எல்லாரும் நகைக்கும் விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம். (3)

வீணாகிய தேவாது பயனற்ற கதிகளிற் சேராமல் பிறவி மாயத்தைத் தடுத்து என்னை அடிமைகொண்டருளின பரஞ்சுடரானது புதுமையாகிய செவ்விய திருவருள் ஒளியைக் கொடுத்தலும் அச்சம் நீங்கி, சிவமான விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம். (4)

அரிய மருந்துபோன்ற, தேவர்கள், நான்முகன், திருமால் என்னும் இவர்களுக்கு அருமையாகிய சிவமானது, உருவோடு எழுந்தருளி, நிலவுலகத்தார் களிப்படைய எம்மை அடிமைகொண்டருளி, என் பிறவித்தொடர் வெந்து விழும்படி, கடைக்கண்ணால் நோக்கி, என் மனத்திற் புகுந்ததனால், மேன்மையுண்டான விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம். (5)

அரைஆடும் நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரைஆடு மங்கைதன் பங்கொடும்வந்து ஆண்டதிறம்
உரைஆட உள்ஒளிஆட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரைஆடு மாபாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 6

ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் காரியசிவன்
வாவான் றென்னையும் பூதலத்தேவலித் தாண்டுகொண்
பூவார் அடிச்சுவடென் தலைமேற் பொறித்தலுமே, [டான்
தேவான வாபாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 7

கறங்கோலே போல்வதோர் காயப்பிறப்போடு இறப்
[பென்னும்
அறம்பாவம் என்றிரண்டு அச்சம்தவிர்த்தென்னை ஆண்டு
[கொண்டான்
மறந்தேயும் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கியதத்
திறம்பாடல் பாடி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 8

கல்நார் உரித்தென்ன என்னையும்தன் கருணையினல்
பொன்னார் கழல்பணித்து ஆண்டபிரான் புகழ்பாடி,
மின்நேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்!
தென்ன,தென் ன,என்று—தெள்ளேணம் கொட்டாமோ!

கனவேயும் தேவர்கள் காண்பரிய கனகழலோன்
புனவேய் அனவரைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத்—தெள்ளேணம் கொட்டாமோ! 10

படம் விரித்து ஆடமியல்புள்ள பாம்பைக் கட்டினபிரான், பூமியின்மீது மலைமகளாகிய உமாதேவி பாகத்தோடும் வந்தாண் டருளின விதத்தைச் சொல்லவும், எம் மனத்தின்கண் ஒளி விளங்கவும், ஒட்பமாகிய அழகிய தாமரைமலர்போலும் கண்களில் நீரானது அலவீசும் விதத்தைப் பாடி, யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (6)

அந்தோ! திருமால் நான்முகன் இந்திரன் மற்றைத் தேவர் கள் ஆகிய இவர்களுக்கு அருமையாகிய சிவபெருமான், 'வருக, வருக' என்று ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் இந்நிலவுல கத்தின்கண்ணே வலிய வந்து ஆட்கொண்டருளித் தாமரை மலர் போன்ற திருவடிச்சுவட்டை என் தலையின்மீது நாட்டுதலும் எனக்குத் தெய்வத்தன்மையுண்டானவிதத்தைப் பாடித் தெள் ளேணம் கொட்டுவோம். (7)

காற்றிற் சுழலுகிற ஓலக்காற்றுடி போல்வதாகிய ஒப்பற்ற உடம்பின் தோற்றத்துடன், கேடு எனவும் புண்ணிய பாவம் எனவும் கூறப்படும் இரண்டு பயங்களையும் நீக்கி என்னை அடிமை கொண்டருளினன். மறந்தாயினும், அவனது திருவடியை நான் மறவாத விதத்தை அருளிய அந்தப் பெருங்குணத்தைப் பாட லாகப் பாடி, யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (8)

மின்னற்கொடியை நிகர்த்த, துவள்கின்ற இடையினையும் செம்மையாகிய பவளம்போலும் அதரத்தையும் வெள்ளிய முறு வலையும் உடைய மாதர்களே! கல்லில் காரையுரித்தாற்போல (மனவலியழகிய) அடியேனையும் தன் அருளினல் பொன்போலும் அருமையாகிய திருவடியை வணங்குவித்து ஆண்டருளின பெரு மானது புகழைப்பாடி, 'தென்ன தென்ன!' என்று தெள்ளேணம் கொட்டுவோம். (9)

கனவிலாயினும் தேவர்கள் காணவியலாத ஒலிக்கின்ற வீரக் கழலைத் தரித்த திருவடியையுடையவன் காட்டில் வளரும் மூங்கிலை நிகர்த்த தொடியணிந்த தோள்களையுடையவளாகிய உமாதேவியோடும் எழுந்தருளி நனவின்கண்ணே என்னைப்பற்றி ஆண்டுகொண்ட விதத்தை மனத்தால் விரும்பிக் கோபத்தை யுடைய வேல்போன்ற கண்களில் நீர் நிறையத் தெள்ளேணம் கொட்டுவோம். (10)

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்எனைக்கலந் தாண்டதுமே,
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும்மாண்(டு) அவனியின்
[மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்(டு) என்னுடைய
செயல்மாண்ட ஆபாடித்–தெள்ளேணம் கொட்டாமோ! 11

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி!
தித்திக்கும் ஆபாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 12

பார்பாடும் பாதாளர் பாடும்விண்ணோர் தம்பாடும்,
ஆர்பாடுஞ் சாரா வகைஅருளி ஆண்டுகொண்ட
கோர்பாடல் பாடி, நினைப்பரிய தனிப்பெரியோன்,
சீர்பாடல் பாடி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 13

மாலே, பிரமனே, மற்றெழிந்த தேவர்களே,
நூலே, நுணுழவரியான் நுண்ணியனே வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேல்ஏர்கண் நீர்மல்கத்—தெள்ளேணம் கொட்டாமோ! 14

உருகிப் பெருகி உளம்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 15

புத்தன் புரந்தரா தியர்அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தஆ—தெள்ளேணம் கொட்டாமோ! 16

சேற்கெண்டையைப்போன்ற மாட்சிமைப்பட்ட கண்களை யுடையவளாகிய உமாதேவியைப் பாகத்தில் உடைய கடவுள் என்னை வலிய வந்து கூடி ஆண்டருளுதலும், அயலாரொழியப் பெற்று, அரிய வினைவயத்தான் வந்து கூடின உறவு அற்று, பூமியின்மீதுள்ள ஆசாபாசங்களும் அற்று, மற்றுமுள்ள சொற்கள் அன்று என்னுடைய செய்கையும் அற்றவிதத்தைப் பாடித் தெள் ளேணம் கொட்டுவோம். (11)

பற்றற்ற முனிவர் கூட்டங்கள் வீடுபேற்றின்பொருட்டு உழன்று மிகவும் வாடாநிற்க, அத்தியென்னும் சிவகணைத் தலைவ னுக்கு முத்தி அருள்செய்து அடியேனையும் ஆண்டுகொண்டருளிப் பத்தியாகிய கடலில் அழுத்திய மேலான பரஞ்சுடர் எமக்கு இனிக்கும் விதத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம். (12)

பூலோகத்தாரிடத்தும், பாதாளலோகத்தாரிடத்தும் தேவ லோகத்தாரிடத்தும் எவரிடத்திலும் (சென்று) சோராத வகையினை அருள்செய்து அடிமையாக்கிக் கொண்டருளின இறைவனது நேர்மையைப் புகழும் பாடலைப் பாடி நினைப்பதற்கு அருமையாகிய நிகரற்ற அந்தப் பெருமானுடைய அருமைப்பாக்களைப் பாடி யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (13)

திருமாலும் நான்முகனும் மற்றுமுள்ள தேவர்களும் நூல் களும் அறியமுடியாத அருமையுடையவன், எளியவனுப்க் கையிலையை விட்டெழுந்தருளி அடியேன் பக்கல் வந்து, அன்பின் மிகுதியால் இரங்கி, மனமுருகுகின்ற (அவனது) பெருமை தங்கிய இயல்பால் சேற்கெண்டையைப்போன்ற அழகாகிய (இரண்டு) கண்களில் நீர் ததும்ப, தெள்ளேணம் கொட்டுவோம்.

உருகிப் பெருக்கமடைந்து மனங்குளிர மொண்டுகொண்டு பருகுதற்கு இனிமையாகிய பெருங்கருணை அகண்ட கடல்போல் பவனைச்சேர்ந்து அத்தென்னவனது பெருமைதங்கிய அடிகளையே எண்ணி அடியோமுடைய அடையும் பாக்கியத்தைத் துதிசெய்து நாம் தெள்ளேணம் கொட்டுவோம். (15)

எப்போதும் புதுமையை உடையவன் தேவர்கோனுகிய [illegible] திருமாலும் வணங்கித் துதிசெய்கின்ற [illegible] பித்தன்; திருப்பெருந்துறையனனும [illegible] கருணைகூர்ந்து எழுந்தருளிய பிரான்; (எமது) பிறவித்தளையைச் சேதித்த எமது தந்தை, பலவித அணிகலன்களால் அழகு செய்யப் பட்ட திருத்தில்லை அம்பலத்தான் அவனுடைய அருளுருவமாகிய திருவடிகள் எம் மனம் புகுந்தவிதத்தைக் குறித்துத் தெள்ளேணம் கொட்டுவோம். (16)

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரங்கள்
சவலைக் கடலுளணைப்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 17

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுன்என் உள்ளமும்
[போய்
நான்கெட்ட ஆபாடித்—தெள்ளேணம் கொட்டாமோ! 18

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து,
மண்ணோர் மருந்துஅயன் மாலுடைய வைப்புஅடியோம்
கண்ணைவ வந்துநின்றுன் கருணைக் கழல்பாடித்
தென்ன, தென்ன,என்று—தெள்ளேணம் கொட்டாமோ!

குலம்பாடிக், கொக்கிற கும்பாடிக், கோல்வளையாள்
தலம்பாடி, தஞ்சுஉண்ட ஆபாடி, நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடி,நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! 20

திருச்சிற்றம்பலம்.

சாரமற்ற சமயங்களில் உள்ள ஒன்றுக்கொன்று ஒவ்வாத சாத்திரங்களாகிய ஆரவாரக் கடலிடைப்பட்டவனுய்க் கிடந்து வளர்தற்கியலாது சவலையனுய்த் தடுமாறுகின்ற என் கவலையை ஒழித்துத் தன் கழலணிந்த திருவடிகளைத் தந்தருளுகின்ற திருவருட்செயலைத் துதித்து தெள்ளேணம் கொட்டுவோம். (17)

ஆகாயமானது அழிந்து, வாயு அழிந்து, தீயும் நீரும் பூமியும் அழிந்தாலும், தான் அழிதலின்றிச் சலித்தலைத் தெரியாத தன்மையையுடையானுக்கு உடல் அழிந்து ஆவியொழிந்து அறிவழிந்து எனது மனதும் அழிந்து நானும் கெட்ட விதத்தைச் செப்பித் தெள்ளேணம் கொட்டுவோம். (18)

தேவர்கட்கு முழுமுதலோன்; பாதாள லோகத்தாருக்கு விதையாயிருப்பவன்; பூலோகத்தாருக்கு மருந்தாயிருப்பவன்; நான்முகனும் திருமாலும் தமக்கெனவுடைய பொருளாயிருப்பவன்; அடியேன் இருகண்களாற் பார்க்க எதிரே அன்புகூர்ந்து நின்றனன். (ஆதலால்) அவனது பெருங்கருணை வடிவாகிய இரண்டு திருவடிகளையும் துதிசெய்து, 'தென்னை, தென்னை!' என்று புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோம். (19)

குலத்தின் மேன்மையைப் புகழ்ந்து கொக்கிறகையும் புகழ்ந்து நவமணிகளுமிழைத்த அழகிய வளையல்களையுடையவளாகிய உமையவளின் நலத்தினைப் புகழ்ந்து உட்கொண்ட விதத்தைப் புகழ்ந்து தினை தினை ஒவித்தலையும் நிறைவையையுமுடைய நீர் ஓடை சூழ்ந்த திலதைப்பதியின்கண்ணே ஆநந்தக் கூத்தாடுகின்ற சிலம்பு ஆடலைப் புகழ்ந்து யாம் தெள்ளேணம் கொட்டுவோம். (20)

திருச்சிற்றம்பலம்

12. திருச்சாழல்

(தில்லையில் அருளியது—சிவனுடைய காருணியம்)

(நாலடித்தாவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காண்,ஏடீ!
பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும், கொண்டென்னை
ஈசன் அவன், எவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ! 1

என் அப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
தன்னம்பெய் கோவணமாக் கொள்ளும்அது என்,ஏடீ?
மன்னுகலை தன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ! 2

கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல்ஆடை,
தாயுமிலி, தந்தையிலி, தான்றனியன், காண்,ஏடீ!
தாயுமிலி, தந்தையிலி, தான்தனியன்; ஆயிடினும்
காயில், உலகினைத்தும் கற்பொடிகாண், சாழலோ! 3

அயனை, அரங்கனை, அந்தகனைச், சந்திரனை,
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காண்,ஏடீ!
நயனங்கள் மூன்றுடைய நாயகனை தண்டித்தால்,
சயம்அன்றே, வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ! 4

தக்கனையும் எச்சனையும் தலைஅறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்,ஏடீ?
தொக்கன வந்தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்

எச்சனுக்கு மிகைத்தலைமற்று அருளினன்காண், சாழலோ

12. திருச்சாழல்

(சாழல்—மகளிர் விளையாட்டில் ஒன்று.)

ஏடீ, தோழீ! திருமேனியிற் பூசிக்கொள்வதும் அழகிய வெண்ணீறு திருமேனியில் அணிவதுவும், சீறுகின்ற பாம்பு அழகிய வாயிறற் சொல்வதும் வேதம்போலும் காண்பாயாக. வெண்ணீறு பூசுவதையும், சொல்வதையும் அரவம் பூண்பதையும் கொண்டதனல் யாது பயன்! எப்பொருட்கும் இறைவனுகிய அவன் எவ்வகைப்பட்ட ஜீவராசிகட்கும் இயல்பாகவே இதஞ் செய்பவனையிருக்கிறன் சாழலோ! 1

ஏடீ, தோழீ! எனது தந்தை; எனது பிரான்; யாவருக்கும் தானே இறைவனுக இருப்பவன்; அத்தகைய பரமன், தைத்த துணியை உடுப்பதற்குக் கோவணமாக ஏற்றுக்கொள்ளுகின்ற தன்மை யாது? நிலபெற்றேங்குங் கலைகளும், பெருமைதங்கிய பலவித பொருள்களடங்கின வேதங்கள் நான்கும் மேம்பாடு பொருந்திய சரடாக அதனையே கோவணமாகத் தரித்துக்கொண் டருளினன்; அதனை அறிவாயாக சாழலோ! (2)

ஏடீ, தோழீ! (இறைவனுகிய பரமசிவனுக்கு) வாசஸ்தலமா யிருப்பது சுடலை; மேன்மைதங்கிய ஆடையாயிருப்பது கொல்லப் படுகின்ற (ஊன் நீங்கிய) புலியின் தோல்; (தன்னைப்) பெற்ற தாயும் இல்லாதவன்; பிதாவும் இல்லாதவன்; தான் தனியே இருப்பவன், பாரேடி! (அவ்வாறு) தாய் தந்தையர்களையும் இல்லாதவனைத் தான் வேறொரு உதவியில்லாதவனையினும் (அவன்) ஒரு காலத்திற் கோபித்தால் எல்லா உலகங்களும் கல் தூளாய் விடும் சாழலோ! (3)

ஏடீ, தோழீ! நான்முகனையும் மன்மதனையும், யமனையும், சந்திரனையும், யாதொரு வகைகள் கெடாத, (எந்நாளுமிருக்க) வடுவுண்டாக்கினன், பாரேடி! தாழ்ந்த கூந்தலையுடையாய்! மூன்று நேத்திரங்களுமுடைய தலைவனை இருப்பவனே கண் டித்தால் தேவர்களுக்கு (அரை) வெற்றியல்லவோ, சாழலோ! ()

'ஏடீ தோழீ! தக்கனையும் வேள்வித் தலைவனையும், தலையை அறுத்தும், சேர்ந்த தேவர் கூட்டங்களாய், வந்து சேர்ந்தவர்களை அழித்தொழித்தது யாது காரணமடீ?' எனத் தோழி தலைமகளை இயற்பழித்துக் கேட்க, '(அவ்வாறு) சேர்ந்து வந்தவர்களை யழித்து அருளி, (அத்தகையவர்களுக்கு) அருள் செய்து, அவ்விடத்தில் வேள்வித் தலைவனுக்கு மீளவும் ஆட்டுத் தலையைகொடுத்தான் சாழலோ!' என தலைமகள் தோழிக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (5)

அலைவனும் மாலவனும் அறியாமே அழல்உருவாய்
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றதுதான் என்,ஏடீ!
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலன்ஏல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண், சாழலோ! 6

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயும்அது என்,ஏடீ?
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலள்ஏல் தரணி
[எல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ! 7

கோலாலம் ஆகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்,ஏடீ?
ஆலாலம் உண்டிலன்ஏல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவர்எல்லாம் வீடுவர்காண் சாழலோ! 8

தென்பால் உகந்தாடும் திலீலச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெருமித்தன், காண்,ஏடீ!
பெண்பால் உகந்திலன்ஏல், பேதாய் இருநிலத்தோர்
விண்பால் போதெய்தி வீடுவர்காண் சாழலோ! 9

'ஏடீ, தோழீ! உன் தலைவன் நான்முகனும் திருமாலும் அறியாமல் மயங்க, அக்கினி சொரூபமயமாகி, பாதாள லோக முதலாக ஆகாயத்தைதப் பொருந்தும்படி அவர் பக்கம் நின்றதற்குக் காரணம் என்ன?' எனத் தோழி தலைமகனை இயற்பழித்துக் கேட்க, 'நில முதலாய மேல் அண்டங்களிலும் அதன் கீழ் அண்டங் களிலும் பொருந்த, அங்ஙனம் அவர் பக்கத்தில் நில்லாமற்போனல் நான்முகன் திருமால் இருவர்களும், தமக்குள்ள வஞ்சனையினல் (தாம் தாம் பெரியவனென்று வாதிட்டுக்கொண்ட) அகங்காரத்தை விடார், சாழலோ!' என தலைமகள் தோழிக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (6)

'ஏடீ, தோழீ! உன் தலைமகன் பார்வதியை ஒரு பக்கம் அமைத்தலும் வெருவுருத்தியாகிய கங்கை கோபம் கொண்டு நீருருவத்தோடு, அப்பரமசிவன் சடைமுடியில் பாய்வது, யாது காரணமடீ?' எனத் தோழி தலைமகனை இயற்பழித்துரைக்க, 'நீர் வடிவத்தோடு, அப்பரமசிவத்தின் சடைமுடியில் பாய்ந்திலளாயின், பூலோகமெல்லாம் பாதாளத்தின்கண்ணே உட்புகும்படி பாய்ந்து, பொல்லாக் கேடு விளையும் சாழலோ!' எனத் தலைமகள் தோழிக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (7)

'ஏடீ, தோழீ! உன் தலைமகன் கொந்தளிப்பினை உடைய தாகி ஒலிக்கின்ற கடலினிடத்தில் அக்காலத்திலுண்டாகிய ஆல கால விடத்தை உட்கொண்டான்; அப்பரமசிவனது சாமர்த்தியம் தான் எது காரணமேடீ?' எனத் தோழி அவனை இயற்பழித்துக் கேட்க, (அந்நாளிலெழுந்த) 'ஆலகால விடத்தை உட்கொள்ளா விடின், அச்சமயத்தில் நான்முகன் திருமால் ஆகிய அவ்விருவர்க ளுள்ளடங்கிய மேன்மைதங்கிய எல்லாத் தேவர்களும் மாண்டு போவார்கள், சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (8)

'ஏடீ, தோழீ! தில்லைக்கண்ணுள்ள சிற்றம்பலத்திலே தென் பகுதியை நோக்குதலை விரும்பித் திருநடனம் செய்கின்ற திருச் சிற்றம்பலத்தான், தன் மனைவியே ஆண்டுக் கண்டு உவத்தலை உயர்வாகக்கொண்டான். இவன் பெரியதொரு பித்தனுவான் காண்!' எனத் தோழி தலைமகனை இயற்பழித்துரைக்க, 'அறிவிலீ! அவன் பெண்பாகத்தை விருப்பமில்லாளுயின் பெரிய நில உலகத் தார் எல்லாரும் யோகத்தைப் பெற்று மேலுலகத்தை அடையப் பெற்று இவ்வுலகில் இல்லற வாழ்வினை விட்டொழிவர்காண் சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (6)

தான் அந்தம் இல்லான் தன்னை அடைந்த நாயேனை

ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காண், ஏடீ!

ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருஅடிகள்

வான்உந்து தேவர்கட்கோர் வான்பொருள் காண், சாழலோ!

நக்காய்! இதுஎன்னதவம்? நரம்போடு எலும்பணிந்து

கங்காளம் தோள்மேலே காதலித்தான் காண், ஏடீ!

கங்காளம் ஆம்ஆகேள்; காலாந் தரத்திருவர்

தம்காலம் செய்யத் தரித்தனன்காண், சாழலோ! 11

கான்ஆர் புலித்தோல் உடை;தலைஓண்; காடுபதி;

ஆனல் அவனுக்கிங்கு ஆட்படுவார் ஆர்? ஏடீ!

ஆனேறும் கேளாய், அயனும் திருமாலும்

வான்நாடர் கோவும் வழிஅடியார், சாழலோ! 12

மலைஅரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை

உலகறியத் தீவேட்டான் என்னுமது என்ஏடீ!

உலகறியத் தீவேளாது ஒழிந்தனன்எல் உலகனைத்தும்

கலைநவின்றபொருள்கள்எல்லாம் கலங்கிடுங்காண்சாழலோ!

'ஏடீ, தோழீ! இன்பம் துய்க்கும் நெறியிலே விதிவிலக்கு கனாக்கொள்ளும் வரம்பில்லாதவன்; அவன் தன்னை அடைந்த நாயை ஒத்து இழிந்த என்னையும் இன்பவெள்ளத்துள்ளே அழுந்தச்செய்தான் காண். அதன் காரணம் யாது? அறியேனடீ!' எனத் தோழி அவனை இயற்பழித்து விளைவ, 'அடைந்தாரை போன்ப வாழ்வில் அழுந்தச்செய்த அவன் திருப்பாதங்கள் விண்ணுலகத்தின்கண்ணே வாழாநின்ற தேவர்களுக்கு, வானுலகத்துட்செலுத்தும் சிறந்த பொருளாகும் காண் சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (10)

'ஏடீ, பெண்ணே! நரம்போடு எலும்பையும் தரித்து, புயத்தின்மேலே முழு எலும்புக்கூட்டை (வைக்க) இசைத்தான்; அறியேனடீ! இக்கோலத்தோடு கூடிய இசைசெய்கை என்ன?' எனத் தலைமகனைத் தோழி இயற்பழித்து வினவ, 'கங்காளம் வந்தடைந்த விபாத்தைக் கேள்; காலபேதத்தால் பிரம விட்டுணுக்களிருவருடைய காலங்களையும் முடிவுசெய்யத்தான் அதனை அணிந்தான் காண், சாழலோ!' என்று தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (11)

'ஏடீ, தோழீ! காட்டகத்தின்கண்ணே வாழும் புலியின் தோலே அவன் உடுத்தும் ஆடை; அயன் தலையே அவன் உண்ணும் கலம்; சுடுகாடே அவன் வாழும் இடமாகும். அப்படியாயின், அத்தன்மையனுக்கு இவ்விடத்தில் அடிமை பூண்டு தொண்டு செய்பவர் யாவர்?' எனத் தோழி அவனை இயற்பழித்து வினவ, '(அவ்வாறு) ஆயினும் கேட்பாயாக. நான்முகனும் திருமாலும் தேவலோகத்தாருக்கு அரசனாகிய தேவேந்திரனும் வழித்தொண்டு செய்பவராவர், சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (12)

'ஏடீ, தோழீ! உன் தலைமகன் மலையரசனது பொற்பாவை போல்பவளும், ஒளிபொருந்திய நெற்றியையுடையவளுமாகிய பெண்களுக்குட் சிறந்தவளாகிய உமாதேவியை, உலகத்தவர் யாவரும் அறியும்படி தீ முன்னர் மணஞ்செய்துகொண்டான் என்று உலகோர் அவனை இழித்துச் சொல்ல என்ன?' எனத் தோழி அவனை இயற்பழித்துரைக்க, 'உலகத்தார் அறியும்படி தீ முன்னர் மணம் செய்யாதொழிந்தனையின், உலகமுழுமையும், உலகம் நடைபெற உரைத்த சாத்திரங்களும் அர்த்தங்களும் கெட்டொழிந்திடும் காண், சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (13)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்

தான்புக்கு நட்டம் பயிலும்அது என்,ஏடீ!

தான்புக்கு நட்டம் பயின்றிலன்எல் தரணிஎல்லாம்

ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாம்காண், சாழலோ! 14

கடகரியும் பரிமாவும் தேருமிகந்து ஏறுதே

இடபம்உகந்து ஏறியஆறு எனக்கறிய இயம்பு,ஏடீ!

தடமதில்கள் அவைமூன் றும்கழல்எரித்த அந்நாளில்

இடபமதாய்த் தாங்கினன் திருமால்காண், சாழலோ! 15

நன்றுக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை

அன்றுலின் கீழிருந்தங்கு அறம்உரைத்தான், காண்,ஏடீ!

அன்றுலின் கீழிருந்தங்கு அறம்உரைத்தான் ஆயிடினும்

கொன்றுன்காண், புரம்மூன் றும்கூட்டோடே சாழலோ!

அம்பலத்தே கூத்தாடி அழுதுசெயப் பலிதிரியும்

நம்பனையும் தேவன்என் றுநண் ணுமது, என்,ஏடீ!

நம்பனையும் ஆம்ஆகேள் நான்மறைகள் தாம்அறியா

எம்பெருமான் சதாஎன் று ஏத்தினகாண், சாழலோ! 17

'ஏடீ, தோழீ! மதுரம் பாய்கிற குளிர்ச்சியாகிய வயல்கள் சூழ்ந்த திருச்சிற்றம்பலத்தான் தானே திருவாலங்காட்டுக்குள் தானே புகுந்து, காளியுடன் ஒரு காலத் தாக்கி காட்டியம் செய்வது யாதுக்கோடீ?' எனத் தோழி தலைமகனை இயற்பழித்து வினவ, 'தான் புகுந்து திருநடனஞ் செய்யாஞையின், பூமி முழுவதும் அசுரருடைய ஊனகத்துட்புக்க வேற்படையையுடைய மாகாளிக்கு, தின்னும் பொருளாகும், சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (14)

'ஏடீ, தோழீ! மதயானையையும், குதிரையையும் தேரையும் விரும்பி அவைகளின்மேல் ஏறுமல் இடபத்தை விரும்பி ஏறின விதத்தைத் தெரியும்படி எனகுச சொல்வாயாக!' என அவனைத் தோழி இயற்பழித்துச் சொல்ல, 'மிகப் பெரிய மதில்களாகிய திரிபுரங்களாகிய அவை மூன்றனையும் அக்கினியிலை நீறுக்கின அக்காலத்தில் திருமாலானவன் இடபவாகனமாகி அவனைச் சுமந்தான் சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்படச் சொன்னாள். (15)

'ஏடீ, தோழீ! உன் தலைமகன் அன்று தன் மனை துறந்து நன்மையையுண்டாக்க, முனிவர் நால்வருக்கும் நான்கு வேதத்தின் இரகசியார்த்தப் பொருளை, அக்காலத்தில் ஆலவிருட்சத்தின் அடியில் அன்புகூர்ந்தெழுந்தருளியிருந்து, முத்திநெறி மார்க்கத்தைப் போதித்தருளினன் காண்!' எனத் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூற, 'அந்நாளில், ஆலமரத்தின் அடியிலிருந்து அவ்விடத்து முத்திநெறி மார்க்கத்தைப் போதித்தருளினையினும், முப்புரங்களையும் வேரோடு அழித்தான், சாழலோ!' என்று தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (16)

'ஏடீ, தோழீ! அம்பலத்தின்கண்ணை ஆநந்தக் கூத்தாடி திருவமுது செய்தற்கு, பிச்சை காரணமாக ஊரெல்லாம் திரியும் சிவபெருமானையும், தேவாதி தேவனென்று அப்பெயர் அவனை அடைவது என்னேடீ? எதுக்கடீ?' என்று அவனை இயற்பழித்த தோழிக்கு, 'நான் விரும்பியவன், எனக்கு மணமகனுமாறு சொல்லுவேன் கேட்பாயாக: சிவபெருமானையும், வேதங்கள் நான்கும் தேடுதற்கு அறியாதனவாகி, 'எமது பெருமானே! ஈசனே!' என்று புகழ்ந்து வாயாரத் துதித்தன, சாழலோ!' எனத் தலைமகள் அவனை இயற்பட மொழிந்தாள். (17)

சலம்உடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்ஆழி
நலம்உடைய நாரணற்குஅன் றுஅருளியஆறு என்,ஏடீ?
நலம்உடைய நாரணன்தன் நயனம்இடந்து அரன்அடிக்கீழ்
அலர்ஆக இட,ஆழி அருளினன்காண், சாழலோ! 18

அம்பரம்ஆம் புள்ளித்தோல்; ஆலாலம் ஆர்அமுதம்,
எம்பெருமான் உண்டசதுர் எனக்குஅறிய இயம்பேடீ!
எம்பெருமான் ஏதுடுத்தங்கு ஏதுஅமுது செய்திடினும,
தம்பெருமை தான்அறியாத தன்மையன்காண், சாழலோ!

அருந்தவருக்கு ஆல்நின்கீழ் அறம்முதலா நான்கினையும்
இருந்துஅவருக்கு அருளும்அது எனக்கறிய இயம்பேடீ!
அருந்தவருக்கு அறம்முதல்நான்கு அன்றருளிச் செய்திலன்
[எல்
திருந்துஅவருக்கு உலகியற்கை தெரியாகாண், சாழலோ!

திருச்சிற்றம்பலம்.

'ஏடீ, தோழீ! கோபம் மிக்க சலந்தரனது தேகத்தைக் கோய்த பெருமை தங்கிய சக்கரப்படையை நன்மையையுடைய திருமாலுக்கு அக்காலத்தில் அருள் செய்த விதம், எதுக்கடீ?' என்று இயற்பழித்த தோழிக்கு, நன்மையையுடைய திருமால் தனது திருக்கண்ணைத் தோண்டிச் சிவபெருமானது திருவடியின் கீழ் மலராக வைக்கச் சக்கரப்படையை (உள்ளங் குளிர்ந்து) அருள்செய்து கொடுத்தான், சாழலோ!' எனத் தலைமகள் அவனை இயற்பட மொழிந்தாள். (18)

'ஏடீ, தோழீ! உன் தலைமகன் புள்ளியமைந்த புலித்தோலை உடுக்க ஆடையாகவும், ஆலகால விடத்தை எம்பெருமானவன் உட்கொள்ள அரிய அமிர்தமாகவும் கொண்ட சூதை, எனக்கு விளக்கமாகத் தெரியும்படி சொல்வாயேடீ!' என இயற்பழித்த தோழிக்கு, 'என் இறைவனாகிய சிவபெருமான், எதனை உடுத்தாலும், எதனை அமுதாகப் புசித்தாலும், தனது பெருமையைத் தான் அறிந்துகொள்ளாத தன்மையை உடையவன் காண், சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (19)

'ஏடீ, தோழீ! அருமையான தவத்தினையுடையாராகிய சனகாதி முனிவர்க்கு, கல் ஆல மரத்தடியில் வீற்றிருந்து தரும முதலாகிய நான்கு புருஷார்த்தங்களையும் அந்நால்வர்களுக்குப் போதித்த அவ்வகைகளை எனக்குத் தெரியும்படி சொல்லேடீ!' எனத் தோழி தலைமகனை இயற்பழித்துரைக்க, 'அரியதாகிய தவத்தினை உடையார்க்கு, தரும முதலாகிய நான்கு பொருள்களையும் அக்காலத்தில் அருளிச்செய்யாவிடின், திருந்திய அந்நால்வருக்கும் உலக நடக்கைகள் தெரியுமாட்டா, சாழலோ!' எனத் தலைமகள் அவளுக்கு அவனை இயற்பட மொழிந்தாள். (20)

நச்சிற்றம்பலம்.

13. திருப்பூவல்லி

(தில்லையில் அருளியது—மாயாவிசய நீக்குதல்)

(நாலடித்தாழிசை கொச்சகக் கலிப்பா.)

திருச்சிற்றம்பலம்.

தேனை ஆர் திருஅடி என்தலைமேல் வைத்தலுமே,
தீனை ஆன சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்;
ஆனை ஆர் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
பூனை ஆளன் சிற்பாடிப் பூவல்லி கொய்யாமோ! 1

எனதை எம்தாய்சுற்றம் மற்றும்எல்லாம என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்;
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ! 2

காயிற் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயாஉடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத்து ஆண்டான் வல்வினையின்
வாயிற் பொடிஅட்டிப் பூவல்லி கொய்யாமோ! 3

பண்பட்ட தில்லைப் பதிக்குஅரசைப் பரவாதே,
எண்பட்ட தக்கன் அருக்கன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ! 4

தேன்நாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந்து உள்புகுந்தான் உலகர்முன்னே
கான்நாடி ஆடிநின்று ஓலமிட நடம்பயிலும்
வான்நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ! 5

13. திருப்பூவல்லி

திருச்சிற்றம்பலம்.

தனக்குத்தானே ஒப்பாயிருக்கிற அழகிய திருவடியை என் தலையின்மீது பொருந்த வைத்தலும் உதவியாகிய எல்லா உறவினையும் விட்டு விலகினேன். அணைகட்டிய நீர் சூழ்ந்த தில்லையம்பலத்தின்கண்ணே திருநடனம் செய்கின்ற (பிறவிக்கடலைத் தவிர்ப்பதற்குத்) தோணியைப்போல்பவனது சிறப்பைப் பாடி அல்லிப்பூவைப் பறிப்போமாக. (1)

எம் தந்தை; எம் தாய்; எமது உறவினர்; மற்றுமுள்ள எல்லாமும் ஆகிய என் பிறவித்தளையை வேரறக் களைந்து, அடியேனை அடிமைகொண்டருளின பாண்டிப்பிரானே ஆகிய அழகு பொருந்திய திருவிடைமருதூரின்கண்ணே பரமானந்தத் தேன் இருந்த பொந்தைப் போல்பவருகிய சிவபெருமானைப் போற்றி செய்து யாம் அல்லிப்பூவைப் பறிப்போமாக. (2).

நாயினும் கீழ்ப்பட்ட எம்மையும் ஒரு பொருளாக்கி மாதாவினுஞ் சிறந்த இரக்கமுடைய தம்பிரான் மாயப் பிறவித்தளையைக் களைந்து, அடிமைகொண்டாண்டருளினன் (ஆதலால்) எனது கொடிய தீவினையினது வாயில் புழுதியைப் போட்டு, அல்லிப்பூவைப் பறிப்போமாக. (3)

நீர் நிலைபொருந்திய தில்லையம்பலத்திற்கு அரசாகிய சிவபெருமானைத் துதி செய்யாமல் மதிப்பமைந்த தக்கனும் கதிரவனும், வேள்வித் தலைவனும், திங்களும், தீக்கடவுளும் விண்ணுளாவிய பூதப்படைகளையுடைய வீரபத்திரரால் காயப்பட்ட விபரத்தைச் சொல்லி அல்லிப்பூவைப் பறிப்போமாக. (4).

தேன் பொழிகின்ற கொன்றைப்பூவைச் சடைமுடியில் அணிந்த (கருணைக் கடலாகிய) சிவபெருமானவன், மானுட தேகமெடுத்து (அன்பின் மிகுதியால்) தேடி வந்து, உலகத்தில் வாழாநின்ற மானிடர்க்கெதிரில், என் மனத்தினிடத்தே புகுந்தான்; நான் (அப்பரமசிவனைத்) தேடி ஆடி, (தனியே) நின்று முறையிடத் திருநடனஞ்செய்கின்ற விண்ணுலகத்தார்க்குத் தலைவனாகிய சிவபெருமான் பொருட்டாகவே அல்லிப்பூவைப் பறிப்போமாக. (5)

எனிமூன்றும் தேவர்க்கு இரங்கி அருள் செய்தருளிச்
சிமம்மூன்று அறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்றும் ஆகி உணர்வரிதாம் ஒருவனுமே
பரம்மூன்றும் எரித்தவா பூவல்லி கொய்யாமோ ! 6

வணங்கத் தலைவைத்து வாழ்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்காத்தன் சிரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கோடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ ! 7

நெறிசெய் தருளித்தன் சிரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டுன்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ ! 8

பல்நாள் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என் ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நார் உரித்துன்னை ஆண்டுகொண்டான் கழல்இணைகள்
பொன்ஆன வாபாடிப் பூவல்லி கொய்யாமோ ! 9

போராசை ஆம்இந்தப் பிண்டம்அறப் பெருந்துறையான்
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்
காராார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போராார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ ! 10

அக்கினிபோல் எரிகின்ற திரிபுரத்திகளுக்கும் மனமிரக்கித் திருவருள் செய்து தலைகள் மூன்றும் அற்று விழும்படி, தனது அழகிய புருவம் நெருக்கின அளவில் அம்மூன்று உருவமும் தானேயாகித் தெரிந்துகொள்வதற்கு அரிதாகிய ஒருவனே திரிபுரங்களையும் எரித்துவிழச்செய்த அற்புதத்தைப் பாடி, அல்லிப் பூவைக் கொய்வோமாக. (6)

நீண்ட திருவடியை வணக்கஞ்செய்தற்குத் தலையைக்கொடுத்துப் போற்றி செய்தற்கு வாயை அமைத்து, சேர்தற்குத் தன் பெருமையுள்ள அடியவர்கள் கூட்டத்தையும் சேர்த்து எமது பெருமானவன் தெய்வத்தன்மையோடுகூடிய அழகுபொருந்திய திலலையம்பலத்தில் உமையம்மையோடு திருநடனஞ்செய்கின்ற பெருநிதிக் குணத்தை, அன்பின் மிகுதியாற் பாடி யாம் அல்லிப் பூவைக் கொய்வோமாக. (7)

நன்மாக்கதைச் செவவைவபபுதத்த தன்னுடை
தங்கிய தொண்டர்களுடைய பொன்போலும் விளங்குகின்ற திருப்பாதத்திற்கே இலக்காக்கிக்கொண்டு அடியேனை ஆட்கொண்டு அருள்செய்த சிவபிரானது பெருங்குணத்தைப் போற்றி அடியேனை அடிமையாக்கி மூற்றும் வருத்துகின்ற தொன்மையாகிய வினையைப் பொய்யாக்கின விதத்தைச் சொல்லி, அல்லிப் பூவைக் கொய்வோமாக. (8)

பல நாட்களும் போற்றி செய்து பணிவிடை செய்யத் திருவடித் தாமரைகளை என் மனத்தில் புதையவைத்தருளின அளவிற்கெட்டாத பெரியோன் அழகையுடைய சோதியாய் உருவாகிக் கல்லில் நாரை உரித்ததுபோல அடியேனைத் தொண்டனென்று ஆட்கொண்டருளினவன் இரண்டு திருப்பாதங்கள் பொன்னைப்போல் அருமையாயுள்ள விதத்தைப் பாடி அல்லிப் பூவைக் கொய்வோமாக. (9)

பெருமைதங்கிய திருப்பெருந்துறை என்னும் மேலான சிவப்பதியை உடையவன்; அதிக ஆசை உண்டாதற்கிடமாகிய இந்த ஊனுடலுடன் கூடி வாழும் வாழ்வு தொலையும் வண்ணம் பெருமை பொருந்திய தன் திருவடியை அடியேன் முடியின்மீது வைத்த தயாளகுணமுள்ளவன்; கருநிறமுள்ள திருப்பாற்கடலினின்று உண்டாகிய நஞ்சை (தாம்) உட்கொண்டு மகிழ்ந்த கபாலத்தைக் கையிலேந்திய சிவபெருமான்; (அவனது) போருக்கு இலக்காயிருந்த திரிபுரங்களின் மதில்களைக் குறித்து வாயாரத் துதித்து, அல்லிப்பூவைக் கொய்வோமாக. (10)

பாதும் அழுதகுமும் தேன்உடன் ஆம் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போதும் புகழ்ப்பாடிப் பூவல்லி கொய்யாமோ ! 11

வானவன் மால்அயன் மற்றும்உள்ள தேவர்கட்கும்
கோனவன் ஆய் நின்று கூடல்இலாக் குணம்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ ! 12

அன்றுஆல நீழற்கீழ் அருமறைகள் தான்அருளி
நன்றுகவானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றுஆர ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிப் பூவல்லி கொய்யாமோ ! 13

படமாக எண் ஐவுள்ளே தன்னிணைப்போது அவைஅளித்
இடமாகக் கொண்டிருந்து ஏகம்பம் மேயபிரான் [திங்கு
தடமார் மதில்தில்லை அம்பலமே தான்இடமா
நடம்ஆம் நமக்கு ஆபாடிப் பூவல்லி கொய்யாமோ ! 14

அங்கி அருக்கன்இரா வணன்அந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கயில் தக்கனும் எச்சனும்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ ! 15

தின்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையில் பிட்டமுது செப்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ ! 16

தேனுடன் பாலும் அமிர்தமும் போன்ற (யாவராலுங் காணப் படாத) பராபரப் பொருளாகித் திருக்கோலங்கொண்டெழுந் தருளி வந்து, (அடியேன்) மனத்தைக் கைக்கொண்ட சிவபெரு மானது ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிகளைப்பூலோகத்தின் கண்ணே போற்றி செய்பவர்களுடைய நன்மார்க்க வழியாகிய அந்நன்மார்க்கத்தையே போல்கின்ற புகழினைப் பாடி, அல்லிப் பூவைக் கொய்வோமாக. (11)

தேவேந்திரன், திருமால், நான்முகன் பிற தேவர்கட்கும் அரசனாய் நின்று கூடுதலில்லாத குணக்குறிகளை உடையவன், நெடியகடலிலுண்டான ஆலகால நஞ்சைப்பருக (அது) உணவாகக் கொண்ட விதத்தைக் குறித்து அல்லிப்பூவைக் கொய்வோமாக.

அந்நாளில் ஆலமரத்தின் நிழலில் இருந்து அருமையாகிய வேதப்பொருள்களை அருளிச்செய்து தேவர்களும் மகிமைபெற்ற தவமுனிவரும் தினந்தோறும் திருமுன்னர் நின்று நிரம்பத் துதிக் கின்ற துதித்தற்குரிய குணங்கள் நிறைந்த திருவடியையுடையவ னாகிய சிவபெருமான் தரிக்கின்ற கொன்றைப்பூவைக் குறை யாமற் பாடி, யாம் அல்லிப்பூவைக் கொய்வோமாக. (13)

அவன் திருவடியன்பு என் மனதிடத்தே படமாக அமையு மாறு அருள்செய்து கொடுத்து; இத்தலத்தையே இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளி இருந்து திருவேகம்பத்திலும் உறைகின்ற சிவபிரான் நீர் நிலைகள் நிரம்பிய மதில்கள் சூழ்ந்த தில்லையம்பல மென்னும் சிதம்பரத்தின்கண்ணே திருநடனஞ்செய்யுங் காட்சி யின் விதத்தைப் புகழ்ந்து, அல்லிப்பூவைக் கொய்வோமாக. (14)

அக்கினி தேவனும் சூரியனும் இலங்கைக்கதிபனாகிய இரா வணனும், உயிரைநீக்கி உடலை அழிப்பவனாகிய இயமனும், சிவந்த தாமரைபோன்ற திருக்கண்களையுடைய திருமாலும் நான்முகனும், தேவேந்திரனும், சந்திரனும், பங்கமில்லாத தக்கனும், வேள்விக் கடவுளும் தத்தமது எண்ணங்கள் அழியும் வண்ணம் மிகச்சினந்த பெருமையைப் போற்றி செய்து, அல்லிப்பூவைக் கொய்வோமாக.

பலம் பொருந்திய போர்த்தொழிலையுடைய இடப வாக னத்தை உடையவன், சிவபுரத்தாருக்கு ஆண் சிங்கத்தையொத்த சிவபெருமான், பூலோகத்தில் மதுரைப்பதி என்னும் சிறந்த சிவப் பதியின்கண்ணே (வணிகஞ்செய்யும் கிழவியின் பிட்டினை ஓர்வித வினையாட்டைக் காட்டி அழுதாக உட்கொண்டருளிப் பிரம்பாலே அம்மதுரைகாசன் தன்னை வேலை கொண்ட புண்ணைக்குறித்த பாடலைப் பாடி, யாம் அல்லிப்பூவைக் கொய்வோமாக. (16)

முன்னைய மால்அயனும் வானவரும் தானவரும்
பொன்னர் திருவடி தாம்அறியார் போற்றுவதே
என்னுகம் உள்புகுந்து ஆண்டுகொண்டான் இலங்கணியாம்
பல்நாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ ! 17

சிற்றூர் திருவடித் தெண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகம்மகிழத்
தேர்ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம்செய்
பேர்ஆனைத் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ ! 18

அத்தி உரித்துஅது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண்டு இவ்வுலகில் பிள்ளையும்ஆம்
முத்தி முழுமுதல் உத்தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ ! 19

மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ ! 20

திருச்சிற்றம்பலம்.

முதன்மையாகிய திருமாலும், நான்முகனும், தேவர்களும், அசுரர்களும், பொன்னைப்போல் விளங்குகின்ற அழகிய திருவடியைத் தாங்கள் துதித்து வணங்குவதே அறியாராகவும் (அவர்கள் செய்கை அங்ஙனமாக) என் மனத்தினிடத்தே உட்புகுந்து (என்னை அடிமையாக்கி) ஆண்டுகொண்டவுனகிய சிவபெருமானது விளங்குகின்ற (திரு) ஆபரணமாகிய பலவித நாகங்களையும் ஆடிப்பாடி யாம் அல்லிப்பூவைக் கொய்வோமாக. (17)

சிறப்பு அமைந்த திருவடியில் தரிக்கப்பெற்ற திண்ணிய சிலம்புகள் ஒலிக்கின்ற ஒலிக்கே வெறுக்காத விருப்பங்கொண்டு அடியேனது மனம் மகிழ, தேர்கள் நிறைந்த தெருக்களோடு கூடிய திருப்பெருந்துறையை உடையவன், திருநடனத்தைச் செய்கிறதாலுண்டாகிய பேரின்பத்தைப் பாடி அல்லிப்பூவைக் கொய்வோமாக. (18)

(மத) யானையை உரித்து (அத்) தோலைப் போர்த்தருளின திருப்பெருந்துறையை உடையவன், பித்தனைகவும் உருக்கொண்டு, இவ்வுலகத்தில் சிறு குழந்தையுமாகி முத்திக்கு முழு முதல்வன், திரு உத்தரகோசமங்கையில் எழுந்தருளிய வள்ளல் (அவன்) என் புத்தியில் நுழைந்தவிதத்தைப்பற்றி நினைந்து அல்லிப்பூவைக் கொய்வோமாக. (19)

குதிரையின்மேல் பொருந்தும்படி ஏறி, மதுரை என்னும் சிறந்த சிவப்பதியில் புகுந்து அருள் செய்து, தெய்வத்தன்மை பொருந்திய வழிவழுகு திகழச்செய்த திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும் எமது சிவபிரான் தலைவனாகி வந்து என்னைத் தனது பணி செய்பவனாக ஆக்கிக்கொண்டருளி அருள்செய்த மலர்போன்ற திருவடிகளை வணங்கி அல்லிப்பூவைக் கொய்வோமாக. (20)

திருச்சிற்றம்பலம்.

14. திருவுந்தியார்

(தில்லையில் அருளியது—ஞான வெற்றி)

(கலித்தாழிசை.)

1. முப்புரம் 1—12.

திருச்சிற்றம்பலம்.

வளைந்தது வில்லு, விளைந்தது பூசல்,
உளைந்தன் முப்புரம் உந்தீபற !
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற ! 1

சாம்பு கண்டிலம் ஏகம்பர் தன்கையில்
ஓம்பு மம்பே முப்புரம் உந்தீபற !
ஒன்றும் பெருமிகை உந்தீபற ! 2

தச்சு விடுத்தலும் தாம்அடி இட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற !
அழிந்தன முப்புரம் உந்தீபற ! 3

உய்ய வல்லார்—ஒரு மூவரைக் காவல்கொண் டு
எய்யவல் லானுக்கே உந்தீபற !
இளமூலை பங்கன்என் றுந்தீபற ! 4

2. தக்கன் இட்ட பலி

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற !
உருத்திர நாதனுக்கு உந்தீபற ! 5

ஆவா திருமால் அவிப்பாகம் கொண்டன்று
சாவாது இருந்தான்என் றுந்தீபற !
சதுர்முகன் தாதைஎன் றுந்தீபற ! 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான்என் றுந்தீபற !
கலங்கிற் றுவேள்வினென் றுந்தீபற ! 7

14. திருவுந்தியார்

(உந்தியாடுதல், கைகளால் கல் காய் முதலியவைகளை உந்தியெறிந்து ஆடும் ஒருவகை விளையாட்டு.)

திருச்சிற்றம்பலம்.

வில் வளைந்தது; போர் வீழ்ந்தது; திரிபுரங்கள் சிதைவுற்றன; உந்தீபற! ஒன்றாய் உடனே வெந்த விதத்தைக் குறித்து உந்தீபற! (1)

ஏகாம்பரநாதர் திருக்கையில் இரண்டு அம்பைக் காண்கிலேம்; அவர் திருக்காத்திற் காணப்பட்டது ஒரு அம்பே; அந்த ஒரு அம்புங்கூட அவருக்கு மிகவும் அதிகம். (அம்பின்றியே மிக்க வல்லவர்) என்று உந்தி பறத்தலைச் செய்க. (2)

தேவர்கள் தேரைச் செய்து முடித்ததும், அத்தேரிலே திருவடியை வைத்து ஏறுதலும், தேர் அச்சு சேதப்பட்டதென்றும் அம்முப்புரங்கள் நீறாயின என்றும் உந்தி பறத்தலைச் செய்க. (3)

வாழ்தற்கு வல்லவராகிய மூன்று அசுரரையும் சிறையிலிட்டு, அம்பு எய்ய, எல்லாப் பெருமையும் உடையவனுக்கே என்று உந்தி பறத்தலைச் செய்க; இளமூலையுடைய பராசத்தியின் பாகனென்று பாடி உந்தி பறத்தலைச் செய்க. (4)

தாக்கிய வேள்வி கெடுக்கவே தேவர்கள் ஓடின விபரத்தைப் பாடி உந்தீபற! உருத்திர கணங்களுக்குத் தலைவனையிருப்பவனுக்கு உந்தீபற! (5)

தக்கன் வேள்வியில் அவியுணவைத் திருமால் ஏற்றுக் கொண்ட அந்நாளிலே ஆ! ஆ! என்று இரங்கிச் சாவாதிருந்தமைதான் என்னை என்று உந்தீபற! அவன்தான் நான்முகனுக்குத் தந்தையாவான் என்று உந்திபறத்தலைச் செய்க. (6)

தீயவனாகிய அக்கினிதேவன் அவியுணவை உட்கொள்ளும்படி ஒன்றாகச் சேர்த்த கைகளை வீரபத்திரன் கொய்தானென்று பாடி உந்தீபற! வேள்வியும் நிலைகுலைந்தது என்று உந்தீபற! (7)

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே,ஏடி? உந்தீபற!
பணைமுலை பங்கனுக்கு உந்தீபற! 8

புரந்தர னர்ஒரு பூங்குயில் ஆகி
மரந்தனில் ஏறினர் உந்தீபற!
வானவர் கோன்என்றே உந்தீபற! 9

வெஞ்சின வேள்வி வியாத்திர னர்தலை
துஞ்சிய வாபாடி உந்தீபற!
தொடர்ந்த பிறப்பற உந்தீபற! 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற!
கொங்கை குலுங்கநின் றுஉந்தீபற! 11

உண்ணப் புகுந்த பகன்ஒளித்(து) ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற!
கருக்கெட நாம்எலாம் உந்தீபற! 12

காமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகம்நெரித்து உந்தீபற!
தொல்லை வினைகெட உந்தீபற! 13

நான்மறை யோனும் மகத்துஇய மான்படப்
போம்வழி தேடுமாறு உந்தீபற!
புரந்தரன் வேள்வியில் உந்தீபற! 14

சூரிய னர்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீபற!
மயங்கிற்று வேள்வியென் றுஉந்தீபற! 15

பார்வதியை பகையாகச் சொல்லிய தக்கனே உமையம்மைக் குத் தந்தை என்றும் அரனுர்க்கு மாமன் என்றும் இனம் பார்ப்பது ஏதுக்கடீ! பருத்த கொங்கைகளையுடைய உமாதேவியை தன் இடதுபாகத்தில் ஏற்றுக்கொண்ட இறைவனுக்காக உந்தீபற! (8)

தேவேந்திரனுர், வேள்வியில் ஓர் அழகிய குயில் வடிவங் கொண்டு ஒரு மரத்தின்மேலேறிப் பதுங்கினுர் உந்தீபற! இவ்வாறு செய்தவன் வானவர்கோன் தேவர்கட்கரசனென்று பாடி உந்தீபற! (9)

கொடிய சினத்தினையுடைய வேள்வியாசிரியனின் தலை விழுந்த விபரத்தைச் சொல்லி உந்தீபற! பின் பற்றும் பிறவிகள் அற்றொழியும்படிப் பாடி உந்தீபற! (10)

ஆட்டின் தலையை தக்கனுக்குத் தலையாகச் சேர்ப்பித்த விபரத்தைச் சொல்லி உந்தீபற! தனங்கள் குலுங்கும்படி நின்று உந்தீபற! (11)

தக்க வேள்வியில் தனது அவியினை உண்ணப்புகுந்த பகன் என்னும் தேவன் ஒளித்து ஓடாதபடி அவனது இரு கண்களையும் பறித்த தன்மையைச் சொல்லி உந்தீபற! நாமெல்லாம் பிறவி ஒழிவோமாக என்று சொல்லி உந்தீபற! (12)

கலைமகள் மூக்கும், நான்முகன் தலையும், சந்திரன் முகமும் நொறுக்குதலால் உந்தீபற! நமது பழைய வினையொழிய உந்தீபற! (13)

வேள்விக்குத் தலைவனுகிய தக்கன இறக்கவும, நானமுகன தான் அந்த வேள்வியில் உய்ந்துபோகும் வழியைத்தேடி அலையும் திறனைப் பாடி உந்தீபற! அது நிகழ்ந்தது இந்திரனை எற்போ னுகக்கொண்ட வேள்வியின்கண்ணேயாம் என்று நீ தெளிவுற்று உந்தீபற! (14)

சூரியனுடைய கொவ்வைக்கனிபோன்ற அழகு வாய்ந்த வாயிலுள்ள தந்தங்களை வாரி நொரித்த விபரத்தைக் குறித்தும் உந்தீபற! வேள்வி கலங்கி அழிந்தபடியைக் குறித்தும் உந்தீபற! (15)

தக்கனர் அன்றை தலைஇழந் தார்தக்கன்
மக்களைச் சூழ்நின் றுந்தீபற!
மடிந்தது வேள்வினன் றுந்தீபற! 16

3. உபமனியன்

பாலக னுர்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற!
குமரன்றன் தாதைக்கே உந்தீபற! 17

4. பிரமன்

நல்ல மலரின்மேல் நான்முகனர்தலை
ஒல்லை அரிந்ததென்(று) உந்தீபற!
உகிரால் அரிந்ததென்று உந்தீபற! 18

5. இராவணன்

தோளை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈளைந்தும் இற்றவாறு உந்தீபற!
இருபதும் இற்றதென்று உந்தீபற! 19

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல்என்(று) உந்தீபற!
அதற்குஅப் பாலும்காவல்என்(று) உந்தீபற! 20

திருச்சிற்றம்பலம்.

தக்கன் வேள்வி இயற்றிய அப்பொழுதே தனது தலை இழந்து இறந்தான் உந்தீபற! தக்கனைவன் மக்களோடு சூழ்ந்து நின்றும், யாகசாலை பாழானதென்றும் உந்தீபற! (16)

வியாக்கிரபாதர் மகனை உபமன்யுவுக்கு அன்று பாற்கடலை உண்ணத்தந்தருளிய அழகிய சடைமுடியினையுடைய சிவபிரான் பெருமைகளைச் சொல்வி உந்தீபற! அவன் முருகப்பிரானது தந்தை என்று சொல்வி உந்தீபற! (17)

நல்ல தாமரைப்பூவின்மேல் இருக்கின்ற நான்முகன் தலை ஒன்று விரைவில் கொய்யப்பட்டது என்றும் பாடி உந்தீபற! விரல் நகத்தால் அரியப்பட்டதென்றும் உந்தீபற! (18)

தேரை நிறுத்திவைத்துக் கையலங்கிரியைத் தூக்கின இராவணனது தலை பத்தும் நெரிந்த காரணத்தைக் குறித்து உந்தீபற! அவனது இருபது புயமும் நெரிந்ததென்றும் உந்தீபற!

கதிரவனது வெம்மையை உலகத்துக்கு முழுமையும் விடாது காத்து, உலகினுக்கு நலஞ்செய்யும் மேற்போர்வையைக் கைவிட்ட முனிவர்கள் சாம்பராய் அழிந்து போகாமல் ஆகாயத்துக்குக் காவல் செய்பவன் முதல்வன் என்று சொல்லி உந்தீபற! அவர் களை அதன்மேலும் காத்துவரும் காவல் அவன் காவல் என்று சொல்லி உந்தீபற! (20)

திருச்சிற்றம்பலம்.

15. திருத்தோள் நோக்கம்

(தில்லையில் அருளியது—பிரபஞ்ச உற்பத்தி)

(நாலடித்தாவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

பூத்தாஅரும் பொய்கைப் புனல்இதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே,
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடம்செய்
கூத்தா! உன்சேவடி கூடும்வண்ணம் தோள்நோக்கம்
ஆடாமோ! 1

என்றும் பிறந்துஇறந்து ஆழாமே ஆண்டுகொண்டான்;
கன்றுல் விளவுஎறிந் தான்பிரமன் காண்பரியன்
குன்றுத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
தென்றுஆர் குழலினீர், தோள்நோக்கம் ஆடாமோ! 2

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சேடி, வாய்க்கலசம் ஊன்அழுதம்,
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்துஅங்கு
அருள்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ! 3

கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கருணையினல்
கிற்பானைப் போலஎன் நெஞ்சின்உள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்துஎன்னை நாடறியத் தான்இங்ஙன்
சொற்பால தானவா, தோள்நோக்கம் ஆடாமோ! 4

15 திருத்தோள்நோக்கம்

திருச்சிற்றம்பலம்.

மங்கை நல்லீர்! பிரகாசிக்கின்ற திருச்சிற்றம்பலத்தின் கண்ணே திருக்கூத்துச் செய்கின்ற கூத்தை உடையவனே! உன் அருமைதங்கிய திருத்தாளைச் சேரும் விதம், பலவித மலர்களைப் பூத்து நிரம்பி இருக்கிற தடாக நீர் இதுதான் என்று எண்ணி கானல் நீரை மொள்ளத் தொடங்குகின்ற பேதைமைக் குணம் எனக்கு உண்டாகாமல், (அறியாத்தன்மையை) விலக்கினாய் எனப் பாடி, தோணோக்கம் என்னும் விளையாட்டை ஆடுவோமாக. (1)

செறிந்த மாலையை அணிந்த கூந்தலையுடைய மங்கைமீர்! எந்நாளும் பிறப்பு இறப்பும் ஆகிய பிறவிக்கடலில் உழன்று அழுந்தாமல் (என்னை) அடிமையாக ஆண்டுகொண்டவனும், கன்றைக்கொண்டு விளாங்கனியை எறிந்த திருமாலும், பிரமதேவனும் (என்பவர்கள்) காணுதற்கருமையானவனும் ஆகிய குறைபடாத சிறப்பு வாய்ந்த தில்லையம்பலத்தை உடையவனாகிய சிவபெருமானது அருமைக்குணத்தைத் துதித்துத் தோணோக்க மாடாமோ! (2)

மங்கை நல்லீர்! பொருளைச் செலவிட்டுச் செய்கின்ற பூசைகள்போல் தோற்றும்படி செருப்பையணிந்த சிறப்புற்ற திருவடியையும், வாயாகிய கலசத்தையும், ஊனாகிய அமிர்தத்தையும், (உள்ளன்புடன்) விரும்பி (பொத்தப்பி நாட்டுக்கு) இளவரசாகிய திண்ணனெனும் திருக்கண்ணப்பதேவர் நல்லவனென்று அறிந்து இறைவனுக்குரியவராக ஆக்க அதனால் இறைவன் மெய்குளிர்ந்து அருட்பேற்றைத் தர, அவர் கருணையைப் பெற்றுள்ள விதத்தைக் குறித்து, தோணோக்கம் ஆடாமோ! (3)

மங்கைமீர்! கல்லை ஒத்த மனமானது நெகிழ்ந்துக் கசிந்து உருகும்படி அருள் நோக்கத்தினால் நிற்பவனைப்போல் சிறிதும் உருகாத என் உள்ளத்தினுள்ளே உட்புகுந்தருளி நற்பதவியிலிருக்க வைத்து, என்னை நாட்டிலுள்ளார் அறிந்துகொள்ள, அந்நாட்டவரால் தான் இன்னனுடைய அன்பன் எனத் தன்னைச் சொல்லற்பாலதாகிய விதத்தைக் குறித்துப் பாடி, தோணோக்க மாடாமோ! (4)

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலன்ஆய மைந்தோடு எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகுஏழ் எனத்திசை பத்துஎனத்தான் ஒருவனுமே
பலஆகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ! 5

புத்தன் மூதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையிலில் தோள்நோக்கம் ஆடாமோ! 6

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாள்இரண்டும்
சேதிப்ப ஈசன் திருஅருளால் தேவர்தொழப்
பாதக மேசாறு பற்றினவா தோள்நோக்கம்! 7

மானம் அழிந்தோ மதிமறந்தோ மங்கைகணல்லீர்!
வானம் தொழும்தென்னன் வார்கழலே நினைந்துஅடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகிநின்று ஆடாமோ தோள்நோக்கம்! 8

எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண், தோள்நோக்கம். 9

பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தம்கண் இடந்துஅரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பெருமான சக்கரம்மாற்கு அருளியவாறு
எங்கும் பரவிநாம் தோள்நோக்கம் ஆடாமோ! 10

மங்கைமீர்! மண், நீர், அக்கினி, காற்று, நீண்ட ஆகாயம், சந்திரன், சூரியன், அறிவு மயமாகிய ஆன்மா என்னும் எட்டுவித மாய்ச் சேர்ந்துநின்றனன் உலகம் ஏழு எனச் சொல்லவும், திக்கு பத்து என்று சொல்லவும், இவ்வாறு தான் ஒருவனே பல பொருளாய் நின்றவிதத்தைக் குறித்துப் பாடி, தோணோக்கம் ஆடாமோ!

மங்கைமீர்! புத்தன் முதலாகிய சிற்றறிவினையுடைய பல சமயவாதிகளும் தத்தமது மதங்களிலே தடுமாற்றமடைந்து நிற்க, என் மனதைச் சிவமாக்கி, செய்தவற்றையே தவமாக்குகின்ற கடவுளினுடைய பெருங்கருணையால், தோணோக்கம் ஆடாமோ!

மங்கைமீர்! குற்றமற்ற பிரமசாரியான சண்டேசுவரன் செய்த சிவபூஜையை ஒழித்தவனை, சாதியில் பிராமணன் என்றும், முறையால் தந்தை என்றும் பாராது கால்கள் இரண்டையும் வெட்ட, சிவபெருமானது திருவருளினால் தேவர் வணங்க பாவத்தையே புண்ணியமாகக்கொண்டு திருவருள் பெற்ற விதத்தைப் பற்றிக் கூறி, தோணோக்கம் ஆடாமோ! (7)

பெண்களே! மானுபிமானம் கெட்டோம்; அறிவு மறந்தோம்; வானுடர் வணங்குகின்ற தென்னனது நீண்ட திருவடிகளையே எண்ணி, அடியோங்கள் ஆநந்தக்கூத்தனது அருளடைந்தால் யாம் அவ்வின்ப வடிவாகி நின்று, தோணோக்கம் ஆடாமோ!

மங்கை நல்லீர்! மதியினையுடைய தாரகாக்ஷன் முதலாய மூன்று அசுரர்கள் திரிபுரதகன காலத்தில் தீயைத் தப்பி, நெற்றிக்கண்ணையுடைய எந்தையாகிய சிவபிரானது கடைத் தலையில் நின்ற பிறகு, கணக்கில்லாத இந்திரரும் எத்தனையோ பிரமாக்களும் திருமால்களும் மண்ணின்மீது மடிந்தார்கள் என் பதைச் சொல்லி, தோணோக்கம் ஆடாமோ! (9)

மங்கைமீர்! ஆயிரந் தாமரை மலர்களில் ஒரு தாமரைப் புட்பம் குறைவுபட, தமது திருக்கண்ணைத் தோண்டி சிவபெருமானது திருவடியில் சாத்தித் துதிக்கவும், சங்காரனிய எமது பிரானனை சிவபெருமான் (அவ்வாறு பூசித்து துதிக்காநின்ற) திருமாலுக்கு, சக்கரப்படையைக் (அன்பின் மிகுதியால்) கொடுத்தருளிய வரலாற்றை நாம் எவ்விடத்தும் சென்று பாடி, தோணோக்கம் ஆடாமோ! (10)

காமன் உடல்,உயிர் காலன்,பல் காய்கதிரோன்,
நாமகள் நாசி,சிரம் பிரமன், காம்னரியைச்
சோமன் கலை,தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தஆ, தோள்நோக்கம் ஆடாமோ ! 11

பிரமன் அரிஎன்று இருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க,
அரன்ஊர் அழல்உருவாய் அங்கே அளவிறந்து
பரம்ஆகி நின்றவா, தோள்நோக்கம் ஆடாமோ ! 12

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம்எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே,
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந்து என்பிறவித்
தாழைப் பறித்தஆ, தோள்நோக்கம் ஆடாமோ ! 13

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்து உளம்புகலும்,
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே,
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட ஆபாடித் தோள்நோக்கம் ஆடாமோ ! 14

மங்கை நல்லீர்! மன்மதனது உடலையும், யமனது ஆவியையும், அக்கினிச் சுவாலைகளையுடைய சூரியனது பற்களையும், சரசுவதியின் மூக்கையும், பிரமனது தலையையும், அக்கினிதேவனது கையையும், சந்திரனது கலையையும், தக்கன் எச்சன் என்பவருடைய தலையையும் தவறு செய்ததற்காக நீக்கி பரிசுத்தமாக்கின வரலாற்றை நினைத்து, தோணோக்கம் ஆடாமோ! (11)

மங்கைமீர்! பிரமன், திருமால் என்று சொல்லப்பட்ட இருவர்களும், தமது அறியாமையினல் 'யாம் பரம், யாம் பரம்' என்று சண்டையிட, அவ்வாறு சண்டை செய்தவர்களுடைய அப்பதற்றம் அடங்கும் வண்ணம் சிவபெருமானர் அக்கினி உருவமாகி, அவ்விடத்தே அளவு கடந்து பரம்பொருளாகின்ற வரலாற்றைச் சொல்லி, தோணோக்கம் ஆடாமோ! (12)

மங்கைமீர்! எழுத் தொண்டனேன் எத்தனையோ காலமுழுதும் பரம்பொருளான நின்னைத் துதித்து வணங்காமல் பாழாக்கி இறைத்துவிட்டேன்; ஊழி முதலான காலத்தும் அழியாத பெருமைதங்கிய மாணிக்கம்போல்பவளுகிய சிவபெருமானை தானே அருள் கூர்ந்து) எழுந்தருளிவந்து என் பிறப்பினது அடிவேரைக் களைந்த வரலாற்றைக் குறித்துத் தோணோக்கம் ஆடாமோ! (13)

மங்கைமீர்! சொல்லிறந்த உன்னொளியாகி, உத்தமனுகிய சிவபெருமான் (அருளுடன்) எழுந்தருளி வந்து, என் மனத்தினிடம் புகுதலும், கரையில்லாத பெரிய காமக்கடலை விட்டுத் தாண்டுதலும், இரையற்ற இந்திரியங்களாகிய பறவைகள் பயந்தோட, அக்காரணத்தால் மனவேகம் கெட்டு அடங்கி ஒடுங்கிய விதத்தைச் சொல்லித் தோணோக்கம் ஆடாமோ! (14)

திருச்சிற்றம்பலம்.

16. திருப்பொன்னூசல்

(திலலையில் அருளியது—அருட்சுத்தி)

(ஆறடித்தாவு கொச்சகக் கலிப்பா.)

திருச்சிற்றம்பலம்.

சீர்ஆர் பவளம்கால் முத்தம் கயிறுக
ஏர்ஆரும் பொற்பலகை ஏறி, இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாய்அடியேற்கு,
ஊர்ஆகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்
போர்ஆர்வேற் கண்மடவீர்! பொன்னூசல் ஆடாமோ! 1

ஊன்றுஅங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணு மலர்அடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதுஊறித் தான்தெளிந்தாங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக் குலம்மஞ்ஞை
போன்றுஅங்கு அனநடையீர்! பொன்னூசல் ஆடாமோ! 2

மூன்றும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பல்நூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்தீறு எனக்குஅருளித் தன்கருணை வெள்ளத்து
மன்ஊற மன்னும்அணி உத்தர கோசமங்கை
மின்ஏறு மாடம் வியன்மா ளிகைபாடிப்
பொன்ஏறு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 3

16. திருப்பொன்னூசல்

திருச்சிற்றம்பலம்.

போர்த்தொழிலமைந்த வேலைப்போன்ற கண்களையுடைய பெண்களே! சிறப்புப்பொருந்திய பவளத்தையே கால்களாகவும், மூத்துமாலையே கயிறுகவுங்கொண்ட அழகுபொருந்திய பொன்னினால் செய்த பலகையின்மேலேறி இனிதாக எழுந்தருளி நாயினுங் கடையேனுகிய அடியேனுக்கு திருமாலுந் தேடுதற் கரியதாகிய புதிதாகிய தாமரைமலர்போலும் பிரகாசிக்கின்ற (இரண்டு) திருவடிகளை வாழும் ஊராகக் கொடுத்தருளுகின்ற திருவுத்தரகோசமங்கையில் எழுந்தருளியுள்ள யாவர்க்கும் தெவிட்டாத அமிர்தம்போல்பவளுகிய சிவபெருமானது அருளைக்கொடுக்கின்ற இரண்டு திருவடிகளைப் புகழ்ந்து பாடி, பொன் ஊசல் ஆடுவோமாக! என்றுள். (1)

அன்னப்பறவையின் நடையையுடைய மயில்போன்ற மாதரீர்! மூன்றுக அவ்விடத்தே பிரகாசிக்கின்ற திருக்கண்களையுடைய சிவபெருமானது (அழுதழுண்டமையால்) மூப்படையாத விண்ணுலகத்தில் தங்கி வாழ்கின்ற தேவர்களும் காணக்கூடாத தாமரைபோன்ற (திவ்ய) திருவடிகளையும், அழுதம் தெளிதலந்து, இனிமை பெற்று ஊற்றெடுத்துத் தெளிவடைந்து என் உடற்கண்ணே பொருந்தி உருக்குவிக்கும் திருவுத்தரகோசமங்கைக்கு அரசனுயிருக்கும் தலைவன் தங்கி இருக்கின்ற திருவிடைமருதூரை வாயாரப்பாடி, பொன்னூசல் ஆடுவோமாக! என்றுள். (2)

மாற்று ஏறப்பட்ட பொன் ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய பெண்காள்! தோன்றிய பொருளுக்கு முற்பட்ட முடிவும் அதன்மேற் பட்ட தோற்றமும் இல்லாதவனுகிய சிவபெருமான் பற்பல நூறுகோடித் தொகையினராகிய முனிவர் கூட்டங்களும் இமை கொட்டா தேவர்களும் நிற்க, தனது திருவெண்ணீற்றை எனக்குக் கொடுத்தருளிச்செய்து தன் கருணைப் பெருக்கத்தோடு தன் மகிமை வளர நிலைபெற்ற அழகிய திருவுத்தரகோசமங்கையிலுள்ள மின்னலைப்போல் பிரகாசிக்கின்ற மேல் மாடங்களையுடைய பெருமையமைந்த திருக்கோயிலைப்பாடி, பொன்னூசல் ஆடுவோமாக! என்றுள். (3)

நஞ்சுஅமர் கண்டத்தன்; அண்டத் தவர்நாத்தன்;
மஞ்சுதோய் மாடம்அணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னெடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுஉளே நின்றுஅமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்புஅறுப்பான், தூய புகழ்பாடிப்
புஞ்சம்ஆர் வெள்வளையீர்! பொன்னூசல் ஆடாமோ! 4

ஆணே? அலியோ? அரிவையோ? என்றுஇவர்
காணக் கடவுள் கருணையினல் தேவர்குழாம்
நாணுமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதின்ன
ஊணுஆக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோன்ஆர் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூண்ஆர் வனமுலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 5

மாதுஆடு பாகத்தன்; உத்தர கோசமங்கைத்
தாதுஆடு கொன்றைச் சடையான்; அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டுஎன் தொல்பிறவித்
தீதுஓடா வண்ணம் திகழப் பிறப்புஅறுப்பான்
காதுஆடு குண்டலங்கள் பாடிக்கசிந்து அன்பால்
போதுஆடு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 6

உன்னற்கு அரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்துஇறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேல்ஏறி ஆடும் அணிமயில்போல்
என்அத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்ஒத்த பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 7

தொகுதியாகப் பொருந்திய சங்கு வளையையுடைய பெண் காள்! நஞ்சு பொருந்திய கழுத்தினையுடையவன்; தேவலோகத் தார்க்கு இறைவன்; கருத்த மேகங்கள் தவழுகின்ற மேன்மாடங் களையுடைய அழகுவாய்ந்த திருவுத்தரகோசமங்கையில் இன்ப மொழியாளாகிய உமாதேவியோடு சேர்ந்து அடியவரது மனத் துள்ளே கூடியிருந்து அமிர்தம் சுரந்து அருள்செய்து இறத்தல் (மறுபடியும்) பிறத்தல்களைச் சேதிப்பவன்; அக்கொற்றவனது பரிசுத்தமாகிய புகழைப்பாடி, பொன்னூசல் ஆடுவோமாக! என்றாள். (4)

அணிகலன்கள் நிறைந்த மிகு அழகாகிய இரண்டு தனங்களை யுடையீர்! ஆண்தாமே, பெண்தாமே, அலியோ எனச் சந்தே கித்து, பிரம விட்ணுக்களாகிய இருவர் தேடியும் காணப்படாத கடவுளும் பெருங்கருணையினல் தேவர்கள் கூட்டம், யாதொரு பயமில்லாமல் பிழைக்கும்படி (அவர்களை) அடிமைகொண்டருளி, நஞ்சை உணவாக உட்கொண்டருளின திருவுத்தரகோசமங்கையி லுள்ள வளவுள்ள மூன்றும்பிறைச்சந்திரனை அணிந்த சடா பாரத்தையுடைய கூத்தனுமாகிய சிவபெருமானது குணத்தைத் துதித்து, பொன்னூசல் ஆடுவோமாக! என்றாள். (5)

தாமரை அரும்புகள் போல அசைகின்ற திருவாபரணங் களைத் தரித்த தனங்களையுடையீர்! மங்கையை ஓர் பாகம் வைத்த பங்கன்; திருவுத்தரகோசமங்கையில் உள்ள மகரந்தப்பொடி களையுடைய கொன்றைப்பூமாலையை அணிந்த சடைமுடியை யுடையான்; தன் திருத்தொண்டர்கட்குள்ளே காயினுங் கடை யேனை ஒருவனுகப் பாராட்டி அடிமைகொண்டு, எனது பழைய பிறவித்துன்பங்கள் பெருகாவண்ணம் நான் விளங்கும்படி பிறவித் தொடர்பை அறுப்பவனுமாகிய (அவனது) காதில் அசைந்து ஆடுகின்ற குண்டலங்களை அன்பிஞற் கசிந்துருகிப் பாடி, பொன் னூசல் ஆடுவோமாக! என்றாள். (6)

பொன்னை ஒத்த மூலைகளிலே ஆபரணமணிந்த தோழிகளே! நினைத்தற்கரிதாகிய திருவினையுடைய உத்தரகோசமங்கையில் நிலைபெற்றுப் பொலிவு பெற்றிருந்த பெருமையுள்ள வேதியனும், தனது கீர்த்தியையே சொல்லித் தாழ்ந்து வணங்க, பாவங்களைப் பற்றறுப்பவனும், எனக்கு அத்தனுகி என்னை ஆட்கொண்டவனு மாகிய இறைவனுடைய அழகை நாம் பாடி அன்னத்தின்மீது ஏறி இருந்து ஆடுகின்ற அழகிய மயிலைப்போல் பொன்னூசல் ஆடுவோமாக! என்றாள். (7)

சேலை வளைக்குடமி வந்து, குவலயத்துச்
சால அழுதண்டு தாழ்கடலின் மீதுளழுந்து
ஞாலம் மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்;
சிலம் திகழும் திருவுத்தர கோசமங்கை
மாதுக்கு அரியானை வாயார நாம்பாடிப்
பூவித்து அகம்குழைந்து பொன்னூசல் ஆடாமோ! 8

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கைத்
தம்குலவு சோதித் தனிஉருவம் வந்தருளி,
எங்கள் பிறப்புஅறுத்திட்டு எந்தாமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 9

திருச்சிற்றம்பலம்.

(தோழிகளே!) அழகாகிய கைலமலையினுச்சியினின்று வந்து, பூலோகத்தில் மிக்க அமிர்தமுண்டு, ஆழ்ந்த கடலின்மேல் எழுந்து பூலோகத்தில் பாவ, குதிரையின்மேல் எழுந்தருளி வந்து நம்மை ஆண்டருளினவனது இல்லற ஒழுக்கம் பிரகாசிக்கின்ற திருவுத்தரகோசமங்கையில் உள்ள திருமாலுக்கும் அரியவனே நாம் வாய் நிரம்பப் பாடி பூரித்து, மனங்குழைந்து பொன்னூசலாடுவோமாக! என்றுள். (8)

பொங்கும் பிரகாசம்பொருந்திய ஆபரணங்களை அணிந்தனங்களையுடையீர்! தென்னஞ்சோலைகள் சூழ்ந்த திருவுத்தரகோசமங்கையில் தங்கி விளங்குகிற நிகரற்ற ஒளி உருவமானது எமது பிறவித் தொடர்பை அறுத்து எங்கள் இனத்தையும் அடிமை கொள்பவனும், இடது பாகத்தில் சோதிமயமாயிருக்கும் பரமேசுவரியும் தானுமாக எழுந்தருளி எனை ஆளாக்கிக்கொண்ட வாசனை பொருந்திய கொன்றைமலர் மாலையைத் தரித்த (திருச்) சடைமுடியையுடையவனுகிய சிவபெருமானது மங்கள குணங்களைப் புகழ்ந்து பொன்னூசல் ஆடுவோமாக! என்றுள். (9)

திருச்சிற்றம்பலம்.

17. திரு அன்னைப்பத்து

(தில்லையில் அருளியது—ஆத்தும பூரணம்)

(கலி விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

வெகு மொழியர் வெண் ணீற்றர்; செம் மேனியர்;
நகுதப் பறையினர்; அன்னே ! என் னும்
நகுதப் பறையினர்; நான்முகன் மாலுக்கும்
நகுகர்இந் நகுதனர்; அன்னே ! என் னும். 1

கண்அஞ் சனத்தார்; கருணைக் கடலினர்;
உள்நின் று உருக்குவர்; அன்னே ! என் னும்;
உள்நின் று உருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவர்ஆல், அன்னே ! என் னும். 2

நித்த மணாளர், நிரம்ப அழகியர்,
சித்தத்து இருப்பர்ஆல், அன்னே ! என் னும்,
சித்தத்து இருப்பவர், தென்னன், பெருந்துறை
அத்தர்; ஆ னந்தர்ஆல், அன்னே ! என் னும். 3

ஆடரப் பூண், உடைத் தோல், பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா று அன்னே ! என் னும்,
வேடம் இருந்த ஆ கண்டுகண்டு என் னுள்ளம்
வாடும்,—இதுஎன்னே ? அன்னே ! என் னும். 4

நீண்ட கரத்தர், நெறிதரு குஞ்சியர்,
பாண்டிநன் நாடர்ஆல், அன்னே ! என் னும்,
பாண்டிநன் நாடர் பரந்துஎழு சிந்தையை
ஆண்டுஅன் பு செய்வர்ஆல், அன்னே ! என் னும். 5

17. திரு அன்னைப்பத்து

திருச்சிற்றம்பலம்.

அன்னாய்! தோழியானவள், 'வேதப்பாட்டினைப் பாடியவர்; திருவெண்ணீற்றைப் பூசியவர்; சிவப்பு நிறமாகிய திருமேனியையுடையவர்; சப்தத்தை ஒலிக்கின்ற பறையை உடையவர்' என்று என்பாற் சொல்லுவாள்; அங்ஙனம் பறையை முழக்கி நாதம் எழுப்பியவராகிய இத்தலவரே நான்முகனுக்கும் திருமாலுக்கும் தலவர் ஆவர்' என்று என்னிடம் சொல்லுவாள் (என்றாள்.) (1)

தாயே! உன் மகள் என்னிடம் வந்து, 'என் காதலர் மைதிட்டிய திருக்கண்களை உடையவர்; கருணைக்கடலாயிருப்பவர்; மனத்தினுள்ளே குடிபுகுந்திருந்து கரையச்செய்குவர்' என்பாள்; அன்றியும், 'தோழீ! மனத்தினுள்ளே குடிபுகுந்திருந்து உருக்கிக் கெடுதல் இல்லாத ஆனந்தக்கண்ணீரைப் பெருகச் செய்வர்' என்று கூறுவாள் (என்றாள்.) (2)

அன்னாய்! உன் மகள், 'எப்பொழுதும் மணவாளர், பேரழகையுடையவர்; என் மனத்தினிடத்தே பொருந்தி இருப்பார்; தோழீ! அங்ஙனம் மனத்தினுள் இருப்பவர் தென்னன் பெருந்துறையில் எழுந்தருளிய கடவுளே; அவர் பேரின்ப உருவாயிருப்பவர்' என்று கூறுவாள் (என்றாள்.) (3)

அன்னே! உன் மகள், 'தோழீ! படம் விரித்து ஆதலைச் செய்யும் பாம்பு ஆபரணம்; புலித்தோல் ஆடை; தேக முழுதும் பூசப்பட்டது திருவெண்ணீறு; (இவரது) ஒப்பற்ற வேடதாரியாயிருந்தவிதம் எதுக்கோ?' என்பாள்; 'தோழீ! வேடதாரிணையைப் போலிருந்த விதத்தைப் பார்த்துப் பார்த்து, என் மனம் மிக வாடுகின்றது; இது யாதோ?' என்பாள் (என்றாள்.) (4)

அன்னாய்! உன் மகள், 'தோழீ! என் தலவர் நீளமாகிய கையினை உடையவர்; அடர்ந்த சடையை உடையவர்; நலம் பெற்ற பாண்டிநாட்டை உடையவர்' என்று என்னிடம் சொல்லுவாள்; அதன்மேலும், 'தோழீ! நல்ல பாண்டிநாட்டை உடையவர்; எங்கும் பரவி எழுந்த மனத்தை ஆட்கொண்டு அன்பு செய்வார்' என்று என்னிடம் சொல்லுவாள் (என்றாள்.) (5)

உன்னற்கு அரியபெரி உத்தர மங்கையர்
மன்னுவது என்நெஞ்சில், அன்னே ! என்னும்;
மன்னுவது என்நெஞ்சில் மால்அயன் காண்கிலார்;
என்ன அதிசயம் ! அன்னே ! என்னும். 6

வெள்ளைக் கபிங்கத்தர்; வெண்திரு முண்டத்தர்;
பன்னிக்குப் பாயத்தர்; அன்னே ! என்னும்;
பன்னிக்குப் பாயத்தர்; பாய்பரி மேல்கொண்டுஎன்
உள்ளம் கவர்வர்ஆல், அன்னே ! என்னும். 7

தாள் அழுகினர்; சந்தனச் சாந்தினர்:
ஆள்எம்மை ஆள்வர்ஆல், அன்னே என்னும்;
ஆள்எம்மை ஆளும் அடிகளார் தம்கையில்
சாளம் இருந்தஆறு அன்னே ! என்னும். 8

தையல்ஓர் பங்கினர்; தாபத வேடத்தர்;
ஐயம் புகுவர்ஆல், அன்னே ! என்னும்;
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
கையும்இது என்னே ? அன்னே என்னும். 9

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர்; அன்னே ! என்னும்;
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்று எனக்கு ஆனவா, என்னே ! என்னும். 10

அன்னாய்! உன் மகள், 'தோழீ! என்னுதற்கு அரிதாகிய பெருமைதங்கிய திருவுத்தரகோசமங்கையை உடையவர்; என்னுடைய மனதிலே நிலைபெற்றோங்குவர்' என்று என்னிடம் சொல்லுவாள்; அவள் அதன்மேலும், 'தோழீ! என் மனத்தில் நிலைபெற்றோங்கும் அவரைத் திருமாலும் பிரமனும் பார்த்தறியார்; ஈது யாது புதுமையோ?' என்று கூறுவாள் (என்றாள்.) (6)

அன்னாய்! உன் மகள், 'என் தலைவர் வெண்பட்டாடையை இடையிலுடையவர்; திரிபுண்டரமாகத் திருநீற்றினை உடையவர்; (ஆகந்த) யோக நித்திரையாகிய மேற்போர்வையை உடையவர்' என்று என்னிடம் சொன்னாள்; அவள் அதன்மேலும், 'தோழீ! யோகாகந்த நித்திரையாகிய மேற்போர்வையை உடையவர்; அதி வேகமாய்த் தாண்டிச செல்லுகின்ற குதிரையின்மேலேறி வந்து எனது முழுமனதை (அன்று) கொள்ளை கொண்டனர்' என்று சொன்னாள் (என்றாள்). (7)

அன்னாய்! உன் மகள், 'தோழீ! என் தலைவர் கொடிபோல் நீளமான அறுகம்புல்லை உடையவர்; நன்மணமுள்ள சந்தனச் சாந்து உடையவர்; எங்களை அடிமையாளாகக்கொண்டு ஆளுபவர்' என்று என்னிடம் சொன்னாள். அவள் மேலும், 'தோழீ! எங்களை அடிமையாளாக ஆளுகின்ற அடியார்களின் கையில் திருத்தாளம் வைத்திருந்த வரலாறு என்னை?' என்று என்னிடம் கூறுவாள்' (என்றாள்). (8)

அன்னாய்! உன் மகள், 'தோழீ! என் தலைவர் உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்திருப்பவர்; தவவேடத்தை உடையவர்; பிசையை எடுப்பவர்' என்று என்னிடம் சொன்னாள். மேலும் அவள், 'தோழீ! பிச்சை எடுக்கப் புகுந்து அவர் செல்லுதலும், என் மனம் அவருடைய பிரிவு கருதி வருந்துகின்றது. இது யாது காரணமோ?' என்று என்னிடத்தில் கூறினாள் (என்றாள்.)

அன்னாய்! உன் மகள், 'தோழீ! என் தலைவர், கொன்றை மலரோடு கூடிய மூன்றும் பிறையையும், வில்வ பத்திரத்தோடு ஊமத்த மலரையும் அணிந்த தலையை உடையவர்' என்று என்னிடம் சொல்லுகிறாள். மேலும் அவள், 'தோழீ! அவர் நெருங்கிய தலையிலுள்ள அன்று எனக்கு ஊமத்த மலரே இப்பொழுது எனக்குப் பித்தாக ஆயினமை எக்காரணம்?' என்று என்னிடம் கூறுகின்றாள் (என்றாள்.) (10)

திருச்சிற்றம்பலம்.

18. குயிற்பத்து

(திவ்வியப் பிரபந்தத்தில் அருளியது—ஆத்துமவிரக்கம்)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சித்ரகூடம்.

கீதம் இனிய குயிலே!
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணிமுடி சொல்லில்
சொல்லிறுத்து நின்ற தொண்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான்
அந்தம் இலான் வரக்கூவாய்! 1

எத்திசும் எழ் உலகு ஏத்த
எவ்வுருவும் தன் உருவாய்,
ஆர்கலிசூழ் தென் இலங்கை
அழகுஅமர் வண்டோ தரிக்குப்
போர்அருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிராஞைச்
சிறிய வாயால் குயிலே!
தென்பாண்டி நாடனைக் கூவாய்! 2

நீல உருவிற் குயிலே!
நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகில் திகழும்
கோடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பொதிதும் இனிய
திருஉத்தர கோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
நாயகனை வரக் கூவாய்! 3

18. குயிற்பத்து

திருச்சிற்றம்பலம்.

இசைமொழியினும் இனிதான குயிலே! சற்று ஊக்கம் வைத்து கேட்பாயாயின், எமது சிவபெருமானது பாதம் இரண்டையும்பற்றிக் கேட்பாயாலல், அவை கீழ் உலகம் எழினுக்கும் அப்பாலும் ஊடுருவப்பட்டன. அங்ஙனமே அவனுடைய ஒளி பொருந்திய திருமுடி எங்கு முடிந்துநின்றது என்று உனக்குச் சொல்லப்போலல் (அது) வாக்குக்கு எட்டாது நின்ற பழமையாயிருக்கும். அங்ஙனம் முதற்குணம் ஆகிய (இவற்றில்) யாதொன்றும் இல்லாதவனும் இறுதியில்லாதவனும் ஆன அவன் வரும்படி அழைப்பாய். (1)

குயிலே! அழகைத்தருகின்ற எழுலகத்தாரும் போற்றி செய்ய எவ்வித வுருவமும் தனதுருவாகி கடலால் சூழப்பட்ட தென் பக்கத்திலிருக்கும் இலங்கைப் பட்டணத்தில் அழகில் மிகுந்த வண்டோதரிக்குத் தனது பெருமை தங்கிய கருணையினல் பரம இன்பத்தைக் கொடுத்த திருப்பெருந்துறையிலெழுந்தருளியிருக்கின்ற உபகார குணமுள்ளவனே, தென் பாண்டி நாட்டானே, சிறப்புப் பொருந்திய உன் வாயிலல் அன்புடன் அழைப்பாய். (2)

நீல நிறமுடைய குயிலே! உலகத்தில் இனிய ஒழுக்கம் விளங்குகின்ற திரு உத்தரகோசமங்கையில் நீண்ட சிறப்புடைய மாடமாளிகை விளங்குகின்ற பேரழகோகூடிய பூங்கொடி போன்ற உமையம்மை உள்ளே வாழ்கின்ற கோயிலில் எழுந்தருளியிருந்த இறைவனுகிய சிவபெருமானே வரும்படி நீ அன்புகூர்ந்து அழைப்பாய். (3)

தேன்பழச் சோலை பயிலும்
சிறுகுயிலே! இது கேள்நீ
வான்பழித்து இம்மண் புகுந்து
மனிதரைஆட் கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்து
என்உணர்வ தாய ஒருத்தன்
தான்பழித்து ஆண்ட மெல்தோகைத்
தனிஎனைநீ வரக் கூவாய்!

சுந்தரத்து இன்பக் குயிலே!
சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு
அடியவர் ஆனை அறுப்பான்,
பூதம் நடுவும் முடிவும்
ஆகிய பூவர் அறிவாச்
சிந்துரச் சேவடி யாணைச்
சேவகனே வரக் கூவாய்!

இன்பம் தருவன் குயிலே!
ஏழ்உலகும் முழு தாளி
அன்பன்; அமுது அனித்து ஊறும்
ஆனந்தன்; வான்வந்து தேவன்:
நன்பொன் மணிச் சுவடு ஒத்த
நற்பரி மேல்வரு வாணைக்
கொம்பின் மிழற்றும் குயிலே!
கோகழி நாதனைக் கூவாய்!

உன்னை உகப்பன் குயிலே!
உன்துணைத் தோழியும் ஆவன்,
பொன்னை அழித்த நன்மேனிப்
புகழிற் றிகழும் அழகன்,
மன்னன், பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன், சேரலன், சோழன்
சிற்புயங்கன், வரக் கூவாய்!

தேன் போன்ற இனிமையாகிய பலவித தீங்கனிகளைக் கொடுக்கின்ற சோலைகளில் சஞ்சரிக்கிற சிறிய குயிலே! இதனை நீ கேட்பாயாக. விண்ணுலகத்தை இழந்து நீங்கி இப்பூலோகத்தில் எழுந்தருளி மனிதரை அடிமை செய்துகொண்ட வரையாது கொடுக்கும் வள்ளல் பெருமானும் ஊனையுடைய உடலைப் பழித்து என் உள்ளத்து உணர்வு பொறிகளின்பாற் செல்லுதலை இகழ்ந்து என்னுடைய அறிவு தன்பால் செல்லுமாறு அதனுள்ளே புகுந்த ஒப்பற்றவனும் மானினது நோக்கத்தைப் பழித்து அடிமை கொண்ட மேன்மை தங்கிய கருணைபொழியும் பார்வையையுடையவளாகிய உமாதேவிக்கு மணவாளனுமாகிய சிவபெருமானை வரும்படி நீ அழைப்பாயாக என்றாள். (4)

அழகிலை இன்பத்தைத் தருகின்ற குயிலே! சூழப்பட்ட கிரணங்களையுடைய சூரியனைப்போல ஆகாயத்திலே நின்று (யாவரையும்) இரட்சிக்க இரங்கி இங்குள்ள தொண்டர்களுடைய (மூவாசையாகிய) குற்றத்தைப் பற்றறக் களைபவனுகிய ஆதியும் இடையும் அந்தமும் ஆன மூவருமறியாத மிகவும் செம்மையாகிய திருவடியையுடையவனை நிகரற்ற வீராதி வீரனை வரும்படி நீ அழைப்பாய். (5)

குயிலே! மாத்தின் கொம்பிலிருந்து மதலைச்சொற்கள் போல குழறிப் பேசுகின்ற குயிலே! உனக்கு மிக்க இன்பத்தைச் செய்வேன். ஏழுலகத்தையும் முற்றும் ஆளுவோன்; எல்லாரிடத்தும் பேரின்பமுடையவன்; அமிர்தத்தைக் கொடுத்தாறுகின்ற இன்பசொரூபன்; விண்ணினின்று எழுந்தருளிவந்த பரமசிவன், நல்ல பொன்மணி என்பவற்றின் தழும்புபோல்வனவாகிய புள்ளிகள் உள்ள நன்மையான குதிரையின்மீது வந்தவன் திருவாவடுதுறையிலெழுந்தருளிய தலைவன் ஆகிய பெருமானை அழைப்பாய்! (6)

குயிலே! உன்மீது ஆசைப்படுவேன்; உனக்கு உற்ற துணையாகிய தோழியுமாவேன்; பொன்னை வென்ற நல்ல அழகிய மேனியிலுலும் கீர்த்தியிலுலும் விளங்காநின்ற அழகையுடையவன்; தேவர் முதலியவர்க்கும் அரசன்: குதிரை ஏறிச் சவாரி செய்துகொண்டுவந்த வள்ளல்; திருப்பெருந்துறையில் (குருமூர்த்தமாய்) எழுந்தருளியவன்; பாண்டியன்; சேரன்; சோழன்; சிறப்பமைந்த அரவாபரணந்தரித்து ஆடும் நாக நடனத்தையுடைய சிவபெருமான் வரும்பொருட்டு அழைப்பாய்! (7)

வாஇங்கே நீ,குயிற் பிள்ளாய் !
மாலொடு நான்முகன் தேடி
ஓவி,அவர் உன்னி நிற்ப,
ஓண்டழல்விண் பிளந்து ஓங்கி
மேவி,அன்று அண்டம் கடந்து
விரிசுடராய்ந் நின்ற மெய்யன்,
தாவி வரும் பரிப்பாகன்,
தாழ்சடை போன்வரக் கூவாய் ! 8

கார்உடைப் பொன்திகழ் மேனிக்
கடிபொழில் வாழும் குயிலே !
சீர்உடைச் செங்கம லத்தில்
திகழ்உரு ஆகிய செல்வன்
பார்இடைப் பாதங்கள் காட்டிப்
பாசம்அறுத்து எனை ஆண்ட,
ஆர்உடை அம்பொனின் மேனி
அழுதினீ வரக் கூவாய் ! 9

கொந்துஅணவும் பொழிற் சோலைக்
கூங்குயிலே ! இது கேள்நீ
அந்தணன் ஆகிவந்து இங்கே
அழகிய சேவடி காட்டி,
எந்தமர் ஆம்இவன் என்றிங்கு
என்னையும் ஆட்கொண் டருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர்பிரான் வரக் கூவாய் ! 10

திருச்சிற்றம்பலம்.

குயிற் பிள்ளாயே! நீ இவ்விடத்திற்கு வருவாயாக. திருமாலோடு நான்முகனும் முதலில் தேடுதலைச் செய்தும், காணப் பெறுமையின் அத்தேடுந் தொழிலினின்று நீங்கி அவ்விருவரும் கருங்களைச் சிரமேற்கொண்டு தியானித்து நிற்க ஒளிபொருந்திய அக்கினி ஆகாயத்தைப் பிளந்து சென்று உயர்ந்து பொருந்திய அக்காலத்தில் விண்ணுலகங்கள் எல்லாவற்றையும் தாண்டி, விரிந்து, சோதியாய் எழுந்து நின்ற திருமேனியை உடையவன்; பாண்டிநாட்டெல்லையைத் தாவி வாநின்ற குதிரைகளுக்குத் தலைவனையிருந்தவன்; நீண்ட சடையையுடையவனை இங்கு வரும்படி அழைப்பாய். (8)

கரிய நிறமுடைய அழகு விளங்குகின்ற உடம்போடு மணம் பொருந்திய சோலையில் வாழுகின்ற குயிலே! சிறப்புடைய செந்தாமரைபோல விள்ங்கும் புகழ் மிக்க திருவுருவச் செல்வமுடையவனும் இந்நிலவுலகத்திலே வந்து திருவடிகளை எனக்குக் காட்டிக் கட்டுக்களை ஒழித்து ஆட்கொண்டருளிய அருமையினையுடைய அழகிய பொன்மேனியுடையவனுகிய அமுதமானவனுமாகிய எங்கள் பெருமானை நீ வருமாறு அழைப்பாயாக. (9)

பூங்கொத்துக்கள் பொருந்திய பெருமையமைந்த சோலையில் இருந்து பாடுகின்ற குயிலே! நீ இதனைக் கேட்பாயாக! இவ்வுலகில் வேதியனுருவாக வந்து அழகிய சிவந்த திருவடிகளைக் காட்டி, 'எமது அன்பரில் இவனும் ஒருவனுவான்' என்று இவ்விடத்தில் என்னையும் அடிமைகொண்டருளின செந்தீயை நிகர்த்த அழகிய மேனியையுடைய தேவர்பெருமான் தன்னை அழைப்பாய்!

திருச்சிற்றம்பலம்.

19. திருத்தசாங்கம்

(தில்லையில் அருளியது—அடிமைகொண்ட முறைமை)

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்.

ஏரார் இளங்கிளியே ! எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் சேர்ந்துரையாய்;—ஆரூரன் [போல்
செம்பெருமான், வெண்மலரான், பாற்கடலான் செப்புவ
எம்பெருமான், தேவர்பிரான் என்று. 1

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுரையாய்—காதலர்க்கு
அன்பு ஆண்டு ஈளா அருள்புரிவான் நாடுஎன்றும்
தென்பாண்டி நாடே தெளி. 2

தா(து)ஆடு பூஞ்சோலைத் தத்தாய் ! நமை ஆளும்
மாதுஆடும் பாகத்தான் வாழ்பதிஎன் ?—கோதாட்டிப்
பத்தர்எல்லாம் பார்மேல் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர். 3

செய்யவாய்ப் பைஞ்சிறகில் செல்வீ ! நம் சிந்தைசேர்
ஐயன், பெருந்துறையான் ஆறுஉரையாய்—தையலாய் !
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் கண்ணுடையான் ஆறு. 4

கிஞ்சுகவாய் அஞ்சுகமே ! கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய்—நெஞ்சத்து
இருள்அகல வான்வீசி இன்பம் அருமுத்தி
அருளும்மலை என்பதுகாண் ஆய்ந்து. 5

19. திருத்தசாங்கம்

அழகுவாய்ந்த இளங்கிளியே! எங்கள் தலைவனாகிய பெருந் தேவனுக்கு அரசனாகிய சிவபெருமானது சிறப்புப்பொருந்திய திருப்பெயரை இன்னதென்று ஆராய்ந்து சொல்வாயாக. வெண் காமரை மலரை ஆசனமாகவுடைய பிரமனும் திருப்பாற்கடலை யுடைய திருமாலும் முறையே 'ஆரூரனே! செம்பெருமானே!' என்று சொல்லுவதுபோல 'எம்பெருமானே! தேவர்பிரானே!' என்று சொல்வாயாக! (2)

குற்றம் இல்லாத இனிய சொல்லையுடைய மரகதம்போன்ற நிறத்தையுடைய கிளியே! ஏழுலகத்துக்கும் தலைவனும் எம்மை அடிமையாக்கிக்கொண்டவனுமாகிய சிவபெருமானது நாடு யா தென்று சொல்லுவாய். தன்மேல் அன்புடையவர்க்குப் பெருங் கருணையோடு ஆட்கொண்டு மறுபிறப்பு இல்லாத பதி அருள்செய்வோனது திருநாடானது எக்காலமும் தென் பாண்டிநாடேயாம். இதனைத் தெளிந்து கொள்வாயாக (2)

மகரந்தப்பொடியை வீசாநின்ற மலர்களையுடைய சோலையி லிருக்கும் கிள்ளையே! நம்மை ஆண்டருள்கின்ற மங்கைகேசர் பாகத்தை உடையவன் வாழ்கின்ற ஊர் எது என்று சொல்வாயாக. அவ்வூர் எதெனின், பக்தர் எல்லாரும் பூமியின்கண்ணுள்ள சிவ புரம் என்று மிக்க புகழினை எடுத்துக்கூறி ஒன்றுகூடிக் கொண் டாடுகின்ற திருவுத்தரகோசமங்கையேயாகும் (3)

சிவந்த வாயினையும் பசுமையாகிய சிறகினையுமுடைய செல்வியே! நம்முடைய மனத்திற்சேர்ந்த நம் ஐயனாகிய பெருந்துறை என்னும் திவ்விய க்ஷேத்திரத்தையுடையவனது நதியைச் சொல்வாயாக. அந்நதி யாதெனில், பெண்ணே! ஞானவெளியினின்று மண்ணுலகில் வந்திறங்கும் நம்மை ஆளுடை யானது நதியானது ஞானவெளியினின்று பற்றுவந்த சிந்தையின் கண்ணுள்ள மலங்களைக் கழுவ மண்ணுலகில் வந்திறங்கும் ஆனந்தம் எனப்படுவதாகும். (4)

முருக்கம் பூப்போன்ற வாயையுடைய அழகினையும் உடைய கிளியே! எக்காலமும் அழிவில்லாத திவ்விய க்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறைக்கு அரசனாகிய யாவராலும் மதிக்கப்பெற்ற அழகுடையவன் எழுந்தருளியிருந்து வாசம் செய்கின்ற திரு மலையைச் சொல்வாயாக. (அம்மலை யாதெனின்) ஆராய்ந்து மனத்தின்கண்ணதாகிய அஞ்ஞானமென்னும் இருள் நீங்க ஒளி வீசி இன்பமமைந்த வீட்டைத் தாநின்ற மலையென்று சொல்லப் படுவதே. இதனை ஆராய்ந்து பார்ப்பாயாக. (5)

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே!
ஒப்புஆடாச் சீருடையான் ஊர்வதென்னே?—எப்போதும்
தேன்புரையும் சிந்தையராத் தெய்வப்பெண் ஏத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து. 6

கோல்தேன் மொழிக்கிள்ளாய்! கோதில் பெருந்துறைக்
மாற்றுரை வெல்லும் படைபகராய்;—ஏற்றூர் [கோன்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. 7

இன்பால் மொழிக்கிள்ளாய்! எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பருமிக்க நாதப் பறை. 8

ஆய மொழிக்கிள்ளாய்! அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என்?—தீயவினை
நாளும்அஞ்சு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார். 9

சோலைப் பசுங்கிளியே! தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலிவும் கொடிகூறாய்—சாலவும்
எதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலார் ஏறும் கொடி. 10

திருச்சிற்றம்பலம்.

என் கிளியே! கூட்டின் இப்பகுதிக்கண் வந்து எனக்கு விடை சொல்வாயாக. கூட்டின் உட்பகுதிக்குள் செல்லாதே. ஒப்புரைத்தற்கு இயலாத சிறப்பையுடையவருகிய சிவபெருமான் ஏறி நடத்துவது எது? அதனைச் சொல்வாயாக. (அவ்வாறு ஏறி நடத்துவது எதனையெனின்) எந்நாளும் தேனை ஒத்த மனத்தையுடையவராய் தெய்வலோகத்தில் வாழ்கின்ற தெய்வப் பெண்கள் வாழ்த்துச் சொல்ல ஞானவெளிபாகிய குதிரையை மகிழ்ந்து நடத்துவர். (6)

கொம்புத்தேனைப்போன்ற இனிய மொழியையுடைய கிளியே! குற்றம் இல்லாத திருப்பெருந்துறைக்கு அரசருகிய சிவபெருமான் பகைவரை வெல்லுகின்ற ஆயுதத்தைச் சொல்வாயாக. (அப்படை யாதெனின்), தன்பால் குறையிரப்போருடைய மலமடையாத மனம் உருகும்படி ஆணவ முதலிய மும்மலங்களின் மேல் பாய்ந்தொழிக்கும் சூலமேயாகும். (அப்பரமசிவன், கையில் தாங்கும் படையாம். (7)

இனிய பால் போன்ற மொழியினையுடைய கிளியே! எமது திருப்பெருந்துறை என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்கு அரசனாய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது சந்நிதிக்கு முன்பாக ஒலிக்கின்ற முரசைச் சொல்வாயாக. அம்முரசு யாதெனின், அடியவர்கள்மேல் வைத்த அன்பினால் பிறவியாகிய பகைவன் அழியுமாறு பேரானந்தத்தேதடையர்ந்த பெருமை மிகுந்த நாதமாகிய முரசு என்றவாறு (8)

நன்மை தீமை இரண்டினையும் ஆராய்ந்த சொல்லினையுடைய கிளியே! தன்னைக் காதலித்து நுகர வாயூறும் அன்பரிடத்துப் பொருந்திய திருப்பெருந்துறையை உடையவனது உண்மையாகிய மாலை என்ன? (அம்மாலை யாதெனின்), கொடிய வினைகள் எப்போதும் தொடராவண்ணம் நாயினுங் கடையேனுகிய அடியேனை ஆளுதலுடைய சிவபெருமான் விரும்பியணிந்த தாளி அறுகினாலாய மாலையாம். (9)

சோலையில் வாழ்கின்ற பசுங்கிளியே! தூய்மையான குணங்களையுடைய திருப்பெருந்துறைக்கு அரசருகிய சிவபெருமானது அழகு மிகுந்த கொடியைச் சொல்லாய். (அக்கொடி யாதெனில்), துண்ணென்று பகைவர் மிகவும் பயப்படும்படி, மேலாய் விளங்கிக் காட்டும் அழகைச் செய்கின்ற குற்றம் இல்லாத இடபமேயாகும்.

திருச்சிற்றம்பலம்

20. திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது—திரே.தான சுத்தி)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது, பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி,நின் றிருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுதேகம்
சேற்றுஇதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுஉயர் கொடிஉடை யாய்,எனை உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது; உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அம் கண்ணும்
திரள்நிரை அறுபதம் முரல்வன, இவைஓர்;
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்தரு ளாயே!

கூவின பூங்குயில், கூவின கோழி,
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்;
ஓவின தாரகை, ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்;
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்! எமக்கு எளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

20. திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்.

வணக்கம். என்னுடைய வாழ்வுக்கு முதற்காரணமாகிய (என்றும் பிறப்பிறப்பில்லாப்) பொருளே! சேற்றின்கண் இதழ் களையுடைய தாமரை மலர்கள் விரிகின்ற குளிர்ச்சிபொருந்திய வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையின்கண்ணே எழுந்தருளி வாழ்கின்ற சிவபிரானே! உயர்ந்த இடபக்கொடியை உடையவனே! எந்தனை ஆட்கொண்டடையவனே! எம்பெருமானே! பொழுது விடிந்தது, இணையில்லாத அழகுவாய்ந்த சிலம்பணிந்த திருவடிக்கு ஒப்புமைவாய்ந்த மேம்பாடான புஷ்பங்களைக்கொண்டு அன்புடன் போற்றி, உமது அழகிய முகத்தில் எனக்கு அருளுடன் மலர்கின்ற அழகிய முறுவலைப் பற்றுகக்கொண்டு உமது திருத் தாளைத் தொழுது நிற்கின்றோம்; திருப்பள்ளியில் இருந்து எழுந் தருள்வாயாக. (1)

திருப்பெருந்துறையில் வாழ்கின்ற சிவபிரானே! அருட் பெருஞ் செல்வத்தை (அன்புகூர்ந்து) கொடுக்க வருகின்ற இன்பமாகிய கைலைக்கரசே! அசைகின்ற போராநந்தக் கடலே! அண்ணலே! சூரியன் கீழ்த்திசையை அடைந்தான்; இருளானது நீங்கிற்று. உதித்தலையுடைய உமது தாமரை மலர்போன்ற அழகிய முகத்தாமரையில் அருளாகிய சூரியன் முறையே உதித் தலும் கண்களாகிய வாசனைபொருந்திய மலர்கள் புட்பிக்கப் பெருமைபொருந்திய அழகிய (பெண்களது கண்போன்ற) கூட்ட வரிசையாகிய வண்டுகள் ஒலிக்காநின்றன; இவற்றை ஆராய்ந்து அறியக்கடவை. திருப்பள்ளி விட்டு எழுந்தருள்வாயாக. (2)

திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! எவ ராலும் காணுதற்கு அரியவனே! எங்களுக்கு எளியவனே! எம்பிரானே! அழகிய குயில்கள் கூவின; சேவல்கள் கொக்கரித் துக் கூவின; பறவைகள் ஒலித்தன; சங்குகள் முழங்கின; விண் மீன்கள் ஒளிமழுங்கின; உதயகாலத்தின் பிரகாசமானது தோன்று கின்றது. தேவனே! எமக்கு ஆசையுடன் சிறந்த நெருங்கிய வீரக்கழல்களாயணிந்த திருவடித் துணையைக்காட்டி அருளாய்; திருப்பள்ளியினின்று எழுந்தருள்வாயாக! (3)

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றுய்யனின் அல்லால்
போக்கிலன், வரவிலன், எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சிதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னு!
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
எதங்கள் அறுத்(து)எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே.

பப்பற வீட்டிருந்து உணருமின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மாலுடத்து இயல்பின்
வணங்குகின் றார்,அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப்பு அறுத்துனை ஆண்டுஅருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென, எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்குஎழுந் தருளும்

திருப்பெருந்துறைப்பதியில் வசிக்கும் சிவபெருமானே! அடியேனையும் ஆட்கொண்டு இனிய திருவருள் புரிகின்ற எம் பிரானே! இனிய இசையுள்ள வீணையை உடையவரும் யாழ் உடையவரும் ஒரு பக்கத்திலும், வேதங்களோடு வெவ்வேறு தோத்திரங்களைச் செய்பவர் ஒரு பக்கத்திலும், நெருங்கிய தொடுக்கப்பட்ட மலர்மாலையை ஏந்திய கையினையுடையவர் ஒரு பக்கத்திலும் தொழுவோரும் போராநந்தக்கண்ணீரை விட்டு அழுவோரும் (தன்னைத்தான் மறந்து) துவள்வோரும் ஒரு பக்கத்திலும் சிரசின்மேல் அஞ்சலியாகக் கூப்பினவர் ஒரு பக்கத்திலும் நிறைந்து நின்றார்கள்; திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (4)

குளிர்ச்சியைக்கொண்ட வயல் சூழ்ந்த திருப்பெருந்துறைக் கரசனே! மனதில் எண்ணுதற்கும் அரியவனே! எங்கள் கண்களிரண்டும் பார்க்க எதிரே வந்து குற்றங்களைக் களைந்து எம்மை ஆட்கொண்டருளி அருள்செய்கின்ற எம்பெருமானே! பூதங்கள் தோறும் உள்ளான் எனவும், போக்கிலன் வரவிலன் எனவும் உன்னைக் கூறி, அறிவுடையோர் உன்பொருட்டுக் கீதங்கள் பாடுதலும் திருக்கூத்தாடுதலும் அல்லாமல் உன்னைப் பார்த்து அறிந்து கொள்பவர்களைக் காதாரக் கேட்டுமறியோம்; திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (5)

உமாதேவியாருக்கு மணவாளனே! தாமரைகள் சிமிழினது குவிதல் தன்மையைக்கொண்ட பூத்தற்கிடமாகிய குளிர்ச்சி பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பெருமானே! இந்தப் பிறவித்தளையை அறுத்து, எங்களை அடிமைகளாகக்கொண்டு அருள்செய்கின்ற எம்பெருமானே! வீட்டிலகின்கண் வீற்றிருந்து காலம் இடம் முதலாயவற்றால் உளவாகும் நெருக்கமற உன்னை உள்ளவாறு உணர்கின்ற உன் அடியாரும் பிறவிக்கட்டையைச் சேதித்தவராகிய யாவரும் மிக்க கருமை தங்கிய நீர் பொழியும் கண்களையுடைய தலைவியர்போல மாணுட தேகமோடு வந்து தொழுதுநின்றார்; திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (6)

அந்தப் பொருள் முக்கனிகளின் சுவையெனவும், அமுதெனவும், அறிதற்கரிதெனவும், எளிதெனவும் தேவருமறியார்கள். (அங்ஙனமாக) 'இது அவனது திருவுருவம்; இவனேயவன்' என்று சொல்லும்படியாகவே எங்களை ஆண்டுகொண்டு இவ்விடத்தெழுந்

மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்! திருப் பெருந்துறை மன்ணு!
எதுஎனைப் பணிகொளும் ஆறுஅது கேட்போம்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்!
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவர்?
பந்துஅணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தோறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளே! உன தொழுப்புஅடி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் சானே!
வண்திருப் பெருந்துறை யாய்! வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடல்அமு தே! கரும் பே! விரும்பு அடியார்
எண்ணகத் தாய்! உல குக்குஉயிர் ஆனாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற ஆறுஎன்று நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்! திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்துஎனை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே! 10

திருச்சிற்றம்பலம்.

கருளிய தேன் பெருகுகின்ற சோலைசூழ்ந்த திருவுத்தரகோச மங்கையில் எழுந்தருளியிருப்பவனே! திருப்பெருந்துறைக்கிறை வனே! எங்களை ஆட்கொள்ளும் விபரம் யாது? அதனைக் கேட்டருள்வோம்; எமது பெருமானே! திருப்பள்ளி விட்டு எழுந்தருள்வாயாக. (7)

முற்பட்ட முதலிடை கடைகளுமாயினை; மும்மூர்த்திகளும் அறியுமாற்றலிலர்; வேறு அறிபவர் யாவர்; பந்து வந்து அணையும் விரலினையுடைய உமாதேவியும் நீயுமாக இனிய அடியார்களுடைய பழமையாகிய வீடுகள்தோறும் எழுந்தருளின பரமனே! நீ எம்பால் வந்து சிவந்த கெருப்பை ஒத்த அழகிய உடலையும் காட்டித் திருப்பெருந்துறைக்கண்ணுள்ள கோயில் இதுதான் எனக் காட்டி, அங்கு யான் அந்தணனேவேன் என்பதனையும் விளங்கிக்கொள்ளக் காட்சி அளித்து, அன்புடன் வந்து அடிமை கொண்டாண்டருளினை; அரிய அமிர்தமே! திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (8)

விண்ணிடத்துள்ள தேவர்களும் அடையவும் ஒண்ணுத மேலாகிய பரம்பொருளே! உன்னுடையனவாகிய குற்றேவலைச் செய்கிற அடியேங்களை மண்ணிடத்தெழுந்தருளி வாழ்வித்த வனே! வளமாகிய திருப்பெருந்துறையிலுள்ளவனே! நின் அன்பர் வழிப்பட்ட அடியோமாகிய எம்முடைய கண்ணிடத்தே நின்று களிப்பைத் தருகின்ற தேனே! பாற்கடலுள் தோன்றிய அமிர்தமே! கரும்பு போன்றவனே! விரும்புகின்ற அன்பரது மனத்திலிருப்பவனே! உலகிற்கோருயிரானவனே! எம்பெரு மானே! திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (9)

திருப்பெருந்துறை என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் வாழ்பவனே! திருமாலாகிய அவன் பூமியிற் சென்று பிறவாமை யிலை யாம் வீணைகவே நாள் கழியாநின்றோம்; இந்தப் பூமியைச் சிவபெருமான் யாவரையும் உய்யக்கொள்ளும் இடமென்று பார்த்து, அவன் விருப்பத்தை அடையவும், பிரமனும் (அவ்வாறே) ஆசைப்படவும் உனது பரந்த உண்மையாகிய கருணையும் நீயுமாகப் பூமியிலெழுந்தருளி எங்களை ஆட்கொள்ள வல்லானே! அரிய அமுதமே! திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக. (10)

திருச்சிற்றம்பலம்.

21. கோயில்மூத்த திருப்பதிகம்

(திருத்தில்லையில் அருளியது—அநாதியாகிய சற்காரியம்)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

உடையாள் உன்தன் நடுவிருக்கும்;
உடையாள் நடுவுள் நீயிருத்தி;
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தாணல் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரி யாய்,பொன் னம்பலத்தெம்
முடியா முதலே! என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

முன்நின் றுண்டாய் எனைமுன்னம்;
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்நின் றேவல் செய்கின்றேன்;
பிற்பட் டொழிந்தேன், பெம்மானே!
என்நின் றருளி! வரநின்று
போந்திடு என்ன விடில்அடியார்
உன்நின் றிவரைர் என்னாரோ?
பொன்னம் பலக்கூத் துகந்தானே! 2

உகந்தானே! அன்புடை அடிமைக்கு
உருகா உள்ளத்து உணர்விலியேன்,
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்கவா றுஅன் றுஎன்னாரோ?
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய், அடியேற்குஉன்
முகந்தான் தாராவிடில் முடிவேன்
பொன்னம் பலத்துளம் முழுமுதலே! 3

முழுமுத லே! ஐம் புலனுக்கும்
மூவர்க்கும் என்ற னக்கும்
வழிமுத லே! நின் பழஅடியார்
திரள் வான்குழு மிக்கு

21. கோயில்மூத்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

பொற்சபையிலிருக்கிற எமது முடிவற்ற முதற்பொருளே! எல்லா மேம்பாட்டையுமுடைய உமையவள் உன்னிடையே யிருப்பள்; உமையவளிடையே நீ இருக்கின்றனை; அடியேனிடையே நீங்கள் இருவரும் அன்போடு எழுந்தருளி இருப்ப தாயின் அடியேனது எண்ணம் முடியும்படி என்னெதிரே நின்று, அடியனேன் உன்னடியாரிடையே இருத்தற்குரிய அருள் செய்வாயாக. (1)

பொன்னம்பலத்திலே ஆனந்தக்கூத்தாடுதலே விரும்பி மேற் கொண்டவனே! பெரியோனே! முன்னே அடியேனை எதிரில் நின்று ஆட்கொண்டருளினை; அடியேனும் அதனையே முயன்று பின்னே நின்று குற்றேவல் புரிந்து வருகின்றேன்; வந்தும் பிற்பட்டு ஒழிந்துபோனேன். என்னை இப்பொழுது உனது திரு அருள் பற்றுமாறு நின்று வாவென்றருளாவிடின் உன்னடி யவர் உன்னெதிர் நின்று (உன் அருளுக்குரியனல்லாத) இவன் யாரென்று கேளாரோ? (2)

பொன்னம்பலத்தின்கண் நடமாடும் எம்முடைய முழு முதலே! அன்புள்ள அடிமையையே பெறவேண்டுமென அதற்கு விரும்பியவனே! கரையாத மனத்தையும் உணர்வின்மையையும் உடையேன்; நான் உலகமறியும்படி முறையிட்டுக்கொண்டால் இது தக்கவழியல்லவென்று சொல்லாரோ? யாகம் செய்து வழிபட்டு வந்தவர் வாழும்படி வாழ்ந்தனை; அடியேனுக்கு உனது முகத்தைக் கொடாவிடின் இறந்தொழிவேன். (3)

பொன்னம்பலத்தரசே! முழுமுதற்பொருளே! ஐம்புலன் களுக்கும், அறிவு இச்சை செயல் என மூவகைப்பட்ட சக்தி களுக்கும் எனக்கும் இயக்கத்திற்குரிய முதற்காரணையிருப்ப வனே! உன் பழைய அடியார் திருக்கூட்டமும், விண்ணுலகத்தில்

எழுமுத லே! அருள் தந்திருக்க
இரங் குங்கொல் லோ, என்று
அழுமது வே அன்றி மற்றென்
செய்கேன்? பொன்னம்பலத் தரைசே!

அரைசே! பொன்னம் பலத்தாடும்
அழுதே! என்றுன் அருணிணைக்கி,
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
எசற்று இருந்தே வேசற்றேன்;
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துஉன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாது இருந்தால் எசாரோ?

எசா நிற்பர் என்னைஉனக்
கடியான் என்று பிறர்எல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணை நிற்பேன் நின்னருளே!
தேசா! நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கந் தேவிக்க
ஈசா! பொன்னம் பலத்தாடும்
எந்தாய்! இனித்தான் இரங்காயே!

இரங்கும் நமக்கு அம் பலக்கூத்தன்,
என்றுஎன்று ஏமாந்து இருப்பேனை
அருங்கற் பனைகற் பித்துஆண்டாய்!
ஆள்வார் இவிமாடு ஆவேணை?
நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர, எங்கள்
வாழ்வே! வான்என்று அருளாயே.

கூட்டங்கூடிப் பொருந்துகின்ற முதல்வனே! அருளைத் தந்து தன்னுடன் யானிருக்க இரங்குவாயே? என்று அழுவதேயல் யாது வேறென்செய்யவல்லேன்? (4)

அரசனே! பொன்னம்பலத்தில் நடிக்கின்ற அமிர்தம் போன்றவனே! என்று துதித்து, உன் திருவருளே விரும்பி, உணவைத் தேடுகின்ற கொக்குப்போன்று, இரவும் பகலும் வருந்தியிருந்து இளைத்தேன்; பிறவிக்கடலைக் கடந்து (முத்திக் கரையையடைந்த) உன்னடியவர் களிப்பு மிகும்படி காட்சி கொடுத்தருளி உன்னடியேனுகிய என்னிடத்தில் பிரையிட்ட பாவின்கண்ணுள்ள நெய்போல மவுனமாய்ப் பேசாமலிருந்தால் உலகத்தார் வையாரோ? (5)

வையாநிற்பர்; அடியேனை உனக்கடியவனென்று அயலா ரெல்லாரும் சொல்லாநிற்பர்; அடியேனும் உன்னருளையே விரும்பாநிற்பேன்; ஒளியுருவானவனே! அன்பர்குழாஞ் சூழ்ந் திருக்கிற உன் திருவோலக்கத்தைச் சேவிக்க, ஈசனே! பொற் சபையில் நடிக்கின்ற எந்தையே! இனியாயினு மிரங்கி யருள்வா யாக. (6)

அம்பலக்கூத்தன் நமக்கு இரங்குவன் என்று பலகாற் கூறி (இரங்காமையால்) திகைத்திருக்கும் அடியேனை இதுவரையில் இல்லாத ஒரு புதிய எற்பாட்டை எற்படுத்தி ஆண்டருளினை; காப்பாற்றுவாரில்லாத மாட்டுக்கு நிகராவேனே? நெருங்கிய அடியவர்களும் நீயும் நின்று விளங்கி விளையாடுகின்ற பக்கத்திலே யானுஞ் சேர்ந்து வரும்படி எமது வாழ்வே! என்னை வாவென் றருள்செய்வாய். (7)

அருளா தொழிந்தால், அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்? இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே! பொன்னம்பலக் கூத்தா!
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து
வருந்து வேனை வாளன்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேற்,
செத்தே போனாற் சிரியாரோ? 8

சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்,
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார், கேட்பார், மெச்சுவார்,
வெவ்வே றிருந்துன் திருநாமம்
திரிப்பார், டொன்னம் பலத்தாடும்
தலைவா, என்பார், அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனை?
நம்பி இனித்தான் நல்காயே. 9

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி, நயனநீர்
மல்கா, வாழ்த்தா வாய்குழறி,
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்,
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப், பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
அருளாய். என்னை உடையானே! 10

திருச்சிற்றம்பலம்.

திருவருள் புரியாதொழிந்தனையாயின் அடியனேனை இம்
வுலகில் பயப்படாதே என்பவர் யாவர்? (ஒருவருமில்லை) என்னை
யொரு பொருளாகக்கொண்டு வலிய வந்தாண்டருளின பொன்
போற் சிறந்தவனே! பொன்னம்பலக்கூத்தா! மயக்கம் பொருந்திய
மனத்துடன் உன்னை நீங்கி வருந்தாநின்ற என்னை வாவென்
றழைத்து உனது தெளிவு பொருந்திய அன்பர் கூட்டத்தைக்
காட்டாதொழிந்தால் (அடியேன்) இறந்தே போனால் உலகத்தார்
நகையாரோ? (8)

சிரிப்பார்கள்; களிப்படைவார்கள்; இன்புறுவார்கள்; கூடிக்
கூடி உன் திருப்புகழை விரித்துரைப்பார்கள்; விரித்துரைப்ப
வற்றைக் கேட்பார்கள்; மெச்சுவார்கள்; தனித்தனி இருந்து உன்
திருப்பெயரைத் தரிப்பார்கள்; பொன்னம்பலத்தின்கண்ணே
நிருத்தஞ்செய்கின்ற இறைவா என்பார்கள்; அப்படிப்பட்ட அவர்
களுக்கெதிரில் நாய்போன்ற நான் நரித்தன்மையுடையேனாய்
இருப்பேனே? இருக்கமாட்டேன். ஆதலால், நம்பியே! இனி
யாவது அருள்செய்வாயாக. (9)

என்னையும் அடிமையாக உடையவனே! நமக்கருள் புரியா
தொழியாவென்று துணிந்து உன் திருநாமங்களைப் பலகாற்
சொல்லிக் கண்ணீர் பெருக்கி வாழ்த்தி வாய் குழறி வணங்கி
மனத்திலுல் நினைந்துருகிப் பலகாலும் உன்னைப் பாவனைசெய்து
துதித்துப் பொன்னம்பலமென்று கூறியவண்ணம் வாடாநிற்கும்
என் உயிர்க்கு இரங்கியருள்வாயாக. (10)

திருச்சிற்றம்பலம்

22. கோயில் திருப்பதிகம்

(தில்லையில் அருளியது—அநுபோக இலக்கணம்)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

மாறினின் றுன் என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே!
ஊறினின் று என் னுள் எழுபரஞ் சோதி!
உள்ளவா காணவந் தருளாய்!
தேறலின் தெளிவே! சிவபெரு மானே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே! என் னுடை அன்பே! 1

அன்பிலேன் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்;
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே! முடிவிலா முதலே!
தென்பெருந் துறையாய்! சிவபெரு மானே!
சீருடைச் சிவபுரத்து அரைசே! 2

அரைசனே! அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே! ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் று உருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே!
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
உரைஉணர்வு இறந்துநின் று உணர்வதோர்உணர்வே!
யான்உன்னை உரைக்கும்ஆ று உணர்த்தே! 3

22. கோயில் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

கொம்பிற்கட்டிய தேனினது தெளிவே! சிவபிரானே! திருப்பெருந்துறையில் வாழ்கின்ற சிவனே! அளவு இல்லாத பதவிகளெல்லாவற்றையுங் கடந்துநின்ற ஆனந்தமே! என்னுடைய அன்புருவமே! பகைகொண்டு நின்று அடியேனை மயக்கச்செய்கிற வஞ்சனையைக்கொண்ட இந்திரியங்கள் ஐந்தினுடைய வாயில்களைத் தடுத்து அழுகமே சுரந்துநின்று என் மனத்தின்கண் குடியாயமர்ந்து விளங்குகிற மேலான ஒளியே! நான் உன்னை உள்ளபடியே கண்டு தரிசிக்கும்பொருட்டு எழுந்தருள்வாயாக. (1)

முன்னுமாகிப் பின்னுமாய் அவை முழுவதுமாகி வியாபித்த எல்லாவற்றினின்றும் கட்டு நீங்கிய நிலையையுடையவனே! முடிதல்லாத முதல்வனே! தென் திருப்பெருந்துறைப்பதியை உடையானே! சிவபிரானே! சிறப்புப்பொருந்திய சிவபுரத்துக்கிறைவனே! அன்பின் மிகுதியால் அடியேனது உயிரோடு உடம்பும் இன்ப வடிவாகிக் கரைந்துருகும்படி என் தகுதிக்குப் பொருத்தமில்லாத இனிய திருவருளைச் செய்தனை; இந்த நன்றிக்கு நான் யாதொரு கைம்மாறும் இல்லாதவனாயினேன். (2)

அடியவர்க்குத் தலைவனே! அடியேனுடைய ஐயனே! எனது உயிருமுடம்பும் இலேசு இலேசாக உருகும்படிப் புகுந்து நின்றுருகப்பண்ணி பொய்யாகிய அஞ்ஞான இருளை நீக்கின உண்மையாகிய ஒளியே! அவாவாகிய அலையால் மோதப்படாத நிலைபெற்ற அமைதியாகிய அமுதவெள்ளத்தையுடைய தெளிந்த திருப்பாற்கடலே! திருப்பெருந்துறைப்பதியில் விளங்கும் சிவபெருமானே! சொல்லும் அறிவும் கடந்துநின்று, அறியத்தருவதாகிய ஒப்பற்ற அறிவே! நான் உன்னைப் புகழ்ந்துரைக்கும்படி அறிவுறுத்துவாயாக. (3)

உணர்ந்தமா முனிவர் உம்பரோடு ஒழிந்தார் ;
உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே !
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே !
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே !
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே !
திருப்பெருந் துறைஉறை சிவனே !
குணங்கள்தாம் இல்லா இன்பமே ! உன்னைக்
குறுகினேற்கு இனிஎன்ன குறையே ? 4

குறைவிலா நிறைவே ! கோதிலா அமுதே !
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே !
மறையுமாய், மறையின் பொருளுமாய், வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே !
சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறைஉறை சிவனே !
இறைவனே, நீஎன் உடலிடம் கொண்டாய்
இனிஉன்னை என்இரக் கேனே ? 5

இரந்திருந்து உருக என்மனத் துள்ளே,
எழுகின்ற சோதியே ! இமையோர்
சிரந்தனிற் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறைஉறை சிவனே !
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ! ஆங்கே
கரந்ததோர் உருவே ! களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து என்னுள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலாற் பிறிது மற்றுஇன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து
திருப்பெருந் துறைஉறை சிவனே ! [ஒன்றும்
ஒன்றுநீ அல்லை அன்றிமற்று இல்லை,
ஆர்உனை அறியகிற் பாரே ? 7

எல்லா நூல்களையும் சந்தேக விபரீதங்களறக் கற்றறிந்த பெரிய முனிவரும் தேவருடன் பிற பெரியோர்களுமாகிய எல்லார் தம் அறிவுக்கும் தெரிதற்கருமையாகிய பொருளே ! எவற்றிலும் சாராதவனே ! எல்லாச் சீவர்களுக்குள்ளும் உயிராயிருப்பவனே ! அடியேனது பிறவிப்பிணியை நீக்கும் எனது மருந்தே ! நெருங்கினதாகிய ஒப்பற்ற இருளின்கண் தெளிவடைந்த பரிசுத்தமாகிய ஒளியே ! திருப்பெருந்துறைப்பெருமானே ! மூக்குணங்கள் இல்லாத ஆநந்தமே ! உன்னையடைந்த எனக்கு இனி என்ன குறையுளது ? ஒன்றுமில்லை. (4)

குறைபாடில்லாத நிறைவுபட்ட பொருளே ! குற்றமற்ற அமிர்தமே ! முடிவில்லாத செழுமையாகிய மலர்போன்ற ஒளி வடிவமே ! வேதமுமாகி வேதத்தின் பொருளுமாகி வந்து என் மனத்தின்கண் நிலைபெற்ற இறைவனே ! கரையற்ற நீர்போல் என் மனத்தின்கண் பாயாநின்ற திருப்பெருந்துறைத்தலைவனே ! யாவர்க்குமிறைவனே ! நீ என்னுடம்பை வாழுமிடமாகக்கொண்டனை. ஆதலால், இனி உன்னை யாது வேண்டுமென இரப்பேன்?

வேண்டி வேண்டி உருகும்படி அடியேன் மனத்தினுள் எழுகின்ற ஒளியே ! தேவர்களுடைய சிரத்தின்மேல் விளங்குகின்ற தாமரை மலர்போன்ற திருவடியை உடையவனே ! திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! வரிசைப்பட வைக்கப்பட்ட ஆகாசமும் நீரும் பூமியும் நெருப்பும் காற்றும் ஆகி, அவை அல்லாதனையாகி, அவ்வாறே அவற்றிடை மறைந்த ஒருருவமே ! இப்பொழுது உன்னைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். (5)

இப்பொழுது அடியேனுக்கருள்புரிந்து அஞ்ஞான இருளைப் போக்கி மனத்தின்கண்ணே உதிக்கின்ற சூரியனையே ஒத்துநின்ற உன் பெருந்தன்மையை நினையாமல் நினைந்தேன்; நீயன்றி வேறு பொருளில்லையாக போய்ப்போய் அணு ரூபமாகித் தேய்ந்து தேய்ந்து ஒரு ரூபமாகின்ற திருப்பெருந்துறைச் சிவபெருமானே! ஒரு பொருளும் நீயல்லை; நீயன்றி வேறு ஒரு பொருளுமில்லை; உன்னை அறியவல்லவர் யாவர் ? ஒருவருமில்லை. (7)

பார்பதம் அண்டடம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படர்ஒளிப் பரப்பே!
நீர்உறு தீயே! நினைவதேல் அரிய
நின்மலா! நின்னருள் வெள்ளச்
சீர்உறு சிந்தை எழுந்ததோர் தேனே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
யார்உறவு எனக்குஇங்கு ஆர்அயல் உள்ளார்?
ஆனந்தம் ஆக்கும்என் சோதி! 8

சோதியாய்த் தோன்றும் உருவமே! அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய,
ஆதியே! நடுவே! அந்தமே! பந்தம்
அறுக்கும்ஆ னந்தமா கடலே!
நீதிலா நன்மைத் திருவருட் குன்றே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
யாதுநீ போவதோர் வகைஎனக்கு அருளாய்
வந்துநின் இணைஅடி தந்தே. 9

தந்ததுஉன் தன்னைக், கொண்டதுஎன் தன்னைச்,
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன் றுஇல்லா ஆனந்தம் பெற்றேன்,
யாதுநீ பெற்றதான் றுஎன்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எந்தையே ஈசா! உடல்இடம் கொண்டாய்.
யான்இதற்கு இலன்ஓர் கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்.

பூமியும் ஆகாய முழுதும் உன் திருப்பாதம் எங்குமாகிப் பரவி எவ்விடமும் பரந்து ஒன்றாய்ப் பரந்த ஒளிப்பரப்பே! நீரோடு கூடிய நெருப்பே! மனத்தால் எண்ணப்புகின் அருமையாகிய குற்றமற்றவனே! உனது அருட்பெருக்கின் சிறப்பமைந்த மனத் தின்கண் உண்டாகிய ஒப்பற்ற தேனே! திருப்பெருந்துறைப் பதித் தலைவனே! எனக்கு இன்பத்தைத் தருகின்ற என்னுளைப் புடைப் பொருளே! இவ்விடத்தில் அடியேனுக்கு உறவாயிருப் பவர் யாவர்? அயலாராயிருப்பவர் யார்? ஒருவருமில்லை. (8)

ஒளியாய்க் காணப்படுகின்ற உருவே! எவ்வடிவமும் கொள் ளாத ஒரு பொருளாகவும் இருந்து வருபவனே! சொல்லுதற் கருமையாகிய மூதற்பொருளே! இடையே! முடிவே! பிறவித் தளையை அறுக்கின்ற பெரிய இன்பக் கடலே! தீமை கலவாத [illegible] ண்மையையுடைய திருவருண் மலையே! [illegible] லிருக்கும் சிவபெருமானே! குருவாக என் முன்னர்த் தானே வந்து உன் திருவடி இரண்டினையும் தந்த பின்பு நீ என்னைக் கைவிட்டு நீங்கும் வகை எது? (ஒன்றுமில்லை); அடியேனுக்கு வந்து உன் இரண்டு திருவடிகளைக் கொடுத்து அருள்புரிய வேண்டும். (9)

என் மனத்தையே திருக்கோயிலாகக்கொண்டெழுந்தருளின எம்பிரானே! திருப்பெருந்துறைச் சிவபெருமானே! எமது தந்தையே! ஈசனே! என்னுடம்பையே இடமாகக்கொண்டாய்! உன் உடம்பை நான் தங்குமிடமாக எனக்குத் தந்தாய்; அதற்கு மாறாக, நீ தங்குமிடமாக என்னைக்கொண்டாய்! சங்கரனே! நம் மிருவரில் யார் திறமையுடையவர்? யான் முடிவென்பது சிறிது மில்லாத பேரின்பமடைந்தேன்; கைம்மாறாக நீ என்னிடத்துப் பெற்றுக்கொண்டதோர் பொருள் யாது? (ஒன்றுமில்லை). இந்த நன்றிக்கு நான் செய்ய அமைப்பதாகிய ஒரு பதிலுபகாரத்தைச் செய்ய உடையேனல்லேன். (10)

திருச்சிற்றம்பலம்.

23. செத்திலாப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—சிவானந்தம் அளவறுக்கொணைமை)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பொய்யனேன் அகம்நெகப் புகுந்து அமுதுஊறும்
புதுமலர்க்கழல் இணைஅடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ !
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன் !
ஐயனே ! அரசே ! அருட்பெருங் கடலே !
அத்த னே ! அயன் மாற்குஅறி வொண்ணைச்
செய்யமே னியனே ! செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

புற்றும் ஆய்,மரம் ஆய்,புனல் காலே
உண்டி ஆய்,அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருமின் மலர்அடி காணை
மன்ன ! என்னைஓர் வார்த்தைஉட் படுத்துப்
பற்றிணைப் பதியேன் ; மனம்மிக உருகேன் ;
பரிகி லேன்பரி யாஉடல் தன்னைச்
செற்றி லேன் ; இன்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

புலைய னேனையும் பொருள்என நினைந்துஉன்
அருள்பு ரிந்தனை ; புரிதலும் களித்துத்
தலையி லைல்நடந் தேன்,விடைப் பாகா !
சங்க ரா ! எண்ணில் வான வர்க்குஎல்லாம்
நிலைய னே ! அலை நீர்விடம் உண்ட
நித்த னே ! அடை யார்புரம் எரித்த
சிலைய னே ! எனைச் செத்திடப் பணியாய் ;
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

23. செத்திலாப்பத்து

திருச்சிற்றம்பலம்.

ஐயனே! அரசனே! பெரிய அருட்கடலே! எமது சுற்றமே! பிரம்மவிட்டுணுக்களுக்கும் அறியவொண்ணுத சிவந்த மேனியனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானே! உண்மையற்றவனாகிய எனது மனம் நெகிழும்படி உன்கண் புகுந்து அமுதம் சுரக்கின்ற அன்றலர்ந்த தாமரை மலரையொத்த வீரக்கண்டையை அணிந்த இரண்டு திருவடி களைப் பிரிந்தும் தனித்துள்ளேனாகிய நான் இன்னும் இறக் திலேன். ஐயோ! கருத்துணர்ச்சியோடிருந்தும் மனக்ருத்தை இழந்துவிட்டேன். செய்யவேண்டிய விதம் இன்னதென்றறிந் திலேன். (1)

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! புற்றுருவாகியும் மரவடிவாகியும் நீரையும் காற்றையுமே ஆகார மாகக்கொண்டு தேவர்களும் மற்றையரும் (தவஞ்செய்து) உடல் குறைந்து ஒருவரும் உன் தாமரை மலர்போலுந் திருவடிகளைக் காணவொண்ணுத இறைவனே! அடியேனை 'நானே நீயாதலால் நீயும் யானுவாய்' என்னும் ஒரு வார்த்தையிலகப்படுத்தி ஆண்டு கொண்டாய். அதை நினைத்து மனம் பதைக்கிலேன்; மனமானது மிகவும் உருகப்பெற்றிலேன்; அன்பு செய்திலேன்; அன்பு செய்யப் பெறுத உடம்பை வெறுத்திலேன்; இன்னமும் திரியாநின்றேன். திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! கடையனுகிய என்னையும் ஒருபொருளாக மதித்து உன்னருள் செய்தனை. அவ்வாறு செய்தலும் களிப்படைந்து தலையாலே நடந்தேன்; இடபவாகனனே! சங்கரனே! எண்ணிறந்த தேவர் களுக்கெல்லாம் நிலையிடமாயுள்ளவனே! அலகையுடைய கடலிற்பிறந்த நஞ்சையருந்தின இறைவனே! பகைவரது திரி புரத்தை நீறுக்கின அம்பினை எயில வில்லையுடையானே! அடி யேனைச் சாவப் பணிக்கவேண்டும். (3)

அன்பர் ஆகிமற்று அருந்தவம் முயலவா
அயனும் மாலும்மற்று அழல்உறு மெழுகாம்
என்பர் ஆய்நினை வார்எனப்பலர்
நிற்க இங்கு எனைஎற்றினுக்கு ஆண்டாய் ?
வன்பராய் முருகு ஒக்கும்என் சிந்தை ;
மரக்கண் ; என்செவி இருப்பினும் வலிது.
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா !
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

ஆட்டுத் தேவர்தம் விதிஒழித்து அன்பால்
ஐயனே, என்றுன் அருள்வழி இருப்பேன் ;
காட்டுத் தேவரும் காடரும் பொருளே !
காத னேன ! உனைப் பிரிவுரு அருளாக்
காட்டித் தேவனின் கழல்இணை காட்டிக்,
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய் !
சேட்டைத் தேவர்தம் தேவர் பிரானே !
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்கு
ஆர்கி லேன்திரு அருள்வகை அறியேன்,
பொறுக்கி லேன்உடல் போக்கிடம் காணேன்,
போற்றி போற்றினன் போர்விடைப் பாகா !
இறக்கி லேன்உனைப் பிரிந்(து)இனி(து) இருக்க
என்செய் கேன் ? இது செய்க,என் றுஅருளாய்.
சிறைக்க ணைபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

மாய னே ! மறி கடல்விடம் உண்ட
வான வா ! மணி கண்டத்(து) எம்அமுதே
நாயி னேன்உன நினையவும் மாட்டேன் ;
நமச்சி வாய,என் றுஉன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாம்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னுகினி(று) அலறுவது அழகோ ?
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

அழகிய பராய்த்துறையையுடையானே! சிவபுரத்தானே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! அன்புடையவராகி செய்தற்கரிய தவஞ்செய்பவராகிய பிரமனும் திருமாலும் தெருப்பைச்சேர்ந்த மெழுகுபோன்ற எலும்பையுடையவராய் நினைப்பவராகிய வேறு பலரும் நிற்கச்செய்தே இவ்விடத்து அடியேனை யாதுக்கு ஆண்டருளினை? எனென்றால், என் மனமானது பட்ட மரத்தினும் வலிதாகிய கணுவை ஒக்கும்; என் கண் மரக்கண்ணை ஒக்கும்; என் செவி இரும்பினும் வலிதாயிருக்கின்றது. (4)

வேள்விக்குரிய தேவதேவருக்கும் தலைவனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! யான் இன்னவாறு பிறந்து வளர்ந்து முடிவேன் என்று விதித்துள்ள விதியையொழித்து அன்பினால் ஐயாவென்று உன்னருள் நெறியிலிருப்பேன்; அண்டங்கள் தேவர்களாகிய பிரமவிஷ்ணுக்களும் நாடுதற்கரிதாகிய பொருளே! இறைவனே! உன்னைவிட்டு நீங்காத திருவருளைக் காட்டி தேவனே! உன்னிணையடிகாட்டி, என் உடல்மேல் எனக்குள்ள மயக்கத்தை நீக்கி அருள்வாயாக. (5)

கரையின்கண்ணே நீர் நிலைபெற்ற வயல்சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! உன்னைப் பிரிதலால் உடம்பு துண்டுகளாம்படி சேதித்திலேன்; நீ புகுந்திருக்கிலேன்; உன் திருவருளைப்பெறும் வகையை அறியேன்; உன் திருவருளைப் பெறுதற்கு உதவாத இவ்வுடம்பைத் தாங்கமனமிலேன்; அடைக்கலம் புகுமிடமுங் கண்டிலேன்; வணக்கம் வணக்கம் என்று சொல்லுவோர்க்குரிய இடபவாகனனே! இராகின்றிலேன்; சுகமாயிருத்தற்கு யாது உபாயம் செய்யக்கடவேன்? 'இதனைச் செய்' என்று நியமித்தருள்வாயாக. (6)

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! சூழ்ச்சி என்னுஞ் சத்தியையுடையவனே! அலைகள் மடங்கி விழுகின்ற கடலின்கண் தோன்றிய நஞ்சை உட்கொண்டருளினதேவனே! நீலகண்டத்தையுடைய எமக்கு அமுதம்போன்றவனே! நாயேன் உன்னை நினைக்கவும் மாட்டேன். நமச்சிவாயவென்று உன் திருவடியை வணங்காத பேயனேயாயினும் முத்திநெறியைக் காட்டுவாயாக. பிறை விளங்குகின்ற சடையையுடைய தலைக்கோலத்தை உடையவனே! ஓர் குழந்தையை யொத்து நின்று நான் அலறுவது உனக்கு அழகாமோ? (7)

போது சேர் அயன் பொருகடற் கிடந்தோன்,
புரந்த ராதிகள் நிற்கமற்று என்னைக்
கோதும் ஆட்டினின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள்க என்றுநின் தொண்டரிற் கூட்டாய்;
யாது செய்வதுஎன் று இருந்தனன், மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ?
சித வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே! 8

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்(று)எனை நயந்துஇனி(து) ஆண்டாய்,
காலன் ஆர்உயிர் சொண்டபூங் கழலாய்!
கங்கை யாய்! அங்கி தங்கிய கையாய்;
மாலும் ஓலமிட்டு அலறும்அம் மலர்க்கே,
மரக்க னேனையும் வந்திடப் பணியாய்;
சேலுப், நீலமும், நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே! 9

அளித்து வந்(து)எனக்கு, 'ஆவ'என் றருளி
அச்சம் தீர்த்தநின் அருட்பெருங் கடலுள்
திளைத்தும் தேக்கியும் டருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!
வளைக்கை யாளெனு மலரவன் அறியா
வான வா! மலை மாதொரு பாகா!
களிப்(பு)எ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்,
கயிலை மாமலை மேவிய கடலே! 10

திருச்சிற்றம்பலம்.

குளிர்ச்சிபொருந்திய மிகுந்த தண்ணீர் நிலைபெற்ற வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையின்கண்ணே சென்று பொருந்திய சிவனே! தாமரைப்பூவைவச்சேர்ந்த நான்முகனும், அலைகள் மோதுகின்ற திருப்பாற்கடலில் துயின்றருளிய திருமாலும், இந்திரன் முதலிய தேவர்களும் உன்னைப் பிரிக்க, நான் உன்னைக் கூடுவதற்கு இருக்க யாது செய்யத்தக்கது என்று இருந்தேன். அமிர்தமே! அடியேன் துன்பப்படுவதும் உனக்கு அழகாமோ? ஆகையால், அடியேனது குற்றங்களை ஒழித்து, உன் ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடியைக்காட்டிக்கடைப்பிடிப்பாயென்று உன் தொண்டரொடு சேர்ப்பாயாக. (8)

சேல் மீன்களும் நீலப்பூக்களும் நிலைபெற்ற வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் மேவும் சிவபெருமானே! உலகமும், தேவர்கோனும், நான்முகனும், தேவர்களும் நிற்கச்செய்தே அடியேனை விரும்பி இனிதாக ஆண்டருளினை. யமனது அரிய உயிரைக் கவர்ந்த தாமரைப் பூப்போலுந் திருவடியையுடைய வனே! கங்கையையுடையவனே! தீ தங்கிய கையையுடையவனே! திருமாலும் (அறியாமல்) முறையிட்டு அலறுதற்குரிய, அந்தப் பாத தாமரைக்கே மரக்கண்போன்ற கண்ணையுடைய என்னையும் வந்திடும்படிப் பணித்தருளாய். (9)

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே சங்கை யேந்தின கையாகிய திருமாலோடு பிரமனும் அறிய வொண்ணாத தேவனே! மலைமகளை ஒரு பாகத்திலுடையானே! பெரிய கைலாய மலையின்கண் எழுந்தருளியிருக்கிற கருணைக் கடலே! அடியேனுக்கு அருள்செய்து வந்து ஐயாவென்றிரங்கி யருளிப் பயந்தவிர்த்த உன்னருளாகிய பெரிய கடலினிடத்து முழுகியும், அநுபவம் நிறையப்பெற்றும், உண்டும், (இன்னமும் மனம்) உருகாதவனானேன். (குணம் செல்வம் கல்வி முதலிய களிப்பெல்லாம் அதிகரித்தலால் மனங்கலங்கானின்றேன். (10)

திருச்சிற்றம்பலம்.

24. அடைக்கலப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—பக்குவ நிண்ணயம்.)

(கலவைப் பாட்டு.)

திருச்சிற்றம்பலம்.

செழுக்கம லத்திரள் அன, நின்
சேவடி சேர்ந்(து)அமைந்த
பழுத்தமனத்(து) அடிய ருடன்
போயினர்;யான், பாவியேன்;
புழுக்கண் உடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா,
அழுக்குமனத்து அடியேன்; உடையாய்!
உன் அடைக்கலமே. 1

வெறுப்பன வேசெய்யும் என்
சிறுமையைநின் பெருமைபிணல்
பொறுப்பவ னே! அராப் பூண்பவனே!
பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னே! நின் திருஅருளால்
என் பிறவியைவேர்
அறுப்பவ னே! உடை யாய்! அடியேன்
உன் அடைக்கலமே. 2

பெரும்பெரு மான், என் பிறவியை
வேர்அறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான், சதுரப் பெருமான்,
என் மனத்தின்உள்ளே
வரும்பெரு மான், மல ரோன்நெடுமால்
அறி யாமல்நின் ற
அரும்பெரு மான்; உடை யாய்; அடியேன்
உன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப்புயல் வெள்ளத்தில்நின்
கழற்புணைகொண்டு இழிகின்ற
அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல் வாய்ச்

24. அடைக்கலப்பத்து

திருச்சிற்றம்பலம்.

எல்லாப்பொருள்களுந் தாளையுள்ளவனே! செழுமையாகிய தாமரைமலர்க் குவியலை நிகர்த்த உன் திருவடியை அடைந் தமைந்த கனிந்த மனத்தையுடைய அடியார்கள் உன்னுடன் சென்றார்கள். நான் பாவியேனையினேன்; (அன்றியும்) புழுக்கள் தமக்கிடமாக உடைய புல்லிய உடம்பையும் கல்வி ஞானம் சிறிது மில்லாத பொல்லாத களங்கமாகிய மனத்தையுமுடைய அடிய னேன் உன் அடைக்கலப்பொருள். (1)

இறைவனே! வெறுக்கத்தக்கவைகளாகிய தீமைகளையே செய்கின்ற எனது இழிவை உன் பெருங்குணத்தால் பொறுத் தருள்பவனே! பாம்பையணிவோனே! பெருகுகின்ற கங்கை யைச் சடையின்கண் அமையுமாறு அடக்குவோனே! உன் திரு வருளாகிய வாளால் என் பிறவியாகிய மாத்தை வேரோடறுப் பவனே! அடியனேன் உன்னடைக்கலப்பொருள். (2)

இறைவனே! பெரிய பெருமானே! அடியேனது பிறப்பை வேரோடறுத்து உன்மீதிருக்க பெரிய பைத்தியத்தை எனக்குத் தரும் பெருமானே! திறமையுடைய பெருமானே! என் மனத் துள்ளே வருகின்ற பெருமானே! தாமரை மலர்க்கண் உறையும் பிரமனும் விட்டுணுவும் அறியவொண்ணுமல் (ஒளிப்பிழம்பாய்) நின்ற அரிய பெருமானே! அடியேன் உன் அடைக்கலப்பொருள்.

எல்லாவற்றையும் உன்னுள் அடக்கியுள்ள இறைவனே! பிறவியாகிய புயல் பொழிகின்ற துன்பமாகிய வெள்ளத்தில் இழிந்து செல்கின்ற நின் அன்பர்கள் நின் திருவடியாகிய தெப் பத்தைத் துணையாகப் பற்றிக்கொண்டு உன் அடியார்கள் வீடு பேறுகிய கரைக்கு ஏறினர்கள்; நாமே அத்தெப்பத்தைப் பற்றிக் கொள்ளாது அத்துன்ப வெள்ளமாகிய கடற்கண்ணே மாதர்க

சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுற(வு)எறிய
அழிகின்ற னன்,உடையாய்ப் அடியேன்
உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்டுஉன் திறம் மறந்துஇங்(கு)
இருள்புரி யாக்கையி லேகிடந்(து)
எய்தினன ; மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கி
தன்பங்க ! விண் ணோர்பெருமான்,
அருள்புரி யாய் ! உடை யாய் ! அடியேன்
உன் அடைக்கலமே.

மாழைமைப் பாவிய கண்ணினாள்
வன்மத் திடஉடைந்து
தாழிளைப் பாவு தயிர்போற்
றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழி,எப் போதுவந் தெந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பா ! உடை யாய் ! அடியேன்
உன் அடைக்கலமே.

மின்கணினர் நடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்,
புன்கணைப் புரள் வேனைப்
புரளாமற் புகுந்தருளி,
என்கணிலே அமுதூறித் தித்தித்தென்
பிழைக் கிரங்கும்
அங்கணனே ! உடையாய் ! அடியேன்
உன் அடைக்கலமே.

ளாகிய அலை வீசுதலால் உண்டாகிய சுழி வழியே சென்று ஆங்கெழுந்த ஆசையாகிய சுறா மீன்கள் தாக்க, அத்தாக்குதலால் அழிகின்றேன்; அத்தகைய அடியனேன் உன் அடைக்கலப் பொருள். (4)

யாவும் உடைய இறைவனே! அஞ்சனமெழுதி விசாலமான கண்களையும் அச்சத்தையடைந்த மானினது பார்வையைப் போன்ற நோக்கத்தினையுமுடைய உமாதேவியின் ஒரு பாகத்தில் இருப்பவனே! தேவர்களுக்கெல்லாந் தலைவனே! சுருளுதலையுடைய கூந்தலையுடைய மாதரது சூழ்ச்சியிலகப்பட்டு உன் திறத்தை மறந்து, இவ்விடத்து அஞ்ஞானவிருளை உண்டாக்குகின்ற யாக்கை வலைக்குள்ளே அகப்பட்டு இளைத்தேன். (என்னை ஆதரிக்க) அருள் விருப்பங்கொள்வாயாக. அடியனேன் உன் அடைக்கலப்பொருள். (5)

யாவும் உடைய இறைவனே! கருணைக்கடலாகிய எமது தந்தையே! மாம்பிஞ்சின் பிளவையொத்த அஞ்சனம் பரவிய கண்களையுடைய மாதர் வலிய மத்தானது கடைந்திடச் சிதைந்து தாழியிற் பரவிய தயிரைப்போல் தளர்ச்சியடைந்தேன். பெருமை பொருந்திய தாமரை மலர்போன்ற திருவடிகளை வலிய பாவத்தை யுடையேனாகிய நான் வந்து எக்காலத்து உன் திருவடியை வணங்கப்பெறுவேன்? நீ வாழ்வாயாக; அடியனேன் நினது திருவடிக்கு அடைக்கலப்பொருள். (6)

யாவும் உடைய இறைவனே! மின்னுகின்ற கண்களை உடை யவரும் துவள்கின்ற இடையை உடையவருமாகிய மாதரது சினவலையில் சிக்கிக்கொண்டு துன்பத்தையுடையேனைப் புரளா நின்ற என்னை (அவ்வாறு) புரளாவண்ணம் வலிய வந்தருள் செய்து என்னிடத்தில் அமிர்தம் சுரந்து இனித்து அடியேனது குற்றங்களுக்காக (அடியேன்மீது) அன்புவைக்கின்ற அருட் கண்ணனே! அடியனேன் நினது திருவடிக்கு அடைக்கலப் பொருள். (7)

மாவடு வகிர்அன்ன கண்ணிபங்கா !
நின்மலர் அடிக்கே
கூவிடு வாய்க்கும்பிக் கேஇடுவாய்
நின் குறிப்பறியேன் ;
பாவிடை ஆடு குழல்போற்
கரந்து பரந்தஉள்ளம்
ஆகெடு வேன்,உடை யாய் ! அடியேன்
உன் அடைக்கலமே. 8

பிறி(வு)அறி யாஅன்பர் நின்அருட்
பெய்கழல் தாளிணைக்கீழ்
மறி(வு)அறியாச் செல்வம் வந்துபெற்றூர்
உன்னை வந்திப்பதோர்
நெறிஅறி யேன்,நின்னை யேஅறியேன்
நின்னையே அறியும்
அறி(வு)அறி யேன்,உடை யாய் ! அடியேன்
உன் அடைக்கலமே ! 9

வழங்குகின் றுப்க்(கு)உன் அருள்ஆர்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்,விக்கி னேன்விடேன்,
விதி இன்மையால்
தழங்கரும் தேன்அன்ன தண்ணீர்பருகத்
தந்துஉய்யக் கொள்ளாய்.
அழுங்குகின் றேன்உடை யாய் ! அடியேன்
உன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்.

யாவையுமுடைய இறைவனே! மாவடுவின் பிளவையொத்த கண்களையுடைய உமாதேவியின் பங்கனே! தேவரீருடைய மலர்த் தாளுக்கே அழைத்துக்கொள்வாய்; (அன்றி)ப் பெருத்த ராகத் தினில் தள்ளக்கடவாய். (இவ்விரண்டில்) தேவரீருடைய திரு வுளக்குறிப்பை யானறிந்திலேன். சேலை நெய்தற்பொருட்டு நூலிழைப்பரப்பிலே அங்குமிங்கும் ஓடித்திரிகின்ற குழல்போலக் காமத்துள்ள மனமானது மறைந்து பரவியது. ஐயோ! யான் வருந்தினேன். அடியனேன் உனது அடைக்கலப்பொருள். (8)

யாவும் உடைய இறைவனே! தேவரீரை விட்டு நீங்குதற்கு (யாதொரு தன்மையும்) அறியாத தேவரீருடைய தொண்டர்கள் உன்னருளால் கழலையணிந்த தேவரீருடைய திருவடியின் இணை களின் கீழேயுள்ள மீளவும் திரும்பாத பேரின்பச்செல்வத்தைச் சென்று அடைந்தார்கள்; (யானே) தேவரீரை வாழ்த்துதலாகிய (நல்வழியாகிய ஒரு) நெறியை அறிந்திலேன்; தேவரீரையும் (இத்தன்மையனென்று) அறிந்திலேன்; தேவரீரையே அறிகின்ற ஞானத்தையும் உணர்ந்திலேன். (ஆயினும்) அடியனேன் உன் அடைக்கலப்பொருள். (9)

யாவும் உடைய இறைவனே! (அன்பர் வேண்டியவெல்லாம் ஒருங்கே தருகின்ற) உன்னை அடைதற்பொருட்டுத் தேவரீருடைய திருவருளாகிய அரிய அமிர்தத்தை அள்ளிக்கொண்டு விழுங்கா நின்றேன். என்றாலும், அதனை விழுங்கும் ஆற்றல் பெறுத தினையுடையேன்; விழுங்கும் வித்தியும் இன்மையால் விக்கினேன். அதனால் வருந்தினேன். ஆதலால், ஒலிக்கின்ற அருமையாகிய தேனையொத்த குளிர்ச்சிபொருந்திய நீரை யான் உட்கொள்ளக் கொடுத்து உன் திருவடிக்கு ஆளாகக்கொள்வாயாக; அலையா நின்றேன். அடியனேன் உனது அடைக்கலப்பொருள். (10)

திருச்சிற்றம்பலம்

25. ஆசைப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—ஆத்தும இலக்கணம்.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

[illegible]

கருளக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியன்னும்
பொருளைத் தந்திங்(கு) என்னை ஆண்ட
பொல்லா மணியே! ஓ
இருளைத் துரந்திட்(டு) இங்கே வான்(று)
அங்கே கூவும்
அருளைப் பெறுவான ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே! 1

மொய்ப்பார் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக்(கு) இருக்க கில்லேன்;
கூவிக்கொள்ளாய் கோவேயோ!
எப்பா லவர்க்கும் அப்பா லாம்
என்னூர் அழுதேயோ!
அப்பா! காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே! 2

சீஆர்ந்(து) ஈமொய்த்(து) அழுக்கொடு திரியும்
சிறுகுடில் இதுசிதையக்
கூவாய் கோவே! கூத்தா! காத்(து)ஆட்
கொள்ளும் குருபணியே!
தேவா! தேவர்க்(கு) அரியானே! சிவனே!
சிறி(து)என் முகம்நோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே! 3

மிடைந்(து) எலும்பு உளத்தைதமிக்(கு) அழுக்குஉறல்
வீறிலி நடைக்கூட்டம்
தொடர்ந்துளனே நலியத் துயர்உறு கின்றேன்
சோத்தம்பிளம் பெருமானே!

25. ஆசைப்பத்து

திருச்சிற்றம்பலம்.

எனது தந்தையே! கருடக்கொடியை உடையவனுகிய திருமாலும் அறியவொண்ணுத வீரக்கழலையணிந்த உன் திருவடியென்கிற செல்வத்தைக் கொடுத்து இவ்விடத்தில் அடியேனை ஆண்டருளின கடைதலால் செவ்விபெறுது இயல்பாகவே பெற்றுள்ள மூழு மாணிக்கமே! ஆ, (எனது அறியாமையைத்துரத்தி) (அடியேனுகிய என்னை) என்னிடத்தில் வருவாயாகவென்று தேவரீரிடத்திலே என்னை அத்தில்லைக்கு வந்துசேர அழைக்கும் உன்னருளையடைவதற்கு மிகு அன்போடுகூடி விரும்பினேன். (1)

எனது தந்தையே! அரசனே! வவிமையையுடைய பகுதிப்பட்ட நரம்புகள் கயிறுகளாகக்கட்டி மூளை எலும்பு தோல் என்பவைகளால் மூடப்பட்டிருக்கிற சட்டையில் புகுந்திருக்க விரும்புகிலேன்; (ஆதலால்) அழைத்துக்கொள்வாயாக. ஆ, எத்தகைய மேம்பட்ட பதவியிலுள்ளவர்க்கும் மேம்பட்டவனுகிய என்னரிய அமிர்தமே! ஆ! அப்பனே! உன்னைக் காணும் பொருட்டு மிகு அன்போடு கூடி விரும்பினேன். (2)

அம்மானே! அரசனே! கூத்தனே! சியொழுகி, ஈக்கள் மொய்த்து மலங்களுடன் கூடித் திரிகின்ற சிறுவீடாகிய இந்த உடம்பு சிதைய அழைத்துக்கொள்வாயாக. அடியேனைப் பாதுகாத்து தேவரீருக்கு அடிமையாகக்கொள்ளும் நாயகமணியே! தேவனே! தேவர்கட்கருமையானவனே! சிவபெருமானே! சற்று அடியேனுடைய முகத்தினைப்பார்த்து நீ ஐயோவென்று மனமிரங்க, மிகு அன்போடு கூடி விரும்பினேன். (3)

எனது தந்தையே! எலும்பும் ஊத்தையும் நெருங்கிய அழுக்குநீர் ஊறுதலையுடைய மேன்மையில்லாததாகிய வீடாகிய இவ்வுடல் என்னை வருத்தத் துன்பமடையாநின்றேன்; அஞ்சலி! எம்மிறைவனே! மனம் நெகிழ்ந்து கனிந்துருகி தேவரீருடைய

உடைந்துளைந்(து) உருகி உன்ஒளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம்
அடைந்துநின் றிடுவான் ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே!

அளிபுண் அகத்துப் புறந்தோல் மூடி
அடியேனுடை யாக்கை
புளியம் பழமொத்(து) இருந்தேன்; இருந்தும்,
விடையாய் பொடியாடீ!
எளிவந்து என்னை ஆண்டு கொண்ட
என்ஆர் அமுதேயோ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்,
கண்டாய், அம்மானே!

எய்த்தேன் நாயேன் இனிஇங்கு இருக்க
கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய்! வாங்காய்; வானோர் அறியா
மலர்ச்சே வடியானே!
முத்தா! உன்தன் முகஒளி நோக்கி
முறுவல் நகைகானா
அத்தா! சால ஆசைப் பட்டேன்,
கண்டாய், அம்மானே!

பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே! பரஞ்சோதீ!
வாராய்; வாரா உலகம் தந்து
வந்(து) ஆட்கொள்வோனே!
போர்ஆ யிரமும் பரவித் திரிந்து
எம்பெருமான் எனஏத்தி
ஆரா அமுதே! ஆசைப் பட்டேன்,
கண்டாய் அம்மானே!

ஆசைப்பத்து

யம்பிரகாசத்தைப் பார்த்துத் தேவரீருடைய அழகிய மலர்ப் பதத்தைச் சேர்ந்து இருக்கும்பொருட்டு மிகு அன்போடு கூடி விரும்பினேன். (4)

எனது தந்தையே! இடபவாகனனே! உட்புறத்தே அளிந்த புண்போல்வது புறத்தே தோலால் மூடப்பட்டிருந்தது (ஆதலால்) அடியனேனுடைய உடம்போடு புளியம்பழத்தைப்போல் சேர்ந்து இருந்தேன். அப்படியிருந்தும் இடபவாகனனே! திருவெண் பொடியைப் பூசுவோனே! எளிதாக (அடியேனிடத்திற்கு) வந்து அடியேனை அடிமையாக்கிக்கொண்டருளின எளியேனுடைய அரிய அமிர்தமே! ஆ, எளியவனென்று கண்டோர் (பலவாறு) சொல்லும்படி மிகு அன்போடு கூடி விரும்பினேன். (5)

எனது தந்தையே! இளைத்தேன்; அடியேன் இனிமேல் இவ்விடத்தில் நான் இருக்கமாட்டேன்; இந்தப் பொய் வாழ்க்கையில் அடியேனை வைத்துவிட்டனை. (அதினின்று என்னை) எடாதிருக்கின்றனை. தேவர்கள் அறிவதற்கு முடியாத தாமரை மலர்போலுந் திருவடியையுடையானே! முத்தனே! தேவரீருடைய திருமுகத்தின் அருள் ஒளியை எதிர்நோக்கி, எந்தையே! மிகு அன்போடு கூடி விரும்பினேன். (6)

எனது தந்தையே! பூமியிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ளாரும் வழிபட்டுத் துதிக்கின்ற மேலானவனே! மேலான ஒளி வடிவினனே! அடியேனிடத்திற்கு வருவாயாக; (மீண்டும் பிறவிக்கு) வாராமைக்குக் காரணமாகிய முத்தியுலகைக்கொடுத்து அருள்செய்து வந்து அடிமைகொண்டருள்வோனே! உன் திருப் பெயர்களாயிரத்தையும் துதித்துத் திரிந்து எமது பெருமான் என்று தோத்திரம் பண்ணுதற்குத் தெவிட்டாத அமிர்தமே! மிகு அன்போடு கூடி விரும்பினேன். (7)

கைபோல் தொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்டு
எய்பா(து) என்தன் தலைமேல் வைத்(து)
எம்பெருமான் என்று
ஐயா, என்தன்வாபால் அரற்றி அழல்சேர்
மெழு(கு) ஒப்ப,
ஐயாற்(று) அரசே, ஆசைப் பட்டேன்
கண்டாய், அம்மானே ! 8

செடிஆர் ஆக்கைத் திறம்அற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடிஆர் சோதி கண்டு கொண்(டு)என்
கண்ணிணை களிகூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே, உன்பழ
அடியார் கூட்டம்
அடிபேன் காண ஆசைப் பட்டேன்,
கண்டாய், அம்மானே ! 9

வெஞ்சேல் அனையகண் ணார்தம் வெகுளி
வலையில் அகப்பட்டு
நைஞ்சேன், நாயேன்; ஞானச் சுடரே
நான்ஓர் துணைகாணேன் ;
பஞ்சேர் அடியாள் பாகத்(து) ஒருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே ! 10

திருச்சிற்றம்பலம்.

எனது தந்தையே! திருவையாறு அமர்ந்த அரசனே! தேவீருடைய வீரக்கழல்களையணிந்த திருவடிகளை அடியேனுடைய இரண்டு கைகளையுங்கூப்பி வணங்கிப் பொருந்தத் தழுவிக்கொண்டு பிறர் கண்ணுல் கண்டறியாது அடியேனுடைய தலையின்மேல்வைத்த எம்பிரானவனே! இறைவனே என்றும், ஐயனே என்றும் அடியேனுடைய வாயிலால் கூச்சலிட்டு நெருப்பைச் சேர்ந்த மெழுகை நிகர்க்கும்படி மிகு அன்போடு கூடி விரும்பினேன். (8)

என் தந்தையே! ஒப்பில்லாத பரம்பரனே! குற்றம் பொருந்திய உடம்பின் தன்மையை வெட்டியெறிந்து சிவபுர மாகிய நகரத்திற் பிரவேசித்து மங்கலச்சோதிக் காட்சியைக் கண்டுகொண்டு என்னிரு கண்களும் களிப்புமிகும்படி உன் பழ வடியார் கூட்டத்தை அடியேன் காணும்பொருட்டு மிகு அன் போடு கூடி விரும்பினேன். (9)

எனது தந்தையே! ஞானசூரியனே! பஞ்சினையொத்து மென்மைபெற்ற அழகுடைய திருவடிகளையுடைய உமைப் பிராட்டியை இடதுபாகத்திற்கொண்ட ஒப்பற்றவனே! விருப் பத்தைத்தருகிற (அழகாகிய) சேற்கண்டையையொத்த கண்களை யுடைய மாதரது கோபவலையிற் சிக்கி நாயினேன் நைந்தேன்; காவலுரு உதவியையுங் கண்டிலேன்! பவளம்போன்ற உன் திரு வாயிலால் நீ என்னை யாதொன்றுக்கும் பயப்படாதே என்று சொல்ல அன்போடு கூடி விரும்பினேன். (10)

திருச்சிற்றம்பலம்.

26. அதிசயப்பத்து

(திருட்பெருந்துறையில் அருளியது—முத்தி இலக்கணம்)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

வைப்புமா(டு) என்றும் மாணிக்கத்(து) ஒளியென்றும்
மனத்திடை உருகாதே,
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள்
திறத்திடை நைவேனை,
ஒப்புஇலாதன உவமன் இறந்தன ஒள்
மலர்த் திருப்பாதத்(து)
அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே! 1

நீதி ஆவனயாவையும் நினைக்கிலேன் நினைப்பவ
ரொடும் கூடேன்;
எத மேபிறந்து இறந்(து)உழல் வேன்தனை
என்அடியான் என்று,
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே! 2

முன்னை என்வினை வல்வினை போயிட
முக்கண்ணை(து) உடைஎந்தை,
தன்னை யாவரும் அறிவதற்(கு) அரியவன்,
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி யதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே!

26. அதிசயப்பத்து

திருச்சிற்றம்பலம்.

(நமக்கு) செல்வம் பொன் என்றும், மாணிக்கத்தின் ஒளியா மென்றும் மனத்தின்கண் (இறைவனை நினைத்து) உருகாமல் செப்புக்கொப்பாகிய தனங்களையுடைய மாதர்களுடைய விஷயத் தில் வருந்துகின்ற என்னை ஒப்பற்றனவும் (வலிந்து சொல்லினும்) உவமிக்கப்படு பொருள்களினின்றும் கடந்தனவும் ஆகிய அழகுள்ள தாமரை மலர்போன்ற திருவடியையுடைய எமது தந்தையாகிய சிவபெருமான் (அடியேனை) ஆட்கொண்டு தேவரீருடைய அன்பர்களுடன் சேர்த்துக்கொண்ட வியப்பாகிய செயலைக் கண்டோம். (1)

தன் திருமேனியின் இடது பாதியாகப் பெண்ணுடன் கூடி யிருக்கின்ற மகாதேவன் எக்காலத்தும் அழிவின்றி நிலைத் திருந்த முதல்வன்; நீதியாயிருப்பன எவற்றையும் நினையேன்; (தேவரீருடைய ஞான நீதியை) நினைப்பவர்களோடும் சேரேன்; துன்பமனுபவித்தற்பொருட்டே பிறந்தும் இறந்தும் உழலாநின்ற அடியேனை (இவன்) எனது தொண்டனென்று ஆண்டருளித் தேவரீருடைய தொண்டரோடு சேர்த்த அதிசயத்தைக் கண் டோம். (2)

பழமையாயுள்ள அடியேனுடைய வலிய வினை அகன்று ஒழியுமாறு மூன்று கண்களையுடைய எமது தந்தையும் தேவர்க ளெல்லாரும் அறிதற்கருமையானவனும், (அங்ஙனமாயினும்) தன்னடியார்களுக்கு எளியனாயிருப்பவனும் பொன்னொளியை வென்றதாகிய ஒப்பற்ற கட்டப்பட்ட சடைமுடியின்கண் இளம் பிறையைச் சேருகின எமது தாய்போன்றவனுமாகிய சிவபெரு மான் ஆண்டருளித் தேவரீருடைய அடியார்களுள் சேர்த்த அதி சயத்தைப் பார்த்தோம்.

பித்தன் என்றுனை உலகவர் பகர்வதோர்
காரணம் இதுகேளிர்.
ஒத்துச் சென்று,தன் திருஅருள் கூ(டி)டும்
உடாயம(து) அறியாமே,
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்(கு)
ஒருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே!

பரவு வார்அவர் பாடுசென்(று) அணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்,
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
இரவு நின்(று)எரி ஆடிய எம்இறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே!

எண்ணி லேன்திரு நாம அஞ்(சு)எழுத்தும்
என்எழுமை அதனாலே;
நண்ணி லேன்கலி ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே,
மண்ணிலே பிறந்(து) இறந்துமண் ஆவதற்கு
ஒருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே!

பொத்தை ஊன்சுவர்; புழுப்பொதிந்(து) உருதடி)
ஒழுகிய பொய்க்கூரை, [அசும்பு
இத்தை மெய்யெனக் கருதிநின்(று) இடர்க்கடல்
சுழித்தலைப் படுவேனை,
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே!

கேட்பீராக: மனமிசைந்து போய்த் தேவரீருடைய திரு வுருவைப் பெறுதற்குரிய வழியை உணராமல் யாக்கையின் பய னிய மூத்தியை அடையாமல் இறந்துபோய் (பொறுத்தற்கு) அரிய நரகத்தில் விழுந்து வருந்துவதற்கு இசையாநின்ற என்னை எமது தந்தையாகிய சிவபெருமான் ஆண்டருளித் தேவரீருடைய அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம்! இதுவே அடியேனை உலகத்தார் பைத்தியங்கொண்டவனென்று சொல்லுவ தற்கு ஒரு காரணமாயிருந்தது. (4)

இறைவனைத் துதிசெய்பவராகிய அவ்வன்பர்களிடத்தில் போய்ச் சேர்கிலேன்; பலவகை மலர்களைக் கொய்து அர்ச்சித்துத் துதியேன்; குராமரத்து மலரையணிந்த நீண்ட கூந்தலையுடைய பெண்கள் வயப்பட்டு நின்று அடியோடு கெடுகின்ற என்னை எல்லாம் அழியுங்காலமாகிய இரவிலே நின்று, தீயோடு ஆடிய எம்பிறைவன் தீயைப்போல் விளங்குகின்ற சடையின்கண் ஒளி விடுகின்ற சாம்பத்தையுடையவன் ஆண்டருளி தேவரீருடைய அன்பர்களோடு சேர்த்துக்கொண்ட அதிசயத்தைப் பார்த்தோம்.

அடியேனது அறியாமையினாலே இறைவன் திருப்பெய ராகிய ஐந்தெழுத்தினையும் நினைந்திலேன்; நால்களையுணர்ந்த ஞானிகள் கூட்டத்தோடு சேர்ந்திலேன்; மூத்திக்கேதுவாகிய சற் கருமத்தை விரும்பாமலே பூமியிலே பிறந்து இறந்து மண்ணுய்ப் போவதற்கு இசையாநின்ற என்னைப் பெரியோனாகிய சிவபிரான் ஆண்டருளித் தேவரீருடைய அடியாரோடு சேர்த்த அதிசயத் தைப் பார்த்தோம். (6)

துவாரங்களையுடைய ஊன் சுவர் புழுவால் அரிக்கப்பட்டு பொருந்திச் சிதைந்து நிணநீர் கசிந்தொழுகாநின்ற பொய்யாகிய இவ்வுடல் இதனை மெய்யென்று நினைத்து நின்று துன்பக்கடலின் சுழியின்கண் சிக்கிக்கிடப்பவனாகிய என்னை முத்தினுடையவும், பெருமைகொண்ட ரத்னத்தினுடையவும், மாணிக்கத்தினுடைய வும், வயிரத்தினுடையவும், பவளத்தினுடையவும், முழுவொளியை யுடைய எமது தந்தை ஆண்டருளி தன்னடியாரோடு சேர்த்த அதிசயத்தைப் பார்த்தோம். (7)

நீக்கி முன்னனைத் தன்னெறு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து,
நோக்கி நுண்ணிய நொடியன் சொற்செய்து
நுகம்இன்றி விளர்க்கைத்துத்,
தூக்கி முன்செய்த பொய்அறத் துகள்அறுத்(து)
எழுதரு கடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே! 8

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்றல் ஆவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே,
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே! 9

இருள்தி ணிந்(து)எழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடில்இது இத்தைப்
பொருள்ள னக்களித்(து) அருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே! 10

திருச்சிற்றம்பலம்.

முன்னே தன்னுடன் சேர்ந்திராவண்ணம் என்னைப்பிரித்து (இந்த உடலாகிய) சிறு குடிலில் புகுத்தி (பரிபக்குவகாலத்தைப்) பார்த்து நட்பமர்கிய கொடியளவிற் சொல்லப்படுவதாகிய ஒரு சொல்லை எனக்கறிவுறுத்தி பிறவிக்கடலினின்று மேலெழுந்து மூன்னே செய்த வீண் காரியங்கள் அற்றெழியுமாறு குற்றங் களைச் சேதித்துக் காந்தியையுடைய ஒளியுருவகுகிய இறைவன் என்னையோர் பொருளாக்கி ஆண்டருளித் தன்னடியாரோடு சேர்த்து நகத்தடியில்லாமல் சேர்த்துப் பூட்டி வரம்பு கோலி உழுத அதிசயத்தைப் பார்த்தோம். (8)

நல்ல மலரின்கண் உண்டாகின்ற நறுமணம்போல மக்கட் பண்பு பொருந்திய உடலிலுள்ள பொருளாகும் உயிரானது பற்றற்குரிய பொருளாவது தனக்கொரு பற்றுக்கோடு இல்லாத தாகிய பரம்பொருளேயாம். அந்தப் பரம்பொருளாகிய இறை வனை நோக்காமல் தமது வினைக்கீடாகத் தாம் அடையவேண்டிய வழியாக அடைந்த இன்ப துன்பங்களாகிய பயனை அநுபவிக் கின்ற அறிவிலிகளாகிய பித்தர்களுடைய சொல்லை நான் நம்பா திருக்க எமது தந்தையாகிய சிவபிரான் என்னை ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைப் பார்த்தோம். (9)

அஞ்ஞானவிருள் மிகுந்து எழுந்ததாகிய ஒப்பற்ற வலிய வினைகளாலாகிய சிறு குடில் இதுவாகும். இதனை மெய்ப்பொரு ளெனக்கொண்டு மகிழ்ந்து (துன்பம் பொறுத்தற்கு) அரிய நரகத்தில் விழப்போகின்ற என்னைப் பகைவரால் அழித்தற்கும் உட்புகுதற்கும் இயலாதெனத் தெளியப்பட்ட மும்மதில்கள் கொடி யளவில் தகர்ந்துபோம்படி கோபக்குறியோடு செந்தீயையும் அருள் செய்த உண்மைநெறி உடையவகுகிய இறைவன் (அடியே னுடைய பொய்ந்நெறியை) நீக்கிய அதிசயத்தைப் பார்த்தோம். ()

திருச்சிற்றம்பலம்.

27. புணர்ச்சிப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது — அத்துவித இலக்கணம்.)

(ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற் குன்றைத் தோளா
முத்தை வாளா தாழும்புகந்து
கடைபட் டோனை ஆண்டுகொண்ட
கருணையனை கருமால் பிரமன்
தடைபட்டுஇன்னும் சாரமாட்டாத் தன்னைத்
தந்த என்ஆர் அமுதைப்
புடைபட்டு இருட்ப(து)என் றுகொல்லோ
என் பொல் லாமணியைப் புணர்ந்தே? 1

ஆற்ற கில்லேன் அடியேன்
அரசே! அவனி தலத்(து)ஐம்புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தைசெய்து
சிவன்எம் பெருமான் என்றேறத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்கு
உள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப(து)என் றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 2

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்டநெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என்னர் அமுதை
அள்ளூ றுள்ளத்(து) அடியார்முன்,
வேண்டும் தினையும் வாய்விட்
டலறி விளையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப(து)என் றுகொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே?

27. புணர்ச்சிப்பத்து

திருச்சிற்றம்பலம்.

ஒளிர்கின்ற பொன்மலை போல்வானும் தொலையிடப்படாத முத்தின் ஒளி போல்வானும், குலத்தில் கடைப்பட்டேனுகிய எனது பயனில்லாத தொண்டினை ஏற்றுக்கொண்டு என்னை அடிமைகொண்டருளிய கருணைக்குப் பிறப்பிடமானவனை, கருநிறத்தையுடைய திருமாலும் பிரமனும் தடை செய்யப்பட்டு இன்னமும் தேடி அடையவொண்ணுத தேவரீருடைய திருவடிகளை அடியேனுக்குக் கொடுத்த என்னுடைய அரிய அமிர்தத்தை அணுகி அடியேனுடைய முழுமாணிக்கத்தைப் போல்வானுமாகிய அவனைச் சார்ந்து அவன் பக்கமிருப்பது எந்நாளோ? (1)

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கும் வேந்தே! அடியனேன் பூமியில் ஐம்பொறிகளாகிய சேற்றில் மூழ்க பொறுக்கும் வன்மையில்லாதவனுவேன். 'பரமசிவனே! எனது பெருமானே!' என்று வாயாரத் துதித்து ஊற்றின் மணல்போல நெகிழ்ந்து நெகிழ்ந்து மனதினுள்ளுருகி முறையிட்டு அடியேனுடைய தொலைபடா மாணிக்கத்தை அடைந்து துதித்து நிற்பது எந்நாளோ? (2)

நெடியோனுகிய திருமாலும் நான்முகனும் அஞ்ச, எவ்வுலகங்களிலும் நீண்டு வளர்ந்த நெருப்பாக நின்றவனும், தன்னிடத்து ஆசையில்லாதவனுகிய என்னை அடிமையாக்கி ஆண்டுகொண்டருளின அடியேனுடைய அரிதாகிய அமிர்தம் போன்றுளும், இன்பம் ஊற்றெடுத்துப் பெருகும் மெய்யன்பர் முன்னே வெண்டுமளவும் வாய்விட்டரற்றி வாசனைபொருந்திய மலர்களை (சிரசு முதல்பாதம் வரையில்) தூவி அடியேனுடைய தொலைபடா மாணிக்கம் போன்றுளும் ஆகிய அவனை அடைந்துச் சேர்ந்து இருப்பது எக்காலமோ? (3)

அல்லிக் கமலத்(து)அயனும் மாலும்
அல்லா தவரும் அமரர்கோனும்,
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப்
பாலை நிறைஇன்னமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ(து)என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 4

திகழத் திகழும் அடியும்முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும்மாலும்
அகழப் பறந்துங் காணமாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்,
நிகழப் பணிகொண்டு என்னை ஆட்
கொண்டுஆவா என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவ(து)என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 5

பரிந்து வந்து பரமானந்தம்
பண்டே அடியேற்(கு) அருள்செய்யப்
பிரிந்துபோந்து பெருமா நிலத்தில்
அருமால் உற்றேன் என்(று)என்று,
சொரிந்த கண்ணீர்சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்(து) அன்பாய்ப்
புரிந்து நிற்ப(து)என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 6

நினையப் பிறருக்(கு)அரிய நெருப்பை
நீரைக் காலைநிலனை விசும்பைத்
தினைஒப் பாரைஇல் லாத்தனியை
நோக்கித் தணைத்துத் தழுத்தகண்டம்
கனையக் கண்ணீர் அருவிபாயக்
கையும் கூப்பிக் கடிமலரால்
புனையப் பெறுவ(து)என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 7

அகலிதழ்கஎாயுடைய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகனும் விட்டுணுவும் இதர தேவரும் தேவர்கட்கு அரச னகிய இந்திரனும், (தம் தம் வாயாற்) சொல்லிப் போற்றி ஏற்று கின்ற திருநாமத்தை உடையவனை, சொல்லையும் பொருளையும் கடந்த பரஞ்சோதியை நெல்லிக்கனியும் தேனும் பாலும் நிறைந்த இனிமையாகிய அமிர்தத்தை, அமிர்தத்தின் உருசியை என் னுடைய முழுமாணிக்கத்தைச் சேர்ந்து நெருங்கி இரு கைகளால் தழுவுவது என்றோ ? (4)

மிக்க விளங்குகின்ற பாதங்கள் இரண்டையும் திருமுடியையும் தேடிக்காணும்பொருட்டு கீழுலகங்களும் மேலுலகங்களும் (தாம் தாம் பெரியவனென்று வாதிட்டுநின்ற) விட்டுணுவும் பிரமனும் உட்சென்று கிண்டியும் மேலேக்கிப் பறந்தும், (அவ்விருவராலும்) கண்டுபிடிக்கப்படாத அத்தகைய பெரியோனகிய சிவபெருமான் இந்தப் பெரிதாகிய பூலோகமுழுதும் தோன்ற அடிமைசெய்து கொண்டு அடியேனை ஆளாக்கிக்கொண்டருளி அந்தோ என் றிரங்கிய தன்மையனைத்தையும் கூறி எனது முழுமாணிக்கத்தை இருகரத்தால் சேர்ந்து புகழை அடைவது என்னாளோ ? (5)

மிகு அன்புடன்வந்து முன்னமே அடியேனுக்கு மிகு மேன்மையான இன்பத்தை அருள்செய்யப் பிரிந்துவந்து பெரிய நிலவுலகத்தில் அரியதாகிய மயக்கத்தை அடைந்தேன் என்று சொல்லித் தாரை தாரையாய்ப் பொழிந்த கண்ணீர் ஒழுகின படியே இருக்க மனத்தின் அன்பினால் மயிர்சிலிர்க்க அன்புருவாய் விரும்பி எனது தொளைபடா மாணிக்கத்தைச் சேர்ந்து என்றும் நீங்காமல் விசுவாசித்து நிற்பது என்றுதானே ? (6)

அன்னியருக்கும் எண்ணுதற்கரிதாகிய சுடரினை, நிலைக், காற்றை, மண்ணை, விண்ணை ஒப்புவமை இல்லாத ஏகவஸ்துவை பார்த்து மகிழ்ந்து பெருத்த கண்டம் நெருங்கி ஒலியாநிற்ப ஆனந்தக் கண்ணீர் விழியினின்று நீர் அருவிபோல் பாயாநிற்க, காங்களைக் குவித்து வாசனைபொருந்திய புட்பங்களால் அலங் கரித்து, அடியேனுடைய தொளைபடா மாணிக்கத்தை (அன்பின் மிகுதியால்) சேர்ந்து இருப்பது என்னாளோ ? (7)

நெக்கு நெக்(கு)உள் உருகிஉருகி
நின்றும் இருந்தும் கிடந்தும்எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நாணுவித்தாற் கூத்து நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழுநோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப(து)என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 8

தாதாய, மூவ்வழ உலகுக்கும
தாயே, நாயேன் தனஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர்
மருந்தே பெருந்தேன்பில்க எப்போதும்
மேதா மணியே,என் றென்றுஏத்தி,
இரவும் பகலும் எழிலார்பாதப்
போதுஆய்ந்து அணைவதுஎன்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 9

காப்பாய் படைப்பாய் கரப்பாய்முழுதுங்
கண்ணுர் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவாமுதலாய் நின்ற
முதல்வா, முன்னே எனஆண்ட
பார்ப்பா னேனம் பரமன்என்று
பாடிப்பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவதுஎன்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 10

திருச்சிற்றம்பலம்.

நெகிழ்ந்து நெகிழ்ந்து மனம் உருகி உருகி நின்றும் நின்று இருந்தும் தாழக்கிடந்தும் எழுந்தும் நகைத்தும் மனம்வெதும்பி அழுதும் அன்புடன் வணங்கியும் போற்றிசெய்து சிவந்த நிறம் போலும் அழகிய மேனியை விளங்கப்பார்த்து, சிலிர்சிலிர்த்து என்னுடைய தொளபடா மாணிக்கத்தைச் சேர்ந்து புகுந்து நிற்பது எக்காலமோ? (8)

இருபத்தோருலகங்களுக்கும் பிதாவே! அன்னையே! நாயினுங் கடைப்பட்ட அடிமையை ஆட்கொண்ட அறிவிலுயர்ந்தவனே! பிறப்பென்னும் பெரும் நோய்க்கு அரும்பொருளான ஓர் மருந்தே! மிக்க தேனைனது சிந்தி ஒழுக எந்நாளும் ஞானமுள்ள மாசிலா மணியே! இவ்வாறு பலவித நற்பெயரால் சொல்லிப் புகழ்ந்து துதித்து இரவினும் பகலினும் அழகுவாய்ந்த சிறந்த திருவடித் தாமரைமலரை யாதொன்றுமில்லாமல் ஆராய்ந்து எனது தொளபடா மாணிக்கத்தைச் சேர்ந்திருப்பது எக்காலமோ? (9)

யாவையும் காவல் செய்வோனே! யாவையும் படைப்பவனே! எல்லா வஸ்துவையும் மறைப்பவனே! இடம் நிறைந்த விண்ணில் உள்ள விண்ணுலகத்தாராகிய தேவர்கட்கெல்லாம் பெரியோனே! முதிராத முதலாகி நிலைபெற்ற முதல்வனே! முன்னம் அடியேனை அடிமைகொண் டாண்டருளின வேதமுதல்வனாகிய வேதியனே! எமது பரமனே! என்று பாக்களால் பாடிப்பாடித் தலை வணங்கி (உன் திவ்ய) திருவடியை அழகாகிய தாமரைமலரைத் தொளபடா மாணிக்கத்தைச் சேர்ந்து அடையப்பெறுவது எந்நாளோ?

திருச்சிற்றம்பலம்.

28. வாழாப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—முத்தி உபாயம்)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பாரொடு விண்ணுப்பப் பரந்தனம் பரனே!
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
யாரொடு நோகேன், யார்க்குளடுத்து உரைக்கேன்?
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன்று அருள்புரி யாயே. 1

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே!
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்;
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்விறந்து உலகம் ஊடுருவும்
செம்பெரு மானே! சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எம்பெரு மானே! என்னை ஆள் வானே!
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

பாடிமால் புகழும் பாதமே அல்லாற்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
கேடிநீ ஆண்டாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
ஊடுவது உன்னோடு; உவப்பதும் உன்னை;
உணர்த்துவது, உனக்கு,எனக்கு உறுதி;
வாடினேன்; இங்கு வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன்று அருள்புரி யாயே. 3

28. வாழாப்பத்து

திருச்சிற்றம்பலம்.

பூமியோடு ஆகாயமாகி அளாவிய எமது மேலோனகிய சிவபிரானே! அடியேன் இதர யாதொரு பற்றுடையனல்லேன்; பெருமையோடு கூடி விளங்குவோனே! சிவலோகத்து அரசாயிருப்பவனே! திருப்பெருந்துறை என்னும் மேலான சிவப்பதியின்கண்ணே எழுந்தருளி வாழ்பவனகிய சிவபெருமானே! எவரோடு (சொல்லி) நொந்துகொள்வேன்? எவர்க்கு எடுத்துச் சொல்வேன்? என்னை ஆண்டுகொண்டருளின நீயே அருள் செய்யாவிடில் நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்தின்கண்ணே உயிருடன் வாழப் பொருந்தேன்; (ஆகையால்) இனி வருகவென்று அருள் செய்வாயாக. (1)

வீணனகிய என்னை அடிமைகொண்டு ஆண்டருளின பெருமைதங்கிய மாணிக்கமே! அடியேன் வேறொரு பற்றும் உடையவனல்லேன். தேவர்களும் காணுதற்கரிய ஒப்பற்றவனே! பிரம விட்டுணுக்களாகிய இருவருக்கும் அவர்களுடைய அறிவைக் கடந்து எல்லா உலகங்களையும் ஊடுருவிச்சென்ற செவ்விய பெருமானே! சிவலோக நாதனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! எமது பெருமானே! அடியேனை (யாதொரு விஷயத்திலும் எங்கும் செல்லாமல் ஒடுக்கி) என்னை வருகவெனக் கூப்பிட்டு அருள்கொண்டருள்வாயாக. (2)

திருக்கயிலாயத்துக்கு அரசனேயிருப்பவனே! திருப்பெருந்துறையென்னும் க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! விட்டுணு பாடிப்புகழும் (யாவராலுங் காணப் பெறுத) உன் திருவடியே அல்லது எழையாகிய நான் வேறொன்றின்மேல் விருப்பமுடையவனல்லேன், (அங்ஙனம் யாதொன்றின் பேரில் பற்றிலாதவனென்றறிந்து என்னை) நீயே மனம்வைத்து நாடிவந்து ஆண்டருளினை. ஆதலால் என்னால் பற்றப்பட்ட உன்னையே ஊடிப்பிரிவதும் உன்னையே கூடி உவப்பதும் என்னுடைய செயலாகும். ஊடிய எனக்குக் கூடி உவத்தற்குரிய உறுதி அறிவிப்பது உனக்கு உரிய செயல்களாகும். (ஆனதால்) இங்கு ஒருபோதும் வாழ நினைக்கிலேன்; உன்பால் என்னை வருவாய் வருவாயென்று அருள் செய்வாயாக. (3)

வல்லைவாள் அரக்கர் புரம்எரித் தானே!
மற்றுநான் பற்றிலேன், கண்டாய்;
தில்லைவாழ் கூத்தா! சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எல்லைஆ வுலகும் உருவிஅன் றுஇருவர்
காணும்நாள் ஆதிஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய், வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன் றருள்புரி யாயே. 4

பண்ணின்நேர் மொழியாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
திண்ணமே ஆண்டாய், சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து,
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன்று அருள்புரி யாயே. 5

பஞ்சின்மெல் லடியாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
செஞ்செவே ஆண்டாய், சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன்று அருள்புரி யாயே. 6

பருதிவாழ் ஒளியாய்! பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
திருஉயர் கோலச் சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
கருணையே! நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழும்ஆ றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎனா றருள்புரி யாயே!

கொடியோராகிய அசுரரது திரிபுரங்களை விரைவில் எரித்தவனே! யான் வேறொரு பற்றுமுடையவனல்லேன்; திருத்தில்லையில் வாழாநின்ற திருநடனக் கொழுந்தே! சிவபுரத்துக்கு வேந்தே! திருப்பெருந்துறையில் வாழ்கின்ற சிவபெருமானே! மூன்றுலகத்து வரம்பைக் கடந்து அக்காலத்தில் பிரமவிட்டுணுக்கள் பார்க்கப் புகுந்தினத்தில் முதலிறுதியின்மையில் மகாசமர்த்தனாகி வளர்ந்தவனே! இவ்வுலகில் வாழ்கிலேன்; ஆதலால் வருவாய் என்று கிருபை செய்வாயாக. (4)

பண்ணை ஒத்த சொற்களையுடையவளாகிய உமாதேவியின் பங்கனே! உன்னை அல்லாமல் யான் வேறொரு பற்றுடையேனல்லேன்; உண்மையாகவே ஆண்டவனே! சிவபுரத்துக்கு வேந்தனே! திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே! எனது எண்ணத்தையும் உடல், வாய், நாசியோடு செவி கண்கள் என்று சொல்லப்பட்ட இவைகளை உன்னிடத்தே வைத்துப் பூலோகத்தின்மீது உன் ஊழியனாகிய யான் வாழமாட்டேன்; (ஆகையால்) வருவாய் என்று அருள்செய்வாயாக. (5)

பஞ்சினும் மிருதுவாகிய பாதங்களையுடையவளாகிய உமாதேவியின் பங்கனே! உன்னையல்லாமல் யான் வேறொருபற்று உடையேனல்லேன். என்னை மிகச் செவ்விதாகவே ஆட்கொண்டவனே! சிவபுரத்துக்குத்தலைவனே! திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே! (நாயினுங்கடையனாகிய) அடியேன் பயந்தேதன்; நீ என்னை ஆண்டுகொண்டருளின பெரிய திருவருளை அறிவு மயக்கத்தால் மறந்த பொல்லா வஞ்சகனாகிய நான், இவ்வுலகத்தில் வாழமாட்டேன்; வருவாய் என்று அருள் செய்வாயாக. (6)

சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற ஒளியை உடைய சிவபெருமானே! செல்வத்தால் பெருமைபெற்ற அழகாகிய சிவலோகநாதனே! திருப்பெருந்துறையென்னும் சிவப்பதியின்கண்ணே எழுந்தருளி வாழ்பவனாகிய (யாவரிடத்தும் காருண்யமுள்ள) சிவபெருமானே! யாவராலுங் காணநின்ற உன் திருவடி அன்றி நாயினுங்கடையேனாகிய யான் வேறொரு பற்றுதலை உடையேனல்லேன். உன் பெருங்குணத்தையே நோக்கி எழுயேன் மனம்கசிந்துருகி உன்னோடுகலப்பற்றுப் போன்பக்கடலில் மூழ்கி வாழும் விதத்தைத் தெரிந்துகொள்ளாத மலமயக்குடையேன்; நான் பூலோகத்தில் ஒருபோதும் வாழவிரும்பேன்; (ஆனதால்) வருக என்று அருள் செய்வாயாக. (7)

பந்துஅணை விரலாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
செந்தழல் போல்வாய், சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
அந்தம்இல் அழுதே! அரும்பெரும் பொருளே!
ஆர்அழு தே! அடி யேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன், கண்டாய்;
வருக என் றருள்புரி யாயே! 8

பாவநா சா! உன் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
தேவர்தம் தேவே! சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
மூவுலகு உருவ இருவர்கீழ் மேலாய்
முழுங்குஅழ லாய்நிமிர்ந் தானே!
மாஉரி யானே! வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன் றருள்புரி யாயே! 9

பழுதில் தொல்புகழாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன், கண்டாய்;
செழுமதி அணிந்தாய், சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
தொழுவனே பிறரைத் துதிப்பனே, எனக்கோர்
துணைஎன நினைவனே, சொல்லாய்?
மழுவிடை யானே! வாழ்கிலேன், கண்டாய்;
வருகஎன் றருள்புரி யாயே! 10

திருச்சிற்றம்பலம்.

பந்துகள் வந்து அணையும் விரல்களையுடையவளாகிய உமா தேவியின் பங்கனே! செம்மையாகிய அக்கினியைப்போல்பவனே! சிவலோகநாதனே! திருப்பெருந்துறையிலெழுந்தருளி யிருப்பவனே! முடிவில்லாத தேவாமிர்தமே! அருமை தங்கிய போகம் பலப்பொருளே! அரிய அமிர்தமே! உன்னையன்றி யான் வேறொரு ஆசை உடையவனல்லேன். நீயே (குருமூர்த்தமாய்க் கயிலையைவிட்டெழுந்தருளி என்முன்) வந்து, அடிமையை (யாவருமறிய) ஆண்டருளினை, (ஆனதால்) இங்கு ஒருக்காலும் வாழ மனமுடையவனல்லேன்; வருவாய் என்று அருள்செய்வாயாக. (8)

பாபநாசமென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளி எல்லாருடைய பாபங்களைப் போக்கவல்லவனாகிய பாபநாசனே! எல்லாத் தேவர்க்கும் தேவனையிருப்பவனே! சிவலோகத்துக்கு வேந்தனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! மூன்றுலகங்களும் ஊடுருவும்படி பிரம விட்டுணுக்களாகிய இருவரும் கீழ் உலகின்கண்ணும் மேலுலகின்கண்ணும் சென்று தேடுவாராக ஒலிக்கின்ற அக்கினி உருவாகி வளர்ந்தவனே! யானைத்தோலைப் போர்வையாக உடையவனே! அடியேனுகிய யான் வேறொரு பற்றும் உடையேனல்லேன்; இப்பூவுலகின்கண் வாழ மனமுடையவனல்லேன்; (ஆகையால்) வருக என்று அருள் செய்வாயாக. (9)

யாதொரு குற்றமில்லாத பழமையையுடைய யாவராலும் புகழப்பெற்றவளாகிய உமாதேவியின் பங்கனே! உன்னையன்றி யான் வேறொரு பற்றுமுடையனல்லேன்; செழுமை தங்கிய மூன்றும்பிறைச் சந்திரனை அணிந்தவனே! சிவபுரத்துக்கு வேந்தனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! உன் அருளைப் பெறும்பொருட்டுப் பிறரை வணங்குவனே? துதிப்பேனே? அடியேனுக்கு அவர் ஒத்த துணையென்று என் மனதில் நினைப்பேனே? சற்றுச் சொல்வாயாக. இளமையாகிய இடபவாகனத்தை உடையவனே! இங்கு ஒரு போதும் வாழத் துணியேன்; (ஆகையால்) வருவாயென்று அருள் செய்வாயாக. (10)

திருச்சிற்றம்பலம்.

29. அருட்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—மகா மாயாசுத்தி.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண் ணீற்றாய்!
பங்கயத்து, அயனும்மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 1

நிருத்தனே! நிமலா! நீற்றனே! நெற்றிக்
கண்ணனே! விண்ணுளோர் பிரானே!
ஒருத்தனே! உன்னை ஓலமிட் டலறி,
உலகெலாந் தேடியுங் காணேன்;
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அருத்தனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 2

எங்கள்நா யகனே! என்னுயிர்த் தலைவா!
எலவார் குழலிடார் இருவர்
தங்கள்நா யகனே! தக்கநற் காமன்
தனதுடல், அழல்எழ விழித்த
செங்கண்நா யகனே! திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அங்கண! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 3

29. அருட்பத்து

திருச்சிற்றம்பலம்.

சோதியே! சுடரே! சூழ்ந்த ஒளியையுடைய தீபமே! சுருண்ட கூந்தலையும் பருத்த தனங்களையும் உடைய உமாதேவியின் பாதியாக இருப்பவனே! யாவர்க்கும் மேலானவனே! பாலினது நிறத்தைக்கொண்ட திருவெண்ணீற்றை உடையவனே! தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமனும் திருமாலும் அறியாவாறு நின்ற மாதீதமானே! செல்வப்பெருக்குள்ள திருப்பெருந்துறை என்னும் மேலான திருப்பதியின்கண் நிறைந்த மலர்களையுடைய குருந்தமரத்தடியின்கண் பொருந்திய சிறப்பமைந்த முதல்வனே! அடியேனாகிய நான் உன்னைப் போன்பிறல் ஆதரித்து அழைத்தால், அவ்வாறு அழைத்த காரணத்தைக் கொண்டு 'அது என்ன?' என்று விரைவி அருள்வாய். (1)

திருக்கூத்து ஆடுவோனே! உயிர் அழுக்கற்றவனே! திருவெண்ணீற்றை உடையவனே! நெற்றிக்கண்ணை உடையவனே! தேவர் பிரானே! யான் பற்றுதற்குரிய ஒரே பொருளாயிருப்பவனே! உனக்கு முறையிட்டு அலறுநின்று எல்லா உலகங்களும் தேடியும் பார்த்தறிகிலேன்; மகா சுத்தமாகிய தடாகத்தையுடைய திருப்பெருந்துறையின்கண் செழுமை தங்கிய மலர்களையுடைய திருக்குருந்த மரத்தின்கீழ் எழுந்தருளி வீற்றிருந்த சிறப்பமைந்த செல்வனே! தொண்டனாகிய யான் மிக்க அன்புடன் அழைத்தால் 'அது என்ன?' என்று விரைவி அருள் செய்வாயாக. (2)

எங்களுடைய நாதனே! என்னுடைய உயிர்த்தலைவா! மயிர்ச்சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவிக்கும் கங்காதேவிக்கும் நாயகனே! தகுந்த நன்மைசெய்தலை மேற்கொண்டு வந்த மன்மதன் உடல் எரிந்துபோமாறு விழித்து நேர்மைசெய்த செம்மையாகிய நெருப்புக்கண்ணையுடைய தலைவனே! திருப்பெருந்துறையின்கண் செழுமையாகிய மலர்களையுடைய குருந்த மரத்தை அடைந்த அன்றே அருள் செய்த சிறப்புப்பொருந்திய அருளையுடைய கண்ணனே! அடியனேன் அன்புகூர்ந்து கூப்பிட்டால் 'அது என்ன?' என்று விரைவி அருள் செய்வாயாக. (3)

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே! எமக்கு வெளிப்படாய் என்ன
வியன்தழல் வெளிபட்ட எந்தாய்!
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அமலனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே!

துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்கும்மார் பினனே!
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர் [துறையில்
அடிகளே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே!

துப்பனே! தூயாய்! தூயவெண் ணீறு
துதைந்தெழு தளங்கொளி வயிரத்து
ஒப்பனே! உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும்ஆர் அமுதே!
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அப்பனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே!

மெய்யனே! விகிர்தா! மேருவே வில்லா
மேவலர் புரங்கண்மூன் றுஎரித்த
கையனே! காலாற் காலனைக் காய்ந்த
கருந்தழற் பிழம்பன்ன மேனிச்

தாமரை மலரை இருப்பிடமாகக்கொண்டு வாழ்கின்ற பிரமனும், கார்காலத்து முகில்போன்ற கருநிறத்தையுடைய திருமாலும் அணுகுதற்கரிய மாசற்றவனே! 'எனக்கு வெளிப்பட்டருள்க' என வேண்டுதலும் எம்பொருட்டுப் பெரிய அக்கினி உருவாகிய என் தந்தையே! நான்கு வேதங்களினது ஒலிமுழக்கம் பொருந்திய திருப்பெருந்துறையின்கண் மிகச் செழுமையாகிய மலர்களையுடைய குருந்தமரத்தினடியில் அமர்ந்த சிறப்பமைந்த அழுக்கற்றவனே! அடியனேன் அன்புகொண்டு கூப்பிட்டால் 'அது என்ன?' என்று கிருபை செய்வாயாக. (4)

உடுக்கையின் நடுவினை ஒத்த இடையையுடையவளாகிய சுருண்ட கூந்தலையுடைய உமாதேவியின் இரண்டாகிய ஸ்தனங்களின் கண்கள் அழுந்தின தழும்புகளாகிய பொங்குகின்ற ஒளியானது சாம்பரைக்கொண்ட பெரிய அக்கினியின் நடுவே இரண்டு சாம்பரற்ற பொறிகள்போலப் பிரகாசிக்கின்ற அழகிய மார்பினையுடையவனே! மழைக்காவலினைக்கொண்ட செடிகளையுடைய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறை என்னும் சிறந்த தலத்தின்கண் செழுமை தங்கிய மலர்களையுடைய குருந்தமரத்தடியில் எழுந்தருளிய சிறப்புடைய அடிகளே! தொண்டு பூண்டொழுகாநின்ற யான் அன்புசெய்து கூவிக் கூப்பிட்டால் 'அது என்ன?' என்று வினவி அருள் செய்வாயாக. (5)

செவ்வொளியுடையோனே! தூய்மையுடையவனே! பரிசுத்தமாகிய திருவெண்ணீறு படிந்து வீசுகின்ற மிகுந்த பேரொளியையுடைய வயிரத்துக்குச் சமானமானவனே! அன்பின் மிகுதியால் நினைப்பவரது மனதினிடத்தும் மிக்க உருசியைக் கொடுக்கின்ற அருமையாகிய அமிர்தமே! ஓதிணைச் செப்பம் செய்கின்ற நான்கு வேதங்களும் சேர்ந்திருக்கின்ற திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தின்கண் செழுமையாகிய புட்பங்களையுடைய குருந்தமரத்தின்கண் எழுந்தருளிய சிறப்பமைந்த எனது தந்தையே! அடியேன் அன்பு செய்து அழைத்தால் 'அது என்ன?' என்று வினவி அருள் செய்வாயாக. (6)

தொண்டர்களிடத்து மெய்ப்பொருளாயிருப்பவனே! அஞ்ஞானிகளிடத்துப் பொய்யாயிருப்பவனே! மேரு மலையையே வில்லாகக்கொண்டு பகைவர்களாகிய அசுரர்களது மும்புரத்தையும் எரித்துச் சாம்பராக்கின கையையுடையவனே! திருப்பாதத்தால் எமனைக் கோபித்து உதைத்த கடிய அனற்பிழம்புபோன்ற செம்மேனியுடையவனே! பலவிதச் செல்வங்களும் பொருந்திய

செய்பனே! செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
ஐயனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 7

முத்தனே! முதல்வா! முக்கண! முனிவா!
மொட்டரு மலர்பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே! செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அத்தனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 8

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி,
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே! புனிதா! பொங்குவா ளரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்!
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அருளனே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே, என்றரு ளாயே! 9

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தப்மே வியசீர்
இருந்தவாறு எண்ணி ஏசறு நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றென்று
அருந்தவா! நினைந்தே ஆதரித் தழைத்தால்,
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா, கயிலை புகுநெறி இதுகாண்,
போதராய், என்றரு ளாயே! 10

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறையின்கண் செழுமையாகிய புட்பங்களையுடைய குருந்தமரத்தடியில் எழுந்தருளிய பெருமைதங்கிய கடவுளே! அடியேன் அன்புசெய்து அழைத்தால் 'அது என்ன?' என்று அருள் செய்வாயாக. (7)

இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனே! பழமையானவனே! மூன்று திருக்கண்களையுடையவனே! முனிவனே! மொட்டின் தன்மை நீங்காத புட்பங்களைப் பறித்து அருச்சித்துத் தொழுது பக்தியோடு தியானம் செய்து துதிக்கின்றவர்கட்கு முக்தியைத் தந்து அருள் செய்கின்ற அறிவுடையானே! பேரானந்தச் செல்வத்தையுடையவனே! திருப்பெருந்துறையின்கண் செழுமையாகிய புட்பங்களையுடைய குருந்தமரத்தினிழலில் குருமூர்த்தமாய் எழுந்தருளிய சிறப்பமைந்த எமது தந்தையே! உன் தொண்டனெகிய நான் அன்பு செய்து அழைத்தால் 'அது என்ன?' என்று வினவி அருள் செய்வாயாக. (8)

மயக்கமுடையேனெகிய என் மனதை மயக்கம் அற்று ஒழியப் பார்த்து மறுமையுடனே இம்மையும் சேதித்தருளின பெருஞ் செல்வமுடையவனே! பரிசுத்தனே! சீறுகின்ற ஒளியையுடைய பாம்பும் கங்காதேவியும் பொருந்திய செஞ்சடையையுடைய சிவபெருமானே! தெளிந்த நான்கு வேதங்களும் சேர்ந்த திருப்பெருந்துறை என்னும் சிவப்பதியின்கண் நிறைந்த மலர்களையுடைய குருந்தமரத்தினிழலில் எழுந்தருளிய சிறப்பு வாய்ந்த அருளுடையவனே! அடிமைத் தொண்டனெகிய யான் அன்பு செய்து அபயமென்று ஆதரித்து அழைத்தால் 'அது என்ன?' என்று விரைவி அருள் செய்வாயாக. (9)

திருத்தமாகிய சோலை அடர்ந்த திருப்பெருந்துறை என்னும் சிவப்பதியின்கண் செழுமையாகிய புட்பங்களையுடைய குருந்தமரத்தினீழலில் எழுந்தருளிய சிறப்போடு கூடி இருந்தவிதத்தை உத்தரகோசமங்கையில் இருந்தவாறு எண்ணி, பிரிந்தமையுன்னி ஏசுதலற்று நினைந்து, 'என்னுடைய ஆத்ம தலைவனெகிய சிவபிரானே!' என்று பலகால் வாயால் சொல்வி அன்புகூர்ந்து கூப்பிட்டால் அருந்தவத்தோனே! அலகிலா வீசாகின்ற கடலுக்கு அதனுள்ளடங்கிப் பூலோகத்தினின்று என்னைச் சேர வருவாயாக; நீ எழுந்தருளியிருக்கும் கயிலாயத்தைச் சேரும்படியாகிய வழி இதுதான், சீக்கிரம் வருவாயென்று அருள்செய்வாயாக. (10)

திருச்சிற்றம்பலம்.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

(திருக்கழுக்குன்றத்தில் அருளியது—சற்குரு தரிசனம்)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பிணைக்கு இலாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணைக்கு இலாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத்து எம்பிரான்
உனைக்கு இலாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணைக்கு இலாத்திருக் கோலம்நீ வந்து
காட்டி னாய்,கழுக் குன்றிலே.

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே!
சட்டம் நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்,
சிட்ட னே!சிவ லோக னே!சிறு
நாயி னும்கடை யாயவெம்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்,கழுக் குன்றிலே.

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்,இனி
மேல்வி ளைவது அறிந்திலேன்.
இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கி னேன்,கலங் காமலே வந்து
காட்டி னாய்,கழுக் குன்றிலே.

30. திருக்கழுக்குன்றப்பதிகம்

ம்பலம்.

யாவரிடத்திலும் மாறுபாடில்லாத திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமானே! உன்னுடைய பல திருநாமங்களைச் சொல்லுவோர்க்கு ஒப்பற்ற சிறந்த பேரின்பமே! உண்டாகும் தீவினையை ஒழித்து எம்பிரானுகிய நீ, துன்பங்களை நீக்கிக் காய்ந்துபோதல் இல்லாத தனித்தன்மையுடைய பிறவி வித்தானது இனி விளையாமல் அடியேனுடைய இருவினைகள் தீர்த்த பின், அளவில்லாத உமாதேவியாரோடு உன் திருக்கோலத்தைத் தேவீர் திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி வந்து தரிசனஞ் செய்யக் காட்டியருளினாய். (1)

(மதுரைப்பதியில் வசித்த 'வந்தி' என்னும் கிழவியின்) பிட்டினைப் பெற (வைகைக்கரையின் பெருக்கத்தைப் பங்கின்படி அடைக்கும்பொருட்டுத் தலையின்மீது) மண்ணைச்சுமந்த திருப் பெருந்துறை என்னும் சிறந்த சிவப்பதியின்கண் குருந்தமரத்தினடியில் எழுந்தருளிய பெரிய பித்துடையவனே! உன் கட்டளைக் கிணங்கப் போற்றி செய்யாத குற்றமுடைய யான் உன்னை யானே அடையமாட்டேன். சிறந்த ஒழுக்க நெறியானவனே! சிவலோகநாதனே! சிற்றறிவுடைய சிறு நாயினுக்கும் கடைப்பட்ட கொடிய துன்பமுடைய என்னையும் அடிமைகொண்டருளத் திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளி உன் திருக்கோலத்தைக் காட்டியருளினை.

மனங்கலங்கினவனுகிய எனது கண்களில் கண்ணீரைக் கையால் துடைத்துப் பாசமறுத்த திருப்பெருந்துறைப்பெருமானை விட்டு நீங்கினேன்; தீவினையாகிய கெடுதியையுடையேன் இதற்கு மேல் வருவதை யாதும் தெரிந்தேனில்லை. அறிவில் விளங்குகின்ற உன்னுடைய திருவடிகளிரண்டினையும் வைத்து வழிபடும் இடம் இல்லாமல் மனம் கலங்கினேன்; (அவ்வாறு) கலங்காவண்ணம் திருக்கழுக்குன்றினிடம் வந்து உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய். (3)

பூணை ணைதனைதார் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணை ணைதனைதார் நாணம் எய்தி
நடுக்க டலுள் அழுந்திநான்
பேணை ணைதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி உணைகத்தலும்
காணை ணைத்திருக் கோலம் நீவந்து
காட்டி ணைய்,கழுக் குன்றிலே.
கோல மேனிவ ராக மே! குணம்
ஆம்பெ ருந்துறைக் கொண்டலே!
சீலம் ஏதும் அறிந்தி லாதனன்
சிந்தை வைத்தசி காமணி!
ஞால மேகரி யாக நான்உணை
நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉணை ஓத நீவந்து
காட்டி ணைய்,கழுக் குன்றிலே.
பேதம் இல்லைதார் கற்பு ணித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே!
ஏத மேபல பேச நீஎணை
ஏதிலார் முனம் என்செய்தாய்?
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்சரண் சரணம் எனக்கு
ஆத லால்உணை ஓத நீவந்து
காட்டி ணைய்,கழுக் குன்றிலே.
இயக்கி மார்அறு பத்து நால்வரை
எண்குணஞ் செய்த ஈசனே!
மயக்கம் ஆயதைதார் மும்ம லப்பழ
வல்வி ணைக்குள் அழுந்தவும்,
துயக்கு அறுத்துணை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்(து)ணைனைக்
கயக்க வைத்து அடியார்மு ணைவந்து
காட்டி ணைய்கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

உனதன்பர் பிறரால் மேற்கொள்ளப்படாத உயர்ந்த பேரன்பு பூண்டு உன்னையடைந்து தினமும் வழிபடவும், அது செய்ய இயலாமையால், அன்பர் வெட்கப்படக் கூடாததொரு வெட்கமடைந்து, நாள்தோறும் (பிறவியாகிய) கடலின் நடுவே நான் முழுகி ஆழ்ந்து போக இருந்த அடியேன், பற்றிப் போற்றற்கரிய திருப்பெருந்துறையாகிய பெரிய மரக்கலத்தைப் பிடித்துச் செலுத்தலும், நீ திருக்கழுக்குன்றின்மேல் எழுந்தருளி வந்து யாவராலும் பார்க்கவொண்ணுத அழகிய உன் கோலத்தைக் காண்பித்தாய். (4)

அழகாகிய திருமேனியையுடைய பன்றி உருவனே! திருப்பெருந்துறைக்கண் வீற்றிருந்த நற்பண்பாகிய அருள் மேகமே! நல்லொழுக்கம் யாதும் அறியாத எனது உள்ளத்தில் வைக்கப்பட்ட தலைமணி போல்வானே! உலகத்தாரே சாட்சியாக யான் உன்னை மிகவும் விரும்ப நேரிடுகின்ற நாளிலே உன்னைத் துதிக்கும்படி நீ திருக்கழுக்குன்றிலே (கைலையை விட்டு) வந்து, உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய். (5)

உன்னிடமிருந்து வேறுபாடு அடைதற்கு எது இல்லாததாகிய ஒப்பற்ற பெருங்கல்வியைக் கொடுத்த திருப்பெருந்துறையிலுள்ள பெரிய ஆநந்தக் கடலே! குற்றங்கள் பலவற்றாலும் எடுத்துப்பேச அன்னியர்க்கு எதிரில் நீ என்னை யாது செய்தனை? வற்றதாய்த் தீங்கற்றதாய் ஒப்பற்ற உன் திருவடியே எனக்கடைக்கலமாகுமென்று நான் அன்பினாலே தேவரீரைப் புகழ்ந்து உன்னைத் துதிக்கும்படி நீ திருக்கழுக்குன்றிலே உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய். (7)

இயக்கமாராகிய அறுபத்து நான்குபேர்க்கு எட்டுக் குணங்களைப் பெறச்செய்த உலகநாதனே! மயக்கத்தால் உண்டாவதாகிய ஒப்பற்ற மும்மலத்தொடர்பாகிய பழமையாகிய கொடிய பாச பந்தமென்னும் வினையாகிய கடலுக்குள் நான் அழுந்தாநிற்கவும் என் தளர்ச்சியையொழித்து அடியேனை அடிமையாளாக்கிக் கொண்டருளின உனது தாய்மையாகிய தாமரை மலர்போன்ற திருவடியைக் கொடுத்தருளி அடியார்களுக்கு முன்பாக அடியேனைத் தன்புறுவித்து இப்போது திருக்கழுக்குன்றிலே உவந்து வந்து உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய். (7)

திருச்சிற்றம்பலம்.

31. கண்ட பத்து

(தில்லையில் அருளியது—நிருத்த தரிசனம்)

(தாவுகோச்சகக் கலிப்பா.)

திருச்சிற்றம்பலம்.

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தாமே திரிந்துபோய் அருநாகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தம்இலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே! 1

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை,
எனைப்பெரிதும் ஆட்கொண்(டு)என் பிறப்பறுத்த
[இணையிணையை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே! 2

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினல் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினல் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே!

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னுய்வந்து வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோரும் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே! 4

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யான்என்தென் உரைமாய்த்துக்
கோதில்அமு(து) ஆனைக் குலாவுதில்லை கண்டேனே! 5

31. கண்ட பத்து

திருச்சிற்றம்பலம்.

பஞ்சேந்திரியங்களில் வசப்பட்டு அறியாமையுற்றுச் சாதலுக்கே மூதற்காரணமாகி இறந்தபின் ஆகாயத்திலே திரிந்து சென்று அரிதாகிய நரகத்தில் வீழ்வேனுகிய எனக்கு மனத்தைப் புனிதமாக்கிச் சிவமயமாக்கி என்னை ஆண்டருளிய முடிவில்லாத ஆனந்தத் திருவுருவை அழகைக்கொண்ட தில்லேச்சபையில் கண்டேன். (1)

வினையிலுண்டாகிய பிறவி என்று சொல்லப்பட்ட தன் பத்தில் அகப்பட்டுத் தேவரீரைக் கிஞ்சிற்றேனும் எண்ணுமல் தளர்ச்சியைப் பெற்று, உழலாநின்று கிடக்கின்றவனுகிய அடியேனைப் பெருமையோடு அடிமைகொண்டு என்னுடைய பிறப்பினைத் தொலைத்த ஒப்புவமை இல்லாத சிவபெருமானை எல்லா உலகங்களும் ஏற்றித் துதிக்காநிற்கின்ற சிதம்பரத்தின்கண் இராநின்ற அம்பலத்தில் கண்களால் பார்த்தேன். (2)

உருவு அறியாத காளிலே உள்ளே புகுந்து, என் மனத்தில் நிலைபெற்று என் எண்ணத்தைத் திருத்தி உடம்புகொண்டு எழுந்தருளிவந்து, தன் பெருங்கருணையினல் அடிமையாக்கி ஆண்டு கொண்டருளின திருத்துருத்தி என்னும் க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருப்பவனை இனிக்கின்ற மங்களமான பாதத்தை ஆசையால் நாயனைய அடியேன் அழுகுவாய்ந்த தில்லேயம்பலத்தின்கண் பார்த்தேன். (3)

யாதொன்றும் படியாத அற்ப அறிவினல் கடையனுகிய நாயினேனை வல்லவனுக வந்து அழகுபெற்று இருக்குமாறு பலரும் காணும்படி என்னுடைய பசு பாசங்களையும் தொலைத்த வினை யாவரும் வந்து வணங்குகின்ற தில்லேயம்பலத்தின்கண் பார்த்தேன். (4)

சாதி குலம் பிறப்பு என்கிற சுழியிலகப்பட்டுத் தடுமாறுகின்ற யாதொரு ஆதாரவும் இல்லாதவனுகிய நாயினுங் கடைப்பட்ட அடியேனைப் பிறவித்துன்பத்தைத் தொலைத்து அடிமை கொண்டு அறியாத்தன்மையுள்ள குணத்தையும் பிற தெய்வத் தோற்றத்தையும் களைந்து, யான் எனது என்னுஞ் செருக்குமொழி என்பவற்றையும் கெடுத்துக் குற்றமற்ற அமிர்தமாக ஆயினனை அருள் விளங்குகின்ற தில்லேச்சபையில் கண்குளிரப் பார்த்தேன்.

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்(பு)என்(று)
[இவைஇரண்டுட
உறவினெடும் ஒழியச்சென்(று) உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே! 6

பத்திமையும் பரிசும்இலாப் பசுபாசம் அறுத்தருளிப்
'பித்தன்இவன்' எனஎன்னை ஆக்குவித்துப் போராமே
சித்தம்எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே! 7

அளவிலாப் பாவகத்தால் அழுக்குண்(டு)இங்கு அறிவின்றி
வினைவொன்றும் அறியாதே வெறுவியனைப்க்
[கிடப்பேனைக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்(து)என்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே! 8

பாங்கினெடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கிஉளத்(து) ஒளிவளர உலப்பிலா அன்பருளி,
வாங்கிவினை, மலம்அறுத்து, வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே! 9

பூதங்கள் ஐந்தாகிப் புலன்ஆகிப் பொருள்ஆகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதம்இலாப் பெருமையனைக்,
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர்ஒளியை மரகதத்தை,
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே! 10

திருச்சிற்றம்பலம்.

பிறவியை வேரற ஒழித்து, நோய் முதுமைப்பருவம் ஆகிய இரண்டும் உறவினரோடும் ஒழியப்போய் உலகத்தையுடைய ஒப்பற்ற முதல்வனை நெருங்கிய சோலைசூழ்ந்த தில்லைமாநகரில் திருச்சிற்றம்பலத்தில் நிலைபெற்று வேதியரும் விண்ணவரும் தொழுதிட யான் பார்த்தேன். (6)

பக்திசெய்தற்றன்மையும் (அதற்கேற்ற) நல்லொழுக்கமும் இல்லாதவனுகிய என் பசுபாசங்களை நீக்கி இவன் பித்தன் என்று கண்டோர் சொல்லுமாறு என்னைச் செய்வித்துப் பெயராமல் நினைவு என்கின்ற பலம்பொருந்திய கயிற்றால் திருவடியைப் பிணிப்பித்த ஞான உருவினராகிய சிவபெருமானது திருவிளையாடலை ஒளிபோல் விளங்குகின்ற தில்லையம்பலத்தில் கண்களால் பார்த்தேன். (7)

கணக்கற்ற எண்ணங்களால் அழுத்தப்பட்டு இப்பூலோகத்தில் நல்லறிவு இல்லாமல் மேல் விளைவனவற்றை யாதொன்றும் தெரியாமல் வெறுமையனுய்க் கிடப்பவனுகிய எனக்கு அளவற்ற பேராநந்தத்தைக் கொடுத்து அடியேனை ஆண்டருளினவனை வஞ்சமில்லாத தேவர்களும் வணங்குகின்ற தில்லைப்பதியில் (அம்பலத்தில்) பார்த்தேன். (8)

இறைவனை நாடும் முறையும் பயனும் ஒரு சிறிதும் தெரியாத நாயினேனை மனத்தில் பேரொளி ஓங்கி உயர முடிவில்லாத கெடுதலில்லாத அன்பினை அருள் செய்து வினைகளைத் தன்பால் ஏற்றுப் பாசத்தைக் களைந்து தனது மேலதாய கருணையைக் கொடுத்தவனை, நான்கு வேதங்களும் முழங்குகின்ற தில்லையம்பலத்தில் கண்களால் பார்த்து ஆநந்தங்கொண்டேன். (9)

பஞ்சபூதங்களாகி ஐம்புலன்களாகி எல்லாப்பொருள்களுமாகி அப்பொருள்களின் வேறுபாடுகளெல்லாம் ஆகியும் வேறுபாடில்லாத பெருந்தன்மையுடையவனை, எமது துன்பங்களை அழித்து எம்மை ஆண்டருளின மிகு பிரகாசிக்கும் ஜோதியனை, மரகத மணியை, நான்கு வேதங்களும் போன்புடன் வணங்கித் துதிக்கின்ற பிரகாசிக்கின்ற தில்லையம்பலத்தில் பார்த்தேன். (10)

திருச்சிற்றம்பலம்.

32. பிரார்த்தனைப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—சதாமுத்தி.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

கலந்துநின் அடியாரோடு அன்று
வாளா களித்தி ருந்தேன் ;
புலர்ந்து போன காலங்கள் ;
புகுந்து நின்றது இடர்பின்னாள் ;
உலர்ந்து போனேன் உடையானே !
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்,
ஆர்வம் கூர, அடியேற்கே !

அடியார் சிலர்உன் அருள்பெற்றார்
ஆர்வங் கூர யான்அவமே
மூடஆர் பிணைத்தின் மூடிவின்றி
மூனிவால் அடியேன் மூக்கின்றேன்.
கடியே னுடைய கடுவினையைக்
களைந்துஉன் கருணைக் கடல்பொங்க
உடையாய் ! அடியேன் உள்ளத்தே
ஓவாது உருக அருளாயே !

அருள்ஆர் அமுதப் பெருங்கடல்வாய்
அடியார் எல்லாம் புக்கழுந்த
இருள்ஆர் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன், கண்டாய், எம்மானே !
மருள்ஆர் மனத்துஓர் உன்மத்தன்
வருமால் என்றிங்கு எனைக்கண்டார் ;
வெருளா வண்ணம் மெய்உன்னை
உடையாய் ! பெறநான் வேண்டுமே !

32. பிரார்த்தனைப் பத்து

திருச்சிற்றம்பலம்.

நீ என்னை ஆட்கொண்ட அந்நாளில் உன் அடியாருடன் கூடிச் சேர்ந்து சும்மா களிப்படைந்திருந்தேன்; (அந்தோ!) அவர்கள் பிரிந்து பின் கூடிக் கழித்த நாட்கள் கழிந்து போயின; பிற்காலத்தில் துன்பம் புக்கு நின்றது; யாவும் உடையவனே! வீணில் வாடிப் போனேன்; கெடாத இன்பத்தைத் தருகிற சுடர்ச்சோதியைக் காணும்பொருட்டு அங்கும் இங்கும் ஓடித் துன்பப்பட்டுப்போனேன். அடியேனுக்கு ஆர்வம்கூர (மென்மேலும்) அன்பு மிகும்படி அருள் செய்வாயாக. (1)

யாவும் உடையவனே! உன் தொண்டர்களிற் சிலர் உன்னிடத்து அன்பின் மிகுதலால் உன் பொருளைப் பெற்றார்கள்; நான் புலால் நாற்றம் பொருந்திய பிண உடம்பிற்கு ஓர் முடிவின்றி அதிலிருக்கப்பெற்ற வெறுப்பினால் அடியேன் முதிர்ச்சியுற்றேன்; கடுமையையுடையேனது பொல்லா வினைகளைத் தொலைத்து அடியேனது மனத்தில் உன்னுடைய கருணையாகிய கடல் பொங்கவும், அம்மனமானது இடையறாது உருகவும் அருள் செய்வாயாக. (2)

முதல்வனே! திருவருளாகிய அரிய அமுதப் பெரிய கடலினிடத்து உன் அடியவரெல்லாரும் போய் மூழ்க (நானே) அறியாமை நிறைந்த உடம்பாகிய இதைச் சுமந்து வீணில் இளைத்தேன்; எம்பெருமானே! மருட்சி நிறைந்த மனத்தையுடைய ஒரு பித்தனைவன் வருகின்றானென்று இப்பூலோகத்தில் என்னைப் பார்த்த யாவரும் அஞ்சாது அடியேனெனிய யான் மெய்யன்பினை அடையவேண்டும். (3)

வேண்டும் வேண்டும் மெய்யடியார்
உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே ! அருபா மணிமுத்தே !
தூண்டா விளக்கின் சுடர் அனையாய் !
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே ! 4

மேவும் உன்தன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயற்கண்ணுள்
பங்கா ! உன்தன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ,
பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான்எனதென்று
யாதும் இன்றி அறுதலே ? 5

அறவே பெற்றூர் நின்அன்பர்
அந்தம் இன்றி அகம்நெகவும் ;
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன், உடையானே !
பெறவே வேண்டும், மெய்அன்பு,
போரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே ! 6

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண,
இடரே பெருக்கி ஏசற்றுஇங்கு
இருத்தல் அழகோ ? அடிநாயேன்,
உடையாய் ! நீயே அருளுதி ! என்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன் ;
சுடர்ஆர் அருளால் இருள்நீங்கச்
சோதீ ! இனித்தான் துணியாயே ! 7

வேண்டுமென்று பலகால் விரும்புகிற உண்மையுள்ள அடியார்களுக்கு இடையே ஏழையாகிய அடியேனை விருப்புற்று ஆண்டருளினவனே! அடியேனது துன்பத்தை நீக்கிய அமிர்தமே! அருமையாகிய மாணிக்கமே! முத்தே! தூண்டாவிளக்கினுடைய ஒளியை நிகர்த்தவனே! இச்சிக்கப்படாததாகிய ஒரு பொருளையும் இச்சிக்காமல் உயர்ந்த அன்பினையே பொருந்துதலாகிய (அவ்வன்பு) செயற்கை எற்படுமோ அதுவே எனக்குவேண்டும். (4)

நீலமலரின் தன்மையமைந்த கயல்போன்ற கண்களையுடைய உமாதேவியின் பாகனே! தேவரீருடைய அடியார் இடையே பேதையாகிய நானும் உண்மையையே விரும்புகிறேன்; உன்னுடைய அருளினால் பேரின்பமாகிய பழமையாகிய கடலை யடைந்து, உயிர் உடம்பு என்பவைகளை நான் என் சொந்த மென்று சொல்லப்பட்ட யாதும் இல்லாமல் அற்று ஒழிதல் பாவியாகிய எனக்கும் (அப்பேரின்ப வாழ்வு) உண்டாகுமோ? (5)

யாவும் உடையவனே! நிலைபெயராததும் அழியாததும் பிரிவு இல்லாததும் மறவாததும் எண்ணுதற்கும் அளவற்றதும் உயிரைவிட்டு நீங்காததும் ஆகிய பேராநந்தமாகிய பெருங்கருணைக் கடலே! உன் அன்பர்கள் முடிவில்லாமல் உள்ளம் உருகவே உன்னை முழுவதும் பெற்றார்கள்; (அங்ஙனமாக) புலைப்பொருளைப் பற்றி நுகர்தற்குரிய குணம் செயல்களைகொண்ட நாயை ஒத்தயான், அவர்கள் கூட்டத்திற்கு வெளியேகிடந்தழன்று வெம்பிப் புலம்புகின்றேன்; (யான்) கட்டாயம் மெய்யன்பைப் பெறுதல் வேண்டும். (6)

யாவும் உடையவனே! கடலையே நிகர்த்த இன்பத்தைக் கண்ட அடியார்கள் எல்லாரும் பெற்று அநுபவிக்கவும், அடிமையாகிய நாயினேன் பெருந்துன்பத்தையே பெருகச்செய்து மிகத் துன்புற்று இகழப்பட்டு இவ்வுலகத்தில் வாழ்ந்திருப்பது அழகாமோ? நீயே அருள் செய்யக்கடவை என்று கருதி, உனக்குத் தெரிவிக்காதொழிந்து காலத்தைக் கழித்து உன்னைப் பிரிந்தொழிந்தேன்; பராஞ்சோதியே! இனியாவது அரிய உன் அருட்சுடரினால் என் அறியாமையாகிய இருள் நீங்கும்படி உன் திருவுளத்தில் அருள்புரிதல் வேண்டும். (7)

துணியா உருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்டர் இடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே! நின்று தேய்கின்றேன்;
அணியார் அடியார் உனக்குள்ள
அன்புந் தாராய்! அருள்அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதந் தாராயே! 8

தாரா அருள்ஒன்று இன்றியே
தந்தாய் என்றுன் தமர்எல்லாம்
ஆரா நின்றூர்; அடியேனும்
அயலார் போல அயர்வேனே?
சீர்ஆர் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா!
பேர் ஆனந்தம் பேராமை
வைக்க வேண்டும், பெருமானே! 9

மான்ஓர் பங்கா! வந்திப்பார்
மதுரக் கனியே! மனம்நெகா
நான்,ஓர் தோளாச் சுரைஒத்தால்,
நம்பி! இத்தால் வாழ்ந்தாயே!
உளனேபுகுந்த உனை உணர்ந்தே,
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே! அருளும் காலந்தான்
கொடியேற்கு, என்றே கூடுவதே? 10

கூடிக் கூடி, உன்னடியார்
குனிப்பார், சிரிப்பார், களிப்பாராய்;
வாடி வாடி, வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனே?
உளடி உளடி, உடையாயொடு
கலந்து,உள் உருகிப், பெருகி,நெக்கு,
ஆடி ஆடி, ஆனந்தம்
அதுவேஆக, அருள் கலந்தே! 11

திருச்சிற்றம்பலம்.

சிவபிரானே! யாவும் விட்டுத் துணிந்து மனம் உருகி உன் திருஅருள் பெருகும்படி தோன்றுநின்ற அடியாரிடையே உட் புகுந்து, வலிமை பொருந்திய மூங்கில்போன்ற உருகாத மனத்தை யுடையேன்; இவ்வுலகில் நிலையுற்றுப் பயன்படாது வீணே அழி கின்றேன்; அழகுபொருந்திய உன் தொண்டர்கள் உன்பால் வைத்துள்ள மெய் அன்பையும் எனக்குக் கொடுப்பாய்; அருள் கனிய தாமதம் செய்யாமல் விரைவில் எழுந்தருளி வந்து தளிர் போன்ற உன் பொன்னடிகளை எனக்குக் கொடுப்பாய் (8)

சிறப்பினையுடைய உன் பெருங்கருணையால் என் மனத்தைச் சீர்திருத்தி என்னை ஆண்டருளிய சிவபுரத்தானே! தாவொண் ணுத உன் அருளை முழுதும் தந்தனையென்று உன் உறவினர்க ளாகிய அடியார் எல்லாரும் பேரானந்தத்தைத் துய்க்கின்றார்கள்; அடியேன் மாத்திரம் அன்னியரைப்போலத் தளர்வேனே? பெருமையுடையானே! பேரின்பமானது எப்போதும் நீங்காதபடி எனக்கு அமைத்தருளவேண்டும். (9)

மானைப்போன்ற பார்வையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவனே! வாழ்த்துவாராகிய அன்பர்க்கு மதுர மாகிய கனிபோல்பவனே! மனம் நெகிழாத நான் ஒரு தொழைக் கப்படாத பயனற்ற ஒரு சுரைக்குடுக்கை போன்றிருப்பதால் அண்ணலே! நீ இதனுல் வாழ்ந்துவிட்டாய்போலும்! உடலில் புகுந்த உன்னை இன்னவிதமென்றறிந்து உருகி அறிவு பெருகு தற்குரிய மனத்தை இறைவனே! நீ அருள்செய்யும் காலமானது கொடுமையேனுக்கு எந்நாள் வந்து சேருமோ? (10)

உன் அடியார்கள் உன்னைப் பெறும்பொருட்டுத் தம்முன் இடைவிடாது சேர்ந்து சேர்ந்து கூத்தாடி நகைத்து இன்பத் துடன் இருக்கவும், ஓயாது வாட்டமடைந்து உன்னை யடையவும் வழியற்ற யான் உலர்ந்துபோன மரம்போல் பயனற்று நிற்பேனே? உடையையாகிய உன்னுடன் உன் அடியார் ஊடிக்கொண்டும் ஊடிக்கொண்டும் உன்னுடு சேர்ந்து உள்ளமுருகி அன்பு பெருகி மனம் நெகிழ்ந்து இடைவிடாது ஆனந்தக் கூத்தாடி ஆனந்தமயமே ஆக அருள் செய்வாயாக. (11)

திருச்சிற்றம்பலம்.

33. குழைத்த பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—ஆத்தும நிவேதனம்)

(அறுசீரடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

குழைத்தால், பண்டைக் கொடுவினை, நோய்,
காவாய்; உடையாய்! கொடுவினையேன்
உழைத்தால், உறுதி உண்டோதான்?
உமையாள் கணவா! எனை ஆள்வாய்;
பிழைத்தால், பொறுக்க வேண்டாவோ?
'பிறைசேர் சடையாய்! முறையோ' என்று
அழைத்தால், அருளாது ஒழிவதே
அம்மானே! உன் னடியேற்கே? 1

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய், என்றிருந்தேன்;
கொடியேர் இடையாள் கூற! எம்
கோவே! ஆஆ என்றருளிச்
செடியேர் உடலைச் சிதையாதது
எத்துக்(கு) எங்கள் சிவலோகா!
உடையாய், கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே! 2

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்?
எழை பங்கா! எம்கோவே!
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்,
என்தான் கெட்டது இரங்கிடாய்,
எண்தோள் முக்கண் எம்மானே! 3

33. குழைத்த பத்து

திருச்சிற்றம்பலம்.

பழைய தீவினையாகிய வியாதி என்னை வாட்டிநலல் காப் பாற்றுவாயாக. யாவும் உடையவனே! கொடிய பாவத்தை யுடைய நான் முயற்சிசெய்தால் உறுதியான பயன் எற்படுமா? உமாதேவியின் கணவனே! என்னை ஆள்வாயாக; நான் பிழை செய்தால் (அதனை) பொறுத்துக்கொள்ளவேண்டாமோ? பிறை தங்கிய சடையையுடையவனே! முறையோவென்று அழைத்தால் எனது தந்தையே! உன் அடியேனுக்கு அருள் செய்யாதொழிவது உனக்குத் தகுதியாமோ? (1)

கொடிபோலும் அழகிய இடையையுடையவளாகிய உமா தேவியின் பங்கனே! எமது இறைவனே! அடியேனுடைய துன்பங்கள் எல்லாவற்றையும் பற்றற நீங்கும்படி ஆதியில் ஆண் டருளினாய் என்று அன்புடன் கருதியிருந்தேன்; ஐயோ, என்று மனமிரங்கி அருள்செய்து, தீவினை சேர்ந்த உடம்பையழித்து ஒழியாதது எதற்காக? எங்கள் சிவலோகநாதனே! யாவுமுடைய வனே! எங்களை அழைத்து ஏவல் கொள்ளாமல் தண்டிப்பது ஒன்றுமே அடியேனுக்கு அமையும். (2)

எம்மிறைவனே! எட்டுத் தோள்களும் மூன்று கண்களு முடைய தந்தையே! ஒன்றுக்கும் பற்றுத நாயேனாகிய என்னை பிழைக்கும்படி ஆட்கொண்டருளின உன் பெருங்கருணையானது இப்போது இல்லாது போய்விட்டதோ? உமையொரு பங்கனே! மலையை நிகர்த்த பெருங்குற்றங்களையும் குணமாமென்று நீ ஏற்றுக் கொண்டால் உனக்கு என்னதான் கெட்டுப்போயிற்று? அதனால் என் குற்றங்களைப்பொறுத்து இரங்கியருளாய். (3)

மான்நேர் நோக்கி மணவாளா !
மன்னே ! நின்சீர் மறப்பித்துஇவ்
வுளனே புகனன் தனைநாக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனல் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே ! கூவிக் கொள்ளும்நாள்
என்றென் றுன்னைக் கூறுவதே ?

கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ ! திகைப்பும்நீ !
தீமை நன்மை முழுதும்நீ !
வேறோர் பரிசிங் கொன்றில்லை;
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்,
தேறும் வகைஎன் ? சிவலோகா !
திகைத்தால் தேற்ற வேண்டாவோ ?

வேண்டத் தக்க தறிவோய்நீ !
வேண்ட முழுதுந் தருவோய்நீ !
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ !
வேண்டி என்னைப் பணிகொண்டாய் !
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்,
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே ?

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் ! என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ ?
இன்றோர் இடையூ றெனக்குண்டோ ?
எண்தோள், முக்கண், எம்மானே !
நன்றே செய்வாய்; பிழைசெய்வாய்;
நாயே னிதற்கு நாயகமே ?

மான்பார்வை போன்ற திருநோக்கத்தை ஒத்தவளாகிய உமா தேவிக்கு மணாளனே! இறைவனே! உன் புகழை மங்கச்செய்து இவ்வுடம்பின்கண்ணே புகுந்து என்னை அதன்கண் தள்ளி என்னை அலையும்படி செய்துவிட்டாய்; ஆயினும், தலைவனே! அடியேனுடைய பேதமையை உணர்ந்து நீயே அருள்செய்து என்னை அழைத்துக்கொள்ளும் தினம் எப்போது? உன்னைப் புகழ்ந்து கூறுவது எப்போது? (4)

சிவலோக நாதனே! உண்மையாக உன் தன்மையை விரித்துச்சொல்லப்போனால் (உன்னைப்) புகழ்கின்ற நாவையே முதலாகக்கொண்டு சொல்லுகிற காரணங்களெல்லாம் நீயே; தெளியும் விதம் நீயே; திகைப்பதற்குக் காரணமும் நீயே; நீண்ட நன்மைகள் என்கிற எல்லாம் நீயே; உனக்கு வேறாக யாதொரு தன்மையுமில்லை; யாம் (தடுமாறி) திகைத்தால் எம்மைத் தெளிவிக்க வேண்டாமோ? நான் தெளிவடையும் வகை யாது? நான் திகைப்படைந்தால் நீ என்னைத் தெளியச்செய்யவேண்டாமோ?

வேண்டத்தக்கனவற்றை அறிபவன் நீ; வேண்டத்தக்கனவற்றையெல்லாம் கொடுப்பவனும் நீ; வேண்டத்தகாததை உன்னை வேண்டுதல் செய்கின்ற அயன் திருமால் காணுதற்கரியவனும் நீ; என்னை நீயே விரும்பி வந்து ஆட்கொண்டாய்; ஆதலால் நீயாகவே விரும்பி எதனை அருள் செய்தனையோ, அதனையே நானும் விரும்புவதல்லாமல் நானாகவே விரும்பக்கூடிய இயல்பு ஒன்று உண்டென்றால் அவ்வியல்பும் உன்னுடைய விருப்பமேயாகும். (6)

மலையை நிகர்த்த சிவபெருமானே! எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய என் தந்தையே! என்னுடைய உயிரையும் உடலையும் பொருளையும் யாவற்றையும் என்னை ஆட்கொண்ட காலத்திலேயே நீ ஏற்றுக்கொள்ளவில்லையா? ஆகவின் இப்போது ஓர் இடையூறேனும் எனக்கு உண்டாகுமோ? நீயே நல்லனவற்றைச் செய்யினும் செய்வாயாக; அங்ஙனம் செய்வதற்குத் தலைவன் நானே? நான் அல்லன்; நீயே. (7)

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்;
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும்; அதுவன்றி
ஆயக் கடவேன் நானேதான் ?
என்ன தோஇங் கதிகாரம் ?
காயத் திடுவாய்; உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய். கண்டாயே ! 8

கண்ஆர் நுதலோய் ! கழலிணைகள்
கண்டேன், கண்கள் களிகூர
எண்ணு திரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுஅல்லால்
மண்மேல் யாக்கை விடும்ஆறும்,
வந்துன் கழற்கே புகும்ஆறும்,
அண்ணா ! எண்ணைக் கடவேனே ?
அடிமை சால அழகுடைத்தே ! 9

அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றேன்; உடையானே !
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்;
புகழே ! பெரிய பதம் எனக்குப்
புராண ! நீதந் தருளாதே,
குழகா ! கோல மறையோனே !
கோனே ! என்னைக் குழைத்தாயே ! 10

திருச்சிற்றம்பலம்.

நெற்றிக்கண்ணையுடைய பெருமானே! நாயினும் கீழ்ப்பட்ட நாய்த்தன்மையுடைய என்னை நீயாகவே விரும்பி ஆட்கொண்டாய். தந்திரமிக்க என் பிறவியை உன் வசமே ஒப்புவித்துவிட்டு விடுதலைபெற்றிருக்கும் இன்பநிலையில் இருப்பதையன்றி அதனைப் பற்றி ஆராய உரிமையுடையேனே? அதைப்பற்றிய அதிகாரம் என்னுடையதோ? அஃது உன்னுடையதே. ஆதலால், என்னை உடலுடன் கூடச்செய்து துன்புறுத்துவாய்; அல்லது உன்னுடைய திருவடியின்கண் வைத்து இன்புறுத்துவாய் எதுவும் உன் விருப்பப்படி நடப்பதே. (8)

கண் பொருந்திய நெற்றியையுடையவனே! அப்பனே! என்னுடைய கண்கள் களிப்படையுமாறு உன்னுடைய திருவடிகள் இரண்டையும் கண்டேன்; அங்ஙனம் காணப்பெற்ற நான், அவற்றையே இரவும் பகலுமாய் எப்போதும் எண்ணிக்கொண்டிருக்கிற செயல் ஒன்றுமே தவிர, மற்று இம்மண்ணுலகத்திலே இவ்வுடம்பு நீங்கும் வகையையும் அதனைவிட்டு உன் திருவடிக்கண் புகுதற்குரிய வழிகளையும் நான் நினைக்க உரிமையுடையேனே? அப்படி எண்ணினால் என் அடிமைத்தன்மை மிகவும் பொருத்தமுடைத்தாகுமோ? (9)

அழகனே! நாயேன் உன் திருவடியைப் பெற விரும்பி ஏற்புடைய நற்பணிகளைச் செய்துவிட்டு அலறுகின்றேன்; என்னை உடையவனே! ஒளி விளங்குகின்ற உனது திருமேனியைக் காட்டி என்னை ஏவல் செய்யுமாறு ஆட்கொண்டாய். புகழ் வடிவானவனே! பெரிய பேரின்ப நிலையை நீ கொடுத்தருளாமல் இளையோனே! அழகிய வேதியனே! தலைவனே! என்னை வாட்டினையே! (10)

திருச்சிற்றம்பலம்.

34. உயிர் உண்ணிப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—சிவானந்தம் மேலிடுதல்.)

(கலி விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பைங்காப்பட அரவேர் அல்குல் உமைபாகம் அதாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடா! விடைப் பாகா!
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்!
எந்நாட்களித்(து) எந்நாள்இறு மாக்கேன்,இனி யானே? 1

நான்ஆர் அடி அணைவான் ? ஒரு நாய்க்குத்தவி சிட்டுஇங்கு
ஊன்ஆர்உடல் புகுந்தான்;உயிர் கலந்தான்உளம் பிரியான்;
தேன்ஆர்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை
[உறைவான்
வானேர்களும் அறியாததோர் வளம்ஈந்தனன் எனக்கே! 2

எனைநான்என்பது அறியேன்;பகல் இரவாவதும்அறியேன்;
மனவாசகம் கடந்தானெனை மதம்தானமதன் ஆக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு திருப்பெருந்துறை
[உறையும்
பனவன்எனைச் செய்தபடி(று) அறியேன்பரஞ் சுடரே! 3

வினைக்கேடரும் உளரோபிறர், சொல்லீர்,வியன் உலகில்?
எனைத்தான்புகுந்து ஆண்டான்என(து) என்பின்புரை
[உருக்கிப்
பினைத்தான் புகுந்து எல்லே,பெருந் துறையில்உறைப்
[பெம்மான்
மனத்தான்,கண்ணின் அகத்தான்;மறு மாற்றத் திடை
யானே! 4

பற்றுங்கவை அற்றீர்,பற்றும் பற்றுங்கது பற்றி,
நற்றுங்கதி அடைவோம் எனின், கெடுவீர்,ஒடி வம்மின்,
தெற்றுர்சடை முடியான்,மன்னு திருப்பெருந்துறை
[இறை,சீர்
கற்றுஆங்கு,அவன் கழல்பேணின ரொடுங்கூடுமின்,கலந்தே!

34. உயிர் உண்ணிப்பத்து

திருச்சிற்றம்பலம்.

செவ்விய நாவன்மையுடைய புலவர்கள் துதிக்கின்ற புகழினையுடைய திருப்பெருந்துறையில் வாழ்வோனே! பசிய நாவையுடைய பாம்பின் படத்தையொத்த அல்குலையுடைய உமைபாகனேத் தோன்றி, நாள்தோறும் எனது உடம்பைவிட்டு நீங்காத வினையினைத் தொலைப்பவனே! இடபவாகனத்தையுடையோனே! இனி நான் எந்தக் காலத்தில் சிவாநந்தக் களிப்படைந்து, எந்தக் காலத்தில் இறுமாந்திருப்பேன். (1)

வண்டு பொருந்திய சடைமுடியையுடையாகிய நிலவுபெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருந்த சிவபெருமான், நான் தனது திருவடியை அடைதற்பொருட்டு ஒரு நாயாகிய எனக்கு இரங்கையளித்து, இவ்வுலகிலே புலால் நிறைந்த உடம்பிலே புகுந்து உயிரில் கலந்து என் உள்ளத்தில் பிரியான்; மேலும், விண்ணவரும் அறியாததாகிய ஒப்பற்ற பேரின்பச்செல்வத்தை எனக்குக் கொடுத்தருளினன். (2)

மனத்தையும் சொல்லையும் கடந்தவன்; வலியுடைய திருமாலை இடபவாகனமாகக் கொண்டவன்; நிலவுபெற்ற திருப்பெருந்துறையில் வசிக்கும் பிராமணன்; மேலான ஒளிப்பிழம்புபோல்வான்; என்னைக் களிப்பு மிகுந்த பித்தனைக்கி எனக்குச் செய்த மாயத்தையான் அறியேன்; என்னை நான் யார் என்பது அறியேன்; பகலும் இரவும் கழிந்ததையும் உணர்ந்திலேன். (3)

திருப்பெருந்துறையில் வாழ்கின்ற பெருமான், அடியேனைத் தானே எழுந்தருளி, என்னை என் எலும்பின் உள் துளைகளை உருகச்செய்து ஆட்கொண்டான்; அவன் என் உள்ளத்திலுள்ளான்; கண்ணினுள் இருக்கின்றான்; பின்னும் சொல்வினிடையுமுளன். ஆதலினால், உலகீர்! பெரிய உலகின்கண் அவனைப் போல வினையையொழிப்பார் பிறர் யார்? சொல்லுவீராக. (4)

கெட்டுப்போகும் மக்களே! பற்றுக்களாகிய அவைகளை அற்றவர்களாய்ப் பற்றுதற்குரிய பற்றாகிய அவன் திருவடிகளைப் பிடித்து நல்லதாகிய வீட்டினை அடைவோமென்பீராயின், ஓடிவாருங்கள்; தேன் துளிக்கு மாலையணிந்த சடைமுடியையுடையவனும் நிலவுபெற்ற திருப்பெருந்துறைக்கு இறைவனும் ஆகிய சிவபெருமானது புகழையே சொல்லக் கற்று, அவ்வாறே அவன் திருவடியையே விரும்பினவராகிய அடியாரோடும் கலந்துசேருங்கள்.

கடலின் திரை அதுபோல்வரு கலக்கம், மலம், அறுத்(து); என்
உடலும், என(து) உயிரும் புகுந்(து); ஒழியாவண்ணம்,
[மிகுந்தான்;
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை முகுடத்(து) எங்கள் பரன் தான் செய்தபடியே!

வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம், வேண்டேன்
[மண்ணுலகம் விண்ணுலகம்;
வேண்டேன் பிறப்(பு) இறப்புச், சிவம் வேண்டார் தமை
[நாளும்
தீண்டேன், சென்றுசேர்ந்தேன், மன்னு திருப்பெருந்துறை;
[மேவி நின்றான்;
பூண்டேன்; புறம்போகேன்; இனிப்புறம்போகல்ஒட்டேனே!

கோல்தேன் எனக்(கு) என்கோ? குரைகடல்வாய்
அமுதென்கோ?
ஆற்றேன்; எங்கள் அரனே! அருமருந்தே! எனதுஅரசே!
சேற்றூர்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்,
நீற்றூர்தரு திருமேனியின் மலனே! உனை யானே? 8

எச்சம்அறி வென்னான்எனக்(கு) இருக்கின்றதைஅறியேன்
அச்சோஎங்கள் அரனே! அரு மருந்தே! என(து)அமுதே!
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை
[உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி, யான் ஆகின்றனே! 9

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய, அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந்(து) அடவிமரம் ஆனேன்;
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
[உறைவாய்
நான்பாவியன் ஆளல்உனை நல்காய்எனல் ஆமே! 10

திருச்சிற்றம்பலம்.

விளங்கும் ஒளியுடைய பிறைசூடிய திருப்பெருந்துறையில் உறைகின்ற படர்ந்த சடையில் கவித்த முடியையுடைய எங்கள் சிவபரன் செய்த சூழ்ச்சி யாதெனில், கடலின்கண் அலை தொடர்ந்து வருவதுபோன்று பிறவிதோறும் தொடர்புற்றுவரும் கலக்கத்துக்கேதுவாகிய பாசங்களை நீக்கி என் உடலிலும் உயிரிலும் புகுந்து யான் கெடாதபடி நிறைவுற்றமர்ந்தான். (6)

புகழ் விரும்பேன்; செல்வம் விரும்பேன்; மண்ணின்பம் விண்ணின்பம் விரும்பேன்; பிறப்பு இறப்புக்களை விரும்பேன்; சிவத்தை விரும்பாதவர்களை ஒருநாளும் தீண்டேன்; நிலைத்த திருப்பெருந்துறையில் உறையும் இறைவன் திருவடிகளைப் போய்ச் சேர்ந்தேன்; அவற்றை என் தலைமேல் கொண்டேன்; அவற்றிற்குப் புறத்தே நான் போகமாட்டேன்; இனிமேல் அவை என்னை விட்டு அகலுவதற்கும் இசையமாட்டேன். (7)

எங்களுடைய சிவபெருமானே! அரிய அமுதே! என்னுடைய மன்னனே! சேறு நிறைந்த வயல்கள் நாற்பக்கங்களிலும் சூழ்ந்துள்ள திருப்பெருந்துறை என்னும் சிவப்பதியில் வாழ்கின்ற திருவெண்ணீற்றால் பூசும் அழகிய மேனியையுடைய குற்றமற்றவனே! உன்னை நான் அடியேனுக்குக் கொம்புத்தேன் என்பேனே? ஒலிக்கின்ற திருப்பாற்கடலில் தோன்றிய அமிர்தம் என்பேனே? (அங்ஙனமாயின்) உன்னைப் பிரிந்து தனியாயிருக்கயான் பொறுக்கேன். (8)

வெட்சி மலர்போன்ற சிவந்த திருமேனியையுடையவன் திருப்பெருந்துறையின்கண் வந்து வாசஞ்செய்வோன், (அவன்) உறுதியாக என்னுடைய மனத்தினிடத்தே நிலைபெற்று நானேயாகி நின்றவனே! எங்களுடைய சிவபெருமானே! கிடைத்தற்கரிய அமுதமே! என்னுடைய அருமையான மருந்தே! என்னுடைய அமிர்தமே! நான் இன்னும் பெறவேண்டிய குறைகளை அறிவேன். எனக்குள்ள குறையை அறியேன்; இஃது அதிசயம். ()

ஆகாயத்தின்கண்ணுள்ள உலகத்தவர்களாகிய தேவர்களும் தவத்தினையே செய்யாநிற்க, வீணை மாமிசம் சேர்ந்த உடம்பை (சுமை தாங்கிபோல்) தாங்கிக் காட்டின்கண் (வளர்ந்தோங்கியாநின்ற ஒதியமரமானேன்; தேனைத (பெருகிப்) பாயாநின்ற கொன்றைப்பூவை அணிந்து நிலைபெற்ற திருப்பெருந்துறை என்னும் பதியில் (ஆநந்தத்தோடும் கூடி) வாழ்பவனே! யான் பாவியேயாயினும் உன்னைக் கொடுத்தருளாய் என்று சொல்லக்கூடுமோ?

திருச்சிற்றம்பலம்.

35. அச்சப்பத்து

(தில்லையில் அருளியது—ஆனந்தம் உறுதல்.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்;
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்;
கற்றவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்(து)எம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

வெருவுவேன் வேட்கை வந்தால்;
வினைக்கடல் கொளினும், அஞ்சேன்;
இருவரால் மாறு காண
எம்பிரான், தம்பி ராணும்
திருவுரு அன்றி, மற்றோர்
தேவர்,எத் தேவர்? என்ன
அருவரா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

வன்புலால் வேலும் அஞ்சேன்;
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்;
என்பெலாம் உருக நோக்கி,
அம்பலத்(து) ஆடு கின்ற
என்பிலா மணியை எத்தி,
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

35. அச்சப்பத்து

திருச்சிற்றம்பலம்.

புற்றில் வாழ்கின்ற ஒளியையுடைய பாம்பிற்குப் பயப்படேன்; பொய்யர்களுடைய உண்மைபோலும் பொய் வார்த்தைகளையும் (கேட்டுப்) பயப்படேன்; திரட்சியாகிய நீண்ட சடைமுடியையுடைய எமது பெருமானுகிய நெற்றிக்கண்களையுடைய சிவபெருமானது திருவடியைச் சேர்ந்தும், வேறு ஓர் கடவுளும் இருக்கிறது என்று எண்ணி, எம்பெருமான்பொருட்டு பிற கடவுள் பற்று நீங்காதவரைக் கண்டால், ஐயோ! நாம் பயப்படும் வகையை என் சொல்லுவோம்? (1)

காமவிச்சை மிகுந்து தொடர்ந்தாலும் பயப்படேன்; வினையாகிய கடலானது என்னைச் சூழ்ந்து கொண்டாலும் அதற்கு நான் அஞ்சமாட்டேன்; பகைமை காரணமாகப் பிரம விட்டுணுக்களாகிய இருவராலே காணப்படாத எமது பிரான் தம் வயமுடையவர்; (அவனது) அருமையாகிய அழகிய வடிவையே பார்த்து ஆனந்திப்பதல்லது வேறொராகிய தேவர்கள் என்ன தேவர்களென்று அருவருக்காதவர்களைப் பார்க்கின், ஐயோ! யாம் பயப்படும் வகையை என் சொல்வோம்? (2)

வலிய புலால் தங்கிய வேற்படையையும் (கண்டு) பயப்படேன்; வளையலையணிந்த கைகளையுடையாராகிய மாதரது கடைக்கண் பார்வைக்கும் பயப்படேன்; அன்பர் எலும்புகளெல்லாம் உருகும்படியாகத் திருநோக்கம் செய்து திருச்சிற்றம்பலத்தின்கண் அடியார் மகிழத் திருநடனம் செய்கின்ற எனது துணையிடப்படாத மாணிக்கம்போல்வானைத் துதித்து அவனது அருளமுதத்தை இனிதாகப் பருகமாட்டாத ஆசையற்றவர்களைப் பார்த்தால், அம்ம! அது நாம் பயப்படும் வகையாயிராநின்றது. (3)

கிளிஅனுர் கிளவி அஞ்சேன்;
அவர்கிறி முறுவல் அஞ்சேன்;
வெளியநீ ருடு மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளிஉலாம் கண்ணர் ஆகித்
தொழுதுஅழுது உள்ளம் நெக்குஇங்கு
அளிஇலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

பிணிஎலாம் வரினும், அஞ்சேன்;
பிறப்பிறே(டு) இறப்பும் அஞ்சேன்;
துணிநிலா அணியி னன்தன்
தொழும்பரோடு அழுந்தி, அம்மால்,
திணிநிலம் பிளந்தும், காணுச்
சேவடி பரவி, வெண்ணீ(று)
அணிகிலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

வாள்உலாம் எரியும் அஞ்சேன்;
வரைபுரண் டிடினும், அஞ்சேன்;
தோள்உலாம் நீற்றன், ஏற்றன்,
சொற்பதம் கடந்த அப்பன்,
தாளதா மரைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆள்அலாது அவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

கைகவிலாப் பழியும் அஞ்சேன்;
சாதலே முன்னம் அஞ்சேன்;
புகைமுகந்(து) எரிகை வீசிப்
பொலிந்தஅம் பலத்துள் ஆடும்,
முகைநகைக் கொன்றை மாலை,
முன்னவன் பாதம் ஏத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

கிளிபோன்ற மொழியையுடைய பெண்களது (எவ்வித) வார்த்தையையும் (கேட்டுப்) பயப்படேன்; அம்மாதரது வஞ்சகத் தோடு கூடிய நகைப்பிற்கும் பயப்படேன்; வெண்ணிறமுடைய திருநீற்றில் மூழ்கிய திருமேனியையுடைய அந்தணரக வந்த சிவபெருமான் திருவடியையடைந்து நீர்த்துளிகள் சிந்துகின்ற கண்களையுடையவர்களாய்த் தொழுது வணங்கி (விம்மி) அழுது, மனமானது நெகிழ்ந்து இவ்விடத்தில் கனியும் தன்மை இல்லாத வரைப் பார்க்கில், அம்ம! யாம் பயப்படும் வகையாகும். (4)

நோய்கள் யாவும் வந்தடைந்தாலும் பயப்படேன்; பிறப்பும் இறப்பும் வந்தாலும் பயப்படேன்; சந்திரனின் துண்டாகிய இளம் பிறையை ஆபரணமாக உடையவரகிய சிவபெருமானது தொண்டரோடு பொருந்தி அந்தத் திருமால் வலிமை தங்கிய பூமியைப் பிளந்து தேடியும் பார்க்கமுடியாத திருவடியைத் துதித் துத் திருவெண்ணீற்றை அணியாதவரைப்பார்க்கில், அம்ம! நாம் பயப்படும் வகையாகும். (5)

ஒளி வீசுகின்ற நெருப்பிற்கும் அஞ்சமாட்டேன்; மலையானது புரண்டு மேல் விழுந்தாலும் அஞ்சமாட்டேன்; இரண்டு திருத் தோள்களிலே விளங்குகின்ற திருநீறுடையவரையும் ரிஷபவாக னத்தையுடையவரையுமுள்ள சொல்லின் தரத்தைக் கடந்த அப்ப ரகிய பெருமானுடைய திருவடித் தாமரைமலர்களைத் துதித்துப் பெருமைபொருந்திய மலர்களால் அலங்கரித்து மனம் நெகிழும் அடிமையல்லாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாம். (6)

தடுத்தற்கரிய பழிக்கும் பயப்படேன், இறத்தலே முன்னமே பயப்படேன்; புகையைக்கொண்ட தீயைக் கரத்திற்கொண்டு வீசி விளங்காநின்ற பொன்னம்பலத்தில் திருநடனம் செய்கின்ற மொட்டு விரிகின்ற கொன்றைப்பூமாலையை அணிந்த முதல்வனது திருவடியைத் துதித்து மனம் நெகிழாதவரைப் பார்த்தால், அம்மா! யாம், பயப்படும் வகையாகும். (7)

தறிசெறி களிறும் அஞ்சேன்;
தழல்விழி உழுவை அஞ்சேன்;
வெறிகமழ் சடையன், அப்பன்,
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்(து)இனி(து) இருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

மஞ்சுஉலாம் உருமும் அஞ்சேன்;
மன்னரா டுறவும் அஞ்சேன்;
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம்பிரான் எம்பி ரான்ஆய்ச்
செஞ்சவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டாது,
அஞ்சுவார் அவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

கோண்இலா வாளி அஞ்சேன்;
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்;
நீள்நிலா அணியி ணைஇணை
நிணைந்து,நைந்(து), உருகி, நெக்கு,
வாள்நிலாம் கண்கள் சோர,
வாழ்த்திநின்(று), ஏத்த மாட்டா
ஆண்அலா தவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சும் ஆறே!

திருச்சிற்றம்பலம்.

கட்டுத்தறியில் கட்டப்படுகிற யானையையும் கண்டு பயப் படேன்; நெருப்புப்போலும் கண்களையுடைய புலியையும் பார்த்துப் பயப்படேன்; தேன் மணம் வீசுகின்ற சடையினையுடையவனுகிய எனது தந்தையினது, தேவர்களும் அறியமுடியாத வீரக்கழல்கள் நெருங்கிய திருவடிகளைத் துதித்துச் சிறப்படைந்து இனிதிருக்க மாட்டாத அறிவில்லாதவரைக் காணின், அம்ம! அது நாம் பயப்படும் வகையாகும். (8)

கரிய மேகத்தில் உண்டாகி உலாவுகின்ற இடிக்கும் பயப் படேன்; அரசருடைய கட்புக்கும் பயப்படேன்; (திருப்பாற்கடலி லுண்டாகிய) நஞ்சையே அமிர்தமாக ஏற்றுக்கொண்ட நம்முடைய பிரான் எம்பெருமானுகிச் சிறப்பாகவே அடிமையாக்கிக்கொண் டருளினவன் (அவனது) திருநீறுகிய அருமைச்செல்வத்தை (தமது) நெற்றியில் பூசமாட்டாமல் அஞ்சிப் பயப்படுவாராகிய அப்போக்கொத்தவர்களைப் பார்த்துவிட்டால் யாம் பயப்படும் வகையாகும், (9)

கொலைத்தன்மை பொருந்திய அம்பிற்கும் (கண்டு) பயப் படேன்; தென்திசைக்கு அதிபதிகிய யமனது கோபத்தைக் (கண்டு) பயப்படேன்; நீண்ட பிறையை ஆபரணமாகச் சூடியவனை எண்ணிக் கசிந்து உருகி நெகிழ்ந்து பிரகாசமானது நிலைபெற் றிருக்கிற இருகண்களில் நீரானது ஒழுக வாழ்த்தி நின்று துதிக்க மாட்டாத ஆண்மைத்தன்மையுடையவர் அல்லாதவரைப்பார்க்கில் யாம் அஞ்சும் வகையாகும். (10)

திருச்சிற்றம்பலம்.

36. திருப்பாண்டிப் பதிகம்

(திருப்பெருந்துறையில் அருளியது—சிவானந்த விளவு.)

(கட்டளைக் கலித்துறை.)

திருச்சிற்றம்பலம்.

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற்(கு)
[ஆர் அழுதாம்
ஒருவரை, ஒன்றும் இலாதவரைக், கழற்போ(து)இறைஞ்சித்
தெரிவர நின்(று) உருக் கிப், பரி மேற்கொண்ட சேவகனைர்
ஒருவரை அன்றி, உருவறியா(து) என்றன் உள்ளமதே! 1

சதுரை மறந்(து),அறி மால்கொள்வர் சார்ந்தவர்;
[சாற்றிச்சொன்னேம்:
கதிரை மறைத்தன்ன சோதி, கழுக்கடை கைட்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேல்குடி கேடுகண்டீர்;
மதுரையர் மன்னன் மறுபிறப்(பு) ஓட மறித்திடுமே! 2

நீர்இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்
கொண்டீர்;
பார்இன்ப வெள்ளம் கொளப்,பரி மேற்கொண்ட
[பாண்டியனைர்,
ஓர்இன்ப வெள்ளத்(து) உருக்கொண்டு, தொண்டரை
[உள்ளங்கொண்டார்:
பேர்இன்ப வெள்ளத்துட், பெய்கழ லேசென்று
[ஏனை. 3

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்! தென்னன்
[நன்னாட்(டு,
இறைவன்,கிளர்கின்ற காலம்இக்காலம்;எக்காலத்துள்ளும்,
அறி(வு)ஒண் கதிர்வாள் உறைகழித்(து) ஆனந்தமாக்கடவி
எறியும் பிறப்பை, எதிர்ந்தார் புரள இருநிலத்தே. 4

36. திருப்பாண்டிப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

பெரிய மலையரசனது புதல்வியாகிய உமாதேவியைப் பாக மாகவுடையாரைப், பாண்டிய அரசனுக்குப் பெறுதற்கரிய அமிர்த மாகிய ஒப்பற்றவரை, பெயர் வடிவு முதலிய யாதொன்றையும் உடையர் அல்லாதாரைத் திருவடித் தாமரைமலரைத் தொழுது காணும்படி நின்றிருந்து மனத்தையுருகச்செய்து (என்னிமித்தம்) குதிரையின்மீது ஏறி வந்த வீரர் ஒருவரைத் தவிர, என்னுடைய மனமானது பிற தெய்வங்களின் வடிவையும் தெரியமாட்டாது. (1)

சூரியனது ஒளியை மறைத்தாற்போன்ற ஒளியுடைய சூலத் தைக் கையில் பிடித்து அடைந்து ஈடுபட்டவர் தமது திறத்தை மறந்து அறிவு மயக்கம் கொள்வர்; பறையறைந்து சொன்மேனும்; குதிரையின்மேல் எழுந்தருளி வந்து கலந்திடின் பிறப்பு நாச மாகும்; அறிவீர்களாக. மதுரையில் வாழ்கின்றவர்களது அரச னெய பாண்டியனது மறுபிறப்பையோட்டி மீண்டு வராதபடி தடுக்கும். (2)

நீங்கள் ஆநந்தப்பெருக்கில் நீந்திக் குளிக்கவேண்டுமென்று மனத்தில் மிகு விருப்புடையீர்; பூமியிலுள்ளார் எல்லாரையும் ஆநந்தப்பெருக்கானது கொண்டுசெல்லும்வண்ணம் குதிரைமேற் கொண்ட பாண்டியனாகிய சோமசுந்தரக்கடவுள், நிகரற்ற ஆநந்தப்பெருக்கின் உருவங்கொண்டு அடியவரது மனங்கவர்ந்தார்; பேரானந்தக்கடலின் பெருக்கினுள்ளும்சென்று வீரக்கழலணிந்த திருவடிகள்பாற் சென்று வழிபடுங்கள். (3)

இந்தக் காலம், இறைவனாகிய சிவபெருமான் அரசுசெய்து விளங்குகின்ற காலம்; எந்தக் காலத்திலும் ஞானமாகிய ஒள்ளிய சூரியனது ஒளியுள்ள வாட்படையை உறை நீக்கி இன்பமாகிய குதிரையைச் செலுத்திப் பெரிய நிலவுலகத்தில் பிறவியை எதிர்த் தவர் புரளும்படி வீசுவன். ஆதலால், பாண்டியனது நலம் வாய்ந்த நாட்டின்கண் அடர்ந்த பிறப்புக்கு நன்மையுடையோர் ஒருவரும் செல்லாதீர்கள். (4)

காலம்உண் டாகவே, காதல்செய்து உய்மின்! கருதரிய
ஞாலம்உண் டாஎனை டு, நான்முகன், வானவர், நண்ணரிய
ஆலம்உண் டான்;எங்கள் பாண்டிப் பிரான்;தன்
[அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்;வந்து, முந்துமினே. 5

ஈண்டிய மாயா இருள்கெட, எப்பொரு ளும்விளங்க
தூண்டிய சோதியை, மீனவ னும்சொல்ல வல்லன்
[அல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்; விரும்புமின்தாள்;
பாண்டியன் ஆர்அருள் செய்கின்ற மூத்திப் பரிசிதுவே. 6

மாயவன் அப்பரி மேல்கொண்டு, மற்றவர் கைக்கொளலும்
போய்அறும் இப்பிறப்(பு) என்னும் பகைகள்;
[புகுந்தவருக்(கு)
ஆய, அரும்பெருஞ் சீர்உடைத் தன்னரு ளேஅருளும்:
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே.

அழிவின்றி நின்றதோர் ஆனந்தவெள்ளத் திடை
[அழுத்திக்,
கழிவில் கருணையைக் காட்டிக், கடிய வினைஅகற்றிப்
பழமலம் பற்றறுத்(து), ஆண்டவன் பாண்டிப்
[பெரும்பதமே,
முழுதுல குந்தரு வான்,கொடையே;சென்று முந்துமினே.

காலமானது கிடைத்திருக்கும்போது இறைவனுகிய பரம சிவனுக்கு அன்போடு தொண்டுசெய்து இறத்தலை நீக்கிப் பிழை புங்கள்; எண்ணுதற்கு அரிதாகிய இப்பூலோகத்தை உட்கொண்டு தன் வயிற்றினிடம் வைத்திருப்பவனுகிய மஹாவிட்டுணுவோடும், தாமரைமலரை ஆசனமாகக்கொண்ட பிரமதேவனும் வானுல கத்திலுள்ள இதர தேவர்களும் அடைதற்கும் அருமையாகிய (திருப்பாற்கடலினின்றுண்டாகிய) ஆலகால விஷத்தை (அஞ் சாது) அமுதமாகக்கொண்டவன் எங்களது பாண்டிநாட்டுக்குச் (சோமசுந்தரக் கடவுளாக எழுந்தருளிய) பெருமான், தன்னுடைய தொண்டர்களுக்குப் புராதன பொக்கிஷத்தை (தாதாவாய் ஓர் நாமமுந்தரித்துக்) கொடுக்கின்றன் (ஆனதால்) அங்கு வந்து (அவ்வஸ்துவையடைய) முந்திக்கொள்ளுங்கள். (5)

அடர்ந்த ஒழியாத அஞ்ஞான இருளானது நீங்கவும், எல்லாப் பொருள்களும் தெரியவும் குதிரையைச் செலுத்திவந்த சோதியை, மீன் கொடியையுடைய பாண்டியனும் (அவனது புகழைச்) சொல்லுதற்கு ஆற்றலுடையவன் அல்லன்; ஐந்து வாயில்களாகிய ஐம்பொறிகளை விரும்பியபொழுதே விலக்கவேண்டுமாயின் அவனது திருவடிப்பேற்றை அடைய ஆசைப்படுங்கள்; சோம சுந்தரக்கடவுள் அருள் செய்கின்ற முத்திதரும் மார்க்கம் இதுவே.

பாண்டியன் மகாமாயமாகிய காட்டினிடம் வாழாநின்ற பரிமேல் வந்து அச்சிவபெருமான் பிறரைத் தன் வசப்படுத்து தலும் இப்பிறவிக்காரணம் என்று சொல்லப்படுகிற பகைக ளானவை பற்றில்லாமல் அற்றுப்போம்; (ஆதலால்) அப்பரம சிவனது அன்பையடைந்தவருக்கு உண்டாகிய பெருமையைத் தாநின்ற பெரிய சிறப்பையுடைய தன்னுடைய அருளென்னும் செல்வத்தையே அருள்செய்வன்; சம்மையாகிய பெரிய கொடை வள்ளல் பாண்டிப்பிராஞகிய சோமசுந்தரக் கடவுளினது மோட்ச வீட்டைத் தருகின்ற திருவடிகளை அடையுங்கள். (7)

சேதமில்லாது நின்றதாகிய ஒப்பற்ற இன்பசாகரப் பெருக் கில் அழுந்தச்செய்து கழிவில்லாத அருளைக் காட்டிக் கொடி தாகிய மலசம்பந்தமான இருவினைகளை விலக்கிப் பழமையாக வரும் மலங்களை வேரறக் களைந்து (அருள்செய்து ஆண்டருளி னவனுகிய பரமசிவன் பாண்டிநாட்டுப் பெரும்பதவியொன்றை மாத்திரந்தானே உலகமுழுதும் கொடுப்பான்? போய் முந் துங்கள். (8)

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்,
பரவிய அன்பரை, என்புருக் கும்பரம் பாண்டியனுர்,
புரவியின் மேல்வரப் புந்திகொள் ளப்பட்ட பூங்கொடியார்
மரவியல் மேற்கொண்டு தம்மையும் தாம்அறி யார்,மறந்தே.

கூற்றைவென்(று), ஆங்குஐவர் கோக்களை யும்வென்று
[இருந்து,அழகால்
வீற்றிருந் தான்,பெருந் தேவியும்தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந்(து), ஆருயிர் உண்ட, திறல்ஒற்றைச் சேவகனே;
தேற்றம்இ லாதவர்! சேவடி சிக்கெனச் சேர்மின்களே. 10

திருச்சிற்றம்பலம்.

சேர்ந்த கெடுதலுடைய வினைகளாலுண்டாகிய மூற்பிறப் புக்களாகிய துன்பக்கடலைக் கடக்க வழிபட்ட அடியார்களுடைய எலும்பை உருக்குகின்ற மேலான பாண்டிப்பிராஞகிய சோம சுந்தரக்கடவுள் குதிரையின்மீது வருவதைக் கண்டு அறிவு கவரப்பெற்ற பூங்கொடியையொத்த இடையழகையுடைய பெண் கள் மாத்தின் செய்கையை மேற்கொண்டு மதிமயங்கித் தங்களையே தாம் தெரிந்திலர். (9)

யமனை வென்று அவ்விடத்தில் ஐம்புலன்களாகிய அரசர் களையும் வெற்றிகொண்டிருந்து, யாவராலும் புகழும்படி அழ கோடு எழுந்தருளியிருந்தான்; (எவ்விடத்தே என்றாராய்ந்து கேட்கில்) உமாமகேசுவரியும் தானுமாக நிகரற்ற மச்சக்கொடியை யுடைய பாண்டியனிடத்தில் (அவ்வாறு வீற்றிருந்தவன் யா ரெனில்) பகைத்து வந்தவருடைய ஆவியை வாங்கின வன்மை யுடைய ஒப்பற்ற மகாவீரனே; (ஆதலால்) தெளிதல் இல்லாதவர் களே! அவன் திருவடியை உறுதியாகச் சேர்ந்துகொள்ளுங்கள்.

திருச்சிற்றம்பலம்.

37. பிடித்த பத்து

(திருத்தோணிபுரத்தில் அருளியது — முத்திக்கலப்புரைத்தல்.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கு அரசே! ஒழிவற நிறைந்த
யோகமே! உற்றறியேன் தனக்கு
வம்பெனப் பழுத்துளன் குடிமுழுது ஆண்டு,
வாழ்(வு)அற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீருடைக் கழலே!
செல்வமே! சிவபெரு மானே!
எம்பொருட்(டு) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து), இனியே? 1

விடைவிடா(து) உகந்த விண்ணவர் கோவே!
வினையனே னுடையமெய்ப் பொருளே!
முடைவிடா(து), அடியேன் மூத்து,அற மண்ணுய்
முழுப்புழுக் குரம்பையில் கிடந்து,
கடைபடா வண்ணம் காத்(து),எனை ஆண்ட
கடவுளே! கருணைமா கடலே!
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து), இனியே? 2

அம்மையே! அப்பா! ஒப்(பு)இலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்,
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து), இனியே! 3

37. பிடித்த பத்து

திருச்சிற்றம்பலம்.

விண்ணுலகத்தார்கட்கு மன்னனே! எவ்விடத்தும் நீங்குதலில்லாது வியாபித்தவனே! மலசம்பந்த அழுக்குடம்புடையேனுகிய அடியேனுக்கு ஆச்சாரியமென்று புகலும்படி, அருள் கனிந்து அடியேனது குடி முழுமையும் ஆண்டருளி, (உடலோடு கூடி வாழும்) வாழ்க்கை பற்றறும்படி (சிவலோகப்பேற்றை யடைந்து) வாழும்படி செய்த தேவ அமிர்தமே! பரிசுத்தமாகிய சாத்திரப்பொருளின் துணிவே! சிறப்பையுடைய முத்திகொடுக்கும் திருப்பாதத்தையுடையவனே! எமது நிலைத்த ஐசுவரியமே! சிவபெருமானே! எம்பால் உன்னைக் கெட்டியாக நழுகவிடாமற் பற்றினேன்; இனிமேல் நீ எவ்விடத்துக்கு எழுந்துபோவது? (1)

இடபவாகனனே! என்றும் விட்டு விடாமல் விரும்பின விண்ணுலகத்தார்க்கிறைவனே! வினேயனது உண்மைப் பொருளே! புலால் நாற்றம் நீங்காத தேகத்தை விடாமல் தொண்டனேன் முதிர்ந்து மிகவும் மண்ணுகி, நிறைந்த கிருமிகளுள்ள உடம்பில் இருந்து உழலாவண்ணம் அடியேனைக் காப்பாற்றித் தடுத்தாண்ட கடவுளே! அருளைத் தருகின்ற பெருங் கடலே! இடைவிடாமல் தேவ்ரீரை உறுதியாகப் பற்றினேன்; இனிமேல் நீ என்னைவிட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது? (2)

எனையீன்ற தாயே! என் தந்தையே! நிகரில்லாத மாணிக்கமே! பெருமைதங்கிய அன்பாகிய கடலில் விளைந்த கிடைத்தற்கரிய அமிர்தமே! நிலையாதவையின்கண்ணே அறிவினைப் பெருகச் செய்து நோக்கத்தைப் பயன்படாது கழிக்கின்ற புழுத்தலைகின்ற கீழ்மைக்குணமுடையேனுகிய எனக்குச் செவ்வையாகிய சிவலோக பதவியை ஈந்தருளிய எனது ஐசுவரியமே! சிவபெருமானே! உன்னை உறுதியாக விடாமல் பற்றினேன்; இனிமேல் நீ எவ்விடத்துப்போவது? (3)

அருளுடைச் சுடரே! அளிந்ததேதார் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே!
பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே!
தெருளிடத்(து) அடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே! சிவபெரு மானே!
இருளிடத்(து), உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து), இனியே? 4

ஒப்(பு)உனக்கு இல்லா ஒருவனே! அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே!
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு,
விழுமிய(து) அளித்ததோர் அன்பே!
செப்புதற்(கு) அரிய செழுஞ்சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெரு மானே!
எய்ப்பிடத்(து), உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) (அருளுவ(து) இனியே? 5

அறைவையேன் மனமே கோயிலாக் கொண்(டு), ஆண்(டு)
அளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவேர் அறுத்(து), என் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா! பெரியனம் பொருளே!
திறவிலே கண்ட காட்சியே! அடியேன்
செல்வமே! சிவபெரு மானே!
இறவிலே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து) இனியே? 6

பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றும்வூ(று), அடியனேற்(கு) அருளிப்
பூசனை உகந்(து), என் சிந்தையுட் புகுந்து,
பூங்கழல் காட்டிய பொருளே!
தே(சு)உடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெரு மானே!
சசனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து) இனியே? 7

அருளுடைய ஒளியே! கனிந்ததாகிய நிகரற்ற பழமே! போற்றலையுடைய அருமையாகிய தபோபலத்தை உடை யோர்க்கு அரசனே! மெய்ப்பொருள் விளக்கும் நூலே! வான வனே! புகழ்ச்சிக்கு அப்பாற்பட்ட போகப்பொருளே! யோகத்தி னது விளக்கமே! தெளிவாகிய இடத்தையுடைய அடியவர்க ளது மனத்தில் உட்புகுந்த செல்வமே! சிவபெருமானே! (அஞ் ஞானமாகிய) இருள் செறிந்த இப்பூலோகத்தில், உன்னை உறுதி பாகப் பற்றினேன். இனிமேல் நீ எவ்விடத்து எழுந்தருள்வது?

தன்னிகரில்லாத் தலைவனே! தொண்டுபூண்டொழுகா நின்ற அடிமையின் மனத்தில் விளங்குகின்ற ஒளியே! உண்மை யான முத்திதரும் பதவியைத் தெரிந்துகொள்ளாத மேம்பாடு இல்லாதவனாகிய எனக்கு யாவராலும் மதிக்கப்பெற்ற பதவியைத் தந்ததாகிய நிகரற்ற என்னருயிர்க்கன்பே! யாவராலும் புகழ் தற்கு அரிதாகிய செழுமையையுடைய ஒளிதங்கிய புண்ணிய மூர்த்தியே! நிலைத்த செல்வனே! சிவபெருமானே! நான் இனைத்த இடத்தில் தேவரீரைக் கெட்டியாய்ப் பற்றினேன்; இனிமேல் நீ என்னைவிட்டு எவ்விடத்துக்குப் போவது? (5)

திக்கற்றவனாகிய என் மனத்தையே கோயிலாக ஏற்படுத்திக் கொண்டு அருள்செய்தருளி அளவில்லாத பேரின்பத்தைக்கொடுத் தருளிப் பிறவியின் வேரைக் களைந்து என்னுடைய குடும்ப முழுவதையும் ஆட்கொண்டருளின சடைமுடியையுடையவனே! எமது பெரிய பொருளே! தெளிவாகப் பார்க்கப்பட்ட காட்சியே! அடிமையினது செல்வமே! சிவலோகநாதனே! முடிவிலே உன்னையே உறுதியாகக் கைப்பற்றினேன்; இனிமேல் நீ எங்கு எழுந்தருளிச்செல்வது? (6)

பாசபந்தத்தின் வேரைக் களைகின்ற பழம்பொருளான வனே! அன்புசெய்யும் வகையைத் தொண்டனாகிய எனக்குத் தெரியும்படி அருள் செய்து, என் போற்றுதலை விரும்பி என் னுடைய மனத்தில் உட்புகுந்து, பொலிவமைந்த பொற்பாதத் தைக் காட்டிய மெய்ப்பொருளே! சுயம்பிரகாசத்தையுடைய (எப்போதும் அணையாத) தீபமே! செழுமையாகிய கதிர்வீசும் ஒளிவடிவானவனே! நிலைத்த ஐசுவரியமே! சிவபிரானே! ஆண்ட வனே! தேவரீரை உறுதியாக மனமென்னும் கயிற்றால் இறுகப் பற்றினேன்; இனிமேல் நீ எவ்விடத்து எழுந்தருளுவது? (7)

அத்தனே! அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே! யாதுமீறு இல்லாச்
சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெரு மானே!
பித்தனே! எல்லா உயிருமாய்த் தழைத்து,
பிழைத்து,அவை அல்லவாய் நிற்கும்
எத்தனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து) இனியே? 8

பால்நினைந்(து) ஊட்டும் தாயிலும் சாலப்
பரிந்து,நீ, பாவியே னுடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி,
உலப்(பு)இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து) இனியே? 9

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடும் கோயிலாப் புகுந்தனன்
என்பெலாம் உருக்கி எளியையா(ய்) ஆண்ட
ஈசனே! மாசிலா மணியே!
துன்பமே பிறப்பே இறபபொடு மயக்கம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ!
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு)எழுந்(து) அருளுவ(து) இனியே? 10

திருச்சிற்றம்பலம்.

தலைவனே! தேவர்க்கு ஓர் ஆதாரமாய் நின்ற முதல்வனே! சிறிதும் முடிவு இல்லாத பேரறிவுருவனே! பத்தர்கள் உறுதியாகப் பற்றின செல்வமே! சிவபிரானே! பித்துப்போலிருப்பவனே! எல்லா ஜீவராசிகளும் ஆகிச் செழித்துத் தப்பி அவைகள் அல்லாமல் வேறு பொருளாய் நிற்கின்ற வஞ்சகமுடையவனே! உன்னை உறுதியாகப் பற்றினேன்; இனிமேல் நீ எவ்விடத்துப் போவது? (8)

(குழந்தை அழுவதற்கு முன்) அதன் பசி வேளை தெரிந்து பாலூட்டும் தாயைவிட நீ மிகவும் அருளோடு இரங்கிப் பாவியாகிய எனது உடலை உருகச்செய்து (என்) மனத்தினிடத்தே (ஞான) சோதியைப் பெருகச்செய்து சேதம் இல்லாத போன்பமாகிய தேனைப் பொழிந்து அப்புறம்பிப்புறமாக (யாதொன்றும் தெரியாதவர்போல்) திரிந்த எனது (அழிவில்லா ஐசுவரியமே! சிவலோகநாதனே! நான் தேவரீரைப் பின்பற்றிக் கெட்டியாய்ப் பற்றினேன்; (ஆனதால்) இனிமேல் நீ எவ்விடத்து எழுந்து போவது? (9)

தசையாலாகிய என் சிற்றுடம்பு மயிர்க்கால்கள்தோறும் நெகிழ்ச்சியடையுமாறு அதனைப் பொன்னிலாகிய பெரிய கோவிலாக எண்ணி அதன்கண் எழுந்தருளி என்னுடைய எலும்பையெல்லாம் உருக்கி எனக்கு எளிதில் வெளிப்படுபவனாகி என்னை ஆட்கொண்ட ஆண்டவனே! குற்றமில்லாத மாணிக்கமே! பிறப்பு, இறப்பு, வாழ்வின் துன்பங்கள், அறியாமை என்னும் இவற்றின் சார்புகள் எல்லாவற்றையும் ஒழித்த நல்ல ஒளி வடிவனே! போன்பமானவனே! உன்னை உறுதியாகப் பற்றினேன்; இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது? (10)

திருச்சிற்றம்பலம்.

38. திருவேசறவு

(திருப்பெருந்துறையில் அருளியது—சுட்டறிவு ஒழித்தல்)

(கோச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

இரும்புதரு மனத்தேனை ஈர்த்(து)ஈர்த்துஎன் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழல்இணைகள்,
ஒருங்குதிரை உலவுசடை உடையானே! நரிகள்எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியஆ(று) அன்றே,உன் பேர் அருளே. 1

பண்ஆர்ந்த மொழிமங்கை பங்கா! நின் ஆளாஎனக்(கு)
உண்ஆர்ந்த ஆர்அமுதே! உடையானே! அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்(டு) ஆள்வாய்! நீ வாஎன்னைக்
கண்ணார உய்ந்தஆ(று) அன்றேஉன் கழல்கண்டே! 2

ஆதமிலி யான்பிறப்பு இறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்(கு) ஆஆஎன்று
ஓதம்மலி நஞ்சுண்ட உடையானே! அடியேற்(கு)உன்
பாதமலர் காட்டியஆ(று) அன்றே,எம் பரம்பரனே! 3

பச்சைத்தாள் அரவாட்டீ! படர்சடையாய்! பாதமலர்
உச்சத்தார் பெருமானே! அடியேனை உய்யக்கொண்(டு)
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே, அச்சோ,என்
சித்தத்தாறு உய்ந்தஆறு அன்றே,உன் திறம்நினைந்தே. 4

38. திருவேசறவு

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாய் கங்காதேவியின் அலைகள் எங்கும் உலாவுகின்ற சடைமுடியை உடையானே! இரும்புபோன்ற கொடிய மனத்தை யுடையவனாகிய அடியேனை அலக்கழித்து அலக்கழித்திழுத்து என்னுடைய என்புகள் உருகும்படி செய்து கரும்பின் சுவை போன்ற இனிமையாகிய உருசியையுடைய உன்னுடைய திருப் பாதங்களிரண்டையும் அடியேனுக்கு அருள்செய்து காட்டியரு ளினை; நரிகள் யாவற்றையும் பரிய குதிரைகளாக உண்டாக்கிய விதம் (என்ன ஆச்சரியம்) இஃது உன்னுடைய மகத்தாகிய அருட் செய்கையின் காரியமே ஆம். (1)

பாட்டினிசை நிறைந்த வார்த்தையையுடைய உமையம்மை பாகனே! உன் அடிமையாளாக ஆனவர்க்கு உட்கொள்வதற்குக் கிடைத்தற்கரிய அரிதாகிய அமிர்தமே! சகல பாக்கியத்தையு முடையவனே! உன் தொண்டனேனை, இப்பூவுலகத்தில் பிறந்த என் பிறவியைத் தொலத்து ஆண்டுகொள்வோனே! என்னை வருகவென உன்னுடைய பொற்பாதத்தைக் கண்ணாரப் பார்த்து அடியேன் உயிர் வாழ்ந்த விதம் என்ன ஆச்சரியம்! (2)

எமது மிக்க பெரியோனே! பிறர் உதவி இல்லாதவனாகிய அடியேன் பிறத்தலும் இறத்தலும் என்று சொல்லப்படுகின்ற மாநரகத்தில் உறவினர் யாதும் உதவுதற்கில்லாமலே அழுந்தும் இயல்புடையேனாகிய அடியேனுக்கு, 'ஐயோ!' என்று கடலிலுண் டாகிய விஷத்தை அமிர்தமாக உட்கொண்ட பெருங்கீர்த்தியை யுடையவனே! தொண்டனாகிய அடிமைக்கு உன்னுடைய திரு வடிக்கமலங்களைக் காண்பித்தவிதம் என்ன? (3)

பசுமைத்தாகிய புற்றின்கண்ணுள்ள பாம்பினை ஆட்டுபவனே! விரிந்த திருச்சடையையுடையவனே! திருவடிமலரால் உயர் வடைந்த அடியார்களுக்கெல்லாம் பெருமானே! உன் தொண்ட னேனை நற்கதியடைந்து பிழைக்கும் வண்ணம் தடுத்தாட்கொண்டு குறைபாடுள்ளவர் வணங்கும் சிறு தெய்வங்களைத் துதிசெய்யாமல் உன்னுடைய தன்மையையே நினைந்து, அந்தோ! என் நினைவின் முறைப்படியே அடியேனை நீ உய்யக்கொள்ள நான் உய்ந்தவாறு நீ அடியேனை உய்யக்கொண்டதன்றே! அஃது எத்துணை வியப் புடையது! (4)

கற்றறியேன் கலைஞானம் கசிந்(து)உருகேன், ஆபிடனும்
மற்(று)அறியேன் பிறதெய்வம் வாக்கியல்னல்
[வார்கழல்வந்(து)
உற்(று)இறுமாந்(து) இருந்தேன்னம் பெருமானே!
[அடியேற்குப்
பொன்தவிசு நாய்க்(கு)இடும் ஆ(று) அன்றேநின்
[பொன் அருளே. 5
பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணல் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின் அருளால்
உய்ந்தேன், எம் பெருமானே! உடையானே! அடியேனை
அஞ்சேல்என்(று) ஆண்டவா றன்றே, அம் பலத்தமுதே! 6

என்பாலைப் பிறப்பறுத்திங்(கு) இமையவர்க்கும்
[அறியாவண்ணத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையும் சிவபெருமான்!
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியஆறு அன்றேனம் பெருமானே! 7
மூத்தானே! மூவாத முதலானே! முடிவில்லா
ஓத்தானே! பொருளானே! உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே! புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
போர்த்தேநீ ஆண்டஆறு அன்றேனம் பெருமானே! 8

அறிவு நூல்களை வாசித்தறியேன்; மனம் நைந்து உருகினேன்; அவ்வாறுஞலும் உன்னையன்றி வேறு தெய்வம் எதனையும் அறியமாட்டேன்; ஆனல் உன் அருள் வாக்கின் தன்மையினல் நின் நெடுங்கழல் சேர்ந்து இறுமாந்திருந்தேன். எம்பிரானகிய தந்தையே! இங்ஙனம் என்னை ஆண்ட உன் பொன் போன்று அருமை வாய்ந்த திருவருட்செயல் அடியேனுக்கு நல்கியது நாய்க்குப் பொற்பீடத்தைக் கொடுத்தவிதம் போல்வதல்லவா?

எமது பிரானே! யாவையுமுடைய தலைவனே! திருச்சிற்றம்பலத்திலுள்ள அரிய அமிர்தமே! பஞ்சின் தன்மையையொத்த பாதத்தையுடைய பெண்களது கடைக்கண் பார்வையால் துன்பப்பட்டு, விடத்தைப்போன்ற துன்பப்பெருக்கால் நடுங்குவேனகிய அடியேன் உன் அருள் நோக்கத்தால் (அம்மாய்கையினின்று தப்பிப்) பிழைத்து உயிர் வாழ்ந்தேன்; தொண்டனகிய என்னை 'யாதொன்றுக்கும் பயப்படாதே!' என்று ஆட்கொண்டருளின வகைதான் என்னே? (6)

எமது தலைவனே! என்பொருட்டு எற்பட்ட பிறவியைக் களைந்து இவ்விடத்தில் விண்ணுலகத்தாராகிய தேவர்களும் தெரிந்துகொள்ளக்கூடாத தெற்குத்திசையிலுள்ள திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தின்கண்ணே எழுந்தருளி வாழாநின்ற சிவபெருமானகிய நீ, (என்பொருட்டு உனக்குள்ள) ஆசையினல் நீ, என்னுடைய மனமானது நெகிழும்படி உட்புகுந்து அருளோடு அடிமையாளாக ஆட்கொண்டருளியது என்னிடத்தே நீ அருள்நோக்கம் வைத்தபடியல்லவா? (7

எல்லாவற்றிற்கும் மூத்தவனே! மூப்பு எய்தாத முதல்வனே! முடிவு இல்லாத அருள் நூல் வடிவானவனே! வேதப்பொருளாயுள்ளவனே! உண்மையுள்ளார்க்கு உண்மையாயும் பொய்யர்க்குப் பொய்யனையும் தோன்றினவனே! இவ்வுலகின்கண் புரண்டு உழல்பவனகிய அடியேனை அருள்நோக்கத்தால் எழுந்தருளி என் நிலையை நீக்கி என்னை நீ ஆட்கொண்டருளின முறைதான் என்னே! (8)

மருவின்ய மலாப்பாதம் மனத்தில்வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியபின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாம்ஆ(று)
அருள்எனக்(கு) இங்(கு)இடைமருதே இடங்கொண்ட
[அம்மானே! 9

நானேயோ தவஞ்செய்தேன், சிவாயநம எனப்பெற்றேன்!
தேனைப்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்(து) எனதுள்ளம் புகுந்(து)அடியேற்கு
[அருள்செய்தான்,
ஊனைருகும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூரென்னும் திவ்விய க்ஷேத்திரத்தையே இருந்து வாசம் பண்ண இடமாக ஏற்றுக்கொண்ட எனது தந்தையே! பொருந்துதற்கினிய உனது தாமரைத் திருவடி மலர்கள் என் உள்ளத்தில் பரவி உள்ளே உருகச்செய்து வீதி வீதியாக 'சிவபெருமானே!' என்று வாய்விட்டலறித் துதித்துச் சொல்லிய உனது பெருங்கருணையாகிய விசாலம் பொருந்திய திருப்பாற்கடலின்கண் சேரும்வண்ணம் இவ்விடத்தே அடியேனுக்கு அருள் செய்வாயாக. (9)

நானே தவஞ்செய்தேன்; 'சிவாயநம!' என்று சொல்லப் பெற்றேன்; தேன் போலவும் அமுதம் போலவும் இனிக்கின்ற சிவபெருமான், தானே எளிதில் எழுந்தருளி வந்து என்னுடைய மனதில் புகுந்தருளிப் புலால் நிறைந்த உடம்பில் உயிர் வாழ்தலைக் கண்டித்து அதனை வெறுக்குமாறு அடியேனுக்கு அருள் செய்தான். (10)

திருச்சிற்றம்பலம்.

39. திருப்புலம்பல்

(திருவாரூரில் அருளியது—சிவானந்த முதிர்வு)

(கோச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத்(து) அயனெடுமால் அறியாத நெறியானே!
கோங்(கு)அலர்சேர் குவிமுலையாள் கூறா! வெண் ணீறாடீ!
ஓங்(கு)எயில்சூழ் திருவாரூர் உடையானே! அடியேன்நின்
பூங்கழல்கள் அனைவஅல்லா(து) எனையாதும் புகழேனே! 1

சடையானே! தழலாடீ! தயங்கும்மூ இலைச்சூலப்
படையானே! பரஞ்சோதீ! பசுபதீ! மழவெள்ளை
விடையானே! விரிபொழில்சூழ் பெருந்துறையாய்!
[அடியேன்நான்
உடையானே! உனைஅல்லா(து) உறுதுணைமற்(று)
[அறியேனே. 2

உற்றுரை யான்வேண்டேன்; ஊர்வேண்டேன்;

கற்றுரை யான்மவண்டேன; கற்பனவும்
குற்றுலத்(து) அமர்ந்துறையும் கூத்தா!உன் குரைகழற்கே
கற்றுவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

திருச்சிற்றம்பலம்.

39. திருப்புலம்பல்

திருச்சிற்றம்பலம்.

அழகிய தாமரை மலரில் எழுந்தருளிய நான்முகனும் திரு மாலும் (அடி முடியும் தேடியும்) அறியவொண்ணாத நன்மார்க்க வழியையுடையவனே! கோங்கு மரத்தின் மலரினரும்பை ஒத்த குவிந்த இருதனங்களையுடையவளாகிய உமையவளின் பங்குடைய வனே! திருவெண்ணீற்றைத் தேகமுழுதும் அணிபவனே! வானமளாவிய நான்கு பக்கங்களும் மதில்கள் சூழ்ந்திருக்கப்பட்ட அழகோங்கூடிய (திரு) ஆரூரையுடையவனே! தொண்டனேனாகிய நான், உன்னுடைய கழலணிந்த திருவடிகள் அல்லாமல் வேறு எவற்றையும் சிறிதேனும் புகழ்ந்து போற்றேன். (1)

சடைமுடியை உடையவனே! தழல்விண்கண் கூத்து ஆடு வோனே! விளங்குகின்ற மூன்று இலைகளைப்போன்ற சூலப் படையைக் கரத்தில் தாங்கானின்ற சிவபெருமானே! ஒரே பொருளாயிருக்கும் பரஞ்சுடரே! சகல ஆன்மாக்களுக்குந் தலைவ னாகிய சிவபெருமானே! இளமையான வெண்ணிறம்பொருந்திய காளையை வாகனமாகக்கொண்ட இறைவனே! விசாலம்பொருந் திய சோலைசூழ்ந்த திருப்பெருந்துறை என்னும் பதியை உடைய வனே! முதல்வனே! தொண்டனேனாகிய யான் உன்னைத் தவிர வேறு உற்ற ஆதரவு தெரிந்தேனில்லை. (2)

திருக்குற்றாலத்தில் விரும்பி வீற்றிருக்கும் கூத்தப்பெரு மானே! உறவினரை யான் வேண்டேன்; ஊரும் வேண்டாம், பேரும் வேண்டாம்; கலையறிவுமட்டும் உடையவர்களை யான் விரும்பேன்; கற்கவேண்டியனவும் இனிப் போதும்; கழல்கள் ஒலிக்கின்ற உனது திருவடிக்கே கன்றையுடைய பசுவின் மனம் போலக் கனிந்து உருகுவதையே யான் உன்பால் வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்.

40. குலாப்பத்து

(தில்லையில் அருளியது—அனுபவம் இடையீடு படாமை)

(கோச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்.

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட்(டு) உள்கசிந்து,
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து,
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்து அடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 1

துடிஎர் இடுகிடைத் தூமொழியார் தோள்நசையால்
செடிஎறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்,
மூடியேன், பிறவேன்! எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 2

என்புஉள் உருக்கி, இருவினையை ஈடழித்துத்,
துன்பங் களைந்து, துவந்துவங்கள் தூய்மைசெய்து,
முன்புஉள் ளவற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 3

குறியும் நெறியும் குணமும்இலார் குழாங்கள்தமைப்
பிறியு மனத்தார் பிறவரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்தமுதாம் சிவபதத்தை
அறியும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 4

40. குலாப்பத்து

திருச்சிற்றமபலம.

ஓடும் கோவணமுமே பற்றுவன என்று நினைத்து உள்ளங் கசிந்து, தேடுகின்ற பொருள் பாமசிவனது திருவடியே என்று சந்தேகமறத் தேர்ச்சியடைந்து (யாவராலும் துதிக்கப்பட்டு) விளங்குகின்ற சிதம்பரத்தை ஆள்பவனுகிய நடராசனைப் பற்றிக் கொண்டு உடலும் உயிரும் ஆனந்தத்தால் தள்ளாடத் தொண்ட னுகிய யான் வளைந்து கூத்தாடுவேன். (1)

அடியேனைத் தனது ஒப்பற்ற திருவடியைச் சேர்ப்பித்த யாவ ராலும் துதிக்கப்பெற்று விளங்குகின்ற சிதம்பரத்தை யாவருங் காண எழுந்தருளி ஆள்பவனே உண்மையோடு கிட்டிப்பிடித்தேன்; ஆதலால், உடுக்கையைப்போன்ற அழகுடைய நுணுகிய இடை யினையும், தூய சொற்களையும் உடைய பெண்களது தோளை (சேரவேண்டிய) ஆசையால் பாவம் மிகுதற்கேதுவாகிய தீய செயல்கள் கணக்கற்றுச் செய்தாலும், ஊழியனுகிய யான் இறக்க மாட்டேன்; பிறக்கவுமாட்டேன். (2)

அடியேனது எலும்புக்குள்ளும் உருக்கப்பண்ணி மலசம்பந்த மான இருவினைகளின் மேம்பாட்டை ஒழித்து, (அவ்விரு வினையி னல் வரும்) பிறவித் துயர்தனை ஒழித்து, உடன்பாடும் எதிர் மறையுமாகப் போந்த இருவகைப் பற்றுக்களையும் களைந்து, பரி சுத்தமாகச் சீர்படுத்தி, அதற்கு முன்னம் இருப்பனவற்றை முழு தும் பாழாக்க அடியேன் மனத்தினுள் பிரவேசித்த விருப்பத்தை யுடைய யாவராலும் துதிக்கப்பெற்றுப் புகழ்கின்ற சிதம்பரத்தை ஆள்பவனுகிய நடராசமூர்த்தியை உண்மையோடு கிட்டிப் பிடித்தேன். (3)

அடையாளமும் நன்மார்க்கமும் நற்குணமும் (யாவும்) இல்லா தவரும், குழாங்கள் தம்மை (மனைவி மக்கள் முதலிய) கூட்டங் களை விட்டு நீங்கும் மனத்தையுடையவருமாகிய அடியார்கள் தன்னை விட்டு நீங்குதல் அருமையாகிய அவ்விதத்தன்மையை யுடையவனை, கிட்டினஎண்ணத்தில் உருக்கொண்டு தேவாமிர்தம் போல்பனவாகிய சிவாநுபோகத்தைப் பேரறிவாளரால் தெரிந்து கொள்ளப்படுகின்ற (அறிஞர்களால் புகழப்பட்டுத்) துதிக்கின்ற தில்லையம்பலப்பதியை (அரசுசெய்து ஆள்பவனுகிய நடராச மூர்த்தியை உறுதியாகக் கிட்டிப் பற்றினேன். (4)

பேரும் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டர்எல்லாம்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆரும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 5

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி,
வம்பு பழுத்(து)உடலம் மாண்டு,இங்ஙன் போகாமே
நம்புன்னன் சிந்தை நணுகும்வண்ணம் நான்அணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 6

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தாள்நெரிய
மிதிக்குந் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றும்இலோம் எனக்களித்துஇங்கு
அதிர்க்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 7

இடக்கும் கருமுருட்டு எனப்பின் கானகத்தே
நடக்கும் திருவடி என்தலைமேல் நட்டமையால்,
கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 8

நற்பெயரும் குணமும் நம்மைக் கட்டுப்படுத்தற்கேதுவாகிய இச்சப் பிறவியைப் பற்றறக் கழியும்வண்ணம் அப்பற்றை அறுத்து அடியார்கள் யாவரும் கூடுகின்ற விதத்தால் சிவபிரானது காருண்யமாகிய அருளென்னும் தேனை உட்கொண்டு எல்லாரும் உவந்து வந்து சேருகின்ற யாவராலும் துதிக்கப்படுகின்ற தில்லைப் பதியை அரசு செய்து ஆள்பவனுகிய நடராசமூர்த்தியை உறுதி யாகக் கிட்டிப் பற்றினேன். (5)

மரத்தின் கொம்பில் புட்பத்தின் அரும்பாகி மூடிய மலராகிக் காயாகிப் பாழுக்குப் பழமாகி உடல் செத்து, இவ்வாறுக விருதா வாகப் போய்விடாமல் உண்மையோடு நம்புகின்ற என்னுடைய மனமானது என்றும் பிரியாமல் அணுகும் விதம் யான் அடையப் பெற்ற அழகிய சொர்ணநிறத்தைப்போன்ற யாவராலுங் கொண் டாடப்படுகின்ற தில்லைப்பதியை யாவருங் கண்டு மகிழ ஆள்பவ னுகிய நடராசமூர்த்தியை உறுதியாகக் கிட்டிப் பற்றினேன். (6)

எல்லோரும் புகழ்தற்குரிய கீர்த்தியையுடைய பலம் பொருந் திய (இலங்கைக்கரசனுகிய) இராவணனது இருபது தோள்களும் தொறுங்கும்படியாக எழுந்தருளியிருக்கும் திருக்கயிலாய பரு வதத்தை ஊன்றின (இருவராலுங் காணப்படாத) உன் அழகிய திருவடிகளை அடியேனது தலையின்மேல் வைத்திருக்க மேன் மேலும் உண்டாகின்ற பசுபாசங்களாகிய யாவற்றையும் பெற் றுடையோமல்லோமென்று மிகு ஆனந்தமடைந்து இவ்விடத்தில் ஆரவாரித்தற்குக் காரணமான யாவராலும் மதித்துத் துதிக்கப் படாகின்ற தில்லைப்பதியை ஆள்பவனுகிய நடராசப்பெருமானை யான் கிட்டிப் பற்றினேன். (7)

நிலத்தைத் தோண்டுகின்ற இயல்புடைய கரிய விறகுக் கட்டையை ஒத்த பன்றியின் புறத்தே காட்டகத்துத் திரிந்த திருவடியை என் தலைமேல் வேரூன்றிக் கிளைக்க ஊட்டி வைத் தமையால் நன்னெறியைக் கடக்கும் திறமையுடைய ஐம்புலன்க ளாகிய கொடியவர்களது வலிமையுடைய ஆடலை அடக்கியாளும் விளக்க மிக்க தில்லையாண்டவனைப் பற்றிக்கொண்டேன் அன்றே.

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தால் கிழியீடு கோர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்குளன் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 9

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்(கு)
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே! 10

திருச்சிற்றம்பலம்.

வினவு செய்ய முடியாத பாழான வயலினை உழுது பயன் பெறுதேனைக் கிடக்கும் எனக்கு முன்னர்ச்செய்த தவச்செயலி னலே முடிந்து வைத்த நிதி கிடைக்கப்பெற்றுச் சிவந்த தாமரை மலர்போன்ற திருவடிகளையுடைய சைவனுகிய கடவுளுக்கு இழி வான என் தலையினல் அடிமைத்தொண்டு செய்யச் செய்விக்கும் விளக்கமிக்க தில்லையாண்டவனுகிய கூத்தப்பெருமானைப் பற்றி னேன். (9)

திரண்டனவாகிய தேமல் படர்ந்த கொள்கைகளையுடையவ ளும், மலரும் கொம்பினைப்போன்றவளுமாகிய உமாதேவியின் பாதியாயமைந்த சிவபெருமானுக்கு நேர்மையான மனத்தினல் திருத்தொண்டுகள் செய்கின்ற எனக்கு இப்பிறப்பில் உண்டா கின்ற கொடுவினைப் பயன்கள் அனைத்தையும் இவ்வுலகிலேயே ஒழிக்கவல்ல தாய்போன்ற விளக்கமிக்க சிதம்பரத்தை எகபோக மாய்! ஆள்பவனுகிய நடராஜமூர்த்தியை அன்புடன் கிட்டிப் பற்றினேன். (10)

திருச்சிற்றம்பலம்.

41. அற்புதப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—அனுபவம் ஆற்றமை)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

மெய்யன்

மையலாய்ப் இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தையலார் எனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறுமே,
பொய்ய லாம்விடத் திருஅருள் தந்துதன்
பொன்னடி இணைகாட்டி
மெய்ய னெய்வெளி காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே ! 1

வேந்தன்

எய்த்த மாமலர் இட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே.
சாந்தம் ஆர்முலைத் தையல்நல் லாரொடும்
தலைதடு மாறுகிப்,
போந்து யான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழல் இணைகாட்டி
வேந்த னெய்வெளியே என்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே ! 2

அரும்பொருள்

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான்என(து) எனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் விஞைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்நிநின் றுஅப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்(து) அடித்துஅக் காரம்முன் தீற்றிய
அற்புதம் அறியேனே ! 3

41. அற்புதப்பத்து

திருச்சிற்றம்பலம்.

மயக்க உணர்ச்சியை உடையவனாய் இப்பூமி மேலே வாழ்க்கை என்று சொல்லப்படுகின்ற கடலினுள் அகப்பட்டுக் கொண்டு பெண்களென்கின்ற சுழியிற் சிக்கி, அடியேனுகிய யான், (அம்மாய வலையிற் சிக்குண்டு தடுமாறுமல் பொய்மைகள் பாவையும் விட்டுப் பொன்போன்ற தன் திருவடிகளிரண்டையும் காட்டி அருளி நிலைபேறுடையனுகும்பொருட்டு அருள் வழி காட்டி என் முன்பாக வெளிப்பட்டுக் காண்பித்து உண்மை புடையவனாய் நின்றதோர் அற்புதத்தை இன்னதென்று சொல்ல (1) அறியேன்.

பூசைக்குரிய சிறந்த மலர்களை நன்மை வாய்ந்தும் தீமை வாய்ந்தும் அவற்றைப் பொருட்படுத்தாமல் பயன் கருதாது நல்லியல் போடு இறைவனை வழிபடாது சந்தனக்குழம்பால் பூசப்பெற்ற கொங்கைகளையுடைய அழகுவாய்ந்த பெண்களோடு சேர்ந்து தலைதடுமாற்றங்கொண்டு அடியேன் அப்பெண்களிடம் சென்று (அம்மோகத்திலுல் வாய்ந்த) துன்பத்தில் புகுந்து ழலாதபடி இறைவனுகிய சிவபெருமான் அருள் செய்து பொன் நிறத்தை யொத்த உன் இரண்டு திருவடிகளைக் காண்பித்து இராசனுகி வெளிப்படையாகவே எனது கண்களின் முன்னே இடபவாகனத் தின்மேல் ஆரோகணித்து நின்றதாகிய நிகரற்ற ஆச்சரியத்தை (2) இன்னதென்று சொல்ல அறியேன்.

மண்ணுலகத்திலே சிறந்தவன்போல நடித்துப் பொய்யான காரியங்கள் பலவற்றைச் செய்து, நான் எனது என்று சொல்லப் படுகின்ற அகங்காரத்தில் விளைந்த மயக்கமாகிய பாம்பு கடித்த இடத்திலே இருந்து முற்பிறப்பில் செய்த வினைகளாகிய விடம் பெருகுதலால் பலவிடத்திலும் எங்கிப் புலம்பி உழல்கின்றவனுகிய அடியேனைக் கைப்பற்றி அடியேன் எதிராக நின்று அந்தப் பெரிய வேதங்களும் அறிதற்கரிய அருமையாகிய பொருள் அடியேனை அடித்தடித்துப் பேரின்பமாய சர்க்கரைக் கட்டியை (அடியேனை ஆட்கொண்ட) அந்நாளில் (உண்ண) ஊட்டின அதிசயத்தை (3) இன்னதென்று சொல்ல அறியேன்.

துணைவன்

பொருந்தும் இப்பிறப்(பு) இறப்(பு)இவை நினையாது
பொய்கலை புகன்றுபோய்க்
கருங்குழலினர் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அருந்துணைவன் ஆய் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே ! 4

வீடு

மாடும் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந்(து) என்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடுவித்(து) என(து), அகம்புகுந்(து), ஆண்டதோர்
அற்புதம் அறியேனே. 5

குணக்கடல்

வணங்கும் இப்பிறப்பு இறப்புஇவை நினையாது,
மங்கையர் தம்மோடும்
பிணைந்து, வாய்இதழ்ப் பெருவெள்ளத்(து) அழுந்தி
பித்தனைப் திரிவேனைக் [நான்
குணங்க ளுங்குறி களும்இணைக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி,
அணைந்து வந்(து)என ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே ! 6

அப்பன்

இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான்
இயல்பொ(டு)அந்(சு) எழுத்(து)ஓதித்
தப்பி லாதுபொற் கழல்களுக்(கு) இடாதுநான்
தடமுலை யார்தங்கள்

(மாறி மாறி வந்து) பொருந்துகின்ற இந்தப் பிறப்பு இறப்
புக்களைக் களையும் வழிகளை எண்ணுமல் பொய்களையே எந்நாளுஞ்
சொல்லிச் சென்று காய கூந்தலையுடையவர்களாகிய பெண்க
ளது கண்களாகிய வாட்களால் தாக்குண்டு பயந்து கிடக்கின்ற
அடியேனை ஒழுங்காக்கிய திருவடிகளில் தரிக்கப்பட்ட சிலம்புக
ளாகிய அவைகள் சப்திக்க உமையவளோடும் என்றும் நீங்காமல்
பெறுதற்கரிய உதவியாளரால் அடியேனை அடிமையாக்கிக்கொண்
டாண்டருளின ஆச்சரியத்தை நான் இன்னதென்று சொல்ல
அறியேன். (4)

பொருளும் உறவும் இன்னுமிருக்கப்பட்ட ஏனைய போகங்
களும் பெண்களோடு சேர்ந்து அவ்விடத்தில் இருக்கப்பட்ட
குணங்களினால் தாக்குண்டு (ஆனந்த மிகுதியால்) கொண்டாடித்
திரிகின்ற அடியேனை எனது தீவினைகளை அழிக்கும் வண்ணம்
எனது மெல்லிய திருவடித்தாமரையைக் காட்டி வீடு தந்து
ஆட்டி வைத்து, என்னுடைய மனத்தின்கண் உட்புகுந்து அருள்
செய்து ஆண்டருளினதாகிய ஒப்பற்ற அற்புதத்தை இன்ன
தென்று அறியேன். (5)

சூழ்ந்து கொள்ளுகின்ற இந்தப் பிறப்பும் இறப்புமாகிய
இவைகளை எண்ணுமல் பெண்களோடும் கலந்து அவர்களது
வாயினது இதழினுண்டாகிய அமிர்தத்தை மிகு (இன்ப) வெள்
ளத்தில் யான் (அவ்விச்சையால்) ஆழ்ந்து, பித்துப்பிடித்தவன்
போல் (அங்குமிங்கும் அலுதியாய்த்) திரிகின்ற அடிமையைக்
குணங்களும் குறிப்புகளுமாகிய (இவைகள்) இல்லாத பெருங்
குணக் கடலாகிய சிவபெருமான் இளமைச் செல்வியாகிய உமா
தேவியாரோடும் ஒன்று சேர்ந்து தழுவாநின்று வந்து, அடிமை
யாளாக்கிக்கொண்டருளின அற்புதச்செயலை நான் இன்னதென்று
அறியேன். (6)

இந்தப் பிறவியில் மாலை கட்டுதற்குரிய நன்மலர்களைப்
பறித்து, அடியேன் முறையாகப் பஞ்சாட்சர எழுத்தாகிய "நமசி
வாய" என்று (அம்மந்திரத்தால்) துதிசெய்து, குற்றம் இல்லாமல்
அழகிய மேலான திருவடிகளுக்கு அணியாமல் தொண்டனே
னாகிய யான் பெரிய கொங்கைகளையுடையவராகிய பெண்களது
கறுப்பு மை தீட்டிய இரு கண்களால் தாக்குண்டு அம்மாய்கையிற்
பயனின்றிச் சிக்கி உழன்று கிடக்கின்ற அடியேனைத் தாமரை

மைப்(பு)உ லாம்கண்ணு(ல்) ஏறுண்டு கிடப்பேனை
மலர்அடி இணைகாட்டி
அப்பன் என்னைவந்(து) ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே !

ஓசையால் உணர்வார்க்கு உணர்வரியவன்

ஊசல் ஆட்டும்இவ் வுடல்உயிர் ஆயின
இருவினை அறுத்(து)என்னை
ஓசை யால்உணர் வார்க்(கு) உணர்(வு)அரியவன்
உணர்வுதந்(து) ஒளியாக்கிப்
பாசம் ஆனவை பற்றறுத்(து) உயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்(து)அடி யார்அடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே ! 8

அச்சன்

பொச்சை ஆனஇப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்(து)அலை நாய்போல
இச்சை ஆயின ஏழையர்க் கேசெய்(து)அங்கு
இணங்கியே திரிவேனை
இச்ச கத்(து)அரி அயனும்எட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே ! 9

இறைவன்

செறியும் இப்பிறப்(பு) இறப்(பு)இவை நினையாது
செறிகுழ லார்செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டைஅங் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லைஇல் லாததன்
இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்(து)என ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே ! 10

திருச்சிற்றம்பலம்.

மலர்போன்ற (இருவரால் தேடியுங் காணப்படாத) திருவடி இணையை அடிமையாகிய எனக்குக் காண்பித்து, அடியேனைப் பெற்றெடுத்தவனிலும் அதியன்புள்ளவனுகிய சிவபெருமான் திருப்பெருந்துறையின்கண் குருந்தமரத்தினடியில் குருமூர்த்தமா யெழுந்தருளி வந்து ஆட்கொண்டாதரித்த அதிசயத்தை நான் இன்னதென்று அறியமாட்டேன். (7)

இந்த உடம்பையும் உயிரையும் ஊஞ்சல்போல் ஆட்டுகின்ற நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும் களைந்து, நூல் உணர்வினுல் உணர்வார்க்கும் அறியமுடியாத பெருமான் எனக்கு உணர்வினைத் தந்து பிரகாச உருவாக்கி, பாசங்களாயுள்ளவற் றைத் தொலைத்துப் பெருமைதங்கிய தனது மேலதாகிய அருட் பார்வையினுல் ஆசையை விலக்கித் தன் அடியார்களுடைய திருவடிகளில் சேர்ப்பித்த அதிசயத்தை அடியேன் நாவில் சொல்ல இன்னதென்று அறியமாட்டேன். (8)

காட்டினைப்போன்ற இந்தப் பிறவிக்கடலில் உழன்று அடி யேன் பாழாகிப் புழுத்து அலைகின்ற நாயைப்போலப் பெண் களுக்கே விருப்பமானவற்றைச்செய்து அவ்விடத்தே அவர்க ளிச்சைப்படியே இசைந்து அலைகின்றவனுகிய அடியேனை இந்நில வுலகில் திருமாலும் நான்முகனும் காணவொண்ணுத தேவரீது நறுநாற்றமுள்ள தாமரை மலர்போன்ற அரிய திருவடியை அடி யேனுக்குக் காட்டி, அடியேனது தந்தையாகிய சிவபெருமான், அடியேனையும் ஒரு பொருட்படுத்தித் தொண்டுசெய்தற்கு அடிமை யாளாக்கிக்கொண்டருளின ஆச்சரியத்தை இன்னதென்று அறிய மாட்டேன். (9)

நெருங்கி மேன்மேலும் வரும் இந்தப் பிறப்பிறப்புக்களாகிய இவ்விரண்டையும் எண்ணிப் பாராமல் அடர்ந்த கூந்தலையுடையவ ராகிய பெண்கள் செய்கின்ற பொய்ச்செய்கைகளையும் கீழான தன்மைகளையும் கெண்டை மீன்போன்ற அவர்களது அழகிய கண்களையும் நினைந்து பாழாகிக்கிடக்கின்ற அடியேனைத் தலைவ னுகிய எம்பெருமான் நிகரற்ற தன்னுடைய தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளைக் காட்டி அருளி நற்புத்தியைக் கொடுத்து அடியேனை ஆட்கொண்டருளின ஆச்சரியத்தை இன்னதென்று அறியமாட்டேன். (10)

திருச்சிற்றம்பலம்.

42. சென்னிப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது—சிவ விளவு.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

தேவ தேவன், மெய்ச் சேவகன்,
தென்பெ ருந்துறை நாயகன்,
மூவ ராலும் அறிஒணு முதல்
ஆய ஆனந்த மூர்த்தியான்,
யாவர் ஆயினும் அன்ப ரன்றி
அறிஒ ணுமலர்ச் சோதியான்,
தூய மாமலர்ச் சேவடிக் கண்நம்
சென்னி மன்னிச் சுடருமே!

அட்ட மூர்த்தி, அழகன், இன்னமு(து)
ஆய ஆனந்த வெள்ளத்தான்,
சிட்டன், மெய்ச்சிவ லோக நாயகன்,
தென்பெ ருந்துறைச் சேவகன்,
மட்டு வார்குழல் மங்கை யாளோர்
பாகம் வைத்த அழகன், தன்
வட்ட மாமலர்ச் சேவடிக் கண்நம்
சென்னி மன்னி மலருமே!

நங்கை மீர்எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்,
தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவகன் நாயகன்,
மங்கை மார்கையில் வளையும் கொண்டிடம்
உயிரும் கொண்டிடம் பணிகொள்வான்,
பொங்கும் மாமலர்ச் சேவடிக் கண்நம்
சென்னி மன்னிப் பொலியுமே!

42. சென்னிப்பத்து

திருச்சிற்றம்பலம்.

தேவாதி தேவன்; மெய்யான வீரன்; அழகிய திருப்பெருந் துறை என்னும் சிவப்பதிக்குத் தலைவன்; மும்மூர்த்திகளாகிய நான்முகன், திருமால், உருத்திரன் இவர்களாலும் தெரிந்து கொள்ளப்படாத தலைவனுகிய பேராநந்தத்தை வகித்த அருள் வடிவினனுகிய பரமசிவன், எவர்களாயினும் அன்பரன்றிப் பிறர் அறியமுடியாத எங்கும் வியாபித்திருக்கும் ஒளியுருவானவனது பரிசுத்தமோடு பெருமைதங்கிய தாமரை மலரையொத்த திருவடி யின்கண்ணே எம்முடைய தலையானது பொருந்தியிருந்து பிர காசித்து விளங்கும். (1)

எட்டு வடிவங்களானவன்; அழகை உடையவன்; இனிய தேவாமிர்தமாகிய பேரின்பப்பெருக்கை உடையவன்; யாவருக்கும் பெரியோன்; உண்மையாகச் சிவபுரத்துக்கு இறைவன்; அழ கோடுங்கூடிய திருப்பெருந்துறை என்னும் சிறந்த பதியில் எழுந் தருளியிருக்கும் வீரத்தன்மையையுடைய சேவகன்; தென் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய உமாதேவியை ஒரு பக்கம் அமைத்துக்கொண்ட அழகைப் பொருந்தியவன்; வட்டவடிவாகிய தாமரை மலர்போல்பவனுகிய திருவடியின்கண்ணே அடியேனது தலையானது அழுந்தி விளங்காநிற்கும். (2)

பெண்களே! என்னைப் பாருங்கள்! நம் தலைவன் கங்கையை அணியாகக் கொண்டவன்; தென்னைமரச் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளி வீற்றிருக்கும் வீரன், தலைவன்; பெண்களது கையிலுள்ள வளையலையுங்கொண்டு அடியேனது உயிரையும் பெற்று அடியேனைத் தொண்டுகொள்பவன்; (அவனது) விளங்குகின்ற அழகிய தாமரை மலர்போன்ற திரு வடியின்கண் அடியேனது தலையானது அழுந்தி விளங்கும். (3)

பத்தர் சூழப் பராபரன் பாரில்
வந்து பார்ப் பான்னனைச்
சித்தர் சூழச் சிவபி ரான்திரு
மூதூர் நடஞ் செய்வான்;
எத்தன் ஆகிவந்(து) இல்புகுந்(து) எமை
ஆளுங் கொண்டுஎம்பணி கொள்வான்;
வைத்த மாமலர்ச் சேவடிக் கண்ணம்
சென்னி மன்னி மலருமே!

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினன்
வேய தோள்உமை பங்கன் எங்கள்
திருப்பெ ருந்துறை மேவினன்
காயத் துள்அமு(து) ஊற ஊறநீ
கண்டுகொள் என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக் கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே!

சித்த மேபுகுந்(து) எம்மை ஆட்கொண்டு
தீவி னைகெடுத்(து) உய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்க
ணைபன் மலர்கொய்து சேர்த்தலும்
முத்தி தந்(து)இந்த மூவுல குச்சும்
அப்பு றத்(து) எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக் கண்ணம்
சென்னி மன்னி மலருமே!

பிறவி என்னும்இக் கடலை நீந்தத்தன்
பேர ருள்தந்(து) அருளினன்
அறவை என்(று)அடி யார்கள் தங்கள்
அருட்கு ழாம்படு கவிட்டுநல்
உறவு செய்(து)எனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக் கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே!

தொண்டர்கள் சூழச் சிவபெருமான் பிராமணனென்னும்படி பூலோகத்தில் அத்திருக்கோலத்துடன் எழுந்தருளிச் சித்தர்கள் சூழ விளங்கும் சிவபெருமான் திருத்தில்லையாகிய புராதனப் பதியின்கண் திருநடனம் நடிப்பவன்; வஞ்சகனேன் (யாதொன்றும் தெரியாதவன்போல) வந்து, அடியேன் குடியேறியிருந்த வீட்டின் கண் உட்புராவேசித்து அருமையாகிய என்னையும் எங்கள் குடும்ப முழுமையும் அடிமையாட்களாகவும் கொண்டு (பிறகு) எனது வேலையையும் ஏற்றுக்கொள்ளுவான், (அவ்வாறு பெருமையை உடையவனது) பெருமைதங்கிய புட்பத்தைப்போல வைக்கப் பெருவடியின்கண்ணே எனது தலையானது பொருந்தி (4)
மலராகிற்கும்.

மூங்கில் போன்ற தோள்களையுடைய உமையாளின் ஒரு பாகத்தை உடையவன், திருப்பெருந்துறையில் எழுந்தருளினவன்; பொய்யாகிய உலக வாழ்க்கையை என்றும் அழியா வாழ்க்கை யென்று மனத்தின்கண் நினைத்து எப்போதும் நினைக்காவண்ணம் அருள்செய்தாண்டவன்; மேலும் மேலும், தேகத்தினுள் தேவா மிர்தமாக இதனைத் தெரிந்துகொள்ளென்று அருளிய செழுமை யாகிய அழகோடுங்கூடிய தாமரைமலர் போல்வனவாகிய திரு வடியின்கண்ணே எனது தலையானது பொருந்தி விளங்கும். (5)

என் மனத்தினிடத்தே உட்புகுந்து அடியேனை அடிமை யாளாக்கிக்கொண்டு கொடிய இருவினைகளையும் பற்றறக் களைந்து (என்றும் அழியாது) வாழ்ந்திருக்கப் பக்தியைக் கொடுத்துத் தன் னுடைய பொன்போல் விளங்கும் திருவடியினிடத்தே பலவித மலர்களைக் கொய்தெடுத்து அர்ச்சித்தலும் மோட்சவீட்டைக் கொடுத்து இந்த மூன்றுலகத்துக்கும் அப்பாலுமாகிய சிவலோகத் தில் அடியேனை வைத்துக் காக்கின்ற அடிமையினது தந்தை யாகிய சிவபெருமானது பெருமைதங்கிய தாமரை மலர்போன்ற திருவடியினிடத்தில் அடியேனது தலையானது பொருந்தி (6)
மகிழ்ச்சியுடன் விளங்கும்.

'பிறப்பு' என்று சொல்லப்படுகின்ற இக்கொடிய துன்பக் கடலைத் தாண்டுதற்குத் தன்னுடைய பெரிய போருளைக் கொடுத்து அருள் செய்தான்; என்னை ஆதாவில்லாதவனென்று அடியவருடைய அருட்கூட்டத்தில் சேர்ந்திருக்கும்படி அவர்களை எனக்குச் சுற்றத்தாராக்கி, அடியேனைப் பிழைக்கும்படி செய்த உபகாரகுணமுடையவனாகிய சிவபெருமான் (அவனது) மெய் யின் மிகுதியாகிய முழுவல்லமையைக் காண்பித்தருளின சிவந்த திருவடியில் அடியேனது தலையானது பொருந்தி விளங்கும். (7)

புழுவி னுற்பொதிக் திடுகுரம் பையில்
பொய்த வினையொழி வித்திடும்
எழில்கொள் சோதினம் ஈசன் எம்பிரான்
என்னுடை அப்பன் என்றென்று
தொழுத கையினர் ஆகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்கும் தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவ டிக்கண்ணம்
சென்னி மன்னி மலருமே ! 8

வம்ப வுய்த்திரி வேனை வாவென்று
வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உல(கு) ஊடறுத்(து)அப்
புறத்த வுய்நின்ற எம்பிரான்
அன்பர் ஆனவர்க்(கு) அருளி மெய்ப்படி
யார்கட்(கு) இன்பம் தழைத்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவடிக் கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே ! 9

முத்த வினமுதற் சோதியை முக்கண்
அப்ப வினமுதல் வித்தினைச்
சித்த வினச்சிவ லோக வினத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் கால் ! இங்கே வம்மின் நீர்உங்கள்
பாசம் தீரப் பணிமினே !
சித்த மார்தரும் சேவடிக் கண்ணம்
சென்னி மன்னித் திகழுமே ! 10

திருச்சிற்றம்பலம்.

புழுக்களினால் பொதியப்பட்டுள்ள உடம்பிலே நிலையில்லாத வாழ்க்கையை ஒழிக்கிற மிகு அழகோடுங்கூடிய ஒளியையுடைய 'என்னுடைய இறைவன், எமது பெருமான், அடியேனைப் பெற்றவனாகிய தந்தை' என்று சொல்லிச்சொல்லிப் பலவாறு நாவினாற் புகழ்ந்து துதித்து வணங்குகின்ற கையையுடையவனாகிப் பரிசுத்தமாகிய தாமரை மலர்போன்ற கண்களினின்று நீர் பெருகப்பெற்ற அடியார்கட்குத் தவறாது நலம் பயக்கும் தாமரை மலர்போன்ற செய்ய திருவடியின்கண்ணே அடியேனது தலையானது பொருந்தி விளங்கும். (8)

வீண் மொழி பேசி எங்கும் அலைச்சல்பட்டுத் திரிகின்ற அடியேனைத் தன்னிடத்தில் இருக்க வருகவென்று கொடிய வினையென்று சொல்லப்படும் பகையை அழிக்கின்ற மேலுலகத்தான்; உலகங்களை ஊடறுத்துப்போய் அப்பாற்பட்டவனாகி நிற்கின்ற எமது சிவபெருமான்; உள்ளன்புள்ள அடியவர்க்கு என்றும் வாழ அருள் செய்து உண்மையான தொண்டர்கட்குப் போன்பம் செழிக்கப்பெற்ற சிவந்த பொன்போன்ற அழகாகிய தாமரை மலர்போன்ற திருவடியின்கண்ணே அடியேனது தலையானது பொருந்திப் பிரகாசிக்கும். (9)

பாசநீக்கம் உள்ளவனே, யாவர்க்கும் முதலோனாகிய ஒளியை, மூன்று கண்களையுடைய எனது தந்தையை, ஆதியாகிய வித்தை, மெய்யன்பர்களின் சித்தமாகிய மனத்திற் குடிகொண்டு வாசமாயிருப்பவனே, (சிவபுரமாகிய திருக்கைலாயத்தில் திருக்கோலத்துடன் யாவரும் தொழ எழுந்தருளியிருப்பவனாகிய) சிவபிரானைப் பலவித நாமங்களால் துதிசெய்து இன்பக்கடலில் மூழ்கித் திரிகின்ற தொண்டர்களே! இவ்விடத்தே சற்று வாருங்கள்; (அவ்வாறு வந்த) நீங்கள் உங்களுடைய பாசமானது ஒழியத் தலைவணங்கித் தொண்டுசெய்யுங்கள்; என் உள்ளத்தில் நிறைந்த செய்ய திருவடியின்கண்ணே அடியேனது தலையானது பொருந்தி என்றும் விளங்கும். (10)

திருச்சிற்றம்பலம்.

43. திருவார்த்தை

(திருப்பெருந்துறையில் அருளியது—அறிவித்து அன்புறுதல்)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

மா(து)இவர் பாகன் மறைபயின்ற
வாசகன் பாமலர் மேயசோதி
கோ(து)இல் பரங்கருணை அடியார்
குலாவு நீதிகுண மாகநல்கும்
போ(து)அலர் சோலைப் பெருந்துறைஎம்
புண்ணியன், மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள்அறி வார்னம் பிராணுவாரே! 1

மால்அயன் வானவர் கோனும்வந்து
வணங்க அவர்க்(கு)அருள் செய்தஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழும்
கோல மணிஅணி மாடம்நீடு
குலாவும் இடைவை மடநல்லாட்குச்
சீலம் மிகக்கருணை அளிக்கும்
திறம்அறி வார்னம் பிராணுவாரே! 2

அணிமுடி ஆதி அமரர்கோமான்,
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணிவகை செய்து படவ(து)ஏறிப்
பாரொடு விண்ணும் பரவிஏத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறைஎம்
பேரருளாளன் பெண்பால் உகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விகிறும்
வகைஅறி வார்னம் பிராணுவாரே! 3

43. திருவார்த்தை

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்ந்த பாகத்தன்; மந்திரங்கள் பொருந்திய மொழி புடையான்; பெருமைபொருந்திய அடியவரது உள்ளமாகிய தாமரை மலரில் (எந்நாளும்) வாசஞ்செய்பவன்; ஒளியுருவன்; யாதொரு குற்றமும் இல்லாத மேலதாகிய அருள் வடிவானவன்; அடியார்கள் கொண்டாடும் நீதியினையே குணமாகக்கொண்டு அருள்செய்கின்ற பேரரும்புகள் விரியாநின்ற மலர்ச்சோலைசூழ்ந்த திருப்பெருந்துறை என்னும் மேலான சிவப்பதியில் எழுந்தருளிய (அடியேனது மலசம்பந்தங்களை ஒழிக்கும்) புண்ணிய உருவினன்; (அப்பேர்க்கொத்தவன்) பூலோகத்தின்கண் கைலையைவிட்டிறங்கி (அப்பதியிலன்புடன்) இருந்து முதன்மையாகிய பெரும்பொருளை (யாவருமறிய) வெளிப்படுத்தி அருளின தன்மையைத் தெரியும் வல்லமையையுடையவர் எமது சிவபிரான் (அவரே) ஆவர். (1)

திருமாலும் நான்முகனும் தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் தலைவணங்கி வந்து தொழ, (அவ்வாறு தொழுத) அவர்களுக்கு அருளைத் (தக்கவாறு) ஈந்த இறைவன் இப்பூவுலகத்தில் (சிவகிரியினின்று) இறங்கி (உகந்து) வந்து நன்மார்க்கமடையும் வழியை அருளுடன் காண்பித்து நன்மையை விளக்குகின்ற அழகுவாய்ந்த நவரத்தின மணிகளால் அழகு செய்யப்பெற்ற திருமாளிகைகள் நீண்ட பிரகாசிக்கின்ற திருவிடைமருதூரென்னும் பதியில் ஒரு பெண்ணடியவர்க்கு நல்லொழுக்கம் மிகும்படி பெருங்கருணை செய்தருளிய வல்லமையைத் தெரிந்துகொள்பவர் எம்பிரான் ஆவர். (2)

பலவித திரு ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியையுடைய முதல்வன்; தேவாதிதேவன்; யாவருக்கும் பேரின்பத்தைத் தரும் திருநடனம் செய்கின்ற நடராசமூர்த்தி; அறுசமயங்களும் (இவ்வாறுக) துதிசெய்யும் விதம் கிருபைசெய்து தோணியின்மீதேறி மண்ணுலகத்தாரோடும் ஆகாயத்தினிடம் வசிக்காநின்ற தேவர் முதலியவர்களும் வழிபட்டுப் போற்றிசெய்ய நரை மூப்புச் சாக்காடு முதலியன அழியும்படி கிருபைசெய்த திருப்பெருந்துறை என்னும் புதியில் எழுந்தருளிய அடியேனது பேரருளாளனாகிய சிவபெருமான் உமாதேவியின் பக்கலிருக்க விரும்பி அழகாகிய வலையைக் கையில் பிடித்து மேலதாகிய மச்சங்களை (அவ்வலையை) வீசிப் பிடித்த அவ்வற்புதச்செயலைத் தெரிந்துகொள்பவர் எம்பிரான் ஆவர். (3)

வேடுரு ஆகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்(து)அடி யோங்கள்உய்ய
ஆடல் அமர்ந்த பரிமாஏறி
ஐயன் பெருந்துறை ஆதிஅந்நாள்
ஏடார் கழைஎங்கும் ஆண்டுகொண்ட
இயல்(பு)அறி வார்எம் பிராணுவாரே! 4

வந்(து)இமை யோர்கள் வணங்கிஏத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்(டு)அற நல்கும்எங்கள்
பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்(து)அன்று
ஓங்கு மதில்இலங் கைஅதனில்
பந்தணை மெல்விர லாட்(கு)அருளும்
பரி(சு)அறி வார்எம் பிராணுவாரே! 5

வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
வேடுவ ணுய்க்கடி நாய்கள்சூழ
ஏவற்செ யல்செய்யும் தேவர்முன்னே
எம்பெரு மான்தான் இலங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக்(கு) இரங்கிஈசன்
எந்தை பெருந்துறை ஆதிஅன்று
கேவலம் கேழலாய்ப் பால் கொடுத்த
கிடப்(பு)அறி வார்எம் பிராணுவாரே! 6

நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்(து)அவர் தூவிரத்த
ஒளிவளர் சோதிஎம் ஈசன்மன்னும்
போதுஅலர் சோலைப் பெருந்துறைஎம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்(து)அருள் செய்பெருமை
அறியவல் லார்எம் பிராணுவாரே! 7

வேடனுருக்கொண்டு மகேந்திரமலைச்சாரலில் அதிகக் குறை கலையுடைய மேலுலகத்தார்கள் உவந்து வந்து தேவரீரைத் தேடிக் காணும்படி அருளுடன் எழுந்தருளியிருந்த சிவபிரான், தொண்டனுகிய யான் (துன்பத்தினின்று நீங்கி) வாழுமாறு நன்கு எண்ணி, வலிமைபொருந்திய குதிரையில் ஏறினவன் ஐயனுகிய சிவபெருமான், திருப்பெருந்துறை என்னும் பதிக்கு முதற்கடவுளாகிய சிவபெருமான், அந்தத் தினத்தில் நண்பர்களை எவ்விடத்தும் ஆட்கொண்டருளிய தன்மையை அறிந்துகொள் பவர் எம்பெருமான் ஆவர். (4)

கண்ணிமை கொட்டாத தேவர்கள் தன்னை வணங்கித் துதி செய்யப் பெருமைதங்கிய அருள்புரியக்கடவாய்; மெய்யடியார்க ளது பாச சம்பந்தங்களை விட்டு ஒழியும்படி அருள் செய்யும் எங்கள் மேலோனுகிய திருப்பெருந்துறை முதல்வன்; அந்தாளில் திரை வீசுகின்ற அலைகளையுடைய கடலுக்கடந்து உயர்ந்த மதில் சூழ்ந்த இலங்கையின்கண் பகைப்போன்ற மிருதுவாகிய விரல்களை யுடைய மண்டோதரிக்குக் கிருபைசெய்த விதம் தெரிபவர் எம்பி ரான் ஆவர். (5)

திரிபுரங்கள் வெந்து போகும்படி கோபித்த வில்லையுடையவ னுகிய பரமசிவன், வேடுவனுகிக் காவல் நாய்கள் சூழ்ந்துவர தாம் ஏகுகின்ற பணியை அன்புடன் செய்கின்றதேவர்கள் முன் செல்ல, எம்பெருமானை சிவபிரான் தான் செல்லுகின்ற காட்டில் அம்பு தைத்து இறந்த காய்ப்பன்றிக்கு மனமிரங்கிய இறைவன், எமது தலைவன், திருப்பெருந்துறை என்னும் பதிக்கு முதற்கடவுளாகிய சிவபெருமான், அக்காலத்தில் அற்பமாகிய (ஓர்) பன்றியைப்போல் உருக்கொண்டு, தாயிழந்த அப்பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டிய அவ்வற்புதச் செயலைத் தெரிபவர் எம்பிரான் ஆவர். (6)

வண்டின் ரீங்கார ஒலியினையுடையதாகிய நிகரற்ற நல்ல தாமரைப்பூவில் பொருந்திய அழகு வாய்ந்த நெற்றியையுடைய கலைமகளும் திருமகளும் பலவிதத்திலும் தேவரீரைப் புகழ்ந் தரைத்துத் தாழ்ந்து கைகூப்பி வணங்கி மலர்களை அருச்சித்துத் துதிக்க, ஒளிபொருந்திய சோதிசொரூபனுகிய எனது இறைவன் நிலைபெற்ற பேர் அரும்புகள் மலர்கின்ற சோலைகளால் சூழப்பட்ட திருப்பெருந்துறைப்பதியிலுள்ள எனது அருள் வடிவினராகிய இறைவன் பூலோகத்தின்கண் (கைலையை விட்டு எழுந்தருளி) வந்து தோன்றி, பேதாபேதங்களை அழித்து அருள் செய்த சிறப் பைத் தெரிந்துகொள்ளும் வல்லமையுடையவர் எம்பிரான் ஆவர்.

பூஅலர் கொன்றைய மாலைமார்பன்
போர்உகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுகல் லாள்உமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருஅறி வார்எம் பிராணைவாரே! 8

தூவெள்ள நீ(று)அணி எம்பெருமான்
சோதிம கேந்திர நாதன்வந்து
சேவர் தொழும்பதம் வைத்தஈசன்
தென்னன் பெருந்துறை ஆளிஅன் று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தண்கழல் காட்டிக் கசிந்(து)உருகக்
கேதங் கெடுத்(து)எம்மை ஆண்டருளும்
கிடப்(பு)அறி வார்எம் பிரான்ஆவாரே! 9

அங்கணன் எங்கள் அமரர்பெ ருமான்
அடியார்க்(கு) அமுதன் அவனிவந்த
எங்கள் பிரான்இரும் பாசம்தீர
இகபரம் ஆயசேதார் இன்பம்எய்தச்
சங்கங் கவர்ந்துவன் சாத்திணைடும்
சதுரன் பெருந்துறை ஆளிஅன் று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகைஅறி வார்எம் பிராணைவாரே! 10

திருச்சிற்றம்பலம்.

அழகு விளங்குகின்ற கொன்றைமாலையைத் தரித்த திரு மார்பினையுடையவன்; போர்த்தொழிலுக்குரிய நகங்களையுடைய கொடிய புலியைச் சாகடித்த வெற்றி வீரனாகிய பரமசிவன் பெண்களில் சிறப்புப் பொருந்தினவளாகிய உமையவளென்று திருநாமம் தரித்த பெண்ணைப் பாகத்தில் உடையவன்; வளம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அழகுபெற்றிருக்கும் திருப்பெருந் துறை என்னும் பதிக்கு அரசனாகிய சிவபெருமான்; யாதொரு குற்றமும் இல்லாத மிகுந்த கீர்த்தியையுடைய (சிவபெருமான்) அடியேனது இறைவன்; விசாலமான கடலையுடைய வருணனுக்கு நெருப்பில் உண்டாகிய சித்திரம்போன்ற மாதருடைய தோள் களைத் தழுவிச் சேருகின்ற உருவத்தின் இலட்சணத்தினைத் தெரிபவர் எம்பிரான் ஆவர். (8)

பரிசுத்தமாகிய வெண்ணிறமுள்ள நீற்றைத் தரித்த எமது சதாசிவமூர்த்தி சோதியுருவாகிய மகேந்திரத்தலவன்; தேவர்கள் வந்து வணங்குகின்ற தன் திருவடியை இம்மண்ணின்மீது வைத்த இறைவன்; தென்னவன்; திருப்பெருந்துறையை அரசாள்வோ னாகிய சிவபெருமான், அக்காலத்தில் ஆசையானது அதிகரிக்க அருட்பெருக்கைக் காண்பித்துத் தேவரீரது திருவடியைக் காண் பித்துக் கசிந்து அடியேனை அடிமைகொண்டாண்டருளின அற் புதச்செயலை அறிபவர் எம்பிரான் ஆவர். (9)

அழகிய அருட்கண்ணையுடையவன்; எங்கள் தேவர் தலைவன்; அடியார்கட்குத் தேவாமிர்தம் போன்றவன்; பூலோகத்தில் காக்க வந்த எங்கள் பெருமான்; மிகுந்த திறமையுடையவன்; திருப் பெருந்துறை மன்னன்; அவன் அடியார்களுடைய மும்மலப் பற்று நீங்கவும், இம்மை மறுமையில் ஆவதாகிய ஒப்பற்ற பேரின்பம் அடையும்பொருட்டும் அந்நாளில் சங்கிலியாகிய வளையல்களை எடுத்துக்கொண்டு மிகுந்த சரக்கோடு பெண்கள் நிறைந்த மதுரைப்பதியை அடைந்த விதத்தை அறியவல்லார் எமது தலைவராவார். (10)

திருச்சிற்றம்பலம்.

44. எண்ணப்பதிகம்

(தில்லையில் அருளியது—ஒழியா இன்பத்து உவகை)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பார்உரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீர்உரு வாய சிவபெரு மானே!
செங்கம லமலர் போலும்
ஆர்உரு வாயனன் ஆரமு தே! உன்
அடியவர் தொகை நடுவே
ஓர்உரு வாயின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே!

உரியேன் அல்லேன் உனக்(கு)அடிமை;
உன்னைப் பிரிந்திங்(கு) ஒருபொழுதும்
தரியேன் நானேன் இன்ன தென்(று)
அறியேன் சங்கரா! கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய்கழல் அடி காட்டிப்
பிரியேன் என்றென்(று) அருளிய அருளும்
பொய்யோ, எங்கள் பெருமானே?

என்பே உருக நின்னருள் அளித்துன்
இணையடி யடி காட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா! முனிவர் முழுமுதலே!
இன்பே அருளி எனை உருக்கி
உயிருண் கின்ற எம்மானே!
நன்பே அருளாய், என் னுயிர்
நாதா! நின்னருள் நாணுமே.

44. எண்ணப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

பெருமைவாய்ந்த உருவத்தை வகித்த சிவபிரானே! சிவந்த தாமரைப் புட்பத்தைப்போன்ற அரிய உருவாகிய அடியேனது அரிய தேவாதிர்தம்போன்ற இறைவனே! நிலவுலகிலே உடம்பு எடுப்பதாகிய பிறப்பு அற்றொழியவேண்டும்; உன்னிடத்தில் அன்புசெய்யும் பக்தியையும் என்றும் அடையவேண்டும்; தேவரீருடைய அடியார்கள் கூட்டத்தின் இடையே நிகரற்ற உருவமாகி உன்னுடைய திருவருளே அடியேனுக்குக் காண்பித்து, அடியேனையும் என்றும் அழியாமல் ஜீவிக்க என்னை ஆட்கொண்டருள்வாயாக.

எமது பெருமானே! சங்கரனே! தேவரீருக்குத் தொண்டனாயிருத்தற்கு அடியேன் தகுதியானவன் இல்லேன்; ஆனால் தேவரீரை விட்டு நீங்கி இவ்விடத்துச் சற்று நேரமும் தனியே இருக்கப் பொறுக்கமாட்டேன்; நாயனைய யான் இது இன்ன காரணமென்று தெரிகிலேன்; பெரியோன் ஒருவன் என்மீது கருணைவாக்கால் யானே முதற்கடவுளாகிய ஒருவனென்று என்னைத் தெரிந்துகொள்ளக்கடவாய் என உன்னுடைய வீரக் கழலையணிந்த உன் திருவடியைக் காட்டி எந்நாளும் பிரியேனென்று சொல்லி வரந்தந்த அருள் செய்தருளிய வாக்கும் பொய் மொழிதானே? (2)

எலும்புகள் உருகும்படியாகத் தேவரீரது கிருபையை ஈந்து தேவரீருடைய இரு தாமரை மலர்போன்ற பாதங்களைக் காண்பித்து முன்னமே நாயினுள் கடையேனாகிய அடியேனை அடிமையாளாக ஆட்கொண்டருளிய முனிவனே! முனிவர்கட்கு முழுத் தலைவனே! பேராநந்தத்தையே ஈந்து அடியேனை உருகச்செய்து ஆவியைப் பருகுகின்ற எனதிறைவனே! அடியேனது உயிர்க்குத் தலைவனே! உன்னுடைய கிருபையைக் கூசாமல் (உன்) பொன்பாதங்களையே நான் என்றென்றும் பெற அருள் செய்வாயாக. (3)

பத்திலன் ஏனும், பணிந்திலன் ஏனும்,உன்
உயர்ந்தபைங் கழல் காணப்
பித்திலன் ஏனும், பிதற்றிலன் ஏனும்,
பிறப்பறுப் பாய்எம் பெருமானே !
முத்தினை யானே ! மணியினை யானே !
முதல்வனே ! முறையோ, என்று
எத்தினை யானும் யான்(து) தாடர்ந்(து) உன்னை
இனிப்பிரிந் தாற் றேனே. 4

காணுமெ தொழிந்தேன் நின் திருப் பாதம்
கண்டு கண்கவி கூரப்
பேணுமெ தொழிந்தேன், பிதற்றுமெ தொழிந்தேன்,
பின்னை எம்பெரு மானே !
தாணுவே ! அழிந்தேன்; நின்நினைந் துருகும்
தன்மைஎன் புன்மைக ளால்
காணுமெ தொழிந்தேன்; நீஇனி வரினும்
காணவும் நாணு வனே ! 5

பால்திரு நீற்று எம்பர மனைப்,
பரங்கருணை யோடும் எதிர்ந்து
தோற்றமெய்ப் யடியார்க்(கு) அருட்டுறை அளிக்கும்
சோதியை, நீதி யிலேன்
போற்றி,என் அழுதே, எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் து அலறி,என் உள்ளே
ஆற்றுவ னைக உடையவ னே ! எனை
ஆவ என்றரு ளாயே ! 6

திருச்சிற்றம்பலம்.

எம் பெரியோனே! முத்தை நிகர்த்தவனே! மாணிக்கம் போன்றவனே! எல்லாத் தேவர்கட்கும் முதன்மையானவனே! யாதொரு பற்றிலேனையினும், தேவரீரைத் தொழுதிலேனையினும் உனது மேலான பசுமையான திருவடியைக் காணும்பொருட்டுப் பித்திலனேயாயினும், துதிக்கிலேனையினும் இனி வரும் என் பிறப்பைக் களைவாயாக; முறையோவென்று எவ்வளவானும் நான் பின்பற்றித் தேவரீரை இனி ஒரு காலமும் (உன்னைப்) பிரிந்து பிரிவாற்றுமையைப் பொறுத்திருக்கமாட்டேன். (4)

எம்பெருமானே! தேவரீரது அழகிய அடியைக் கண்டு கொள்வதை நினைப்பற்று ஒழித்தேன்; உனது கோலத்தைப் பார்த்துக் கண்கள் மகிழ்ந்து போற்றுவதை விட்டேன்; பலவாறு புகழ்வதை ஒழிந்தேன்; இதுவன்றி, சிவபெருமானே! நான் அறிவு அழிந்தேன்; தேவரீரை எண்ணி மெழுகுபோல் உருகுகின்ற தன்மையை ஒழித்தேன்; என்னுடைய கீழ்மை காரணமாகக் கண்டுகொள்வதை ஒழித்தேன்; ஆதலால், தேவரீரே! இனிமேல் வந்தாலும் தேவரீரைக் காண்பதற்கும் கூசுவேன். (5)

முதல்வனே! பால்போலும் வெள்ளிய திருநீறணிந்த எமது பெரியோனுகிய உன்னை மேலதாகிய அருளோடும் எதிர்ப்பட்டுத் தோன்றி நன்னெறியினுண்மையையுடைய தொண்டர்களுக்கு அருட்டுறையை அருள் செய்கின்ற ஒளியை யாதொரு நீதியறியாத நான் துதிசெய்து அடியேனுடைய அமிர்தமே என்று சொல்லி எண்ணித் துதிசெய்து வாயாரப் புகழ்ந்து கூவி எங்கும் அலறி அடியேனுடைய மனத்தினிடத்தே ஆற்றப்படவேனுக; யாவும் உடையவனே! அடியேனை 'அந்தோ!' என்று சொல்லி மனமிரங்கிக் கிருபை செய்வாயாக. (6)

திருச்சிற்றம்பலம்.

45. யாத்திரைப்பத்து

(தில்லையில் அருளியது—அனுபவாதீதம் உரைத்தல்.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

பூவார் சென்னி மன்னன்எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா, என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்,வந்து ஒருப்படுமின் !
போவோங் காலம் வந்ததுகாண்,
பொய்விட்டு உடையான் கழல்புகவே ! 1

புகவே வேண்டா புலன்களில்நீர்;
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின், மிக்கனல்லாம்
வேண்டா போக விடுமின்கள் !
நகவே ஞாலத்து உள்புகுந்து
நாயே அனைய நமைஆண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளராது இருப்பார் தாந்தாமே ! 2

தாமே தமக்குச் சுற்றமும்,
தாமே தமக்கு விதிவகையும்,
யாம்ஆர், எமதார், பாசமார்,
என்ன, மாயம்? இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறு அமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே ! 3

45. யாத்திரைப்பத்து

திருச்சித்ரகூடம்.

கொன்றைமலர் பொருந்திய சிரத்தையுடைய மன்னன் எம் பாம்பணிந்த பெருமான், சிறியோங்களாகிய நம்மை ஒழிவின்றி உள்ளதிலே கலந்து அறிவுருவாகி உருக்கச்செய்கின்ற கருணைப் பெருக்கின் காரணமாக இரங்கி அருள் அளிக்கப்பெற்று அன்ப ராய் ஆட்பட்டவர்களே! வந்து ஒன்றுபடுங்கள். நிலையற்ற உலகை நீக்கி நம்மை உடையானது திருவடியை அடைதற்குக் காலம் வந்துவிட்டது; யாவரும் செல்லுவோம். (1)

அடியார்கள் சிரிக்க இப்பூலோகத்தின்கண்ணே கையிலபங் கினியை விட்டெழுந்தருளிவந்து, நாயினிகர்த்த அடியேனைப் பாச பந்தத்தில் சிக்குண்டு உழலாமல் தடுத்து ஆண்ட மேம்பாட்டினை யுடையவனுகிய சிவபெருமானை என்றென்றும் நெருங்கி மனந் தளர்ச்சியடையாமல் முயன்றிருப்பீர்கள்; நீங்கள் யாவரும் பஞ் சேந்திரியங்களில் போராசைகொள்ள வேண்டியதில்லை; ஓர்வித திருநடனத்தையுடைய சிவபெருமானது தாமரை மலர்போன்ற யாவராலுங் காணுணுத் திருவடிகளை மென்மேலும் உறுதியாக, வேறொரு சிந்தனையின்றி நினையுங்கள்; மிகுதியாக மற்றைய எல்லாப்பொருள்களையும் இச்சியாமல் பற்றற விட்டு விடுங்கள். (2)

பரமசிவனுகிய தமக்கு உறவும் தாமே தமக்கு விதிமுறைகளை உளவாக்கலும் தாமே நாம் யார்? எம்முடையது யாது? எமது சொந்தம் என்பர் ஆர்? இவைகளெல்லாம் என்ன அஞ்ஞானம்? இவைகள் ஒழியும்படி நமது அரசனுடைய பழைய அடியாரோடு சேர்ந்து அவனது திருவுள்ளக்குறிப்பே நமது குறிக்கோளாகக் கடைப்பிடித்து, நிலையாதனவற்றை விலக்கி ஒருவித நடனத்தை யுடைய நடராசப்பெருமான் தொண்டனுகிய அடியேனை ஆட் கொள்ளுபவன் திருவடியின்கண்ணே சென்று அடையும்வண்ணம் அமையுங்கள். (3)

அடியார், ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்தடைந்து
கடைக்கொண்டு இருமின் திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செலநீக்கிச்
சிவலோகத்தே நமை வைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன்
பூவார் கழற்கே புகவிடுமே!

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை;
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன்போ வதற்கே ஒருப்படுமின்!
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ(து) அடையாமே
புடைபட்(டு) உருகிப் போற்றுவோம்,
புயங்கன் ஆள்வான் புகழ்களையே!

புகழ்மின், தொழுமின், பூப்புனைமின்,
புயங்கன்தாளே புந்தி வைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்,
இனிஓர் இடையூறு அடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று, சிவன்தாள் வணங்கி,நாம்
நிகழும் அடியார் முன்சென்று,
நெஞ்சம் உருகி நிற்போமே!

நிற்பார் நிற்க,நில் லாஉலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே,
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே,
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற்(கு) அரியன் பெருமானே!

சிவபெருமானுக்குத் தொண்டர்களான நீங்கள் யாவரும் வீணை வாய் பேசுதலையும் விளையாட்டுச் செய்கைகளையும் கண்டிப் பாய் விட்டு விடுங்கள்; வாசனை பொருந்திய இறைவனது திருவடி களையே நெருங்கி வந்து, என்றும் நீங்காமல் சேர்ந்து அவனது எண்ணத்தையே உறுதியாகப் பற்றிக்கொண்டு வீற்றிருங்கள்; (இவ்வாறுக வீற்றிருப்பீராயின்) திருவெண்ணீறு பூசப்பட்ட அழகிய மேனியையுடைய புயங்க நடனத்தையுடைய நடராசப் பெருமான் பாபம் சேர்ந்த உடலை அழியும்படி நீக்கி நம்மைச் சிவலோகத்தின்கண்ணே வைப்பாருகித் தனது பூத்தொழிலை உடைய அருமைத்தாகிய கழலை அணிந்த திருவடிக்கண்ணே குடி புக விடுவான். (4)

கோபத்தையும் ஆசை நோயையும் விடுங்கள்; இதனின் மிக்க ஓர் காலம் இனி வாய்போவதில்லை; ஆதலால், எம்மை உடையா னது திருவடி இடத்தே பெரிய அடியார் கூட்டத்தோடு ஒன்றாய்ப் போவதற்கு இசையுங்கள்; அங்ஙனம் இசைந்தால் சிவபுரத்தின் அழகமர்ந்த திருக்கதவுகள் அடைபடுமுன்னமே நாம் சேர்வோம்; அதன் பக்கத்தில் பொருந்தி உள்ளம் உருகி, புயங்கனாகிய ஆள்வா னது புகழ்களையே துதிப்போமாக. (5)

புயங்கப்பெருமானது திருவடிகளையே புகழுங்கள்; வணங் குங்கள்; அவைகளைப் பூவால் அலங்காரியுங்கள்; புயங்கன் திருவடி களையே மனத்துட்பதித்து எல்லாத் துன்பங்களையும் இகழ்ந்து ஒதுக்குங்கள்; இனிமேல் எவ்வகையான இடையூறும் நம்மை அடையாதபடி விளங்கும் புகழ் நிறைந்த சிவபுரத்துக்குப் போய்ச் சேர்ந்து சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி அதன்மேல் அங்கே வாழும் அன்பர்முன் போய் மனமுருகி நிற்போமாக. (6)

நிலையில்லாத பூலோகத்தில் நிற்க விரும்புகிறவர்கள் நிற் கட்டும்; இனிமேல் நாம் அங்கே நிற்கமாட்டோம்; சூரணத்திரால் ஒப்பாகிய திருமேனியையுடைய புயங்கனாகிய நம்மை ஆள்வோ னுடைய பொன்னடிக்கண்ணே நாம் செல்வோமாக; அவனது பொன்னடிக்கண்ணே செல்லவேண்டுமென்று நிற்கின்றீர்; எல் லீரும் தாமதியாமல் நிற்கும் முறையையே கடைப்பிடியுங்கள்; அங்ஙனம் உடன்கொள்ளுதற்காக இன்னும் காலம் தாழ்த்துவீர்க ளாகில் எங்கள் பெருமான் பின்னர் பெறுதற்கு இயலாதவ னெவான். (7)

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்!
அருமால் உற்றுப் பின்னீர்
அம்மா அழுங்கி அரற்றுதே,
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே!

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணுள்
பங்கன், புயங்கன், அருள்அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்,
போரப் புரிமின்! சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே! 9

புரள்வார், தொழுவார், புகழ்வாராய்
இன்றே வந்(து)ஆள் ஆகாதீர்?
மருள்வீர், பின்னை மதிப்பார்ஆர்?
மதியுட் கலங்கி மயங்குவீர்,
தெருள்வீர் ஆகில் இதுசெய்ம்மின்!
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்,
அருள்ஆர் பெறுவார்? அகலிடத்தே
அந்தோ, அந்தோ, அந்தோவே! 10

திருச்சிற்றம்பலம்.

பெருமான் அருளும் பொருதாகிய ஆனந்த நுகர்ச்சியுள் நீங்காதிருக்கப் பெற்றவர்களே! பின்னர் நீர் போக்குதற்கு அரியதாகிய உலக மயக்கங்கொண்டு பிற்பாடு நீர் துன்பமுற்று 'அம்மா!' என்று அலறுதே, சிவபுரத்தின் அழகிய பெரிய மணிகள் கட்டிய திருக்கதவு திறந்திருக்கும்போது திருமால் அறியவொண்ணுத யாவராலும் நடிக்கக்கூடாத திருநடனத்தையுடைய நடராசனது அழகிய திருவடியைக் களிப்புடன் போய் எந்நாளுமிருந்து வாழ (8)

சிவபெருமானது திருவடியையே அடைய நினைந்து மனத்தைத் திருந்தும்படி செய்துவைத்து நினையுங்கள்; போர்த்தொழிலை ஆரவாரிக்கின்ற வேல்போன்ற திருக்கண்களையுடையவளாகிய உமாதேவியின் ஓர் பாகன் பாம்பைத் தரித்து ஓர்விதத் திருக்கூத்தினை உடையவனுகிய இறைவன் பொருளாகிய தேவாமிர்தத்தை மிகப் பருகித் தெவிட்டாத ஆசை மென்மேலும் பெருக அவ்வித ஆசை என்னுங் கடலில் மூழ்குவீர்கள்; நிலையற்ற பொய் வாழ்வில் கிடந்து புரளாமல் பரமசிவனது திருவடிக்கண்ணே போய்ச் சேர விரும்புங்கள். (9)

(புவிமீது வீழ்ந்து) புரளுவாராயும் (தலைவணங்கிக் கைகூப்பித்) தொழுவாராயும் இறைவனது குணதிசயங்களைப் புகழ்ந்து பேசுவார்களாயும், இப்பொழுதே நெருங்கி வந்து அடிமை ஆளாகப் போனீர்களானால் பிற்பாடு மதிமயக்கங்கொண்டு அலைவீர்கள்; பிறகு உங்களை மதிப்பவர்கள் யாரோ? மனத்தினுள்ளே கலக்கம் அடைந்து வீணுக மயங்குவீர்கள், (அம்மயக்கம் நிவர்த்தியாகும்படி தெளிவு அடைவீர்களானால் ஆட்பதிதலாகிய இதனை நற்கதியடையச் செய்யுங்கள்; (ஏனெனில்) சிவபுரத்துக்குத் தலைவனும், அழகிய சர்ப்பாபரணத்தை உடையவனுமாகிய நடராசப்பெருமானது திருவடியை அகன்ற இப்பூலோகத்தின் கண்ணே யாவர் அடைவார்? (யாவருமடையார்): ஐயோ! ஐயோ! ஐயோ! (10)

திருச்சிற்றம்பலம்.

46. திருப்படை எழுச்சி

(தில்லையில் அருளியது—பிரபஞ்சப் போர்.)

(கலி விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப்பறை அறைமின்;
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்;
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்;
வானவூர் கொள்வோம்நாம்—மாயப்படை வாராமே. 1

தொண்டர்காள், தூசிஎல்லீர்; பத்தர்காள், சூழப்போகீர்;
ஒண்திறல் யோகிகளே, பேரணி உந்தீர்கள்;
திண்திறல் சித்தர்களே, கடைக்கூழை செல்மின்கள்;
அண்டர்நா டாள்வோம்நாம்—அல்லற்படை வாராமே! 2

திருச்சிற்றம்பலம்.

46. திருப்படை எழுச்சி

திருச்சிற்றம்பலம்.

ஞானமாகிய வாளை எந்தும் தலைவரது பிரணவநாதமாகிய பறையை அறையுங்கள்; வெற்றிமிக்க குதிரை ஏறும் வீரர்களே! மதிபோலும் வெண்கொற்றக்குடை கவியுங்கள்; பெருமைமிக்க திருநீறுகிய கவசத்தில் மெய் மறையப் புதைத்துகொள்ளுங்கள்; மாயையாகிய படை நம்பால் வராமல் தேவநாடு நாம் கொள்வோம். பெருமைபொருந்திய விடையிலேறும் தலைவர்க்குத் தியானித்தலாகிய வெள்ளைக்குடையை எடுத்துப் பிடியுங்கள்; ஆக்கத்தைத் தரும் திருவெண்ணீறுகிய மெய் புகு பைக்குள் முற்றும் புகுந்துகொள்ளுங்கள்; நாம் மயக்கமாகிய பகைவனுடைய சேனைகள் அணுகி வாராதே விலக்கி வானிலுள்ள இன்பப்பதியை கைப்பற்றுவோமாக. (1)

தொண்டர்களே! நீங்கள் முன்னணிப்படையாகச் செல்லுங்கள்; அன்பர்களே! புடை சூழ்ந்து செல்லுங்கள்; ஒளி மிகுந்த வலிமைவாய்ந்த யோகிகளே! பெரும்படையைச் செலுத்திச் செல்லுங்கள்; நிலையில் அசையாத உடல்வன்மையுடைய சித்தர்களே! பிந்திய அணிவகுப்பிற் செல்லுங்கள்; அப்படி நாம் செல்வோமாதலால் துன்பம் செய்யும் படைகள் வராமல் தேவநாட்டை அடக்கி ஆள்வோமாக. (2)

47. திருவெண்பா

(திருப்பெருந்துறையில் அருளியது—அணைந்தோர் தன்மை

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

வெப்ப வினைஇரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடிஆகா தென்செய்கேன்?—செப்பரிய
திருஆர் பெருந்துறையான் தேன்உந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

ஆர்க்கோ, அரற்றுகோ, ஆடுகோ, பாடுகோ,
பார்க்கோ? பரம்பரனே! என்செய்கேன்?—தீர்ப்பரிய
ஆனந்த மால்ஏற்றும் அத்தன், பெருந்துறையான்
தான்என்பார் ஆர்ஒருவர் தாழ்ந்து. 2

செய்த பிழைஅறியேன்; சேவடியே கைதொழுதே
உய்யும் வகையினால் உயிர்ப்பறியேன்—வையத்து
இருந்துறையுள் வேல்மடுத்துஎன் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

முன்னை வினைஇரண்டும் வேரறுத்து முன்னின்றான்,
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்,
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்,
வருந்தயரம் தீர்க்கும் மருந்து. 4

47. திருவெண்பா

திருச்சிற்றம்பலம்.

செப்பமுடைய செல்வம் பொருந்திய திருப்பெருந்துறை என்னும் பதியையுடையவனாகிய தேன் சொரிகின்ற செந்தீனை நலமடையப் பொருந்தாமல் வீணே காலங் கழித்திருந்தேன்; (அவ்வாறிருந்தமையால்) மனத்தில் கொடிதாகிய இரண்டு வினைகளும் வெந்து ஒழியுமாறு உடம்பு உருகி இப்பொய் வாழ்வும் பொடிப்பொடியாக அழிந்து போகாது இருந்தன; ஆதலால், நான் என்செய்வேன்? (1)

யாவருக்கும் மேலானகிய சிவபெருமானே! நீக்குதற்கு அரிதாகிய பேரின்பத்தைத் தருகின்ற மயக்கத்தை உண்டாக்குகின்ற அடியேனது தந்தை திருப்பெருந்துறைப் பதியையுடைய சிவபெருமான் எனச் சொல்லப்படுவோர்கள் யாரொருவர் இருக்கிறார்கள்? (அந்தோ!) ஒருவருமில்லையே! அவரை வணங்கி ஆரவாரிப்பேனே? பலகால் பேசுவேனே? பேரானந்தக் களிப்புடன் கூத்தாடுவேனே? பல பாக்களால் புகழ்ந்து துதிப்பேனே? பாப்பேனே? யாது செய்யத் துணிவேன்? (2)

இப்பூலோகத்தில் அருளோடு எழுந்தருளியிருந்து, தனது இடப்பிலிருக்கும் உறையிலுள்ள வேல் விரைவில் எடுத்து, அடியேனது மனத்திலுள்ளே அழுத்திநின் திருப்பெருந்துறைப் பதியின்கண் எழுந்தருளிய சிவபெருமான்; தெரிந்து செய்த தப்பிதத்தைச் சற்றும் அறிந்தேனில்லை; திருவடியையே கையினால் (வணக்கத்துடன்) தொழுது ஈடேறும் வகைகளினால் இளைப்பாறி இருத்தலையும் அறியேன். (3)

எனது முன் பிறவியில் தெரிந்தும் தெரியாமலும் செய்த (கல்வினை தீவினைகள்) இரண்டையும் அவைகளினது வேரை முழுதும் அறுத்து, அடியேன் எதிரே (என்னை ஆட்கொண்டு அடிமையாக்கிக்கொள்ள) அன்புடன் எதிரே நின்றருள்; இனி வரும் பிறப்பினைத் தொலைத்த பெருமையை உடையவனும் தென்னனும், திருப்பெருந்துறைப்பதியில் எழுந்து வீற்றிருந்த கருணை ஆளனும், திருபாதோதகத்தை உடையவனுமாகிய சிவபெருமான் ஆகிய திருப்பெருந்துறையான் மென்மேலும் வரும் துன்பங்களைத் தீர்க்கும் மருந்துமாவான். (4)

அறையோ, அறிவார்க்(கு)? அனைத்துலகும் ஈன்ற
மறையோனும், மாலும், மால்கொள்ளும்—இறையோன்,
பெருந்துறையுள் மேய பெருமான்; பிரியாது
இருந்துறையும் என்நெஞ்சத்து இன்று. 5

பித்தென்ன ஏற்றும்; பிறப்பறுக்கும்; பேச்சரிதாம்;
மத்தமே ஆக்கும்,வந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு போருளால் நோக்கும்
மருந்திறவாப் போன்பம் வந்து. 6

வாரா வழிஅருளி வந்துனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே—சீரார்
திருத்தன் பெருந்துறையான், என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாப்க்குளன்!எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 8

மூவருமும் முப்பத்து மூவருமும் மற்றுமெழிந்த
தேவருமும் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்துஇழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

எல்லா உலகங்களையும் உண்டாக்கிய பிரமதேவனும் விட்டுணுவும் அடிமுடி காணுது மயக்கம் கொள்ளுதற்கு ஏதுவாகிய இறைவனாகிய தலைவன் திருப்பெருந்துறைப் பதியின்கண்ணே எழுந்தருளிய சிவபெருமான் அடியேனை விட்டுப் பிரியாமலிருந்து இன்று எனது மனத்தினுள்ளே வாழ்வான்; இன்று இறைவன் எங்கு இருக்கிறான் எனத் தேடி அறிய விரும்புபவர்க்கும் யான் கூறும் உறுதிசசொல்லாகும் இது. (5)

அப்பனாகிய திருப்பெருந்துறையான் என்னை ஆட்கொண்டு போருளோடு நோக்கும் அமுதமாவான்; அழியாத பேரின்பமாவானாகிய சிவபெருமான் எழுந்தருளிவந்து என்னை ஆனந்தப் பித்தடையச் செய்வான்; பிறப்பினை வேர் அறுப்பான்; என் மனதின்கண் சொல்லுதற்கரிய களிப்பினை உண்டாக்குவான். (6)

மிகு புகழ் நிறைந்த திருவிதாகிய தெற்கின்கண் உள்ள திருப்பெருந்துறையான் எனது சிந்தையில் பொருந்திய ஒப்பற்றவன் ஆங்கிருந்து பெருகச்செய்யும் அருள் ஒளியானது பிறவியில் மீண்டும் வந்து போதற்கு இல்லாத பேரின்பத்தில் இருக்க வழியைக் காட்டி எனக்கு மாறுபடாது வந்து தெவிட்டுதல் இல்லாத அமுதமாய் அமைந்தது. (7)

எம்பிரானாகிய தலைவனே! யாவர்க்கும் மேலதாகிய இவ்வுலகவென்றில்லாத சீர் சிறப்புடைய பெருமானே! மானிடர் முதலிய யாவர்க்கும் தாழ்ந்தவனாகிய அடியேனை யாருக்கும் கிடைத்தறியாத பேராநந்தத்தில் அமைத்த தேவரீருக்குப் பதில் உதவி செய்யும் வகையை யான் அறிந்திலேன். (8)

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற்குங் காரண கர்த்தர்களாகிய பிரம விட்டுணு உருத்திரர்களும், முப்பத்து மூன்று தேவர்களும், ஏனைய இந்திரன் முதலான தேவர்களும் பார்ப்பதற்கரிதாகிய சிவபிரான் குதிரையின்மேல் ஏறி நிலவுலகத்தே இறங்கி வந்து காட்டியருளிய நெடிய திருவடிகளை வணங்கவே உண்மையாகிய அடியேனது மனத்தின்கண்ணே ஆனந்தம் பெருகும் (9)

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்துஇரந்து கொள்நெஞ்சே, எல்லாம்—தருங்கான்,
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

திருச்சிற்றம்பலம்.

ஏ மனமே! திருப்பெருந்துறைப்பதியில் (அன்புடன்) எழுந் தருளிய மிகு அருளையுடைய சிவபெருமான், தேவாமிர்த உருவாகி அடியேனது மனத்தில் வந்து குடியாயிருந்து அடிமையாகிய என்னைப் பணியாளாகக் கொண்டாண்டருளினன்; ஆனதால், அவனது இரண்டு திருவடிகளையே சதா நினைத்துக்கொண்டு உனக்கு இனி வேண்டுவன அழியாப்பொருள் யாவையும் வேண்டிப் பிரார்த்தித்துப் பெற்றுக்கொள்; அவ்வாறு அன்புடன் கேட்கில், தடையின்றித் தந்தருளுவன். (10)

சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறைப்பதியை உடைய வன் பேரின்பத்தை மிகப் பெருகச்செய்து, (அஞ்ஞானமாகிய) இருளை நீக்கி (இனி) எக்காலமும் பிறவித்துன்ப முதலியவற்றின் (நம்மை) சாயலைப்போல் தொடர்ந்து வருதலைக் (கண்டிப்பாய்) அறுத்து ஒளியுருவாகிப் போன்பினை நிறைத்து, அடியேன் மனத்தையே விரும்பி இருப்பதற்கு இடமாக எழுந்தருளி யிருந்தான். (11)

திருச்சிற்றம்பலம்.

48. பண்டாய நான்மறை

(திருப்பெருந்துறையில் அருளியது—அனுடவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்)

(நேரிசை வெண்பா.)

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பால்அணுகா மால்அயனும்
கண்டாரும் இல்லைக் கடைஆயினத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு, நெஞ்சமே!
உண்டாமோ, கைம்மாறு? உரை 1

உள்ள மலமூன்று மாய உருப்பெருந்தேன்
வெள்ளம் தருபரியின் மேல்வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்; வாழ்த்தக்
கருவும் கெடும்,பிறவிக் காடு. 2

காட்டகத்து வேடன்; கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன்; நம்வினையை—வீட்டி,
அருளும் பெருந்துறையான்; அங்கமல பாதம்
மருளும் கெட,நெஞ்சே! வாழ்த்து. 3

வாழ்ந்தார்கள் ஆவாரும், வல்வினையை மாய்ப்பாரும்,
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும்—சூழ்ந்துஅமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 4

48. பண்டாய நான்மறை

திருச்சிறறமபலம.

ஏ மனமே! பழமை ஆகிய நான்கு மறைகளும் தன்பால் நெருங்கக்கூடாத அவனைத் திருமாலும் நான்முகனும்கண்டதுகூட இல்லை; (அவ்வாறிருக்க), நாயினுங் கடைப்பட்ட அடியேனுகிய என்னை அடிமையாளாக ஏற்றருளுகின்ற திருப்பெருந்துறை அரசனுக்கு உதவி உண்டாமோ? சொல். (1)

உள்ளனவாகிய மும்மலங்களும் நீங்கி ஒழிய, சிந்துகின்ற பெரிய இன்பத்தேன் பெருக்கைத் தருகின்ற குதிரையின்மீது ஏறி அருள் செய்துவந்த கொடையாளியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கிற திருப்பெருந்துறைப்பதியைப் பாக்களால் துதிசெய்யுங்கள்; அவ்வாறு வாழ்த்திலல் நமது பிறப்பென்னுங் காடானது வேருடனே இனி வராமல் அழியும். (2)

ஏ மனமே! காட்டின்கண்ணே வேடருகியும், கடலின்கண் மீன் பிடித்து வாழும் வலைஞருகியும், நாட்டின்கண் குதிரைப் பாகருகியும் தோன்றியருளி நமது தீவினைகளைத் தொலைத்து அருள்செய்கின்ற திருப்பெருந்துறையையுடைய சிவபெருமானது அழகிய தாமரை மலர்போன்ற திருவடியை நமது பிறவி மயக்கம் கெட்டொழியும்படி துதிசெய்வாயாக. (3)

தேவர்கள் கூடிப்போய் பணிந்து போற்றி செய்கின்ற அழகு வாய்ந்த திருப்பெருந்துறைப்பதியைச் செவ்வையாகப் பணிந்து துதிக்கின்ற நம்மவர் உலகில் பயனுற வாழ்ந்தார்களும், கொடிதாகிய வினைகளைத் தொலைப்பாரும் உலகத்தின்கண் வாழ்பவர் தலைவணங்கிப் பணிந்து துதிக்கத் தகுதியையுடையோரும் ஆவர்

கண்ணிப் பெருந்துறையை, கம்மிடர்கள் போய்அகல,
எண்ணி எழுகோ கழிக்கரைசப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். 5

காணுங் காணங்கள் எல்லாம்பேர் இன்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை, நெஞ்சே! பெருந்துறையில் என்றும்
பிரியானை, வாயாரப் பேசு. 6

பேசும் பொருளுக்கு இலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை—பேசிப்
'பெருந்துறையே' என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. 7

திருச்சிற்றம்பலம்.

ஏ மனமே! நம்முடைய துன்பங்கள் யாவும் ஒழிந்துபோகும் வண்ணம் திருப்பெருந்துறைப்பதியைச் சேர்ந்து, எழுச்சியுடைய திருவாவடுதுறைப்பதிக்கு நாதனே நினைந்து நினைந்து பண்ணிலை சையைப்போலும் சொல்லையுடையவளாகிய உமாதேவியோடும் உத்தரகோசமங்கைப் பதியின்கண் நிலைபெற்று நம்மை விட்டு என்றும் நீங்காமல் எழுந்தருளியிருக்கும் பரமசிவனைக் காண்க. (5)

ஏ மனமே! அறிதற்குரிய கருவிகள் யாவும் போதகத்தமயமென்று கண்டு போற்றும் அடியார்களது பிறப்பு நீங்கும்படி நோக்குகின்ற யாவர்க்கும் பெரியோனாகவும் திருப்பெருந்துறைப் பதியில் எக்காலமும் நீங்காமலிருப்பவனாகிய சிவபெருமானை வாய் நிரம்பப் புகழ்ந்து உரைப்பாயாக. (6)

பிறவிப்பிணிக்கு நல்ல மருந்தாகிய இனிய திருவடிகளை என் மனத்தகத்திற் பதித்து, பேசப்படும் உண்மைப் பொருள் தொகுதிக்கு எல்லையான முடிவாய், இன்பமாய், சொல்லினைக் கடந்த குற்றமற்ற மாணிக்கம்போன்றவனைத் துதித்துப் புகழுரைத்துப் பெரிய வழியானவனே எனத் துதித்துப் பிறவிப்பிணியின் வேரினையும் அறுத்தேன். (7)

திருச்சிற்றம்பலம்.

49. திருப்படையாட்சி

(தில்லையில் அருளியது—சீவோபாதி ஒழிதல்.)

திருச்சிற்றம்பலம்.

கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே!
காரிகை யார்கள்தம வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே?
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே!
மால்அறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும், ஆகாதே!
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே?
பாண்டிநன் னுடைய யான்பட யாட்சிகள்
பாடுதும், ஆகாதே?
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும், ஆகாதே!
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும், ஆயிடிலே!
ஒன்றினை டொன்றும்,ஒ ரைந்தினை டைந்தும்,
உயிர்ப்பறும் ஆகாதே!
உன்னடி யார்அடி யார்அடி யோம்என
உய்ந்தன, ஆகாதே?
கன்றுறி னிணங்கெழு தாயென வந்த
கணைக்கது ஆகாதே?
காரண மாகும் அணுதி குணங்கள்
கருத்துறும், ஆகாதே!
கன்றிது தீரென வந்த நடுக்கம்
நடுங்தன, ஆகாதே?
காழுமெ லாமடி யாருட னேசெல
நண்ணுதும், ஆகாதே?
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே?
ஏழுடை யான்என ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே!

49. திருப்படையாட்சி

திருச்சிற்றம்பலம்

மீனைப் பிடித்தற்பொருட்டு வலவீசிய வேடனுகிய கடவுள் நமக்கு வெளிப்பட்டு உயிர் அவனேடு அத்துவிதமாய்க் கலந்த காலத்து இரண்டு கண்களும் அவன் திருவடியைக் கண்டு களிப்பன ஆதல் ஏற்படாது; பெண்கள் தம் வாழ்க்கையில் என் வாழ்க்கைக் கீழ்ப்படுதல் ஏற்படாது; உலகங்களில் வந்து பிறந்திடுமாறு இறைவனுடைய திருவடிகளை மறந்திடுதல் ஏற்படாது; திருமாலும் அறியாத மலர்ப்பாதம் இரண்டையும் வணங்குதலும் ஏற்படாது; பண்ணேறு கூடிய களிப்பைத் தருகின்ற பாடலும் ஆடலும் பழகுதலும் நிகழாது; நல்ல பாண்டிநாட்டை உடையவனுகிய இறைவனது படையின் வீரச் செயல்களைப் பாடுதலும் ஏற்படாது; விண்ணுலகினர் களிப்பதற்கு ஏதுவாகிய ஒரு வேற்றுமை வந்து வெளிப்படுதல் ஏற்படாது. (1)

விருஷப வாகனத்தையுடையவனும் என்னுடைய காயகனுமாகிய இறைவன் என்னுள்ளே புகுவானுயின், உயிரோடு உடலும் ஐம்பொறிகளோடு ஐம்புலன்களும் கலந்து நிலைபெறுதல் ஏற்படாது; உன்னுடைய 'அடியார்களுக்கு அடியார்க்கு அடியோம்' என்று கூறி, உய்தற்கு ஏதுவாய செயல்கள் ஏற்படமாட்டா; தனது கன்றுக்குப் பாலூட்ட நினைந்து எழுந்த தாய்ப்பசுவைப் போல் கடவுள் குருவாகி வெருங்கி வந்து கருணை காட்டச் சென்ற முறையும் நிகழ்ந்து, மாயையால் பிறவிக்குக் காரணம் ஆகும் தொடக்கமற்ற பண்புகள் கருத்திற் கொள்ளுதலும் ஏற்படாது; இது நல்லதோ, இது தீயதோ என்று ஒன்றினை ஆராய்ந்த காலை ஏற்படும் கலக்கம் வந்தது என ஏற்படாது; நாமும் எல்லா அடியார்களுடனே செல்ல மனத்தில் கருதலும் ஏற்படாது; எக்காலமும் அடியேனது அன்புருவாய் நிறைந்த மேம்பாட்டையுடைய அமுதமானவனைப்போய் அடைதலென்பதும் நிகழாது. (2)

பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடும், ஆகாதே?
பாவனை யாய கருத்தினில் வந்த
பராஅமுது ஆகாதே?
அந்த மிலாத அகண்டமும் நம்முள்
அகப்படும், ஆகாதே?
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
?
சென்துவர் வாய்மட வாரிட ரானவை
சிதைத்திடும், ஆகாதே?
சேலன கண்கள் அவன்றிரு மேனி
திலைப்பன, ஆகாதே?
இந்திர ளுால விடர்ப்பிற வித்துயர்
எகுவது ஆகாதே?
என்னுடை நாயக ணகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே! 3

என்னணி யார்முலை ஆகம்அளைந் தடன்
இன்புறும் ஆகாதே?
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி
காடுதும் ஆகாதே?
நன்மணி நாதம் முழங்கினன் உள்ளுற
நண்ணுவது ஆகாதே?
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவது ஆகாதே?
மன்னிய ஆன்பரில் என்பணி முந்துற
வைகுவது ஆகாதே?
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே?
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை
எய்துவது ஆகாதே?
என்னை யுடைப்பெரு மான், அருள் ஈசன்,
எழுந்தருளப் பெறிலே! 4

என்னுடைய தலைவனாகிய இறைவன் எதிர்ப்பட்டு இரண்டறக் கலந்தால்; பாசத்தொடர்பான வேற்றுமைப்பட்ட பிறவித் தளைக்கு ஏதுவான இயல்புகள் மறைதலும் மறுபடியும் தோன்றுதலும் ஏற்படா; கடவுளைக் காதல் பாவனையால் நெஞ்சத்துள் ஊற்றெடுத்து வந்த மேலான இன்பமும் நிகழாது; முடிவு இல்லாத விரிந்த பொருளும் நமது எதிரே தோன்றப்படுதலும் ஏற்படாது; ஆதிமுதல்வனாகிய மேலோனாகிய பரஞ்சோதி நம்மை நெருங்கி அணுகுவதும் நிகழாது; செவ்விய பவளம்போன்ற வாயையுடைய பெண்களால் வரும் துன்பங்கள் ஒழிதல் என்பது ஏற்படாது; சேல் மீன் போன்ற கண்கள் அப்பரமசிவனது திருமேனியை அனுபவிப்பனவும் நிகழா; இந்திரசாலம்போல மாயமான இடைஞ்சலான பிறவித் துன்பம் ஒழிதல் என்பதும் நிகழாது. (3)

அடியேனை அடிமையாகவுடைய சிவபெருமான் எமக்கு அருள் செய்கின்ற சகதீசன், என்னை நெருங்கி வந்து எழுந்தருளப் பெற்றால், என்னுடைய நகைகள் பொருந்திய முலைகள் அவனது திருமேனியிற் படிந்து இன்புறுதல் ஏற்படாது; எல்லையில்லாத பெரிய அருட்கடலில் இன்று விருப்புற்று மூழ்குவதும் நிகழாது; நல்ல மணியோசை முதலியன என்னுள்ளே மிகுதியாகப் பொருந்தி முழங்குதல் நிகழாது; இறைவன் அணிகின்ற திருநீற்றினைப் பூசுதலும் ஏற்படாது; நிலைபெற்ற அன்பருள் எனது பணிவிடை முற்படப் பெருவாழ்வடைதல் ஏற்படாது; பெருமையை உடையனவாகிய வேதங்களாலும் அறியப்படாத சிறந்த மலர்போன்ற பாதங்களை வணங்குதலும் ஏற்படாது; இனிய செங்கழுநீர் மலர்போன்ற திருவடிகள் எனது தலையிற் பொருந்துதலும் ஏற்படாது. (4)

மண்ணினில் மாயை மதித்து, வகுத்த
மயக்கறும் ஆகாதே!
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே?
கண்ணிலி காலம் அனைத்திலும் வந்த
கலக்கறும் ஆகாதே!
காதல் செய்யும்அடி யார்மனம் இன்று
களித்திடும் ஆகாதே!
பெண்ணிலி ஆணென நாமென வந்த
பிணக்கறும் ஆகாதே!
பேறறி யாத அநேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே!
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே!
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தருளப் பெறிலே!

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடும் ஆகாதே!
தூமணி மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடும் ஆகாதே!
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படும் ஆகாதே!
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகுத்திடும் ஆகாதே!
கன்னடி யாரடி யென்தலை மீது
கழைப்டன ஆகாதே!
தானடி யோம்உட னேயுய வந்து
தலைப்படும் ஆகாதே!
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
வியப்பிடும் ஆகாதே!
என்னைமுன் னுடைய ஈசன், என் அத்தன்,
எழுந்தருளப் பெறிலே!

என்னையுடைய பெருமான், அருள் செய்கின்ற சகதீசன் எழுந்தருளப்பெற்றுல், மண்ணுலகத்தின்கண் மாயகாரியங்களைக் கருதி அவற்றின் வகையாக எழுந்த மயக்கமானது ஒழிதல் என்பது எற்படாது; தேவர்களும் அறியாத தாமரைப்புட்பம் போலுமுடைய திருவடியை வணங்கித் தொழுவதும் நிகழாது; ஞானமில்லாதவனுய் இருந்த காலமெல்லாம் ஏற்பட்ட கலக்கம் எற்படாது; அன்புடன் தொண்டு செய்கின்ற உன் தொண்டர்கள் மனமானது இன்று சந்தோஷித்தலும் நிகழாது; பெண் ஆண் அலி எனவும் நாம் எனவும் பேசவந்த மாறுபாடுகள் ஒழிதல் என்பதும் எற்படாது; பேர் கூடச் சொல்ல முடியாது பல பிறவிகளுள் நின்று தப்பிப்பிழைத்தல் என்பதும் எற்படாது; எண்ணிலடங்காத அற்புதத்திறன்கள் என்னை வந்து அடைதலும் எற்படாது. (5)

அடியேனை முன்னுளிலே ஆட்கொண்டருளிய ஈசன், என் அப்பன் எழுந்தருளப்பெற்றுல் பொன்னின் நிறம் அமைந்த அழகிய மேனியில் திருவெண்ணீறு பூசி விளங்குதலும் நிகழாது; பெரிய தவத்தாளர்களது கைகள் ஒன்று சேர்ந்து புட்பமழை பொழிந்திடுதலும் எற்படாது; மின்னலைப்போல அசையும் நுட்ப மாகிய இடுப்பினையுடையவராகிய பெண்டிரது உள் எண்ணம் வெளிப்படுதலும் நிகழாது; வீணை சப்திக்கிறதால் உண்டாகின்ற ஓசையில் இன்பம் பெருகுதலும் நிகழாது; தேவரீரின் திருத் தொண்டர்கள் அடிகள் என் தலைமீது பொருந்தச் செய்தலும் நிகழாது; இறைவன் அடியார்களாகிய நாங்கள் இப்பொழுதே உய்யும்படி எழுந்தருளி வந்து சேர்தலும் நிகழாது; இனிய வாத்தி யங்கள் எவ்விடத்தும் நிறைந்து இனிதாக ஒலித்தலும் நிகழாது.

சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரும் ஆகாதே !
துண்ணென என்னுளம் மன்னிய சோதி
தொடர்ந்தெழும் ஆகாதே !
பல்லியல் பாய பரப்பற வந்த
பராபரம் ஆகாதே ?
பண்டறி யாத பராஅ பவங்கள்
பரந்தெழும் ஆகாதே ?
வில்லியல் நன்னுத லார்மயல் இன்று
விளைந்திடு ஆகாதே ?
விண்ணவ ரும்அறி யாதவிழுப் பொருள்
இப்பொருள் ஆகாதே ?
எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடும் ஆகாதே ?
இந்து சிகாமணி எங்களை ஆள
எழுந்தருளப் பெறிலே !

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன, ஆகாதே !
சாதிவி டாதகு ணங்கள் நம்மோடு
சலித்திடும் ஆகாதே !
அங்கது நன்றிது நன்றெனு மாயை
அடங்கிடும் ஆகாதே ?
ஆசைய லாம்அடி யார்அடி யோம்எனும்
தன்மை ஆகாதே ?
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே ?
சீரடி யார்கள் சிவாஅ டவங்கள்
தொடர்ந்திடும் ஆகாதே ?
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்
எய்துவது ஆகாதே ?
ஈறறி யாமறை யோன்எனை ஆள,
எழுந்தருளப் பெறிலே !

சந்திரனைத் தலையில் தரித்தவனுகிய மணிபோன்றவன் எங்களை ஆளுவதற்குஎழுந்தருளப்பெறுவானுயின் சொல்லினது இயல்பு கடந்து எழுகின்ற பரந்து செல்லும் மணியினது ஓசை இன்பம் தருதலும் நிகழாது; திடீரென எனது உள்ளத்தில் பொருந்திய சோதியானது தொடர்ந்து தோன்றுவதும் எற்படாது; பலவகை இயல்பையுடைய பரபரப்பு நீங்கும்படியாக வந்த மிக மேலான பொருள் தோன்றுதலும் எற்படாது; முன்பு அறியாத மேலான அனுபவங்கள் விரிந்து மேற்படுதலும் எற்படாது; வில்லின் இயல்பையொத்த அழகிய நெற்றியையுடைய பெண்களது மயக்கம் இன்று ஏற்படுவதுமில்லை; தேவர்களாலும் அறியப்படாத உயர்ந்த பரம்பொருள் விளங்கும் இவ்வழியோடு தோற்றுதலும் நிகழாது; அளவற்றனவாகிய இறைவனின் எண்குணங்களானவை அடைந்திடுதலும் எற்படாது. (7)

முழுவு அறியப்படாத அந்தணன் எனை ஆள எழுந்தருளப் பெறின், சங்குகள் பல சேர்ந்து சப்தித்து எழுவதாகிய ஓசையானது மிகப் பெருகுதலும் எற்படாது; குலத காரணமாக வருகின்ற குணங்கள் நம்மோடு இயங்குதலும் எற்படாது; அவ்விடத்தே 'இது நன்று, இது தீது' என்ற மயக்கம் அடங்கி ஒழிதலும் எற்படாது; ஆசை முழுவதும் கடவுளுக்கு அடியோம் என்னும் அவ்வளவே என்றலும் கூற எற்படாது; செவ்விய கயல் மீன் போன்ற ஒளியையுடைய கண்ணை உடைய பெண்கள் மனம் பூரித்தலும் எற்படாது; சிறந்த அடியார்களது சிவானுபவங்களை இன்னதெனத் தெரிந்திடுதலும் எற்படாது; எக்கும் நிறைந்து அழுதாறுதற்குக் காரணமாகிய பரஞ்சோதியை அடைதலும் நிகழாது. (8)

திருச்சிற்றம்பலம்.

50. ஆனந்தமாலை

(தில்லையில் அருளியது—சிவானுபவ விருப்பம்)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

மின்னேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார் கந்தார் வியனுலகம்
பொன்னேர் அனைய பலர்கொண்டு
போற்று நின்றூர் அமரரெல்லாம்
கல்நேர் அனைய மனக்கடையாய்க்
கழிப்புண்டு அவலக் கடல்வீழ்ந்த
என்னேர் அனையேன் இனிஉன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே!

என்னுல் அறியாப் பதம்தந்தாய்,
யான் அதறியா தேகெட்டேன்;
உன்னுல் ஒன்றுங் குறைவில்லை;
உடையாய்ப், அடிமை கார்என்பேன்;
பன்னுள் உன்னைப் பணிந்தேத்தும்
பணியை அடியா ரொடுங்கூடாது
என்ன யகமே! பிற்பட்டிங்
கிருந்தேன் நாய்க்கு விருந்தாயே!

சீலம் இன்றி நோன்பின்றிச்
செறிவே இன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டாயைக்
கொடியேன் என்றே கூடுவதே?

50. ஆனந்தமாலை

அருளாசாரம்பலம்.

மின்னலின் அழகை ஒத்த தாமரை மலர்போன்ற திருவடி களைச் சேர்ந்தோர்கள், பெரிதாகிய உலகதெறியைக் கடந்தவர்கள் ஆவார்கள்; தேவர்கள் யாவரும் பொன்னைப்போன்ற அழகை ஒத்த தாமரை மலரைத் தூவி அருச்சியாநின்றார்கள்; கல்லை நிகர்த்த மனத்தையுடைய கீழ்ப்பட்ட கடையனாகி அறிவால் கழிக்கப்பட்டுத் துன்பப்பெருக்கென்னும் சாகரத்தில் விழுந்த என்னை நிகர்த்தவனாகிய நான் இனிமேல் தேவரீரை அடைந்து வாழும் விபரம் அன்புகூர்ந்து அருள்க. (1)

அடியேனால் காணப்படாத (மூத்திவீட்டிலிருக்க) இடத்தை (அடியேன்மீது அன்புவைத்துக்) கொடுத்தாய்; அடியேன் அதன் பெருமையைத் தெரிந்துகொள்ளாமலே (வீணை) பாழாகினேன்; (அவ்வாறிருக்க) தேவரீரால் யாதொன்றும் குறைபாடு (சிறி தேனும்) இல்லை; எப்பாக்கியத்தையும் பெற்றிருப்பவனே! (தொண்டனாகிய) அடியேனுக்குத் தேவரீரைவிட எவர்கள் (உதவிசெய்ய) இருக்கிறவர்கள் என்று சொல்வேன்? அடி யேனைத் தடுத்தாட்கொண்ட நாளாக, தேவரீரை (கைகூப்பித் தலை) வணங்கிப் போற்றி செய்கின்ற புராதனத் தொண்டர் களோடும் சேர்ந்து வாழாமல் அடியேனது நாயனாகிய சிவபெரு மானே! பின்னிட்டுப் பிணிக்கு விருந்தாக இவ்வுலகிலிருப்பே னையினேன். (2)

நன்னடக்கை இல்லாமல், விரதம் இல்லாமல், அன்பு இல் லாமல், அறிவு இல்லாமல் தோலிறற்செய்த பதுமையானது நாட்டியஞ் செய்வதுபோல எங்குஞ் சுழன்று வீழ்ந்து கிடக்கின்ற அடியேனைத் தன்னிடத்தே விருப்பமும் உண்டாக்கி நன்னெறி யைக் காண்பித்து முத்தியுலகத்தில் முறையாய் ஏறும்படி திரு வடிவத்தையுங் காட்டி அடிமையாளாக்கிக்கொண்டானண்டருளின வனைக் கொடியேனாகிய அடியேன் தேவரீரது திருவடியின் நிழலை அடைவது என்றைக்கு? (3)

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்;
சேடி லாதாய் ! ழிகொண்டாய்;
படுவேன் படுவ தெல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே ?
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளும் குருமணியே !
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றே, எங்கள் நாயகமே ?
தாயாய் முலையைத் தருவானே !
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனே ?
நம்பி ! இனித்தான் நல்குதியே,
தாயே என்றுன் தாள்அடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே,
நாயேன் அடிமை உடனுக
ஆண்டாய் நான்தான், வேண்டாவோ ?
கோவே ! அருள வேண்டாவோ ?
கொடியேன் கெடவே அமையுமே,
ஆவா எனினு விடில்என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான் ?
சாவார் எல்லாம் என்னளவோ
தக்க வாறன் றென்னுரோ ?
தேவே ! தில்லை நடமாடீ !
திகைத்தேன் இனித்தான் தேற்றுயே !
நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய் !
அரிய பொருளே ! அவிநாசி
அப்பா ! பாண்டி வெள்ளமே !
தெரிய அரிய பரஞ்சோதீ !
செய்வ தொன்றும் அறியேனே !

திருச்சிற்றம்பலம்.

வீணை பாழாகின்றேன்; கெட்டுப்போகும் விதமாகப் பாழாய்ப் போகின்றேன்; யாதொரு தீங்கும் இல்லாதவனுகிய சிவ பெருமானே! நான் செய்தலால் வரும் பழியை நீ ஏற்றுக்கொண் டாய்; துன்பப்படுவேன்; இனி அனுபவிக்கவேண்டிய துன்பம் எல்லாம் அனுபவித்துவிட்டால், இனி வரும் பிரயோசனம் யாது? (ஆனதால்) கொடிய நரகத்தில் வீழ்ந்து முலாவண்ணம் காப்பாற்றி ஆட்கொள்ளுகின்ற குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்த மாசிலா மணியே! எங்கள் தலைவனே! பொதுநிலையாய் நிற்காமல்போனல் அது நன்றுகுமா? (4)

தேவரீர் அன்னையாகி ஸ்தனத்தினின்றும் பசிக்குப் பால் கொடுப்பவனே! அவ்வாறு கொடாமல் போனல் பாலின்றி மெலியும் குழந்தையைப்போல் நாயினுங் கடைப்பட்ட அடியேன் கழிவாய்ப்போவேனே? இறைவனுகிய சிவபெருமானே! உன்னைத் 'தாயே!' என்று எண்ணி, உன்னுடைய திருவடியை அடைந் தேன்; நீ என்னிடத்தில் தயவு இல்லாமல் இருக்கின்றாய்; நாயனைய நான் உன்னை அடைந்தவுடன் என்னை அடிமையாக ஆட்கொண்டாய்; இப்பொழுது அடிமையாகிய நான் உனக்குத தேவையில்லையோ? (5)

அரசனே! நீ அடியேனுக்கு அருள் செய்யவேண்டாமோ? கொடியேனுகிய யான் அநியாயமாய்க் கெட்டுப்போக அமையுமோ? (தேவரீர்) 'ஐயோ!' என்று சொல்லி இரக்கங்கொள்ளாவிடின் (யாதொன்றுக்கும்) 'பயப்படாதே!' என்று சொல்பவர் (உம்மை விட) வேறு யார்தாம்? பயன் பெறுது இறப்பவர்கள் எல்லாம் என்னைத சரியோ? நான் பயன் பெறுது இறந்தால் அது தக்க முறையன்று என்று அன்பர்கள் சொல்லமாட்டாரோ? கடவுளே! தில்லைத்திருநடனம் செய்பவனே! யான் தினைத் தேன்; இனியாவது நீயே அதனைத் தெளிவிப்பாயாக. (6)

நரிகளை வாகனமாகத் தாங்குகின்ற குதிரையாக்கி உல கமெல்லாம் தெரியும்படி செய்து பெரியதாகிய பாண்டியனது மதுரைப்பதி முழுதும் தினைப்பினை அதிகப்படுத்திய திருப்பெருந் துறைப் பதியையுடைய சிவபெருமானே! யாவர்க்கும் அரிதாகிய மெய்ப்பொருளே! அவிநாசிப்பதியில் எழுந்தருளியிருக்கும் என் அப்பனே! மதுரைப் பதிக்குக் கருணைப் பெருக்கே! காணுதற்கு அருமையாகிய பரஞ்சோதியே! தேவரீருக்குச் செய்தற்குரிய தைச் சிறிதேனும் தெரிந்தேனில்லை. (7)

திருச்சிற்றம்பலம்.

51. அச்சோப்பதிகம்

(தில்லையில் அருளியது—அநுபவவழி அறியாமை)

(கலி விருத்தம்.)

திருச்சிற்றம்பலம்.

அத்தன்

முத்திநெறி அறியாத மூர்க்கமோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அத்தன்னைக் கருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே! 1

கூத்தன்

நெறிஅல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருஅருளே சேரும்வண்ணம்
குறிஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தனைனக்கு
அறியும்வண்ணம் அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே!

ஐயன்

பொய்எல்லாம் மெய்என்று, புணர்முலையார் போகத்தே
மையல்உறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையல்இடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்னைக்கு அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே!

அண்ணல்

டண்ணதனிற் பிறந்துஎய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணம்இலா அன்பருளி எனைஆண்டிட்டு என்னையுந்தன்
சுண்ணவெண்ணீறு அணிவித்துத தூய்நெறியே சேரும்
[வண்ணம்
அண்ணல்லனைக்கு அருளியஆறு ஆர்பெறுவார்?
[அச்சோவே! 4

51. அச்சோப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

மூத்தி வீட்டின் வழியைத் தெரியாத அறிவீனர்களுடன் சேர்ந்து திரிவேனுகிய எனக்கு உன்பொருட்டுப் பத்தியோடிருக்கும் மார்க்கத்தைத் தெரிவித்துப் புராதனமாகிய வினைகள் நீங்கும் விதம் மனத்தினது களங்கத்தை நீக்கிச் சிவமாக்கி அடியேனைத் தொண்டனுக்கிக்கொண்டருளின எனது அப்பன் எனக்கு அருள் செய்த விதத்தை வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயமே! ()

நன்னெறியல்லாத வழியை நன்னெறி என்று எண்ணுகின்ற அடியேனைக் கீழ்ப்பட்ட வழிகளைப் பற்றுமல் அழகாகிய அருளையே அடையும் விதம் அடையாளம் யாதொன்றும் இல்லாத கூத்தப்பிரானது நடனத்தை அடியேனுக்குத் தெரிந்துகொள்ளும் விதத்தைக் கிருபைசெய்த விபரத்தை வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயம்! (2)

நிலையாதனவற்றை நிலையென்று சந்தோஷித்து எண்ணி நெருங்கிய இருதனங்களையுடைய மாதரது சிற்றின்பத்தின் கண்ணே மயக்கமுறுதற்குரிய அடியேனை அதனுல் உழன்று சாகாமல் அருளுடன் காத்தருளித் தையல் பார்ப்பதியை இடது பாகத்திற்கொண்ட சிவபிரான் தனது திருவடிகளையே அடைந்து வாழும் விதம் அடியேனுக்கு வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயம்! (3)

இப்பூலோகத்தின்கண்ணே பிறந்து இளைத்து மடிந்து விழப் போகின்ற அடியேனை நினைத்தற்கரிய போன்பை அருள் செய்து என்னை ஆட்கொண்டு தேவரீரது அடியேனையும் தனது திருவெண்ணீற்றுப் பொடியைத் தேகமுழுதும் தரிக்கச்செய்து களங்க மற்ற மார்க்கத்தையே அடைந்து வாழும் விதம் யாவர்க்கும் பெரியோனுகிய சிவபெருமான் அடியேனுக்கு அருள் செய்தவிதம் எவர் அடைதற்குரியவர்? இஃது ஆச்சரியமே! (4)

உடையன்

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணல் இடர்ப்பட்டு,
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்,
உய்ஞ்சேன்நான் உடையாயேனே! அடியேனை 'வருக' என்று
'அஞ்சேல்'என்று அருளியஆறு ஆர்பெறுவார்?
அச்சோவே! 5

அந்தம்

வெந்துவிழும் உடற்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தம்அறுத்து எனைஆண்டு பரிசறுஎன் துரிசும்அறுத்து
அந்தம்எனக்கு அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே!

ஐயன்

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசம்எனும் தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை
ஐயன்எனக்கு அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே! 7

சாதல் பிறப்பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக்கு அணிஇழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதிஎனக்கு அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே! 8

அம்மை

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருள்ஆக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியஆறு ஆர்பெறுவார்? அச்சோவே!

திருச்சிற்றம்பலம்.

இலவம் பஞ்சுபோன்ற பாதமுடைய பெண்களது கடைக் கண்ணின் பார்வையில்லல் துன்பப்பட்டு மனத்திலுண்டாகிய துன்பமானது பெருகும்படி நிற்கின்றவனுகிய அடியேன் தேவ ரது கிருபையைப் பெற்றேன், பான் பிழைத்தேன்; என்னை உடையவனே! அடியேனை 'வருவாய்; பயப்படவேண்டாம்' என்று கிருபைசெய்த விதம் யாவர் அடைதற்குரியவர்? ஒருவரு மில்லை; இஃது ஆச்சரியமே! (5)

வீணை அழிந்து நீருய்ப் போகின்ற உடம்பினது பிறவியை நிச்சயமென்று வினைகளை மிகப் பெருகச்செய்து பூகொகத்தணிந்த கூந்தலையும் சங்கிலைாகிய அழகிய வளையல்களையுமணிந்த மாதர்க ளது குவிந்த தனங்களின்மீது இச்சையையுடையனது பாசத்தை நீக்கி அடிமையைத் தடுத்தாண்டருளி, என் இயல்பு நீங்க என் னுள் இருந்த குற்றங்களையும் களைந்து முடிவான பேற்றை எனக் கருள்செய்த முறையை வேறு டார் பெற வல்லார்? இஃது அதிசயமே! (6)

மாதர்களது மோக மயக்கத்திலே அவர்கட்குத் தாழ்ந்து விழக் கடவேனுகிய அடியேனை மெல்லவே கைபிடித்து வந்து பாசமென்கின்ற கதவுக்கு இடும் தாழ்க்கோலை வாங்கி எறிந்து உய்தி கூடும் வழியைக் காண்பித்து ஓங்காரத்தின் உண்மைக் கருத்தினை ஐயனுகிய சிவபெருமான் எனக்கருள் செய்தவிதம் வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயமே! (7)

இறப்பு பிறப்பு என்று சொல்லப்படுகின்ற பெருஞ்சுழியி லகப்பட்டுத் தடுமாறிக் காதல் மிகுந்து அழகிய ஆபரணங்க ளையுடைய மாதர் புணர்ச்சியிலே விழும் இயல்புடைய என்னை உமையை ஒரு கூற்றிலே உடைய சிவபிரான் தன் திருவடியையே அடைந்து வாழும் விதம் அடியேனுக்கு அருள் செய்தவிதம் யார் பெறுதற்குரியர்? இஃது ஆச்சரியமே! (8)

யாவற்றுக்கும் முதற்காரணனுமாகியவன், நன்மார்க்கத்தைத் தெரியாத மூடர்களோடும் சேர்ந்து திரிகின்றவனுகிய அடியே னுடைய மூவகைப் பாசங்களையும் களைந்து அடியேனை ஒரு பொருளாக மதித்து நாயினையொத்த அடியேனைச் சிவிகையில் ஏறச் செய்து தாய்போல்வான் எனக்கு அருளியவிதத்தை யார் பெற வல்லார்? இஃது அதிசயமே! (9)

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

பாட்டு முதற்குறிப்பு அட்டவணை.

பாட்டு	பக்கம்
அங்கணன்	358
அங்கியருக்கன்	190
அடர்புல	116
அடற்கரி	114
அடியாரானீர்	366
அடியார்	294
அடியேன் அல்லல்	300
அடியேனல்லே	92
அட்டமூர்த்தி	348
அணிமுடி	354
அண்டப்பகுதி—செய்யுள்	24
அண்ணாமலையான்	134
அதுபழுசு	228
அத்தனே	326
அத்தியுரித்தது	192
அத்தேவர்	160
அப்பனே	100
அம்பரமாம்	184
அம்பலத்தே	182
அம்மையே	322
அயனே அரங்கனே	176
அயன்தலை	156
அரிக்கும்	168
அரியானே	60
அருணன் இந்	226
அருந்தவருக்	184
அருமந்த	168
அருளாதொழிக்	236

பாட்டு	பக்கம்
அருளாரமுத	294
அருளுடை	324
அரைசனே	238
அரைசே பொன்	234
அரைசேசுஅ	116
அரையாடு	170
அலரவனும்	178
அல்லிக்கமல	270
அவமாய	168
அழகே புரிக்	304
அழிவின்றி	318
அழுகேன்	94
அளவறு	70
அளவிலாப்	292
அளித்து	248
அளிபுண்	258
அறவே பெற்றார்	296
அறவையேன்	324
அறிவனே	76
அறிவிலா	68
அறுகெடு	150
அறுக்கிலேன்	246
அறையோ	374
அன்பராகி	246
அன்பிலில்	238
அன்றுல கீழற்	190
அன்றே யென்றன்	302
அன்னேயி	126

பாட்டு	பக்கம்
ஆடரப்பூணை	212
ஆடுகின்றிலை	68
ஆட்டின்	196
ஆட்டுத்தேவர்	246
ஆணை அலியோ	208
ஆதமிலி	328
ஆதியும் அந்தமும்	122
ஆமாறன்	58
ஆயநான்	68
ஆயமொழி	224
ஆர்க்கோ	372
ஆர்த்த பிறவி	130
ஆவகை நாமும்	156
ஆவாதிருமால்	194
ஆவா அரி	170
ஆற்றகில்லேன்	268
ஆனையாய்க்	144
ஆனெவெம்	110
இடக்குங்	338
இணையார்	186
இந்திரனும்	138
இந்திரிய	290
இப்பாடே	224
இப்பிறப்பி	344
இயக்கிமாறு	289
இரங்குநம	234
இரந்திரந்	240
இருகை	72
இருள் திணிந்	266
இருதலைக்	104
இருந்தென்னை ஆண்டு	108
இருந்தென்னையாண்ட	376
இருப்பு	92
இரும்புகரு	328
இல்லை	98
இழிந்தனன்	84
இன்பந்	218
இன்பம்	376
இன்பான்	224
இன்றெனக்	240
இன்னிசை	228
ஈசனேஈ	90
ஈசனேயென்	76
ஈண்டிய	318
ஈரம்பு	194
உகந்தானே	232
உங்கையிற்	134
உடையநாதனே	98
உடையாளுன்றன்	232
உடையானே	78
உணர்ந்த	240
உண்டொ	72
உண்ணப்	196
உத்தமனத்த	54
உம்பர்கட்	329
உய்யவல்லா	194
உரியேனல்	360
உருகிப்பெருகி	172
உருத்தெரியா	290
உரைமாண்ட	204
உலக்கை	150
உலவாக்	78
உவலே	174
உழிதரு	56
உழைதரு	120
உள்ளப்	164
உள்ளமல	378
உள்ளன	110
உற்ற ஆக்கையின்	266
உற்றாய்	334

பாட்டு	பக்கம்
உன்னற்கரிய சீரு	214
உன்னற்கரிய திரு	208
உன்னையுகப்பன்	218
உலசலாட்டு	346
உளையுயிராய்	144
எங்கள் நாயக	280
எச்சம் அறி	308
எண்ணிலேன்	264
எண்ணுடை	208
எந்தை ஆய்	74
எந்தையெங்	186
எம்பிரான்	84
எய்தலாவ	90
எய்த்தேன்	258
எரிமுன்னு	188
எறும்பிடை	112
எனைநானென்ப	306
என்பாலப்	330
என்புன் உரு	336
என்பே	360
என்னணி	384
என்னப்பன்	176
என்னல் அறியா	390
என்னை அப்	108
என்றும்	200
ஏகாச	198
ஏகாநிற்பர்	234
ஏதினும் யான்	120
ஏதமிலா	222
ஏய்ந்த	342
ஏரார் இளங்	222
ஏர்தரும்	216
ஏழைத்தொ	204
ஏனையாவ	70

பாட்டு	பக்கம்
ஐயனின்ன	88
ஒண்ணிக்	124
ஒண்ணைய	110
ஒப்புனக்	324
ஒருவனே	84
ஒன்றாய்	162
ஒன்றிலை	382
ஒன்றும் போதா	300
ஓடுங்கவந்	336
ஓயாதே	140
ஓய்விலா	72
ஓரொருகால்	132
கடகரியும்	182
கடலினுள்	106
கடலின் திரை	308
கடலே அனைய	296
கடவுளே	82
கடையவ	102
கட்டறு	76
கண்களிரண்	382
கண்டது	114
கண்ணகு	212
கண்ணப்பன்	160
கண்ணார்	304
கதியடி	118
கமலநான்	282
கயல்மாண்ட	172
காணுங்க	162
கருடக்கொடி	256
கருவாயுலகினுக்	164
கலந்தனின்	294
கல்லாதபுல்	290
கல்லாமனத்து	140
களிவந்த	108

பாட்டு	பக்கம்
கள்வன்கடி	166
கறங்கோலை	170
கற்போலும்	200
கற்றறியேன்	330
கனவேயுன்	170
கன்னருநித்தை	170
காசணி	150
காட்டகத்து	378
காணலாம்	74
காணுங்	380
காணும்	362
காணுமாறு	92
காதார்	132
காப்பாய்	272
காமனுடலுயிர்	204
காருடைப்	220
காருறு	102
காலமுண்டாகவே	318
காணர்புலித்தோ	180
கிஞ்சுகவாய்	222
கிளியனார்	312
கிளிவந்த	146
கிற்றவா	68
கீதம் இனிய	216
குதுகுதுப்பு	114
குலங்களாந்	112
குலம்பாடிக்	174
குழைத்தாற்	300
குறியும்நெறி	336
குறைவிலா	240
கூடிக்கூடி	298
கூவினை	226
கூறும்நாவே	302
கூற்றைறவென்	320

பாட்டு	பக்கம்
கேடுவேன்	392
கேட்டாயோ	140
கேட்டாரு	66
கையார்	144
கையால்	260
கொங்கணவும்	220
கொம்பரில்	110
கொம்பில்	338
கொம்மை	310
கொழுமணி	112
கொள்ளு	74
கொள்ளார்	102
கொள்ளேன்	54
கொன்றை	214
கோணிலா	314
கோயில்சூ	176
கோலமேனிவ	288
கோலவனை	210
கோலாலமாகி	178
கோவே	392
கோழிசிலம்ப	126
கோற்றேனென	308
கோற்றேன்	224
சங்கம் அரற்றச்	154
சங்காரா	84
சங்கு	388
சச்சை	114
சடையானே	334
சட்டோஞ்னை	162
சதுரை	316
சந்திரனை	144
சலமுடைய	184
சாடிய வேள்வி	194
சாதல்	396

பாட்டு	பக்கம்
சாதிகுலம்	290
சாவமுன்	54
சித்தமேபுகு	350
சிந்தனை	64
சிந்தை	90
சிரிப்பார்	236
சிரிப்பிப்பன்	120
சீரார் திருவடி	192
சீரார் பவளக்	206
சீலமின்றி	390
சீவார்ந்தீ	256
சூடார்பொற்	268
சுந்தரத்	218
சுந்தரநீறணி	148
சுருள்புரி	252
சூடகந்தோள்வளை	150
சூடுவேன்	144
சூரியனார்	196
செங்கண்ணெடு	138
செங்கணவன்	134
செடியாராக்கை	260
செப்பார்	142
செம்மை	396
செய்தபிழை	372
செய்யவாய்	222
செய்வதறி	76
செல்வம்நல்	74
செழிகின்ற	104
செழுக்கமல	250
செறியும்இப்	346
செறியும்	316
சேரக்கருதி	368
சொல்லிய	388
சோதியாய்	242

பாட்டு	பக்கம்
சோதியே	280
சோலைப்பசுங்	224
ஞாலம் இந்திரன்	248
ஞானக்கரும்பின்	154
ஞானவாள்	370
நகைவிலா	312
தக்கவை	198
தக்கனையும்	176
தச்சவிடுத்தலுந்	194
தந்ததுன்	242
தரிக்கிலேன்	82
தவமே	56
தறிசெறி	314
தனித்துணை	116
தனியனேன்	64
தன்மை	80
தாதாடு	222
தாதாய்முளை	272
தாமே	364
தாயாய்	392
தாரகை	120
தாராய்	94
தாராஅருளொன்	298
தாளியறுகினர்	214
தானந்த	180
தீகழுத்திகழு	270
திண்போர்	190
திருந்துவார்	284
திருமாலும்	168
திருவார்	168
தில்லைமூதூர்	12
தினைத்தனை	160
தீதில்லை	202
தீர்க்கின்ற	104

பாட்டு	பக்கம்
தீர்த்தஅன்	86
துடிகொள்	282
துடியேர் இடு	336
துவனியா உருகா	298
துண்டப்	142
துபபனே	282
தூவெள்ளை	358
தெங்குலவு	210
தென்பால்உக	178
தேரைநிறுத்தி	198
தேவதேவன்	318
தேவாகோ	66
தேனகமாமலர்	156
தேறுடுகொன்றை	186
தேனைப்பாலை	80
தேன்பழச்	218
தேன்புக்க	182
தையலார்	396
தையலோர்	214
தொண்டர்காள்	370
தொலுத்து	166
நங்காயிதை	180
நங்கைமீரை	348
நஞ்சமர்	208
நடித்து	342
நண்ணிப்	380
நமச்சிவாய	2
நரியை	392
நல்கா	236
நல்லமலரின்	198
நன்றுக	182
நாடகத்தா	58
நாதமுடைய	356

பாட்டு	பக்கம்
நாமகள்நாதி	193
நாயிற்கடைப்	195
நாயிற்கடையாம்	196
நாயேனை	164
நாரைடி	300
நாளைஎன்	160
நாளுமென்	164
நானேயோ	332
நான்மறை	193
நான்முகன	29
நானதனைக்	154
நித்தமணாளர்	212
நிருத்தனை	280
நிலம்நீர்	202
நினைப்ப	90
நினையப்பிறருக்	270
நிற்பார்	365
நீக்கிமுன்	295
நீண்டகாத்தர்	212
நீண்டமாலும்	238
நீதியாவன	252
நீரின்பவி	316
நீலவுருவிற்	216
நெக்குநெக்குள்	272
[illegible]	106
நெறிசெய்	189
நெறியல்லா	294
நோயுற்று	152
பங்கயமாயிரம்	202
பச்சைத்தா	328
பஞ்சாய	330
பஞ்சாயவடி	396
பஞ்சின்மெல்	273
படமாகவெ	190

பாட்டு	பக்கம்
பணிவார்	94
பண்சுமந்த	140
பண்டாய	378
பண்பட்ட	186
பண்ணார்ந்த	328
பண்ணினேர்	276
பத்தர்சூழப்	350
பத்திமையுந்	292
பத்திலனே	362
பந்தணைவிரலாள்	278
பந்தவிகாட	384
பப்பற	228
பரந்துபல்	56
பரம்பர	116
பரவுவார்	60
பரவுவாரவர்	264
பரிந்துவந்து	270
பரிதிருவடியென	276
பருவரை	60
பவனெம்	56
பழிப்பில்கின்	120
பழுத்வ்தொல்	278
பற்றுங்கலை	306
பன்னுட்பாவி	188
பாங்கிலெடு	292
பாசம்பரஞ்	122
பாசவே	324
பாடவேண்டும்	100
பாடிமால்புகழும்	274
பாடிற்றிலே	118
பாதாளம்	128
பாரார்விசு	138
பாருருவாட	360
பாலொடு	274
பாரோர்	258

பாட்டு	பக்கம்
பார்பதம்	242
பார்பாடும்	172
பார்ப்பதி	196
பாலகனர்க்	198
பாலும் அமுதமுந்	190
பாவநாசா	278
பாழ்ச்செய்	340
பால்நினைந்	326
பாற்றிரு	362
பிட்டுநேர்பட	286
பிணக்கிலாத	286
பிணியெலாம்	312
பித்தனென்றெனை	264
பித்தென்னை	374
பிரமனரியென்	204
பிறவிதனை	292
பிறவியென்	350
பிறிவறியா	254
புகவேதகேனுனக்	58
புகவேவேண்டா	364
புகழ்மின்	366
புகுவதா	70
புகுவேன்	80
புணர்ப்ப	86
புத்தன் புரந்தரா	172
புத்தன் முதலாய	202
புரந்தரஞ்	196
புரள்வார்	368
புலன்கள்	112
புலையனேனையும்	244
புவனியிற்	230
புழுவிலுந்	352
புறமே	94
புற்றில்வாள்	310

பாட்டு	பக்கம்
புற்றுமாய்	244
புன்புலால்	326
பூங்கமல	334
பூசுவதும்	176
பூணுணுத	288
பூதங்கள்தோறும்	228
பூதங்கள் ஐந்தாகி	292
பூத்தாரும்	200
பூமேல் அயனைதி	166
பூவலர்	358
பூவார்	364
பூவியல்	148
பூவேறு	160
பெருநீரற	112
பெருமான்	368
பெரும்பெரு	250
பெற்றது	110
பெற்றிபிறர்க்	146
பேசப்பட்டேன்	92
பேசில்தாம்	64
பேசும்	380
பேதமில்ல	288
போராசை	188
பேருங்குண	338
பைங்குவளைக்	130
பைந்நாப்பட	306
போச்சை	346
போதும்புறு	116
பொத்தை	264
பொய்யவ	104
பொய்யனேன்	244
பொய்யாய	164
பொய்யெல்லாம்	394
பொருட்பற்றிச்	200

பாட்டு	பக்கம்
பொருத்த	96
பொருந்து	344
பொருளே	108
பொலிகின்ற	106
பொழிகின்ற	250
பொன்னிய	386
போகம்	88
போதுசோபன்	248
போறேறே	78
போற்றி அருளுக	136
போற்றியிப்	86
போற்றியென்	82
போற்றியென்வாழ்	226
போற்றியென்றும்	74
போற்றியோ	82
மஞ்சுலாம்	314
மடங்களன்	108
மண்ணதனிற்	394
மண்ணினில்	386
மதிக்குந்	336
மத்துறு	114
மருவினிய	332
மருளனேன்	284
மலங்கினேன்	286
மலைமகளை	178
மலையரையன்	180
மறுத்த	152
மறுத்தனன்	104
மன்னவ	118
மன்னன் எம்பி	100
மாடுஞ் சுற்றமு	344
மாமு நகை	152
மாதாமு	208
மாதிவர்	354

பாட்டு	பக்கம்
ம்மாபவாழ்க்கை	350
மாபவன்	318
மாயமே னை	246
ம்மாலயன்	351
மாலறியா	124
மாலேபிரமனே	172
மாவடிவகிர	254
மாவாரா	192
மாழைமை	252
மாறி கின்றறினை	68
மாறி கின்றறன்	238
மாறிலா	96
மாறுபட்	106
மானம் அழிந்தோம்	202
மானேநீ	126
மானேர் நோக்கி	302
மானேர் நோக்கியுமை	94
மானேர் நோக்கியுமை	78
மானேர்பங்கா	298
மிடைந்த	256
மின்கணிரார்	252
மின்னிடை	154
மின்னேரனைய	390
முடித்த	80
முதலெச்செவ்	118
முத்தணி	152
முத்தனே	284
முத்தினை	352
முத்தன்ன	124
முத்திக்குழன்று	172
முத்திறெறி	394
முத்து நற்றூம	148
முத்திய முதல்	230
முழுதயில்	118
முழுமுதலே	232
முழுவதுங்	56
முன்னைய	192
முன்னைனை	146
முன்னிக்	132
முன்னின்று	232
முன்னீறும்	206
முன்னைப்	128
முன்னையென்னுடை	262
முன்னைவினை	372
மூத்தானை	330
மூவருரும்	374
மூன்றங்	206
மெய்தான்	54
மெய்யனே	282
மேலுவா	74
மேவும் உன்றன்	296
மைப்பொலியுங்	142
மையமர்	154
மையலா	342
மையிலங்	96
மொய்ப்பால்	256
மொய்யார்	130
யாவர்க்கும்	374
யானேதும்	58
யானேபொய்	96
வட்டமலர்	156
வணங்கத்	188
வணங்கும்	89
வணங்குமிப்	344
வண்ணச்	64
வந்திமை	356
வம்பணைத்	352
வம்பனேன்	274

பாட்டு	பக்கம்
உருத்துவ	58
உலத்தலை	118
உல்லவா	276
உழங்குகின்	254
உளர்கின்ற	102
உளைந்தது	194
உன்புலால்	310
உன்னெஞ்சக்	162
ஊராவழி	374
ஊரிங்கே	220
ஊழ்கின்றாய்	62
ஊழ்த்துவ	60
ஊழ்ந்தார்	378
ஊனுலாம்	312
ஊள்தடங்	152
ஊனகாடரும்	98
ஊனவன்	90
ஊனுகி	60
ஊன்கெட்டு	174
ஊன்பாவிய	308
ஊன்வந்த	138
எச்ச	98
எச்சுக்	92
எச்சைதா	66
எடுமின்	366
எடை எடா	322
எண்ணகத்	230
எண்ணுருந்	142
எண்ணேர்	174
எரிய	320
எனைத்தேகடரும்	306
எனைப்பிறவி	290
எனையிலே	62
எனையென்	70
ஏஞ்சின	196
ஏஞ்சேலனைய	260
ஏந்துவிழும்	396
ஏய்யவன்	194
ஏய்யவினை	372
ஏருவரோன்	310
ஏள்ளத்துள்	106
ஏள்ளந்	62
ஏள்ளாக்	214
ஏறுப்பன	250
ஏடுருவாகி	356
ஏண்டத்தக்க	302
ஏண்டும்மின்	88
ஏண்டும்வேண்டு	296
ஏண்டேன்	308
ஏதமும்	158
ஏதமொழியா	212
ஏவத்	356
ஏனில் ஏள்கணை	72
ஏனில் ஏள்மலர்க்	60
ஐத்தநிதி	162
ஐப்புமா	262

ஸ்ரீ பாரதி பிரஸ், கூவம், சென்னை-7.